உ

சிவமயம்

முத்தமிழ்க்கவிராய ரியற்றிய

# சுசீந்திரஸ் தலபுராணம்.

இஃது

கோடகநல்லூர் ஸ்ரீ சுந்தரசுவாமிகளின் சீடர்

திருநெல்வேலி

மாவடி

## சிதம்பரம்பிள்ளையால்

பரிசோதிக்கப்பட்டு

சுசீந்திரத்துக்கடுத்த காக்குழூர்

## வைரவநாதபிள்ளை

கேட்டுக்கொண்டபடி

யூனியன் சென்றல் பிரசில்,

பிரசுரஞ் செய்யப்பட்டது.

திருநெல்வேலி.

1894.

Copyright Registered.

மறைமலையடிகள் நூல்
MARAIMALAI ADIGAL
MADRAS-1
சென்னை-1

தாணுதுணை.

# சேரநாட்டார் சாற்றுக்கவிகள்.

இஃது. திருவனந்தபுரம் சமஸ்தானம் நாகர்கோவிலைச்சேர்ந்த புற்றேரி மக-ா-ா-ஸ்ரீ செ. குமாரசுவாமியாபிள்ளை யியற்றியது.

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

வஞ்சிமநு நாட்டினுக்கோர் திலக மாக
வளமலியுஞ் சுசீந்திரத்தின் மகிமை முற்றுஞ்
செஞ்சொலின்முத் தமிழ்க்கவிஞன் செப்ப வத்தைச்
சீர்காக்கு மூர்வளர்சொக் கலிங்க வீன்ற
வஞ்சுதன்வை ரவநாத னன்பிற் கேட்ப
வதற்கியைவாய் நெல்லைநக ரமரும் யோக
விஞ்சையன்மா வடியில்சிதம் பரவேள் பார்த்து
மேதினியோர்க் கச்சியற்றி விளம்பி னானே.

---

இஃது, ஷை புற்றேரி மக-ா-ா-ஸ்ரீ ஆறுமுகம்பிள்ளை இயற்றியது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சீர்வளருஞ் சுசீந்திரத்தின் மகிமையைமுத் தமிழ்க்கவிஞன் றெரித்தான் காக்கு, மூர்வதியும் வைரவநா தனுங்கேட்ப வதற் குள்ள முவந்தே கொன்றைத், தார்புனையும் வேணுவன நாதருறை நெல்லைநகர் தன்னில் வாழ்வோன், பார்வையுற்றச் சியற்றியெய்கும் பரப்பினன்மா வடியில்சிதம் பரக்கோமானே.

---

இஃது, கடுக்கரை ஆறுமுகப்பெருமாள்பிள்ளை இயற்றியது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சொற்றருமா சுசீந்தையென்னுந் தொன்னகரின் மான்மிய மாஞ் சுருதி தன்னை, பற்றருநன் மூன்றுதமிழ்ப் பாவலன்சீர் தென் மொழியிற் பாவாய்ச்செய்தான், நற்றருமம் வளர்காக்கு நகருறை வை ரவநாத னச்சி 'னூட்டிக், கற்றவரு மெனைநிகர்கல் லாதவரு மேயுணரக் காட்டினானே.

## பாண்டிநாட்டார் சாற்றுக்கவிகள்.

திருநெல்வேலி இராமய்யன்பட்டி மக-ா-ா-ஸ்ரீ வேங்கடசுப்பையரவர்க ளியற்றியது.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

கலையாரு மதிசூடி மருவார் பதங்களொரு
கணமேனு மறவி யடையாக்
கலைஞானி கட்குநற் லணியாய் விளங்கியுல
கறியவரி தென்னு மியலான்
றலையான முத்தமிழென் னுவரியுண் டெழுமுகி
லுணுவொளி ருஞ்சு சீத்திரத்
தலபுரா ணம்பத்தி யிற்சாற்ற நெல்லைவளர்
சற்சனர் பழிச்சு கவிஞ
னிலையான பரிவுடைக் கோத்திரத் துற்றமே
னீடுறுஞ் சீர்த்தி முற்று
நெறியிற் படைத்திலகு மாவடிசிதம்பர
நிகழிலக் கணவ முழுமுணுங்
குலைவறுப் பக்காக்கு மூர்சொக்க லிங்கவேள்
குமரன்வை ரவநா தனுட்
கொண்டவா றச்சிட வினையந்தன னதின்மகிமை
குவலைய மெல்லாம் பரவவே.

---

இஃது, ஷை மாவடி சிதம்பரம்பிள்ளையின் ஆசிரியர்
தி—சை—க—அ—சிதம்பரநாதக் கவிராஜ ரியற்றியது.

முந்தேவுநாமெனவத்திருப்பேர்மூன்றோர் மூர்த்திகொண்டு வைகுநசித்திரபுராண, மந்தேவதேவியற்று மாடலாமுன் னறிதலின் முத்தமிழ்க்கவிஞனைமைந்தான்கல்விச், சொந்தேவலதென வித்தைக்காக்குமூர்வாழ்நமுகவயிரவநாதன்வெண்டத்தூக்கிச், சித்தேவர்களும் வியப்பக் கலைதேர்நெல்லைச் சிதம்பரமால் பார்வையினச்சிட்டான்றேர்ந்தே.

இஃது, திருநெல்வேலி மாவடி சிதம்பரம்பிள்ளை குமாரரும், சிட்டருமாகிய சண்முகம்பிள்ளை யென்ற சி- சுப்பிரமணியபிள்ளை இயற்றியது.

தனிச்சொல்லின்றி பலவிகற்பத்தான் வந்தபத்தடிப் பஃறொடைவெண்பா.

திருவளருஞ் சேரைச்சு ந்திர நாட்டி
லுருவொளிருந் தாணுவி னூஉய்குபு ராணத்தைப்
பாடினன் முத்தமிழ்ப் பாவரைய னல்லிசையைச்
சூடினன் காக்குழூர் சொக்கனின் மைந்தன்
வயிரவ நாதன் வழூஉக்களைய வெந்தை
பயிர்வளரும் நெல்லைச்சி தம்பரவேள் பக்க
லிசைப்ப வினிய வுளங்கொடு யாப்பி
னசைச்சி ரடிதளையா ராய்ந்தீக னன்கா
யெழுதா வெழுத்தி லியைத்தா னவனி
சுழூவா யுணரத் தொகுத்து.

---

இஃது, ஷ டி மாவடி சிதம்பரம்பிள்ளையின் மாணாக்கரில் ஒருவராகிய ஆழ்வார்குறிச்சி வன்னியப்பக் கவிராய ரியற்றியது.

கலிவெண்பா.

பொன்பூத்த சேரன் புவியிற் புகழ்ஞான
மின்பூத்த தாணுமால் வேதனைக—ரின்பூற்ற
மெண்ணு மியலிசையா நாடகப்பே ரின்புலவன்
பண்ணும் புராணப் பனுவலையே—தண்ணளியாற்
காக்குழூர் வாழ்சொக் கலிங்கன் றவப்பயனால்
வாய்க்கும் வைரவநா தன்கேட்ப—பார்க்கணியா
நெல்லை யரனுமையை நெஞ்சிருத்திச் செஞ்சொலா
னல்ல றுடைக்கு மறிவுடையான்—கல்லேநிக
ரென்மனத்து ணீங்கா தியங்கு மருளகற்றிச்
சின்மயமாக் குங்கலையிற் றேற்றுவிப்பான்—றன்மயமா
யோங்குஞ் சிதம்பரமா லுற்ற வழூஉக்களைந்து
பாங்குடனே யன்னவன் பாலீயத்—தீங்ககன்ற
வச்சி லமைத்திவ் வகிலமெல் லாமுணர
மெச்சும் புகழ்தரித்தான் மேல்.

இஃது ஷை மாணாக்கருளொருவராகிய திருநெல்வேலிப் பேட்டை ஸப்ரிஜிஸ்தர் ஆபீசு கிளர்க்கு ஆழ்வாரப்பபிள்ளை இயற்றியது.

## நேரிசையாசிரியப்பா.

பூமா துறையும் பொன்மலர்த் தடமு
நாமா துறையு நன்மல ரகழியு
மந்தண ரசன மயிலன சாலையுஞ்
சந்தனஞ் செண்பகஞ் சார்தரு நிரையு
முக்கனிக் தேறன் மொய்த்துறு நதியு
நற்கனிச் சோலையு நான்மறைப் பள்ளியும்
எக்கணும் பரவி யிலங்க வதனுளே
மிக்கபே ரொளியான் விளங்கிடும் பற்ப
நாப னருளினாற் சேரைநன் னகரிற்
பூபன் குலசே கரன்வழி புகுந்து
செங்கோல் செலுத்துஞ் சீரா யெவர்களுந்
தங்க ளாவிற் சாற்ற வரிதென
மன்னு மூல மன்னர சுறுகால்
அன்னத னாட்டி னமர்சுசீந் திரத்தல
மாண்மை வழுத்தினான் மகிழ்முத் தமிழ்வலோன்
சேண்டொடு பயிர்வளர் சீர்காக்கு மூரிற்
றிலக மெனவாழ்ந் திலகுசொக் கலிங்கனீ
னலகில் வைரவ நாத னவையகற்
றிடமன முன்னி செஞ்சாலி நகரிற்
றிடமுறு கார்காத் திடுங்குல திலகனும்
பரிவுடைக் கோத்திரம் பரம்பரை விளங்கத்
திருமலைக் கொழுந்து செனித்த மரபி
லுதித்தொளிர் சுப்பிர மணிய னுயர்தவம்
பதித்திட வுதித்து பார்புகழுந் திசைக்கு,
மாவடிச் சிதம்பர வண்மையற் கீய
னாவடி வாக்கித் துகழுறத் தளிப்ப
யாவரு மெளிதி னறிவுறு மெழுத்தி
னெழுத்தினன் றன்னை யடைவினை
யொழித்தனன் குருவி னுயரரு ளாலே.

# சருக்க அட்டவணை.


| நம்பர் | பெயர் | கவி | பக்கம் |
|---|---|---|---|
| ௧ | பாயிரம் | ௧௧ | ௧ |
| ,, | புராணவரலாறு | ௩௨ | ௩ |
| ௧ | அத்திரிதலம்புரிமகிமை | ௩௫ | ௯ |
| ௨ | அத்திரிபிரமசபையிற் சென்றது | ௨௧ | ௧௬ |
| ௩ | அனசூயை கற்புமகிமை | ௩௰ | ௨௧ |
| ௪ | தேவிமார் விரதம் | ௩௧ | ௨௭ |
| ௫ | நாரதன் வருதல் | ௨௨ | ௩௩ |
| ௬ | காக்ஷி கொடுத்தல் | ௨௩ | ௩௭ |
| ௭ | இலிங்கோற்பத்தி | ௨௬ | ௪௨ |
| ௮ | அருச்சனை | ௨௫ | ௪௯ |
| ௯ | சத்தவிருடிகள் பூசித்தல் | ௨௧ | ௫௫ |
| ௰ | வசிட்டாதியர் பூசித்தல் | ௨௨ | ௫௯ |
| ௧௧ | சங்கராசாரியர் பூசித்தல் | ௨௧ | ௬௩ |
| ௧௨ | அயிராவதச் சருக்கம் | ௫௨ | ௬௯ |
| ௧௩ | தீக்கைச் சருக்கம் | ௩௫ | ௭௯ |
| ௧௪ | இந்திரன் பூசித்தல் | ௪௫ | ௮௬ |
| ௧௫ | வெள்ளிமலைச் சருக்கம் | ௩௪ | ௯௬ |
| ௧௬ | கங்கையுற்பத்தி | ௩௰ | ௧௦௩ |
| ௧௭ | கன்னிமாகுமரி | ௰ | ௧௦௯ |
| ௧௮ | அகத்தியமுனி பூசித்தல் | ௮ | ௧௧௨ |
| ௧௯ | மருத்துமலை | ௧௧ | ௧௧௩ |
| ௨௰ | பரசிராமன் பூசித்தல் | ௭ | ௧௧௫ |
| ௨௧ | மூவேந்தர் பூசித்தல் | ௨௰ | ௧௧௭ |
| ௨௨ | பிரமோற்பத்தி | ௪௫ | ௧௨௧ |
| ௨௩ | புன்னாகவனம் | ௧௯ | ௧௩௧ |
| ௨௪ | மதுசூதனனை அகத்தியன் பூசித்தல் | ௯ | ௧௩௬ |
| ௨௫ | மதுசூதனனைக் கருடன் பூசித்தல் | ௧௧ | ௧௩௮ |
| ௨௬ | கலாவதி சரிதை | ௧௩ | ௧௪௰ |

| | | | |
|---|---|---|---|
| உஎ | நக்கிராலேயச் சருக்கம் | ௬௪ | ௧௪௬ |
| உஅ | சனகாதியர்க்குபதேசித்தல் | ௧௧ | ௧௫௧ |
| உகூ | அகிலேசமகிமை | ௧௫ | ௧௫௪ |
| ௬0 | அக்கினவஹ்கி சருக்கம் | உ0 | ௧௫எ |

உ

ஸ்ரீ தாணுமாலயன் றுணை.

# சுசீந்திரஸ்தல புராணம்.

## விக்கினேசுரர் வணக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

முன்னுறு தவள வண்டின் முகம்பொரு கொம்பு மும்பர்
பின்னுற முன்வந் தெய்திப் பிரமரஞ் சலித்து வேதம்
பண்ணுற வளிசூழ் கண்ணும் பரம்புதே னிரம்பு தாரு
மன்னுறு மெழில்சேர் தும்பி வதனனை வணங்கு வோமே. (க)

வேறு-தாணுமாலயன்.

பூமா துபொருந் தியமார் பினனு
நாமா துதிருந் தியநா வினனுந்
தாமா தரனுஞ் சிவதா ணுவெனுஞ்
சீமா னைநினைந் துதினம் பணிவாம். (உ)

உமையவள்.

இமையா சலமீன் றகுமா ரிசொலற்
கமையா வுலகந் தருமன் னைமுனோர்
தமையாண முகிறங் கைசிவன் புணர்மா
துமையா ளையுவந் துதினந் தொழுவாம். (ங)

வேறு-விநாயகன்.

தேவரு முனிவருந் தெரிசித் தேத்துமா
மூவரு மியற்றுமுத் தொழிற்கு முன்னமே
மேவருந் திறல்பெறும் வேழ மாமுகன
பூவரும் பதத்தையெப் போதும் போற்றுவாம். (ச)

முருகன்.

தேவயா னையைத்தினஞ் செயிர்க்கும் வல்லிநீ
தாவுமான் வயிற்றவ தரித்தி யென்றுபின்

மேவவேள் விமலையில் வேட்ட வேட்டுவப்
பாவைசேர் சரவண பவனை வாழ்த்துவாம். (ரு)

வேறு - சம்பந்தர்.

ஈன சம்பந்த மெய்துஞ் சமணுயிர்க்
கூன சம்பந்தஞ் செய்தோ னுலகெனுந்
தான சம்பந்தஞ் சைவமென் றாக்கிய
ஞான சம்பந்த னுமை விற்றுவாம். (சு)

சுந்தரர்.

எடுத்த பேருல கெங்குமெள் ளெண்ணைபோற்
றடுத்த நான்மறை யாதியை யாதியிற்
றொடுத்த காதற் பரவைமுள் ளாதென
விடுத்த சுந்தரன் மெய்ப்பதம் போற்றுவாம். (எ)

திருநாவுக்கரையர்.

தாக்குஞ் சூலைக்கி டைந்துச கோதரி
வாக்கு மந்திர மாக்கொண்டு வல்வினை
நீக்கு மாறு நினைவு சிவனிடத்
தாக்கு நாவுக் கரசனை வாழ்த்துவாம். (அ)

சண்டியடிகள்.

தந்தை தாளைத் தடிந்தரன் றாளினிற்
சிந்தை பூண்டவன் சேடமுந் தாமமு
முந்த காமமும் பெற்றருண் முற்றிய
வெந்தை யானதண் டீசனைப் போற்றுவாம். (கூ)

மாணிக்கவாசகர்.

பூச கன்புகழ் பூசைகொள் வேனெனுந்
தேச கன்மகர்த் தாவின் செயலினாற்
பாச கன்மம் பறித்தசொன் மாணிக்க
வாச கன்திருத் தாளை வணங்குவாம். (௰)

### வேறு அடியவர்.

சுத்தி யுள்ளநீ றணிந்தக்கு மாலிகை சூடிச்
சித்தி யுள்ளவ ராகியஞ் செழுத்தையுஞ் செவிக்குஞ்
சத்தி யுள்ளவ ராய்ச்சிவ தாணுவின் றாண்மேற்
பத்தி யுள்ளவ ரெவரவர் பாதமே பணிவாம். (௰க)

பாயிரம் முற்றிற்று.

---

## புராணவரலாற்றுச் சருக்கம்.

### கலிநிலைத்துறை.

பாரும் வானமும் வரன்முறை யாவையும் படைத்துச்
சேரும் வாணியோ டகமகிழ் நான்முகத் தேவன்
சாருஞ் சத்திய லோகத்தி லமரர்மா தவத்தோர்
யாரு மேதொழப் பதுமபீ டிகையில்வீற் றிருந்தான். (க)

இருந்த காலையின் முனிவரர் பலரும்வந் தீண்டிப்
பொருந்த யாந்தவஞ் செய்தரு மகம்பல புரிந்தே
திருந்த வோரிட மெவ்விட மெனவருள் செய்யென்
றருந்த வஞ்செயும் புங்கவ ரியம்பவங் கவனும். (உ)

விருப்ப தாயொரு தருப்பையை நேமியாய் விடுத்தித்
தருப்பை தான்சென்று தரித்ததெத் தானமத் தான
மிருப்ப தாமுமக் கெனவிறை யியம்பவவ் விறைவன்
றிருப்ப தாம்புயந் தொழுதது செல்வழிச் சென்றார். (௩)

சென்ற தம்புவி தனிலொரு வனத்திடை சேர்ந்தே
நின்ற தாமெனை நைமிச மமர்ந்ததந் நிலத்தா
லன்ற தவ்வன நைமிசா ரணியமென் றறைய
நின்ற தெவ்வன மவ்வன மொப்பதின் னிலத்தில். (௪)

கந்த மூலங்காய் கனிநனி கலந்தன கலந்தே
சந்த நாண்மலர் குழுமின கெழுமின தருப்பை
யந்த வேள்விசெய் சமிதையு நிறைந்தன வதனு
ளிந்த நல்வனத் தெய்தலெத் தவஞ்செய்தோ மென்றார். (௫)

என்று மியாமிருந் திருந்தவ மியற்றுதற் கிடமீ
தொன்று மேகுறை வின்றென வருந்தவ முருநற்றித்
துன்று வேள்வியுஞ் செய்துவே தியர்வனஞ் சூழ்ந்தா
ரன்று மாதவச் சூதமா முனிவனுங் கனைந்தான். (சு)

சிவந்த மேனியில் வெளுத்தவெண் ணீற்றொளி திகழ
நிவந்த வார்சடை தாழ்தர வருபவ னேர்போய்த்
தவந்த வாதுசெய் மறையவர் வரன்முறை தாழ்ந்தே
யுவந்து தம்மிருக் கையிற்கொணர்ந் தாசன முதவி. (எ)

அங்கு நற்றவ னிருந்துளி யருக்கிய முதலாய்த்
தங்கு பூசனை வரன்முறை யியற்றிமா தவத்தோ
ரிங்கு நீவரப் பெற்றதெந் தவப்பய னென்னப்
பொங்கு மாதரம் புகன்றிட வாங்கவன் புகல்வான். (அ)

இற்றை நாள்வரை செய்தநற் றவப்பய னெனக்கின்
றுற்ற தாதலா லுங்கள்பா லடைந்தினி துவப்பப்
பெற்ற னானிதன் மேற்பெறும் பேறென்கொல் பெருமை
நற்ற போதன ரேயென முனிவரர் நவில்வார். (சு)

முன்ன ரேபதி னெண்புரா ணத்தையு மொழிந்தா
யன்ன மாபுரா ணங்கடோற் றியவர லாற்றை
யின்ன முமவிரித் துணர்த்துதி நீயெமக் கெனவே
சொன்ன மாதவர்க் குவந்துசூ தன்சொலத் தொடுத்தான். (ய

முனிவிர் காணன்று நன்றுநீர் மொழிந்தவம் முறையே
யினிது யானுமக் கியம்புவ னுட்கொள்வீ ரென்னத்
தனிமு தற்பரா சரனெனு ஞானவான் றருவின்
கனியை நல்வியா தனைத்தியா னித்தனன் கருத்தில். (யக)

முற்ற வேதினைந் தொருமையா யிருகைமேன் முகிழ்த்து
சொற்ற நான்மறை யந்தணீர் கேண்மின்மெய்ச் சுருதி
கற்று ளோரும்வே தமுமின்றி முன்பிலோர் காலத்
தற்ற நூலெனத் தலைமயக் குற்றதிவ் வகிலம். (யஉ)

எம்ம தத்தினி லெய்தின ரம்மத மிதுவே
சம்ம தப்பொரு ளெனமதித் தறநெறி தவறி
வெம்ம தத்தினுன் மயங்குத லறிந்தருள் வேதன்
செம்ம லர்க்கணு னிவர்மழு வாளியாற் சென்றார். (௰௩)

புண்ணி யந்திரண் டெனத்திகழ் வெள்ளியம் பொருப்பி
னண்ணி யிப்பரி சுரைசெய விதழியி னறும்பூங்
கண்ணி யன்மலர்க் கண்ணனை நோக்கிநின் கலையி
லெண்ணி யோர்கலை பராசர முனியிடத் தெய்தி. (௰௪)

முந்தை யோசனை கந்தியோ டம்முனி முயங்க
மைந்த னாகிநீ யவதரித் திடுதிமுன் மறைவா
மெந்த வேதமு முனக்கென தருளின் வந்தெய்து
மந்த வேதத்தை நால்வகை யாய்த்தொகுத் ததனால் (௰௫)

போத மிக்கதோர் வியாதனென் றொருபெயர் புனைந்தவ்
வேத நான்கையும் வேதியர்க் குணர்த்திவெவ் வினைதீர்த்
தேத நீக்கிநீ மற்றைமூ வருணத்தா ரெவர்க்கு
மோத வேண்டுவ தின்னமோ ரருமறை யுளதால். (௰௬)

மறைக ளங்கமா கமங்களங் கெவற்றினு மறைவாய்
குறைக டீர்த்திடு நினைத்தவை யாவையுங் கொடுக்கு
மிறைகொ ணூல்களு ளெமதியல் பாமது விதுவென்
றறைத ரிற்புரா ணங்களா மவற்றினை யன்னாள். (௰௭)

ஞான நந்திபா லுணர்த்திள முணர்ந்தவந் நந்தி
யான சீர்ச்சனற் குமாரனுக் களித்தன னவன்பாற்
றான மோடுகேட் டிடுதிபின் னுத்தம தவத்தோர்க்
கீன மன்றியோ துதியறி வெவர்க்குமஃ தெய்தும். (௰௮)

என்று கூறுதற் கிசைந்தன ரடியிணை யிறைஞ்சிச்
சென்று சேர்ந்தனர் தத்தம துலகினிற் றிருமா
லன்ற ரன்சொன்ன வாறுதித் தருமறை யனைத்துந்
துன்ற நால்வகைப் படுத்தினன் முனிவர்க்குச் சொன்னான். (௰௯)

வேறு

சொற்றவங் நால்வரை நோக்கித் தொன்னெறி
ஈற்றவர்க் குணர்த்துதி ரென்று நான்மறைக்
கொற்றவ னருட்சனற் குமரன் முன்புசென்
றுற்றவன் சொற்புரா ணந்த னுட்கொண்டான். (உய)

கொண்டனன் புராணத்தின் கூறு பாடெலாங்
கண்டன னெளியன்மேற் கருணை கூர்ந்துற
விண்டன ரிக்கதை விரும்பிக் கேட்பவர்க்
குண்டென வுணர்த்துதி யென்ன வோதினன். (உக)

ஈதுமுன் னிகழ்ந்தவா றெனது தேசிகன்
பாதுகந் தலைமிசை கொண்டு பாரக
மீதுற விளம்பினன் விளங்கு கின்றவே
போதுமீ ரொன்பதாம் புராண மென்பவே. (உஉ)

அரன்றனக் கொருபதங் கரிக்கு நான்கயற்
கிரண்டனற் கொன்றுமற் றிரவிக் கொன்றதாம்
வரன்றரு புராணத்தின் வகையென் றுன்பரா
சரன்றரு வியாதனுந் தவத்தின் மேன்மையான். (உங)

காண்டரு சைவமார்க் கண்டங் காந்தஞ்சொற்
கூண்டிடு பௌடிக மிலிங்கங் கூருமங்
தாண்டரு வராகம்வா மனமச் சம்பிர
மாண்டமென் றிவைபர மன்பு ராணமே. (உச)

காருடம் விண்டுபா கவத நாரதம்
பேரரிக் கயற்கதாம் பிரமம் பாத்மமே
யாரழற் காக்கினே யந்தி வாகரற்
கோதரு பிரமகை வர்த்த மென்பவே. (உரு)

மறைகளைச் சைமினி வைசம் பாயினர்
துறையறி பயிலவர் சுமந்திர நால்வர்க்கு
முறைபெற முன்னரே மொழிந்து பின்னெனக்
கிறையருள் புராணத்தி னியல்பி தாகுமே. (உசா)

வேறு.

என்னுஞ் சூதனை வேதமா தவரெழுந் திறைஞ்சி
மன்னு ஞானகா னனசுசிந் திரத்தல மகிமை
முன்னுங் கேட்டன மின்னமுங் கேட்பமா மோகந்
துன்னு மெந்தமக் கியம்பவேண் டும்மெனத் துதித்தார். (உஎ)

ஆய்ந்த சீர்ப்பதி னெண்புரா ணங்களங் கவற்றிற்
காந்த மொன்றதிற் காண்டமா றவற்றிலோர் காண்ட
மேய்ந்த தாணுவை பவமிதிற் சுசீந்திரத் தியல்பாம்
வாய்ந்த மாதவத் தீர்களே கேண்மெனை வகுப்பான். (உஅ)

ஞான தீர்த்தமுந் தீர்த்தனு மத்திரி நலனும்
ஞான லிங்கமு மிலிங்கமா மரசுநற் றவத்தோர்
ஞான பூசையும் பூசைகொள் தாணுவு நடித்த
ஞான லீலையுஞ் சிறந்தது ஞானகா னனமே. (உகூ)

வேறு

அத்திரிமா தவமகிமை யவன்பிர டசையயடைந்த தனசூயைப்பேர்
பத்தினிகற் பியன்மூவர் விரதாா ரதன்வருதல் பரம காட்சி
சித்திலிங்கோற் பத்திமுதன்மூவர்புரி பூசையோடத்திரிசெய்பூசை
சத்தவிரு டியர்வசிட்டா தியர்பூசை சங்கரன்மா தவன்செய்பூசை()

ஆறயிரா வதங்கொணர்தல் லரிதீக்கை யரிபூசை யறுமுகேசன்
கூறுகலி யாணகிரி மகிமைகங்கை வரல்கன்யா குமரி மேன்மை
யீறிலகத் தியன்பூசை மருத்துமலை மகிமைபர சிராமன் பூசை
தேறுமியற் சேரனுஞ்சோ ழனும்பாண்டி யனுமியல்பிற் செய்த
பூசை. (கக)

அருள்பிரமோற் பத்தியொடு புன்னைக வனமகிமை யகத்யன் பூசை
தருகருடன் பூசைகலா வதியியல்னக் கிராலையமீம சனகராதி
யிருடிகடம் பூசையகி லிகைமகிமை யாஞ்ஞவற்க ரியற்கை யாகப்
பரவவரு ஞானகா னனச்சருக்க மூப்பதெனப் பகர்ந்திட்டானே()

புராண வரலாற்றுச்சருக்க முற்றிற்று.

ஆக திருவிருத்தம் கா.

பூலோகந் தேவலோகமுதலிய வுலகங்களெல்லாவற்றையு முறைப்பபடி சிருட்டித்து சரஸ்வதி சமேதரா யகமகிழ்ச்சியுடன் பிரமா சத்தியலோகத்தில்சுரர்முனிவரியாவருந்தொழப் பதுமாசனத்தில் வீற்றிருந்தான். அப்படியிருக்குங் காலையி லிருடிகள்பலரும் வந்து தொழுது யாங்கள் தவம் யாகஞ்செய்து விருத்தியடைய, இவ்விடத்திலோரிட மெவ்விடம் அருள் செய்யுமென்று கேட்க; அவனும் விருப்பமாயொரு தெற்பையை வளையஞ்செய்து இது எவ்விடத்திற்றங்குகின்றதோ அவ்விடமுமக்கென்றருள; அவனது பாதத்தைத்தொழுது அந்நேமிசெல்லுமிடஞ்செல்லுகையில் அது பூமியில் ஒரு வனமத்தியிற் சேர்ந்தது. அவ்விடத்தை முனிவர் கண்டு நன்றென்று மகிழ்ந்து நேமிசம்பந்தத்தால் நைமிசாரண்ணிய மென்று பெயர் கூறினர். மலர் காய் கனி கிழங்கு தருப்பை சமிதைமுதலியவற்றுனிறைந்ததாலிதையடைய வெத்தவஞ்செய்தோ மென்றும், தவம் வேள்வியியற்ற விதுவொன்றுமே குறைவற்றதென்றும், பலரும் அங்கமர்ந்திருந்தார்கள்.

அக்காலையில் மகாதவத்தையுடைய சூதமாமுனிவர் அவ்விடத்திற்கெழுந்தருள, சிவந்த திருமேனியில் வெண்ணீற்றொளி விளங்கவுஞ் சடைதாழவும் வருபவரெதிர்சென்று முனிவரர் வணங்கி, அவ்வனத்துக்கழைத்து வந்து ஆசனமுதலிய வற்கியபாத்தியத்துடன் பூசனை புரிந்து, மாதவமுடையவரே! தேவரீர் இங்கெழுந்தருளப்பெற்றது எங்கள் தவப்பயனென்று தோத்திரஞ்செய்ய; அதற்குச் சூதமுனியு மிற்றைநாள்வரைசெய்த நற்றவப்பய னீங்கெனக்குற்றதா லுங்களபாலடைந்து இனிதுவப்பப் பெற்றேன்; எனக்கிதன்மேற் பெறும் பேறென்னையுளதென்றுகூற; முனிவரர் ஓய் சூத புராணிகரே! முன்னமே பதினெண் புராணத்தையு மவைதோன்றினவாலாற்றையு மருளிச்செய்தீ ரின்னமுமதை விரித்துணர்த்த வேண்டுமெனக்கேட்கச் சூதர் சொல்லத்துடங்கினர். முனிவர்களே! நீங்கள் மொழிந்தது நன்று நன்று யான் சொல்வதை யுட்கொள்ளுங்களென்று தனி முதலான பராசரனென்னும் ஞானவிருட்சத்தின் கனியானவியாதனைக் கருத்திற்றியானித்து மனமொற்றுமையுட னிருகரமுஞ்சிரமிசை குவித்துக்கொண்டு நான்குவேதங்களையுமுணர்ந்த முனிவர்களே கேளுங்களென்று சூதர் சொல்லின்றுர். முன்னொரு கற்பத்தில் பூமண்டலமானது கற்றுளோரும் வேதமுமின்றி தலைமயக்குற்று எம்மதத்தோருந் தாமடைந்தமதப்பொருளே சம்மதப்பொருளெனமதித்து அறநெறிதவறி மதத்தினுன்மயங்குதலறிந்து பிரமாவும் விட்டுணுவும் புண்ணியமே யொருவடிவாய்த்திரண்டு விளங்கினதுபோன்ற வெள்ளியங்கிரி பர்வதத்தையடைந்து சிவபெருமானிடத்திலிதை விண்ணப்பஞ்செய்ய, அப்பரமபதி மாலைநோக்கி பராசரர் யோசனகந்தியோடு முயங்கையில் உன் கலையிலொரு கலையை மைந்தனுயவதரிக்கச்செய், அவனுக்கெந்த வேதமும் எனது அருளின் வரும், அதனை நாற் கூறுசெய்தகாரணத்தால் வேதவியாசனெனப்பெயர் பெற்று, வேதியர்க்குணர்

த்தி யவர்வினைகளைத்தீர்த்து மற்றை மூவருணத்தார்க்கும் அதனங்கமான ஆகமபுராணங்களிவற்றினை யானுணர்த்திய நந்தியிடத்திற் பெற்ற சனற்குமாரன் பாலுணர்ந்துஉலகத்துக்குணர்த்துவையாயின் எவர்க்கும் ஞானம் வருமென்றருள; அவ்விறையை யிறைஞ்சித்தேவர்கடத்த மூலஙிற்கேகினர். இப்பாலரியும் வியாசனுயவதரித்து நந்திபரம் பரையில் மறைகளெலாற்றை யுமுணர்ந்து எனக்குணர்த்திய புராணம் பதினெட்டினுள் சைவம் - மார்க்கண்டேயம்- காந்தம்- பௌடிகம்- இலிங்கம்- கூர்மம்- வராகம்- வாமனம்- மச்சம்- பிரமாண்டம்- சிவபுராணம் பத்தும். காருடம் வைணவம்- பாகவதம்—நாரதீயம் விட்டுணுபுராணம் நாலும்- பிரமம்- பதுமம்-- பிரமன்புராணம் இரண்டும் பிரமகைவர்த்தமாகிய சூரியபுராணம்- ஒன்றும்- ஆக்கினேயம் என்ற அக்கினி புராணம் ஒன்றுமாம். வேதங்களை சயமுனிவை சம்பாயினருக்கும் அவர் பையிலவர்க்கும் அவர் சுமர்திரர் நால்வருக்கு முன்முறையேயுணர்த்திப் பின்னரெனக்குணர்த்தினரென்று சூதர் சொல்ல; மாதவரெழுந்திறைஞ்சி சுசீந்திரத்தலமகிமையை யாங்கள் முன்னம் கேட்டிருந்து பின்னங்கேட்க வாசையுற்றேம் தேவரீரெமக்கியம் பவேண்டுமென்று துதித்தார். சூதர் மேற்கூரிய புராணம்- ௰அ-ல்- காந்தசங்கிதையாறிற் றனுவைபவத்திற் கூறப்பட்டுள்ள சுசீந்திரமகிமையை யானுங்கட்கியம்புவன் கேண்மினென்று அவற்றின் மகிமையை அத்திரி தவம்புரி சருக்கமுத லியாக்ஞ்ஞவற்கர் சருக்கமீறாக முப்பது சருக்கமாக்கித் தொகுத்துக்கூறினர்.

---

## க-வது அத்திரி தவம்புரி மகிமைச்சருக்கம்.

பூங்கம லத்தயன் புதல்வன் பூதல
மாங்கல னிவனென வயிர்க்குஞ் செய்கையா
னோங்கிய பிரணவத் துண்மை தேர்ந்தவ
னீங்கல னன்மையா ரியம்புந் தன்மையே. (௧)

ஆரண நான்கவற் றங்க மாறுசம்
பூரண வாகமம் புராண மேமுத
லாரண வரும்பதி னன்கு வித்தையுங்
காரணம் பெறநுணி தரிந்த கண்ணினன். (௨)

ஆறினை நூறியைந் தடக்கி நான்கினை
யூறினை யொழித்துமூன் றுணர்ந்தி ரண்டினை
தேறினை வில்லதோ ரொன்றைத் தேர்ந்துதி
லேறின வறிவினோ டிருந்த தன்மையான். (௩)

ஓயுமா றுணவொழிந் துடலந் தூயனாய்
வாயுவை நிறுத்திமேல் வழிகண் டப்புறத்
தாயுமோர் வெளியிலா ரமுத மேநுகர்ந்
தேயுறுண் பொருளினின் றின்பந் துய்த்துளான். (௪)

ஆய்ந்திடுங் கற்பினுக் கரசி நல்லெழில்
வாய்ந்திடும் புண்ணிய வடிவு தன்மனத்
தேய்ந்திடு பன்னியோ டிருந்துஞ் சிந்தின்மேற்
றோய்ந்திடு பழுமென் றேடும் போன்றுளான். (௫)

அறிவரு மரன்முத லான மூவரைக்
குறிவருஞ் சிறார்களாய்க் கொள்ளும் பெற்றியா
னெறிவரு மாமறை நிலைகண் டந்நிலை
பிறிவரு மத்திரி யென்னும் பேரினான். (௬)

ஆயவன் பன்னியா யமைந்து ளாளொரு
தூயவ ளவடிறந் சொல்லற் பாலதோ
மாயவன் கதிர்மணி மார்பில் வைகிய
சேயவ ளாமெனச் சிறந்த செவ்வியாள். (௭)

ஏதுமுற் றுணர்ந்துதன் னிறைவ னுவெடுந்
தோதுறுள குறிப்பறிந் துஞற்றும் பெற்றியாள்
போதுவின் டொழுகுதேன் பொழிவ தேயெனப்
பேதுறு மொழியுடைப் பெற்ற தாயனாள். (௮)

எப்பணி புரிந்திடி னினிமை யெய்துமென்
றப்பணி செய்வதற் கன்பு பூண்டுளாள்
மெய்ப்பணி மாதவ னன்றி வேறுமற்
றெப்பணி தெய்வமொன் றுண்டென் றெண்ணிலாள். (௯)

அருந்ததி முதலினோ ராய கற்புடைக்
கருந்தடங் கண்ணியர் புகழுங் கற்பினாள்
பெருந்திறன் மழையவள் பெய்யென் றற்பெயுந்
திருந்துநல் லறமெனுந் தெய்வ மேயனாள். (௰)

மருமல ரடியிணை வருடி மாதவன்
னிருவிழி துயின்றபின் றுயிலு மின்புளா
ளொருவரை நோக்குறு தொல்கும் வல்லிபோற்
பெருவிரல் நோக்கியே பெயரும் பெற்றியாள். (௧௧)

இறையவ னெழுமுன மெழுந்து தன்மனைப்
பொறையுறு தொழிலெலாம் புரிந்து பின்பரு
மறையவர்க் கேற்றன வியற்றி மற்றவ
னறைகுவ தென்கொலென் றயிர்க்குஞ் சிந்தையாள். (௧௨)

ஆரனம் விரும்பின ரவர்க்க ளித்துயிர்
சீரன தன்பதி நுகர்ந்த சேடமா
நீரன நித்திய மிசையு நேர்மையா
ளோரன ரூயையென் றுரைக்கும் பேரினள். (௧௩)

ஆமவ ளோடும்வந் தத்தி ரிப்பெயர்
மாமுனி யிமையமால் வரையின் பாங்கரிற்
றமினி தியற்றினன் றவமத் தன்மைகண்
டேமுனந் தோன்றின னெழிலி போன்றுளான். (௧௪)

கார்நிறக் கண்ணனைக் கண்ணிற் கண்டுளத்
தார்வுறப் பெரிதவ னடியிற் றாழ்ந்து வீழ்ந்
தேர்நிறத் துடல்புள கெழும்பக் கண்கணீர்
வார்தரப் பற்பல சொல்லி வாழ்த்தினன். (௧௫)

அன்னவ னுங்கள்பா லன்பு கூர்ந்தன
மின்னநீ ரில்லறத் திருந்து வாழ்ந்துபின்
பின்னமில் பரகதி பெறுகு வீரெனச்
சொன்னமாற் கெதிர்முனி சொல்ல லாயினன். (௧௬)

பொங்குவெங் கொடுவினை புரிந்து பூமியிற்
றங்குபல் யோனியாஞ் சரீர பேதங்க
ளெங்குமெங் கும்பிறந் திறந்து பேதையே
மங்குமிங் குஞ்சுழன் றலக்க ணுற்றனம். (௧௭)

எத்தனை செனமமியா மெடுத்த செனமமீண்
டெத்தனை யுந்தவிர்த் ததிக செனமமா
வைத்தனை யின்றனை வணங்கப் பெற்றளோஞ்
சித்தனை யாதருள் செய்ய வேண்டுமால். (௰அ)

ஆதலா னின்பத மாகு மம்புயப்
போதலான் மற்றொரு புகலி லோமென
வோதலா லுளமகிழ்ந் த ... நற்கதி
யீதலா தொன்றுள தெல ... றுவான். (௰௯)

இருந்தவ ரெழுவரு மீங்கோர் தானத்தி
லருந்தவ மியற்றுகின் றார்க ளாயிடை
பொருந்துவோ மாங்குநும் புதல்வ ராகியாந்
திருந்துவோம் பெறுவிர்பின் சித்தி முத்தியே. (உ௰)

தாணுவே முதலியாந் தங்குந் தானம
தாணவ விருளினை யகற்றுந் தீபம
தேனுறு பரகதிக் கேறு மேணிய
தாணமு துடையவர்க் குறையு ளன்னதே. (உக)

தொல்வினைத் தொடர்வினை தொலைக்குந் தொன்மைசேர்
பல்வினைப் பகையினைப் பாற்று மாற்றிலா
நல்வினைப் பயனையே நல்கும் பல்கியே
வெல்வினைத் தபோதனர் மேவ மேவுமே. (உஉ)

மருவளர் தீர்த்தங்க ளனேக மாகும்போன்
றுருவளர் மூர்த்திக ளனேகம் யோகர்வாழ்
தருவளர் சோலைக ளனேகஞ் சுந்தரம்
பெருவளந் தருமதற் கெல்லை பேசுவாம். (உ௩)

நந்தலில் காசிநன் னகர்க்குத் தென்றிசை
யந்தமா மலையவெற் பதற்குத் தெற்குற
வந்ததென் கடற்குநேர் வடக்க தாய்வளந்
தந்தபூ தலஞ்செலச் சார்ந்த தத்தலம். (உ௪)

அத்தலந் தனக்குமே ராகப் பாரகத்
தெத்தல மியானுமவ் விருவ ரும்பயின்
முத்தல மதுமறை முனிவ கேட்டியுன்
கைத்தல நெல்லியங் கனியிற் காண்டியால். (உ௫)

ஞானசா னனமெனு நாம மன்னதற்
கானதோர் வடக்குமேற் காக வங்கொரு
தானமாம் யாகதிர்த் தமமத் தீர்த்தத்தின்
றேனவங் கரையிலோ ராகஞ் சேருமால். (உ௬)

முடியுடை முத்தொழின் மூவ ரும்மதற்
கடிநடு முடியென லாகு நற்றளிர்க்
கடிமலர் முதலிய கடவு ளோர்கடம்
வடிவது பிரணவ வடிவ தாகுமால். (உ௭)

மாசிலா வரசுசின் மயம தாகுமியாம்
பேசிலோ பெரிததன் பெருமை நீவிர்போ
யாசிலா வவ்விடத் தமர்ந்தங் கீழலிற்
றேசிலாச் சிரமஞ்செய் திருத்தல் செய்திரால். (உ௮)

என்னவே யத்திரி யியம்பு வான்முனஞ்
சொன்னதா னத்தியல் சொற்று ளாயவன்
முன்னமா தவஞ்செயேழ் முனிவர் தன்மைசெம்
பொன்னவா மார்பநீ புகல வேண்டுமால். (உ௯)

என்னுமத் திரிக்கரி யியம்புமுன் போர்காள்
மன்னும்வெள் ளியங்கிரி வரத னெம்மொடுந்
துன்னும்வே தனைனொடுந் தோற்றுங் காட்சிய
துன்னும்வா னவர்க்கினி துதவ வானவர். (௩௰)

இயம்புவர் நுங்களை யெம்ம னோர்களே
நயம்பெற வேத்துத லன்றி நாதர்நீர்
பயன்பெற வேத்தவெற் பவர்கள் யாரெனச்
சயம்பெற வுரைத்தன மவர்க்கத் தொன்மையே. (௩௧)

வேறு.

வீந்த பூசைபூ சகர்கொள்வோ ராகுமூ வருமியா
மிந்த வாரறி வீர்புல வீரென விசைத்தோ
மந்த வேளையேழ் முனிவராங் கதனையா மறியச்
சிந்தை கூர்ந்தருள் செயுமென வெமைத்துதி செயவே. (௩௨)

எம்மை யாந்தியா னிப்பதும் பூசைசெய் தேற்குஞ்
செம்மை யானதுங் காட்டுது நீவிர்தென் றிசைபோய்
வெம்மை நீங்குறு ஞானகா னனத்திடை மேவி
மும்மை யெந்தமைச் சிந்தைசெய் தருந்தவ முயல்வீர். (௩௩)

அங்கு மேன்மையத் திரிமுனி யடைவனங் கவன்பாற்
றங்கு பாலராய் மூவரும் வந்தவ தரித்து
மங்கு ரூபச தாசிவ லிங்கத்தில் வதிந்து
பொங்கு பூசைசெய்வோங்கொள்வோ முழுதுமெப் பொழுதும். ()

ஆய நாள்வரு காறுமங் குறைதிரென் றறைய
வேய நாளிலாங் கேகின ரிருந்தவ ரீன்ற
தாயனு ளொடாங் குறுதியீ துறுதிவே தந்தசொல்
வாய னுதிமூ வர்களுநும் புதல்வராய் வருவோம். (௩௫)

முற்றிற்று.

---

## க-வது அத்திரிதவம்புரி சருக்கம்

பிரமாவின் புதல்வனும், அவனுலகன்றுலகமைப்படுஞ் செய்கை யானும், பிரணவத்தன்மை தெரிந்தவனும், நான்குவேதம் ஆறங்கம் பதினெண்புராணம் இருபத்தெட்டாகமம் அறுபத்துநாலு கலைஞானங்களையு முணர்ந்த வுணர்வினனும், காமாதியாறையுந் தள்ளியைம்புலனடக்கி யந்தக்கரணத்தை நீற்றிச் சகசிவபரமுணர்ந்து பந்தமுத்தியைத்தெரிந்து ஏகமாகிய பிரமத்தைக்கியமாய் அது மாத்திரமாய் விளங்குந்தன்மையனும், உணவொழிந்து சுத்த சரீரவானுப் வாசியையடக்கிப் பிரமரந்திரங்கடந்து அதற்கப்பாலிலங்கும் பரவெளியிலூறு மமிர்தத்தையுண்டு துண்ணியவஸ்துவோடின்பத் துய்த்துள்ளவனும், கற்பினுக்கரசியும் அழகு வாய்ந்த புண்ணியவடிவமே தன்மன்த்தொளிரு மனைவியோடிருந்தும் புளியம்பழந்தோ

டு போலிருப்பவனும், அயனரியரனாகிய மூந்தேவரையுந் தனக்குச்சிறார்களாய்க்கொள்ளும் பெற்றியையுடையவனும், அரியவேதத்தினிலையைக் கண்டவனும், ஆகிய அத்திரியென்னும் பெயரையுடைய வொருமுனிவனிருந்தான். அவன் மனைவி பரிசுத்தமுடையவளும், அழகிலிலக்குமியை யொத்தவளும், எதையும் நாயகன் சொல்லுமுன் முற்றுமுணர்ந்து செய்யும் பெற்றியுள்ளவளும், தேன்மொழியாளும், தாயையொத்தவளும், எதுசெய்யினாயகனின் புறவானே அதுசெப்பதற்கன்பு பூண்டுள்ளவளும், கணவனையன்றி யோர்கடவுளுண்டென்றெண்ணிலாளும், அருந்ததி முதலியோர் புகழுங்கற்பினாளும், பெய்யென்றால் மழை பெய்யுந்திறமுடையவளும், தருமதேவதையொப்பவளும், நாயகன் கால்பிடித்து விழித்துயின்ற பின்றுயிலுமின்பமுடையவளும், ஒருவரையு நோக்காது பெருவிரலை நோக்கி நடப்பவளும், இறையவனெழுமுன்னெழுந்து வீட்டைப்பொருந்த தொழிலெல்லாம் புரிந்து மறையவர்க்கேற்பன வியற்றி நாயகனறைவதென்னே வென்றையுறுஞ் சிந்தையுடையவளும், நாயகனுண்ட சேடமுண்ணுஞ் சீர்மையுடையவளும், அனசூயையென்னும் பெயரையுடையவளுமாம். அவடிறம் சொல்லற்பாலதோ! அவளோடு மத்திரி முனிவன் இமோற்பருவதத்தோர் பக்கந்திற்றவமியற்றினமை கண்டு விட்டுணு பிரசன்னமானார். அவரை வணங்கி அவரடியிற்றாழ்ந்து வீழ்ந்தெழுந்துடல்புள செழுக்கண்ணீர்வாரப் பலதோத்திரம் புனைந்தார். அரியுமுங்கள்பால் அன்புகூர்ந்தனம் சீரின்னமில்லறத்திருந்து வாழ்ந்து பின் பின்னமில்லாத பரகதிபெறுவீரென்று அருளியமாலைப் பார்த்து முனிவர் சொல்லுகிறார். தீவினைபுரிந்து பூமியிற் பலயோனிபேதங்கடோறும் பிறந்திறந்தங்குமிங்குஞ்சுழன்றலைக்கணுற்றனம்; யாமெத்தனை சென்மமெடுத்தும் அத்தனையுந் தவிர்த்து இரண்டையதிக சென்மமாய் வைத்தனை; ஆதலின் உன்னை வணங்கப்பெற்றுளோம். சித்துள்ள புத்திரனை யருள்வதற்கு நின்பதாம்புயப்போதல்லான் மற்றொரு புகலிலோம் என்று கூற; அரியுளமகிழ்ந்து உமக்கு நற்கதியீதல்லாமல் மற்றொன்றுளதென்று கூறுவார். பெரிய தவமுடைய சத்த ரிஷிகளுமீங்கோரிடத்திற்றவமியற்றுகின்றார். அவ்விடஞ்செல்வேம் அங்கே நம்புதல்வராகி மூவரும் வருவேம் நீர் பின்னர் சித்தி முத்தி பெறுவீர். தாணுமுதலியயாம் வசிக்குந்தானமும், ஆணவவிருளையகற்றுந்தீபமும், பரகதிக்கேறு மேணியும், ஊனுள்ளவர்க்குறைவிடமும், பழவினையையும் தொடர்வினையையும் புல்வினைப்பகையையுந் தொலைக்குமிடமும், நல்வினைப்பயனை நல்குமிடமும், வினைகளை வென்ற தபோதனர் மேவுமிடமும், அநேகந்தீர்த்தங்களுள்ளதும், அநேகமூர்த்திகளுள்ளதும், யோகியர் வாழிடமும், அநேகஞ்சோலைகள் சூழ்ந்ததுமான பெரியவளம்பொருந்தியவவ்விடம் காசிக்குத்தெற்காம், பொதியமலைக்குத்தென்பாலுள்ள கடலுக்கு வடக்காம், அத்தலத்துக்குச் சமானமெத்தலமுள்ளது; யானுமந்த விருவரும் வசிக்குமுத்தலமுமதது; அதற்கு

ஞானகானனமென்று பெயராம். அதன் வடமேற்காக யாகதீர்த்தமும் தென்கரையில் ஒரு அசுவத்தவிருட்சமுமுளதாம். முத்தொழிலுள்ள மூவ ரும் அதற்கடி கமுடியாம் மற்றத்தேவர்கள் தளிர்மலர்முதலியவாம் அத ன்வடிவு பிரணவசொரூபமுஞ் சின்மயசொரூபமுமாம். பெருமை பொரு ந்திய நீவிர் அக்கிழலிலாச்சிரமஞ்செய்து வசிப்பீரென்றருள அத்திரிமுனி வனத்தலத்தியல்பையருளினீர் அவ்விடத்தில் சத்தரிஷிகளின்றன்மையை யருள்வீரென ஆழியான்முன்னொருகாலத்தில் அரன் என்னோடும் அயனோ டும் தேவர்கட்குக் காட்சிகொடுத்தருள அவர்கள் மும்மூர்த்திகளாகிய உங்க ளை யெம்மனோர்களே யேத்துதலன்றிபலன்பெற வேத்தவேற்பவராரென்று கூறவதற்குச் சுயஞ்சொருபத்தைப்பெற முன்னுள்ளபடியேயவர்க்கருளி பூ சை- பூசகர் பூசைகொள்வோ ரிம்மூவரு மியாமேயென்று இந்தப்பிரகார மறிவீர் புலவர்களே யென்றருள; அக்காலை யெழுமுனிவர்களும் அவ்விடத் ததனையறிய சிந்தைகூர்ந்து அருள்வீரென்று தோத்திரஞ்செய்ய; அரியும் எம்மையாந்தியா னிப்பதற்கும் பூசை செய்வதற்கும் செம்மையான தலத் தைக்காட்டுதும்; நீவிர் தெற்கே ஞானகானனத்தை யெய்தி முக்காலத்திலு மெம்மைத்தியானித்து அருந்தவம்செய்வீர் அவ்விடத்து அத்திரிமுனிவன் பால்யாமூவரும் பாலராயவதரித்து சதாசிவலிங்கத்திடைவதிந்து, எப்போ ழ்தும் பூசைசெய்வோம் கொள்வோம் ஆதலின் அக்காலம் வரும்வரை அங் கிருப்பீரென்று அருளியவாறு வதிகின்றார்கள். அத்திரிமுனியே நீரும்தாய்க் கொப்பான மனைவியுடன் அவ்விடத்திற்போயிரும் யாமூவரும் பாலரா ய் அங்குவந்தவதரிப்போம் என்றருளிமறைந்தனரென்று சூதர்நைமிசார ண்ய முனிவருக்குச்சொன்னார்.

## ௨-வது அத்தரி பிரம சபையிற்சென்ற சருக்கம்.

என்றன னகன்றன னிமைய வெற்பைவிட்
டன்றன சூழையோ டரிய மாதவன்
சென்றனன் ஞானகா னனத்தைச் சேர்ந்தவ
ணொன்றின வளனெலா முற்று நோக்கினான். (க)

வேறு

அரசினையெ திர்ந்துவலம் வந்தருக தாக
கரைசெய்மக வாவியுறல் கண்டுகளி கொண்டான்
விரைசெய்வன மீதலது மேதகவு டைத்தா
யுரைசெய்வன மெங்குமிலை யென்றுளமு வந்தான். (௨)

தருப்பைகள்ச மித்துகட ருக்கள்கனி காய்கள்
விருப்புறமி குத்தனவெ ளத்தனிவி யந்தான்
மருப்பெருகு சாலைசெய்து மங்கையிவ ளோடிங்
கிருப்பதுசி றப்பெனவி யந்தவனி ருந்தான். (ரு)

தவமுனிவர் செய்தனர்கள் சாலைதழை யாலே
யவனுமன சூயையொடி தாமெனவ மர்ந்தான்
செவதவமி யாகமிவை செய்துசில கால
மூவகையொடு மாமுனிவ ரோடினிது றைந்தான். (சு)

வேதனுல கத்தவனோர் வேள்விபுரி கிற்பா
னோதுமர னேமுதலி னோரவண டைந்தார்
போதிலயன் மாலினொடு போதமுற வேள்விக்
கேதமில்ச டங்குசெய்வ தியார்மொழிதி யென்றான். (௭)

என்னுமள வத்திரியெ னும்பெயரி னன்வான்
மின்னவுயர் ஞானவன மீதிலுறை கின்ற
வன்னவனை யிங்கினித ழைத்திடென வன்னோ
னுன்னுமுன மங்கவனு ணர்ந்துநகை செய்தான். (அ)

ஏதிவண கைத்ததென வேமுனிவர் கேட்ப
வேதனுல கத்தில்வர வேயெனைநி னைத்தா
னாதலின கன்றிடுவ னென்னவன சூயை
காதலின மெங்கினள்பி றிந்திடுக ருத்தால். (௭)

ஆயிடைய டைந்திவண டைந்திடுதல் காறு
நீயிவணி ருத்தியுனை நீங்கவரி தென்னத்
தூயவன சூயையெதிர் சொல்லரிது வல்லே
யேயுமென தன்புரினி டத்திலுள தென்றும். (அ)

என்றபொழு தேயடியி றைஞ்சியிரு தாண்மீ
தொன்றியகன் னீர்முனிவ னுண்டவன சேடந்
துன்றுவகை கொண்டவன சூயைதொழு திங்ஙு
னின்றனள கன்றனநன் னேயமுனி யங்ஙன். (கூ)

தொடருமுனி வோர்களொடு தூயவன சூயைக்
கிடரறவெ லாமினிதி யற்றுதிரெ னச்சொற்
றடர்வனமி கந்தவய னுருலக டைந்தான்
மடவரலு மோர்தனிவ திந்தனள்வ ருந்தாள். (௰)

வேதமுனி பாதசல மிச்சிலது துய்த்தே
யேதமற வங்கினிதி ருக்குமவள் கற்பாற்
கேதமறு காய்கனிகிழங்குமுத லாய
பேதவகை யெங்கணுமி குத்தனபெ ருத்தே. (௰க)

ஒருகுறையு மின்றிமுனி வோர்குறைவில் சாலைக்
கருகுறையு நங்கையவ ளங்குறைதல் செய்தாண்
முருகுறைச ரோசன்மக முந்துகிலின் முந்தும்
பெருகுறையு ளுற்றமுனி பெற்றிசொல வற்றோ. (கஉ)

வேறு

வருந்த லின்றிம னேவதி யெய்தியங்
கிருந்த மூவரைக் கண்ணுற்றி யாவரும்
பொருந்தும் யாகச பையிற்பொ லிந்ததோ
ரருந்த வர்க்கண் டதிசயித் தானரோ. (கங)

ஏதில் மானிட யாக்கைகொண் டெய்திய
வாதி ருத்திர னுங்கொ லழற்கிறைச்
சோதி யாகுங்கொ லென்று சுருதியி
னீதி யோர்சொல நின்றுரை செய்குவான். (கச)

ஈண்டு வேள்வி யியற்றுதற் கேற்றன
தேண்டும் வேதநின் சேவடி தாழ்ந்தயான்
வேண்டுந் தன்மைய தென்னென வேள்வியிற்
பூண்டு முற்செய னீசெய்து போதியால். (கரு)

என்ன வேபுல் லெடுத்தவன் கையிலீய்ந்
துன்ன வேகொண் டொருதிரு மாலடி
பொன்ன வர்முடிப் பெய்தப் பொழுதவண்
மன்னும் வானவர் வாழ்த்தத் தொடங்கினர். (கசா)

துடங்கி வேதஞ்சொ லும்படி யேமுதற்
சடங்கு செய்தவி தானக் கடவுளோ
ரடங்க லீய்ந்தவ ராசியி யம்பவே
திடங்கொண் மாதவன் சிந்தை யுவந்தனன். (கஎ).

அத்தி ரிக்கு மரனுக்கு மாலுக்குஞ்
சித்தி ரத்தவி சிட்டதிற் சீர்பெற
வைத்தி ருத்தி மறையோன் மறைசொலு
மித்தி றத்துப சாரஞ்செய் தேத்தினன். (கஅ)

அந்த வேலை யமரர்க் கிறைவனோர்
சந்த வேள்விசெய் வானவன் றனத்தி
லிந்த மாதவ னைக்கொடங் கேகவே
முந்த வேள்வி முயன்றங் கிருந்தனன். (கக)

அண்டர் கோன்செயும் யாகத் தடைந்தவி
யுண்ட மூவரு மூறுற வேறுருக்
கொண்டு மேருக் குலகிரிக் குத்தர
கண்ட மீதுறைந் தார்சில காலமே. (உய)

உறைந்த மூவரு ளத்தன சூயைதன்
னிறைந்த கற்பை நிறுத்திட நீண்முகில்
சிறந்த நாவலந் தீவிற் செலாதறந்
துறந்து செல்லத் துணிந்தனர் சூட்சியால். (உக)

முற்றிற்று. ஆ திருவிருத்தம் ௱௬

## உ-வது அத்திரிபிரம சபையடைந்த சருக்கம்.

நைமிசாரண்ய வாசிகளைப்பார்த்துச் சூதர்சொல்கின்றார்; விட்டுணு அருளினமாத்திரத்தி லத்திரிமகாரிஷி அனசூயையுடனி மையபர்வதம் விட்டு ஞானகானனம் அடைந்து அதினுள்ள சிறப்பனைத்தும்பார்த்து அரசினையும் அதனருகுள்ள ஞானதீர்த்தத்தையுங் கண்டுகளிகூர்ந்து, இவ்வனத்துக் கொப்பாக வொருவனமெங்கு மின்றென்றகமகிழ்ந்து; தருப்பை சமிதை தருகாய் கனிமிகுந்திருக்கின்ற தெனவியந்து மற்றமுனிவர்களாச்சிரமமிய ற்ற மனையவளோடும் செவம் தவம் யாகம் இவை செய்து முனிகணங்களோடு சில காலமகிழ்வாயங்கிருந்தான். இப்படி யிருக்கையிற் சத்தியலோகத்

திற் பிரமன்வேள்வி யொன்றியற்ற அதற்கு அரன்மால் முதலோர் அவ்விடம் சென்றார்; அக்கால் அயன்மாலைப்பார்த்து வேள்விச்சடங்கு செய்வதியார் உரையென; ஞானகானனத்தத்திரி முனிவனிருக்கிறான வனையிங்கழையென; அந்நான்முகனினைக்கு முன்னம் இம்முனிவனறிந்து, நகைகொள்ள, அடுத்திருந்த முனிவர்முறுவலித்த தென்னவென்றுவினவ, மான் மகன்றன்னிடம் வரவுன்னினன் செல்கின்றேனென, நாயகன் பிரிவுணர்ந்த அனசூயை காதலினடுங்கினள்; முனியான்அவண் போயிவண்வருகாறு நீயிங்கிருவென, அவள் உம்மைப்பிரியவரியதென்று கூற; தவசியும் பரிசுத்தமுள்ள அனசூயையெதிர்சொல்வ தரிதென்றுன்னி சீக்கிரமிவடம் வந்து சேருகிறேனதுவரை யெனதன்பு நின்னிடத்தேயுளதென்றுமொழிய; கேட்டபொழுது துணைவன்றுடொழுது பாததீர்த்தமும் பரிகலப்பிரசாதமுங் கொண்டிங்ஙன நின்றனள். உடனேயருகினின்ற முனிவரை நோக்கியனசூயை துன்பமற வெல்லாமியற்று நீரென்று கூறியயனுலகடைந்தான். மடவாளும் பிரிவின்வருந்தித்தனிவசித்தாள். பாததீர்த்தமும் உச்சிட்டமுந்துய்த்திவள் வசிக்குங்கற்பாற் காய் கனி கிழங்கு முதலி பேதவகையெங்ஙனும் பெருத்து மிகுத்தன, முனிவரது பல சாலைகளருகுறைதலா னொருகுறையுமின்றியங்குறைந்தாள். இஃதிப்படியிருக்க அத்திரிமுனிவன் வருத்தமின்றி மனோவதிநகரத்தையடைந்து அங்கேயிருந்த மூவரைத்தரிசித்துயாவரும் பொருந்துமியாகசாலையிற் சென்ற வருந்தவனைக்கண்டு எவருமதிசயித்தார். இம்மானிடயாக்கை தரித்தவனுதிருத்திரனே அழற்கடவுளின் சோதியோவென்று வேதவேதியர் கூறினார், முனிவன் வேள்வியாற்றுதற் கேற்றனதேடும் வேதனே நின்னடித்தொண்டியற்றுமியான் வேண்டுந்தன்மயதென்னென அவர் யாகத்திற் செய்யவேண்டுங் கிரியையனைத்து நீசெய்தியென்று தற்பையைக்கையிற்கொடுக்க, அதை யேற்றுத்திருமாலடியினுந் தேவர்கண் முடியினுஞ் சாத்தினபொழுது சுரர்வாழ்த்தினர் வேதகோஷமுளங்கயாக முதற் சடங்கு செய்து கடவுளர்க்கு அவிசளித்தான். அவர்களும் ஆசிகூறவுளமகிழ்ந்திருந்தனன். அத்திரி அரன் அரியிவர்க்குச் சித்திராசனம் விரித்து அதிலெழுந்தருளச்செய்து வேதன்வேதமுறையினுபசரித்தான். அப்பொழுது இந்திரன் ஒருவேள்வி செய்ய அவன்றுனத்திலிருந்த மாதவனை வைத்து மகமியற்றி மூவர்க்குமவியுதவ அதனைக்கொண்ட மூவரும்வேறுற வேறுருக்கொண்டு மேருவுக்குத்தரதிசையில் உறைந்தார். அங்ஙனமுறைந்தவர் அனசூயையின் கற்பை நிலைநிறுத்த நினைந்து காவலன்றீவிலோருபாயத்தால் மழை பெய்யமேகஞ்செல்லாமல் அறம் துறந்து செல்லத்துணிந்தனர் என்று சூதர்சொனனர்.

முற்றிற்று.

என்று சூத னியம்புதல் கேட்டிது
நன்று பின்னர் நடந்தவெல் லாமினி
இன்று கேட்கவி யந்தன மாதவக்
குன்று போல்பவ கூறெனக் கூறுவான். (க)

வேறு

ஆதலிற்குல மேருவுக்கய லாயதெக்கண திக்கெலாஞ்
சீதமுற்றக லாதமைப்புயல் சேர்விலாதுதண் ணீரிலா
தேதமுற்றுண வானதற்றுயிர் யாவுமங்குநி லாதுகார்
மீதுறப்பெய்வ தேதுதிக்கெள வேங்கிணைந்துசள் ளாடுமால். (உ)

போகமற்றன பூசையற்றன புனிதமற்றன மனிதர்சூழ்
மோகமற்றன தாகமுற்றின முறையுமற்றன முனிவர்பால்
யோகமற்றன யாகமற்றன வுரனுமற்றன மரமெலாஞ்
சாகமற்றன வேர்களற்றன சலமதற்றன நிலமெலாம். (௩)

குளம்வறந்தன நதிவறந்தன கூவல்வற்றின பூவிலோர்
களம்வறந்தன நாவறந்தன கருவறந்தன வுருவுறு
துளம்வறந்தன வுடல்வறந்தன வுயிர்வறந்தன பயிரில்வாழ்
வளம்வறந்தன மழைவறந்திடில் யாவையோவற ளாதவே. (௪)

அன்னகாலையி லன்னமேயரி தாகியேகனி காய்கிழங்
கின்னபோகமு மின்றியாமினி யெங்ஙனேகுவ மென்றுமுன்
றுன்னுமாதவ ரியாவரும்பெறு துயரறிந்தன சூயைதன்
பன்னசாலையி னூடுறைந்தொரு பண்புசெய்தன ளன்பினால். ()

நிறைதவத்தின னடிவிளக்கிய நீரையேகையி லேயெடுத்
திறைவனோத்தன திதயமத்தியி லேயிருத்திநி தானியா (ன்பமே
முறைகொண்மைப்புயல் பொழிகவெங்கணு முன்புபோன்மிக வி
குறைவறப்பெரு குகவெனத்தனி கூசிடாதுற வீசினள். (சு)

ஆறிரண்டெனும் யோசனைக்குளண் ணரியமாமழை சொரிகெனக்
கூறிவிண்டநன் னீரெழுந்தெழு கொண்டலாய்நிரை கொண்டதோ
தேறுகின்றில மூவருஞ்செய்த திறமகற்றிய திறலினு
சீறிலன்பினள் கற்பினுக்கெதி ரியலுமோமெவர் செயலுமே. (எ)

மங்கைகற்பெனு மேன்மையாலுயர் மழைபொழிந்திடு பான்மை
றங்குநற்கனி காய்கிழங்கொடு சாகமும்பல போகமு (யாற்
மெங்குமற்புத மேமிகப்பசி யேவளர்ந்துட லேதளர்ந்
தங்கிளைத்தவ ரெவருமிங்குற லாயினரிடம் போயினர். (அ)

வந்தமெய்த்தவ ருக்கெலாமதி வாசசந்தன சீதளந்
தந்துடம்மளர் வாறவீசுறு தால்பிருந்தம தாலவே
யுந்துமுக்கனி பால்சருக்கரை யோடளைந்துவி டாமலுண்
டந்தமுற்றிட வன்னமிட்டன ளாயையொத்தன சூலையே. (௯)

அங்கடைந்தவ ருக்கெலாமரு ளன்னபூரணி யென்னவே
சங்கடந்தவி ரச்செய்திங்கிவ டங்குமேல்வையின் மேருவின்
பங்கடங்கிய மூவருமுனி பன்னிதன்செய லுன்னியே
யிங்கடங்கரு மாடலேசெய வேயினர்கிழ மாயினர். (௰)

வேறு. தடியோடு தடுமாறித் தளர்ந்துழப் பிளந்துடை தத்தி ப்பொத்தி, முடியோடவ் வுடனரைத்து முகமும்வலித் துச்சுரித்து முக்கிச் சக்கிப், பிடியோடென் புந்ரமபுந் துன்னநான்மார் பின்மி ன்ன மேனிகூனி, மடியோடு பசிகனற்ற மறைக்கிழவ ரறக்கிழமா ய் வந்துற்றாரால். (௧௧)

வந்துபன்ன சாலையிலார் பசிகொடிதென் றுழன்றுரைக் கும் வார்த்தை தான்கேட், டந்தவன்னை வெளியில்வரக் கண்டிளை ப்புந் தவிப்புமிகுந் தவசமாகச், சிந்தைபயந் தெடுத்தன்னோர் மூர் ச்சைக்கேற்றனகொடுத்துத் தேற்றத் தேற்றந், தந்தபின்ன ரடிவி ளக்கி யாசனமிட் டிருத்தியுப சாரஞ்செய்தே. (௧௨)

இன்னபாத் திரங்கிடையா தெனமனம்பற் றிடப்பொசிக் கு மிடந்தூய்தாக்கி, யன்னபாத் திரம்விளக்கி யறுசுவையுண் டியு முறையோ டமைத்துக்கைமேற், சொன்னபாத் திரநீர்விட் டமு துசெய்யு மென்னவன்னை சொன்னசொல்லின், பின்னபாத் திரரா கி மூவரும்பே சாதவுளா பேசினரால். (௧௩)

உடுத்ததுகி லகற்றிலுண்போ மன்றேலுண் ணேமென வன் றேதக் காதி, லடுத்தபொழு தரகரவென் றஞ்சியின்னன் பி

ஞ்சியுன்ன லாமோகீவி, ரெடுத்தமொழி புன்மொழிதி திதுகேட்க வெனக்குவிதி யின்றுநன்று, கொடுத்தவன்னம் பொசித்தநன்மை கூறுவதுந் தன்மையென்று கூறும்போது. (கச)

எமதுமொழி கேட்டிலையே லுண்ணேமின் றுயிரிழப் போ மென்னவன்னோர், தமதுமொழி கேட்டிதுவோர் சோதனை யோ வெனமனதிற் ருக்கிநோக்கி, யுமதுகருத்தெப்படியோ வப்ப டியே முற்றுமிஃ துண்மையாமென், றமைதிபெறத் தன்கணவன் பாததீர்த்தத்தையெடுத் தங்கைகொண்டாள். (கரு)

வேறு

என்னிறை யெனதுளத் திருக்கு மென்னிலென்
முன்னிறை யவரிவர் மூவ ருந்திரு
மெய்ந்நிறை சிறுர்களாய் விடுக வென்றுதங்
கைந்நிறை புனலைச்செங் கரத்தில் வீசினுள். (கசு)

வீசின பொழுதற வெட்கி யுட்கியுட்
கூசின பேரெனக் குறுகி மாசறு
தேசினர் சிறுவராய் சிறுகிக் கீழ்கிடந்
தேசின ரொனவழு திரங்க லாயினுர். (கஎ)

கிழவுரு வெய்திய கேடில் மூவரு
மழவுருப் பாலராய் மயங்கி வாய்திறந்
தழவுரு மாற்றிய தென்னி லற்புத
விழவுருக் கற்பலால் மிக்க தில்லையே. (கஅ)

கருத்துமுற் றியதெனக் கனிந்து பாலராம்
விருத்தரைத் தன்றுடை மீதி லேயெடுத்
திருத்திநெய் பால்கலந் தேற்றச் சங்கில்வார்த்
தருத்தின ளருத்திமெல் லணையிற் சேர்த்துவான். (கசு)

மீட்டுமப் புதல்வரை யெடுப்பள் மிக்கநீ
ராட்டுவ ளுதவினீ றணிவள் சங்கணி
பூட்டுவ ளுச்சியி லெண்ணை பொற்றுவ
ளாட்டுவ டொட்டிலிற் கிடத்தி யன்பினுல். (உ0)

தேவரு முனிவருஞ் செகத்தின் மாதவ
ரியாவருங் காணொணு திருக்கு முத்தொழின்
மூவரு மிவரெமை முற்றுங் காப்பதற்
காவரென் றறிந்துதா லாட்ட லாயினுள். (உக)

தாலாட்டு.

ஓங்கு கரமு முரமுந் திருநாவுந்
தேங்கமல மான்சேரச் சேருவீர் கண்வளரீர்
தாங்கு முடிக்கணியுந் தன்னிறமு நற்றவிசு
மாங்கமல மென்னவினி தாக்குவீர் கண்வளரீர். (உஉ)

எந்நாளு மும்பரியம் பரிதா மம்புயத்திற்
பொன்னு ரணியே பொருந்தல்செய்வீர் கண்வளரீர்
மின்னு ரணியும் விரிகுடையு மில்லிடமு
நனுகை மென்ன நலம்பெறுவீர் கண்வளரீர். (உஙு)

மன்னுமலை மின்னையுஞ்சொன் மானையுமம் மாநயனப்
பொன்னையுமுத் தாரமெனப் பூணுவீர் கண்வளரீர்
பின்னமிலா நான்மறையின் பின்னுநடு வுந்நடுவின்
முன்னுமூ வர்முதலா மூவர்நீர் கண்வளரீர். (உச)

மேவலரு ருண்ணீறி வெண்ணீறெ றுச்சிரிக்குஞ்
சேவகனே யான சிறுவாநீ கண்வளரா
யேவகனுங் கன்னல்வில்லி யென்றவனை யன்றுவென்ற
பாவகனுங் கண்ணுடைய பாலகனே கண்வளராய். (உரு)

ஓங்கியகின் றேவி யுடுத்தவுடை மீதவனைத்
தாங்குமவள் பாலுறங்குஞ் சந்ததியே கண்வளராய்
தேங்குகனை நான்குடைய தென்னிலங்கை மன்னுயிரை
வாங்குகனை தாங்குசிலை மைந்தாநீ கண்வளராய். (உசா)

ஓதக் கடல்சூ ழுடையவனை யீன்றுபெற்ற
தாதைக் களித்த தனியனே கண்வளராய்
யேதைச்சொல் வேனுலக மெல்லாம் படைத்தொருபெண்
பேதைக்கு வந்துதித்த பிள்ளாய்நீ கண்வளராய். (உஎ)

உய்வண்ண மூவரையு மொன்றாய்த் தனித்தனியா
யிவ்வண்ணந் தாலாட்டி யேற்றெடுத்துப் பாலூட்டிச்
செவ்வண்ணத் தண்டை சிலம்புசிறு தாளிலணிந்
தவ்வண்ண மாயவனை யாழிகையி லேயூட்டி. (௨௭)

மைந்தர் வனப்பு மணிவாய்க் குறுநகையுஞ்
சுந்தரமுங் கண்டா வெண்டாள் களிகூர்ந்தாள்.
தந்தையா யாவருக்குந் தாயருமா மூவருக்கு
மந்தமொரு நற்றாயுண் டான ததிசயமே. (௨௯)

என்னுமுரைச் சூதனைப்பார்த் தேந்திழையாள் சற்பினியல்
புன்னுதொறு மிறும்பூ துற்றுவப்புப் பெற்றனமாற்
பின்னு நிகழ்ந்த பரிசனைத்தும் பேசுகெனத்
துன்னுமறை மாதவர்முன் சூதனெடுத் தோதுவனால். (௩௰)

முற்றிற்று. ஆக திருவிருத்தம் ௩௰.

## ௩-வது அனசூயை கற்புமகிமை.

அது கேட்டு முனிவரர் நல்லது பின்னடந்த அனைத்தும் கேட்கவிரும் பினோம் மாதவரே மலைக்கொப்பானவரே உரைப்பீராக வெனவுரைக்கின்றார். பெருமை பொருந்திய மகம்மேருவுக்குத் தென்றிசை முற்றும் மேகந்த வழாததனாற்றண்ணீரின்றிக்கெடுற்று உணவற்று எவ்வுயிரும் அங்குதங்கா மல் எத்திக்கின் மழைபெய்கின்றதென நினைந்து தள்ளாடின. மனிதர் பால் புனிதம் போகம் மோகம் அற்றன முனிவர் பால் யோகம் யாசம் அற்றன தாகமுற்றின முறையுரன் அற்றன மரமெலாம் சாகம் வேர்கள் அற்றன குளம் நதிகூவல் வறந்தன பூமியிலுள்ளோர்க்கு உயிர் உடல் கண்டம் நாவு வறந்தன உருவுறாது கருவும் வறந்தன பயிர்வளம் வறந்தன மழை வறந்திடின் வறளாதன வெவை! அப்பேர்ப்பட்ட காலத்தில் அன்னம் அரிதாகிக்காய் கனி கிழங்கின்றி எங்ஙனம் ஏருவம் என்று இங்ஙனந்துன்புறு மாதவர் துயரறிந்து அனசூயை தன் பன்னசாலையினூடுறைந்து நன்பினொலொருபன்புசெய்தாள். தன்றவத்தனடி விளக்கிய நீரைக்கையிலெடுத்து இறைவனை நினைந்து எங்கணு மழைபொழிந்து முன்போலுலகிலின்பம் பெருகுகவென்று வீசினாள். அந்த நன்னீரானது எழுந்து பன்னிரண்டு யோசனை தூரத்துக்குள் சப்தமேகங்களாய் நிரைகொண்டதோ தெறுகின்றிலம்- மூவர் செய்ததிற மகற்றிய வலியினால் முடிவிலாத அன்பினர் கற்பினுக்கு எவர்செயலு மெதிரியலுமா! மங்கையது கற்பெனு மேன்மையான்மழை பொழிந்த

தூற் காய் கனி கிழங்கு சாகம்பலபோகமுமிருந்தன. பசிவளர்ந்து உடற
மூர்ந்து இளைத்தவரெவருமங்கடைந்து இடறையகற்றினார். வந்தவந்த தப
சிகட்கெல்லாம் சந்தன மரங்கள் சீதளம் தரவும் கூந்தற் பனையும் மூங்கிலு
ம் தளர்வாரவீசவும் முக்கனி பால்சருக்கரையளைந்த வன்னத்தை தாயை
யொத்தவன சூயைபடைக்க வுண்டானந்த மடைந்தனர். அங்கடைந்தவர்
சங்கடங்களை யெல்லாம் அன்ன பூரணி யென்னத்தவிர்த்து வசிக்குங் கா
லத்தில் மேருவின் பக்கத்தில் வதிந்த மூவரு முனிபன்னியின் செயலுன்னி
அரிதாகிய திருவிளையாடல் செய்யக்கிழமாகித், தடியோடு தடுமாறித்தளர்
ந்து மூப்பினமிழந்து நடைதத்திப்போத்தி நலைமுடி யோடுடனரைத்து
முகம் வலித்துச் சுரிந்து முக்கிக்கக்கி என்பு நரம்புதுன்ன யஞ்ஞோபவீத
மின்னமேனி கூனிவயற்றிற் பசி கொதிப்பப் பன்னசாலையின் வந்து பசி
கொடிதே யென்றுரைப்ப; அதைக்கேட்டன்னை வெளியில்வர இவர்கள் இ
ளைப்புந்தவிப்புமிருந்து அவசமாக, அவள் சிந்தை பயந்தெடுத்து அன்னோர்
மூர்ச்சைக்கேற்றன கொடுத்துத்தேற்ற, தேறிய பின்னர் அடிவிளக்கி ஆச
னந்துளக்கி யுபசாரஞ்செய்து இன்ன பாத்திரங்கிடையா தென்றுளம் பற்
றிப் பொசிக்குமிடந்தூய்தாக்கி பாத்திரம் விளக்கி அறுசுவையுண்டியமை
த்து நீர்வார்த்து அமுதுண்மினென, பின்னர் மூவரும் உடுத்தியிரா நின்ற
துகிலகற்றிலுண்பேம் அன்றேல் உண்ணோம் என்றுரை யாதனவுரைத்தா
ர். கேட்டனவிற் செவிபொத்தி அரகரவென்றஞ்சித் துன்பமிஞ்சி நீவிரெ
டுத்தமொழி தீது இது கேட்க விதியோ; நல்லது கொடுத்தவன்னம் பொசி
த்து நன்மை கூறுவதே தேவரீரது தன்மை யென்றுகூற; அம்மூவரும் எ
மதுமொழி கேட்டிலையேல் உண்ணேம் உயிரிழப்பேமென்ன, அம்மொழி
கேட்டு இதுவுமோர் சோதனையோவென்று மனதுட்கொண்டு, உமது கரு
த்தெப்படியோ வப்படியே முற்றுமென்று கூறித் தன்கணவன் பாததீர்த்
தத்தை அங்கைகொண்டு என்னிறைவன் என்னுள்ளத் திருப்பானாகில் என்
முன்யாக விம்மூவரும் சிறுர்களாய் விடுகவென்று செகத்தில் வீச, எதிரே
சினர்போலக் கீழ்க்கிடந்து சிறுவராயழலாயினார். கிழவுருவெய்திய மூவ
ருமழவுருவாகிமயங்கியழவுருமாற்றிய கற்பினற்புதத்துக் குமிக்கதியாதுள!
நங்கருத்து முற்றியதெனக் கனிந்து பாலராம் விருத்தரைத்தன்றுடை மீ
தெடுத்திருத்தி நெய் பால் கலந்து சங்கில் வார்த்துப் புகட்டி அணையிற் சே
ர்த்து வாள் மீட்டும் புதல்வரை யெடுப்பாள் நீராட்டுவாள் நெற்றியில் நீற
ணிவாள் சங்கணிபூட்டுவாள் உச்சியிலெண்ணை தேய்ப்பாள் தோட்டிலினம
ர்த்தி யாட்டுவாள் தேவர்முனிவரி யாவருங்காணுமூவரும் எமைமுற்று
ங்காப்பதற் காவரென்று தாலாட்டினாள் என்றுரைத்த சூதரைப்பார்த்து
மேனடந்ததைச் சொல்லுமென்று கேட்கச்சொல்லுவார்.

முற்றிற்று.

இங்கிவர்க ளிவ்வணமி ருப்பவிவர் காதன்
மங்கையர்க ளுடியுயர் வானுலக டைந்தே
யங்கவரோ டேவினவ லானபொழு தாளு
நங்கையர்க ளோடுமெறை நாரதனு ரைப்பான். (க)

ஆவலுறு மூவர்செய லன்னையரே கேண்மின்
ஞாவலுறு தீவிலுயர் ஞானவன மங்கே
தாவலுறு மத்திரித வம்புரிவ னன்னோ
னேவலுறு பன்னியவ ளின்னமுத மன்னாள். (உ)

அத்தெரிவை கற்பியல றிந்திடவி னோந்தே
மெய்த்திறவி ருத்தரென வேபசிமி குந்தே
முத்திறந டத்துமவர் மூவருமடைந்தா
ரெத்திறம்வி ளைந்ததுகொ லென்றறிகி லோமே. (ங)

நீவிருயர் ஞானவன நீளிடையி நாளிற்
போவிரவ ணேயவர்போ ருந்துவரெ னுமுன்
றூவரிய தேவர்பதி தன்னையக ருய்மார்
மூவருமி மாசலமு கட்டிடைய டைந்தார். (ச)

அத்திரித வத்திறைவ னன்னமுனி பன்னி
மெய்த்திரிவி லாளவடன் வீறறிகு வோமென்
றித்திரிகு ணத்தர்செல்வ தேதமென வேத
முத்திரிக ளுக்குமன முற்றினகி லேசம். (ரு)

ஏதினிவி சாரமதெ னப்பனிவ ரைக்கோ
மாதினொரு மூவருமி மாசலம கன்றே
மேதினிசொல் ஞானவன மேவிமக வாவி
போதிகிழன் மீதவர்பொ ருந்தினரு வந்தே. (சு)

ஆதியிறை வோருறைத லானவண ஞானச்
சோதிமய மாய்விறைதல் கண்டுடறு வண்டே
நீதிபா ரிங்குறைத னிச்சயமெ னக்கா
ரோதியர்கண் மூவரவ னும்றளரு வப்பால். (எ)

ஆயபொழு தத்திரிதன் னாச்சிரம மெல்லாந்
தூயரிவர் மெய்யிலுறு சோதியுற லாலே
மேயபக லெககனமீ திலுறு சோதி
யேயும்வகை யாதெனவி ருந்தவரெ ழுந்தார். (௮)

மாதவரெ லாருமக வாவியரு கேபோ
யாதவரு மேபரவு மன்னையரை யன்னாள்
சூதறுபுள் ளேறுமிசை சூட்சிபெறு காட்சி
தீதறிவி னாடுதெரி சித்ததிச யித்தார். (௯)

தெரிசனைசெய் தேயதிச யித்தவரெல் லோருந்
துரிசறும னத்தொடன சூயையொடு கூறப்
பரிசுபெரு மத்திரிப தத்தினைநி னைத்தே
வரிசைபெறு புத்திரரை வாரமொடு பாரா. (௰)

சிந்தனைசெய் தன்னவள்சி றப்பவெவ ராலும்
வந்தனைசெய் மூவருமம் மாதவர்கள் சூழ
வந்தநிலை வானினைய கன்றுமக வாவிச்
சந்தநிறை போதிநிழ றன்னிடைய டைந்தார். (௧௧)

பங்கயம ணித்தொடைய ரித்தயனை யுன்னி
யங்கயனெ னச்சிலவ ரங்கணமர் கின்றார்
பொங்குதுள பத்தொடைபு னைந்தரியை நாடிச்
செங்கண் முகிலன்னசில செல்வருறை கின்றார். (௧௨)

அக்கமணி மாலிகைய ணிந்தரனை யுன்னிச்
செக்கர்முடி யோடுசில திவ்யருறை கின்றார்
பக்கமற மிக்கதொர்ப ரப்பிரம மென்பா
லொக்கவுணர் கிற்குமவ ருங்குழுமு கின்றார். (௰௩)

ஆயவர்சி றப்புமவ்வ ருந்தவரு வந்தே
மேயவன மேன்மையும் விருப்பினொடு நோக்கித்
தூயவன மீதெனம கிழ்ந்துநிறை சோதிக்
காயவுரு மாறியுயர் கன்னியர்க ளானார். (௰௪)

கன்னியர்க டம்வடிவு கண்டுசடை கொண்ட
சென்னியர்கள் வேதியர்கள் சீரியர்க ளன்னோர்
பன்னியர்க ணண்பினர்கள் பண்பினர்க ளல்லா
லன்னியர்க ளல்லவென வன்னவர்கள் சூழ. (யரு)

அன்னையன சூழ்வைத வகத்திடைய டைந்தே
முன்னையர னுதியொரு மூவரையு மூவர்
பின்னனைய பாலரென மெய்ப்பொடு வளர்ப்பா
யுன்னையென கூறுவ துளக்குநிக ருண்டோ. (யசு)

வேறு

காமினீ யெம்முயிர்க் கணவர்க் குற்றதா
யாமினி யென்றுனை யடைந்த வெங்கட
மாமினீ பொறுமையின் வளத்தி னிகையிற்
பூமினீ யென்றவர் புகன்ற போதினில் (யஎ)

சீரிய ரிவரிவர் தேவி மாரெனக்
கூரிய மனத்தினிற் குணித்துக் கொள்கையால்
வேரிய மலர்கொ டர்ச்சித்து வேட்கையா
லேரிய நீரென விடத்தி லெய்தவே. (யஅ)

ஏதுமா தவஞ்செய்தே னௌியெ னென்னவே
மாதுதாழ்ந் தெழவவள் வதன நோக்கியிப்
போதிலெம் புருடர்தின் புதல்வ ராவதற்
கேதுநீ நினைத்தியென் றிரங்க லாயினர். (யகூ)

அன்றவ ரிரந்தன ரன்னை முன்னையா
மின்றவர் தங்களை யிரக்கின் றேமெம்பா
லன்றவர் தம்மைநீ நல்கி லொல்கிலோ
மென்றவர் மொழிந்தவற் கிரக்க மெய்தினள். (உய)

அப்படி யாவதற் கைய மில்லையென்
மெய்ப்படி மாதவன் விண்ணு ளானனோ
னிப்படி வருமள விருத்தி ரீங்கென
மைப்படி கண்ணினுன் மகிழ்ந்து கூறினள். (உக)

கூறிய வார்த்தையுட் கொண்டன் னோர்மனந்
தேறிய துணர்ந்துகாய் கிழங்கு தீங்கனி
யேறிய போகம்யா னிய வேனுகர்ந்
தூறிய வுளத்தொடிங் கமைதி ரன்னேமீர். (உஉ)

என்றிம்மா துரைப்பவெம் மிறைவ ரெம்மிடத்
தொன்றினு லல்லதொன் றுண்ப துத்தம
மன்றுநீ யருள்செயு மளவு நோற்பதற்
கின்றுநீ யோரிட மிதுவென் றேதென்றார். (உ௩)

கனிவரு மொழியினுள் கழறு வாளெழி
னனிவரு ஞானகா னனமொன் றுணடருட்
டனிவரு ஞானதீர்த் தமுமுண் டாங்கதின்
முனிவர ரெழுவரு முயல்கின் றார்தவம். (உ௪)

தவமியற் றிடுபவர்க் கேற்ற தானமற்
றவமகற் றிடுமுமக் கன்ப ராகிய
சிவன்முதற் றலைவரைச் சேர்க்கு மென்னவங்
குவகைபெற் றத்தலத் துற்று நோற்கின்றார். (உ௫)

நோற்றிடு மூவரு நோன்மை நீர்படிந்
தேற்றிடப் பாதலத் திருந்து மூவரொத்
தாற்றிடு முங்கதி யந்த வாவியிற்
றோற்றிடுந் தன்மையார் சொல்லற் பாலரோ. (உ௬)

பாற்பதி கங்கையிற் பங்க யாசனி
மாற்பதி யமுனையில் வாணி வாணியி
லேற்பதின் மூழ்கித்த மிறைவர் மூவர்தம்
மேற்பதி யன்பினுல் விரத முற்றுளார். (உ௭)

தன்மமா ஞானதீர்த் தத்தின் மூழ்குவார்
சென்மமாங் கடலைவிட் டேறித் தேறருங்
கன்மமாந் தீவினை கடந்து காண்பருஞ்
வன்மமா முத்தியின் மார்க்கஞ் சேர்வரால். (உ௮)

தங்கிய ஞானதீர்த் தத்தி னுத்திரங்
கங்கைதென் கீழதா யமுனை காமுறப்
பொங்குதென் மேற்கதாய் வாணி பொற்பினோ
டங்குறு மவற்றில்வின் னவர்வந் தாடுவார். (உகூ)

எந்நதி படிந்திடும் பலனு மேற்றமா
முந்நதி மூழ்கிடி னுதவு மோகமா
மந்நதி மூனறுமிங் கமைத லாலதி
னன்னதி யாகுமிஞ் ஞான வாவியே. (௩௰)

அன்னவா வியினரு காக வங்கவன்
சொன்னவா றருந்தவந் தொடங்கி மூவரு
மின்னவா றிருந்தன ரென்னச் சூதனு
முன்னவா வற்றமா முனிவர்க் கோதினன். (௩௧)

முற்றிற்று. ஆக திருவிருத்தம் ௱௬௪.

## ௪-வது தேவிமார் விரதச் சருக்கம்.

இங்கே யிப்படியிருக்க விம்மூவர் தேவிமார் தேவலோகத்திற்போய் சுரரிடம் விசாரித்துக்கொண்டிருக்குங் காலையில் நாரதர்சாநிந்தன்னையரே கேண் மின் பூலோகத்தில் நாவலந்தீவில் அத்திரிமுனிவன் பத்தினி கற்பை யறியமுத்திறம் நடத்து மூவரும் கிழவுருவாய்ச் சென்றார் எத்திறம் விளைந் ததோ தெரியாது, ஆதலால் நீவிர் அவ்வனத்திற்கிப்போதே பொனாற்காண லாம் என்றோது முன மூவரை நீங்கிய தாய்மார் அவ்விடம் விட்டு இமைய பருவதத்தையடைந்து அனசூயை கற்பின் வலியையறிவே மென்றும் இத் திரி குணத்தர் சென்றது குற்றமென்றும் முத்திரிகளும் மனக்கவலையுற்று ஒரு வாறு தேறிமலை மகளோடு அவ்விட நீங்கி ஞானகானனத்தில் யாகதீர்த் தத்தில் அரசின் நிழற்கண்ணிருந்து ஆதியிறைவர் இங்குறைதலால் இவ்வ னம் ஞானச்சோதிமாய்நிறைதல் கண்டு உடறு வண்டு நீதிபரரிங்குவதிதனி ச்சயமென்று மூவருமுவந்தார். அக்காலத்தில் அத்திரியாச்சிரமமுற்றுமிவர் மேனியின் காந்திபடலால் பகலோனைப்போன்ற விதமியாதென்று முனிவ ரெழுந்தார் எழுந்து சூரியர்கள் தெரிசிக்கும் அன்னையரையும் அக்காலத்திற் றாமரைப்பூமீது அன்னமேறி யிருத்தலையும் குற்றமற்ற விடத்திற் றரிசித்து அதிசயித்து பரிசுத்தமான மனதோடுஅனசூயையுடன்கூற, இவளும் அத்தி ரிமுனிவன் கழனினைந்து உரிமையுடன் புத்திரரைடயார்ந்துச் சிந்தனைசெ

ய்து சிறப்புற்றிருப்ப எவராலும் வந்திக்கப்பட்ட அம்மூவரும் தாமரை மணிமாலையைத்தரித்துச் சிலர் பங்கயனை நினைந்து தவம்புரிதலும் துளசிமாலையைத்தரித்துச் சிலர் அரியை நினைந்து தவம்புரிதலும் உருத்திராக்கமாலையைத்தரித்துச் சிலர் அரனை நினைந்து தவம்புரிதலும் உலகனைத்தும் பரப்பிரமமாயிலகுவதறிந்து சிலர் தவட்புரிதலும் சில முனிவர் பிரமானந்தமடைந்திருத்தலும் ஆகிய விவற்றை விருப்பத்தோடு பார்த்து பரிசுத்தமாகிய வனமிது வென்று மகிழ்ந்து அச்சோதிக்காயவுருமாறிக் கன்னியர்களானார்கள். அக்கன்னியர் வடிவைக்கண்டு சடைகொண்ட சென்னியர் வேதியர் சிரியரிவர்பன்னியர் நண்பினர் பண்பினர் அன்னியரல்லனர் இவர் கடற்சூழ அனையர் அனசூயை யில்லத்திடையடைந்து மின்னையொப்பாய்! முன்னையராதி மூவரையும் வளர்க்கப்பட்டவுன்னை என்னை கூறுவாம் உனக்கு நிகருண்டா! எம்முயிர்க் கணவர்க்குத்தாயா மென்றுன்னையடைந்தேம் எங்கடம்மாமியே பொறுமையில் வளத்தில் ஈகையிற் பூமியேயென்றிவர் கூறுங்கால், அவள் இவர் தேவிமாரென்று மனத்திற் குணித்து மலர்சொண்டர்ச்சித்து நீ விரென்னிடத்தெய்த எளியேனியாது தவம்புரிந்தேனென்று அம்மாது தாழ்ந்தெழ; அவள் வதன நோக்கி இப்போ தெம்புருடர் நின்புதல்வராதற் கேது நினைந்தாயென்றிரங்கினர். அக்காலத்தில் நின்பாலன்னமிரந்தனர், அவர்களையிப்போ துன்பாலிரக்கின்றோம் எம்பாலவர்களை நல்கிற்றளரேம் என்று சொன்னவர்க்கிரங்கி அப்படி யாவதற்கய்யமில்லை, முனிவர் தேவலோகத்துப் போயிருக்கின்றாரவர் வரும் வரை யிங்கிருத்திரென்று மைக்கருங்கண்ணாள் மகிழ்ச்சியிற்கூற; கேட்டு மனந்தேறியதுணர்ந்து காய் கனி கிழங்கீவன் புசித்துச்சந்தோஷ மனத்துடன் இங்கிருங்களன்னையர்களேயென; அதற்கவர்கள் எம்மிடத்தெய்மிறைவர் வந்தாலன்றி ஒன்று முண்ணேமென; அப்படியானால் அழகு பொருந்திய ஞானகானனத்தில் ஞான தீர்த்தமொன்றுண்டு அதிற் சந்தரிஷி கடவுஞ்செய்கின்றனர், அதுதவசிகட் கேற்றவிடம் அங்கே யுபவசித்துத் தவமுயல் வீரேற் சிவன் முதற்றலைவரைச்சேர்க்கு மெனறுகூற நன்றென்று அங்கே வந்தார்கள். அவர்கள் படிந்து தவம் நோற்றிட பாதலத்திருந்து மூன்று நதியந்தவாவியிற் றோன்றின பார்வதி சரஸ்வதி இலக்குமி யிவர்கள் கங்கை சரஸ்வதி யமுனையிவற்றின் முறையே யாடித்தந்தமிறைவர் மேற் பதியன்புபூண்டுவிரதம் நோற்றார். ஞான தீர்த்தத்தின் மூழ்குவோர் சென்மக்கடலும் கன்மமாந்தீவினையும் கடந்து முத்தியடைவர். ஞான தீர்த்தத்தின் வடக்கில் கங்கையும் கிழக்கில் யமுனையும் தென்மேற்கில் வாணியுமாக விளங்கும் இவற்றின் விண்ணவராடுவர். எத்தீர்த்தத்திற்படிந்த பலனும் இம்முத்தீர்த்தம் உதவும்; ஆனதால் இந்த ஞான தீர்த்தமிக்கமேலாயது என்று அனசூயை சொல்ல, அத்தீர்த்தத்தருகே மூவருமாதவஞ் செய்யத்துடங்கியிருந்தார் என்று சூதர் நைமிசாரண்ய வாசிகட்குச்சொன்னார்.

முற்றிற்று.

சூதனே வணங்கிக்கேட்பச் சொல்லுவான் முனிவர்க் கன்னுன்
வேதனே முகுந்தன்றன்னே விமலனே யமல மான
மாதனே யர்களா யன்னுள் வளர்க்கவிக் கன்னிமார்கள்
போதனே யாது காதல் புரிந்துமா தவஞ்செய் போது. (க)

நாரதன் வானி னின்று ஞானகா னனத்தை நண்ணிச்
சேரது தவருக் கற்பின் செவ்வியாச் சிரமத் திற்போய்
மாரத மழலைச் செவ்வாய் மைந்தரைக் கண்டா னன்பு
கூரதி சயமுற் றனைக் கோதைவக் தடியிற் ருழ்ந்தாள். (உ)

அடியிணை விளக்கி யன்போ டறுசுவை யுண்டி யீந்தா
டிடியிடை யவளை நோக்கித் துதியுஞ்செய் தமுதந் துய்த்த
முடியுடை முனிவன் சொல்வா னயன்மக முடித்து வானில்
வடிவுடை வேந்தன் யாகம் வளர்க்கமா தவனங் குற்றுன். (ஙு)

அத்திரி முனிவ னங்கே யாயிழை நீயிங் கேயிப்
புத்திர ரார்கொ லென்று புகன்றனன் புகலக் கேட்டுச்
சித்திர மனையாள் சொல்வாள் சிறுவர்தஞ் செயலும் பொற்பு
மித்திர மென்ன நீயே யறிவையா னறியே னென்ருள். (ச)

என்றிவள் சொல்லக் கேட்ட விருடியிங் கிவரை நாடி
யொன்றிய மடவார் தாமெங் குற்றன ருரையென் றேத
வன்றவர் ஞான வாவியருகருர் தவஞ்செய் கின்றுர்
துன்றென வன்னுன் கூறத் துன்னியன் னவர்பாற் சென்றுன்.(ரு)

அன்னையர் மூவ ருணி லாதுமாதவமே செய்ய
முன்னைய முனிவர் பன்னி மார்தவ முயலா நிற்பப்
பின்னையிம் மூவர் தன்மை தேர்ந்தடி பேண வன்னோர்
தன்னைய முனிக்கு நெஞ்சத் தாலுப சாரஞ் செய்தார். (சு)

அசைவற நிற்ப வேகண் டதிசயித் தன்னே மார்க
ணசைவறத் தவஞ்செய் துள்ள நலியுமா றென்கொ லுங்கட்
கிசைவுறு மிறைவர் தாம்வந் தெய்துதற் கேற்ற தாய
வசையறு விரத மொன்றுண் டுரைக்குவன் மனக்கொள் வீரால்.()

ஆதிசைவிரத மாம தாரனுட் டித்தா ரேனுந்
நீதினே யகற்றி பேசிந் இத்தகெல் லாம்பெற் றுய்வா
ராதரம் பெருகு நன்மார் கழித்திங்க ளாதி ரைக்கு
மாதரீர் சோற்கு நோன்பா மதின்வர லாறு சொல்கேன். (அ)

ஆதியிற் றோன்று மாயை யகன்றபின் மலன்றன் மெய்யிற்
சோதியிற் பஞ்ச பூதந் தொல்லுயிர்க் கணங்கள் யாவும்
பேதியற் றொடுங்கு மாயை பின்புபா வனைக்கு ளன்பின்
னேதமற் றமிர்த ரூபி யாயுளத் திருத்த றன்னால். (௯)

நீடுமிக் குணங்க டீர்ந்த நிருமல ஞான சத்தி
கூடுமப் பொழுதி லேமுக் குணங்களோ டிணங்கு கோலம்
மீடுறப் புவன மெல்லாம் பிறப்பன வுதிப்பச் செய்த
தாடன்மார் கழித்திங் கட்கே யாமதா லதுமிக் காகும். (௰)

மூன்னூறு புவனம் யாவு முற்றுற வுற்ற தாலப்
பன்னிரு திங்க ளுக்குட் பகருமார் கழிமிக் காகுந்
தன்னரு ளுதவு ஞான சந்தியா கையினு லந்நாட்
டின்னிரு பத்தெ ழுக்குந் தூயவா திரைமிக் காகும். (௧௧)

அக்கணி சடில முக்க ணுதிதன் சோதி யாகு
மிக்கவா திரைநா ளன்றி மிக்கநா ளின்றந் நாளிற்
றொக்கதோர் ஞான சத்தி தோன்றுகா ரணத்தி னாலே
தக்கபேரனந்த ஞான சத்தியி னின்றும் போந்தே. (௧௨)

ஒன்றுமுக் குணங்க ளாகி யுற்றமுத் தொழிற்கு நாத
னன்றுற ஞான சத்தி யகண்டமும் பொதிந்து தானுய்த்
துன்றுறு குடிலை ரூப மாகியே தோன்று றும
வின்றுமூ வரையும் பேத மாக்கிய தென்ன சொல்வோம். (௧௩)

மூற்குணத் தோடு நான்கு முகத்தோடுங் கமலை யோடு
மெற்குணத் தரிய வாதி யெழுத்திலும் பவித்தான் வேதன்
சற்குணக் கவுரி யோடுந் தங்கிரா சதகு ணத்தோ
டற்குண மாய மாயை யக்கரத் தரிவந் தாற்றுன். (௧௪)

சோதியாங் கலைமா தோடேந் தொழுந்தமோ குணத்தி னோடே
மாதியங் தமதாய்ப் பெற்ற வக்கரத் தாளனான் வந்தான்
பேதியா திவர்கண மூலர் பேதைமார் மூவ ரோடேந்
சாதியா ஞான சத்தி தனைப்பணிக் துரைக்கின் றூரால். (௩௫).

தாயெனுங் குடிலை ரூப சத்திகே டனைய ராளோர்
நீயென வியற்றுஞ் செய்கை நிகழ்த்தென வன்னை சொல்வாள்
மேயநான் முகனீ வாணி யின்னொடும் படைத்தி பின்னர்
மாயநீ கமலை யோடு மருவியே யுலகைக் காத்தி. (௩௬)

பரமவென் வடிவ மான பார்ப்பதி யோடுநீ கூடி
யுரமறு கால மேபார்த் தொடுக்குதி யுலகை யென்னத்
திரமுற மனத்திற் கொண்ட செய்கையா ராளு ரந்நாள்
வரமரு ளுளிர் நாளின் மற்றிநோன் பியற்று வீரால். (௩௭)

இந்த நோன் பியற்றிற் காளி யென்னுமோர் ஞான சத்தி
யுந்தநோன் பின்ப லத்தை யுடனுமக் குதவு முண்மை
யந்தநோன் பியற்றுஞ் செய்கை யறைவனேழ் தினமிவ் வாவி
சந்தநீர் படிந்து ஞான சத்தியைக் கருத்துள் வைத்தே. (௩௮)

பித்திகை புன்னை தாழை பெருகுமல் லிகைச ரோச
மித்திரு வலரி சாதி யென்னுமேழ் மலரான் ஞான
சத்தியை யிறைஞ்சச் சத்தி சக்கரத் தியல்பு கேண்மின்
பத்திசே ரநேக சத்தி பல்குமப் படிவந் தானே. (௩௯)

ஏழுகோ ணெழுதி நாப்பண் ணியலுமோர் வட்ட மிட்டு
ளாழுமா யையி னெழுத்தை யழுத்தியேழ் கோணஞ் சூழ
வாழுமா றெழுதி நான்கு வாயிலும் வகுத்தப் பாலிற்
றாழுமெட் டிதழிட் டந்தச் சத்தியை யதிற்று பித்தே. (௪௦)

வேறு

ஓதன மேழ்வித முற்ற நீஞ்சுவைப்
பேதன மேழ்விதம் பெறநி வேதித்தே
சேதனச் சத்திமந் திரத்தை மூலத்தோ
டோதனிச் செபித்திடி னெய்துஞ் சித்தியே. (௪௧)

இன்னமென் றிவர்க்கிது செப்பி நாரதன்
விண்ணுள விளைதை மேற்கொண் டிங்கிவ
ரெண்ணுள வியற்றின ரிந்த நோன்மையென்
றண்ணலாஞ் சூதனங் கவருக் கோதுவான். (௨௨)

முற்றிற்று. ஆக திருவிருத்தம் ௱அசு.

## ௫-வது நாரதன்வரு சருக்கம்

சூதரை நைமிசாரண்ய வாசிகள் பின் நடந்தவற்றைக் கேட்கச்சொல்லுகிறார். அந்நாளில் அயன் அரி அரனைத் தனையர்களா யங்குவளர்க்க இங்கே கன்னிமார்கள் அவர்கள் மீது காதலோடு மாதவஞ்செய்ய, அக்காலை நாரதன் தேவலோக நின்றும் ஞானகானனம் நண்ணிகற்பினளாச்சிரமத்திற் போய் மழலைச்செவ்வாய் மைந்தரைத்தரிசித்து அன்புகூர்ந்தநிசயமுற்றான். அங்கோதை வந்தடியித்தாழ்ந்து அடியிணை விளக்கி யனைபோடறுசுவையுண்டியளித்தனள், அவனை நோக்கித் தியஞ்செய்து அமுதருந்தி முனிவர் சொல்வார் அயன்மகமுடித்துத் தேவலோகத்திந்திரன்யாகஞ்செய்ய அத்திரிமுனிவனங்கே சென்றனனே பாவாய்! யிங்கேயிப்புத்திரரார் எது கொல என்று கேட்க; சித்திரமனையாள் இச்சிறுவர்செயலும் மழலும் இத்தன்மையதென்று தேவரீர் அறிவீரயானறியேனென்றாள், கேட்ட நாரதர் இவரை நாடிவந்த மாதரெங்குற்றனரென, ஞானவாவி யருகே தவஞ்செய்கின்றனர் போய்ப்பாரீரென, முனிவர் அவரிடஞ்சென்று மூவருமூணிலாது மாதவஞ் செய்வதும் அவர்கள் முன்பாக மற்ற முனிவர் பன்னியர் தவஞ்செய்து நிற்பதும் உணர்ந்து அடிபேண; அன்னோர் முனிக்கு உள்ள முபசரிக்க; முனியுமிவர்களசைவறநிற்றல் கண்டதிசயித்து, அன்னைமீர்காள்! தவஞ்செய்து உள்ளம் நலியுபாறெனசொல்! உங்கட்கிசைவுறுமிறைவர் வந்தெய்து தற்கேற்ற விரதமொன்றுண்டு அதைக்கூறுவன் கேள்மீரென்றான். அஃதாவது ஆதிரை விரதமாம்; அநுட்டித்தவரெவரும் நிதங்கருது சிந்தித்தவெல்லாம் பெற்றுய்வர். அதனினு மார்கழித்திங்களில் வருமாதிரையே சாற்குநோன்பாம்; அதின் வரலாறு சொல்லக்கேண்மின்; ஆதியில் அகண்டபரிபூரணமான பிரமத்திலிருந்து மாயை தோன்றி, அதினின்று பஞ்சபூதங்களும் பாஞ்சபௌதிகங்களான உயிர் உலகங்களுந்தோன்றி யொடுங்கும். பின்னரந்தமாயையிற் குற்றமற்ற வமிர்தரூபியா யதனுள்ளக்காலத்திருந்தீர்; முக்குணங்களுநீங்கிய நின்மலன் ஞானசத்தியைக்கூடிப்போது, முக்குணங்களோடிணைக்கும் வடிவமாய்ப்புவனங்களனைத்தையுஞ் சிருட்டித்து அவையியங்குதற்குத்தானடித்தலே மார்கழித்திங்களாம். இங்கேதானைப்பதின்ற புவனங்களியாவும் ஒடுங்கியதாம் பன்னிரு திங்களின். மார்கழி மேலானதாம். தன்னருளுதவுகின்றது ஞானசத்தி யாதலாலவளுற்றவை பொருந்துநாள் இருபத்தேழு நாளினுமுயர்ந்த வாதிரையாம். இந்நாளையங்கி நாளொன்று மீச னுளென்றுங் கூறப்படுதலாலதற்குமேலான நாளில்லையாம். அ

ந்நாளில் ஞானசத்தி தோன்றுங்காரணத்தாற் றங்கபெருள்ள அனந்த ஞானசத்தி தோன்றி ஒவ்வொன்று முக்குணத்ததாகி யதனை முத்தொழிற்கு முரியர்பொருந்த அச்சத்தி யகண்டமாய்த் தன்னுளடக்கித்தாமாய்ப் பிரணவரூபமாகித்தோற்று வியாமல் மூவரையும் பேதாபேத மாக்கிற்று. சத்துவகுணம் நான்குமுகம் இலக்குமி இவற்றோடும் ஆதியெழுத்தில் வேதனும் இராசதகுணம் கௌரி இவற்றோடு மாயையக்கரத்தினரியும் தாமதகுணம் சரஸ்வதி இவற்றோடு ஆதியந்த மெனுமக்கரத்தினரனுமுற்பவித்தான். பேதித்த இம்மூவரும் முப்பேதையரோடுஞ் சோதிரூபமான ஞானசத்தியைப் பணிந்து பிரணவரூபசத்தியே எங்களை யின்றரின்ன தொழிலியற்று நீரென்றருள்வாயென; நான்முகன் வாணியோடு படைத்தலையும் மாயன் கமலையோடு புரத்தலையும் பரமன் பார்வதியோடொடுக்கு தலையும் உலகத்தியற்று வீரென்றருள: அதை மனதிற்றரித்தவரானார். ஆதலாலருளின நாளாம் அந்நாளிந்நாளாய் இதின் னோன்பியற்றுவீர், இந்த நோன்பியற்றிற் காளியென்னும் ஞானசத்தி தன்னோன்பின் பலத்தை உமக்குதவும் இஃதுண்மை; இன்னோன்பியற்றும் விதம் ஏழுநாளித்தீர்த்தத்தின் மூழ்கி ஞானசத்தியைச் சிந்தித்து, சிறு சண்பகம் புன்னை தாழைமல்லிகை தாமரை அலரிசாதியென்னுமேழ் மலரானருச்சிக்குஞ் சத்தி சக்கரமியம்புவன்; எழுகோணங்கீறி நடுவில் வட்டமிட்டுள்ளே மாயையெழுத்தைவரைந்து கோணத்தைச் சூழவாழ்பவரையெழுதி யப்பாலெட்டிதழிட்டு அந்தச்சத்தியையதிற்றாபித்து நால்வாயிலும் வகுத்து, ஏழுவகையன்னம் எழுசுவைப்பதார்த்தம் நெய் வேதித்துச் சத்தி யந்திரத்தை மூலத்தோடு செபிக்கிற் சித்தி யெய்தும் இது நிச்சயமென்று வகுத்து நாரதன் விண்ணுலகடைந்தான். இங்ஙவரிவ்வாறு நோன்பியற்றி இருந்தனரென்று சூதர் நைமிசாரண்ய முனிவருக்குச்சொன்னார்.

முற்றிற்று.

## கூ-வது காட்சி கொடுத்த சருக்கம்.

வரமுனி நாரதன் வானத் தெய்திவச்
சிரன்முனி யாகத்தைச் செய்யு மத்திரிப்
பரமுனி வனைத்தெரி சித்துப் பத்திசேர்
தரமுனி வரர்சுர ரிருக்குஞ் சாலையில். (க)

இருந்தன ளிருந்தண சூயை யில்லகம்
பொருந்தின புதல்வர்தம் புதுமை யானவையுந்
திருந்தநல் லுரைகொடு செப்பக் காதிறை
லருந்தின ளருந்தவத் தரச னத்திரி. (உ)

முயலுமம் மகத்தினை முடித்து வச்சிரத்
தியலின னேத்தவங் கெழுந்து மாதவச்
செயலினர் சூழுமாச் சிரமத் தெய்தும்வா
றயலின முனிவர்கண் டருகி லெய்தினர். (ங)

எய்தின ரடிபணிந் தேத்தி னாற்ற
செய்திடன் முனிவரர் திருவன் னார்களின்
றய்தின மெனவனைக் குரைப்ப வன்னவன்
மெய்திகழ் கோலம்யார் விளம்பற் பாலரோ. (ச)

அன்னபோ தாச்சிர மத்தை யண்மிய
பொன்னதா முனிவனைப் பூவை கண்ணுற்றீ
முன்னதா யாதவன் முளைத்த போதளி
மன்னுதா மரையென மகிழ்ச்சி யெய்தினாள். (ரு)

மருக்கிளர் மலரடி விளக்கி மாதவற்
கருக்கிய முதலிய வளித்துப் பூசனைக்
கிருக்கிய லக்கத முதலி யாவையும்
பொருக்கென வமைத்தனள் பொற்க லத்தினே. (சு)

அமைத்தடந் தோளினா ளவனை யம்மலர்ச்
சுமைத்திரள் கொண்டருச் சித்துச் சூழ்தவர்
தமைத்தனி பூசனை புரிந்து தாபத
ரமைத்தனி பயந்ததா யென்ன வாழ்த்தவே. (எ)

அங்கவர் பணிந்தன ளத்தி ரிப்பெயர்ப்
புங்கவ னமர்ந்தன னமர்ந்து புண்ணிய
ரிங்கவர் சிறுவரா யிருத்தல் கண்டுயிர்
மங்கலை யோடொரு வார்த்தை கூறுவாள். (அ)

ஆதவ ரனையுமிப் புதல்வ ராரென
மாதவன் வினவலு மனது தான்பனைத்
தேதவ னெண்ணமோ வென்ன வஞ்சியப்
போதவ ளுரைத்தனள் புக்க வாறெலாம். (கூ)

புக்கது கேட்டவட் புகழ்ந்து கற்பினின்
மிக்கதொன் றிலதென வியந்து மூவர்தந்
தக்கதோ ருருவையுந் தனது கற்பினாற்
றொக்கதை விரித்திநீ யென்று சொல்லினான். (௰)

வேறு

சொற்ற போதுணர்ந் தேயன சூயைதன் கரத்தின்
முற்ற போதனன் பாததீர்த் தத்தினை முகந்து
நற்ற போதனற் கேவல்செய் தேனெனி னென்மை
யுற்ற போதமோ டியர்ந்தகற் பென்னிடத் துளதேல். (௧௧)

வேறு

பொய்வி டப்படு மூவர்தம் முருமுன் போலாமென்
றுய்வி டப்புனல் விசிறினள் விசிறின வுடனேமஞ்
செய்வி டத்தழன் மூன்றுமம் முனிமறைத் திறமொதி
நெய்வி டப்பெருத் தெழுந்தன வெழுந்துமுன் னின்றரால் (௧௨)

தெண்டு பொத்தகங் கமண்டலங் குடைகையிற் சிறந்தோங்கக்
கொண்டு மார்பினூ லிலங்கிடக் குடுமியுங் குழைவாகப்
பண்டு பார்படைத் தயனன சூயைதன் படைப்பாகக்
கண்டு பாரினின் றனெனிற் பெரியது கற்பாமே. (௧௩)

சங்கு சக்கரம் பங்கயம் வெங்கதை தாமேந்தி
பொங்கு செம்பொனு டையுந்தரித் தியலுமைப் புயலேபோ
லங்கண் மாநில மளிப்பவ னொருத்திதன னளியேற்றே
யிங்கு நின்றன னெனிலிவள் கற்பினுக் கெதிருண்டோ. (௧௪)

பற்று சூலமான் மழுவலங் கையிற் பரிந்தேந்திப்
புற்ற ராவணிந் திளம்பிறை புனைந்துதிண் புவியேழு
மற்று நீறெழவழிப் பவனொ ருத்தியா லழித்தாக்க
பெற்று நின்றன னெனிலிவள் கற்பலாம் பெரி தியாதோ. (௧௫)

வேறு

மூவ ரிவ்வண நின்றிடச் சென்றிடு முனிவர் சாரணர் சித்தர்
தேவர் பன்னகர் கின்னர ரத்திரிச் செழுந்த வன்பணி கேட்டுத்
தாவ ருமன சூயைதன் பொருட்டொ ருத்தரு மறிவரி யாத
மேவருந்திருக்காட்சிகண்டானந்தவெள்ளத்திளிடைதாழ்ந்தார். ()

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY

காட்சி யானவம் மூவரத் திரிதனைக் கற்பி னுக்கர சாரை யாட்சி யானதண் ணளியினு னோக்கியு மன்பெ னுந்தளை நீக்கி மீட்சி யாவதற் கிலைமன மீணடுறும் மீதபூண் டது நும்போன் மாட்சி யில்லறத் திருந்துமா தவஞ்செயு மாதவ ரிலை யென்றும்.()

பின்னு மன்னவ ரோடுகூ றுவர்களைப் பேறுவேண் டுவ து க்கட், குன்னும் போதினி லீய்குதும் கேண்மென வுரைக்கவம் முனி சொல்வா, னின்னு நுங்கடங் காட்சிகண் டுவந்தினி திருப் பதே விருப் பல்லான், மன்னு மோர்விருப் பிலையெங்க ளுக்கினி மற்றெலாம் வெறுப் பாமால். (௧௯)

என்று கூறிய முனிவனுக் கருகினின் றியம்புவ ளனசூ யை, யொன்று நீர்தர நானபெறும் பேறுமூன் றுளவென துயி ராகத், துன்று மாதவன் மீதவா வெனக்கு நாடொறும் வளர்குவ தாமொன், றன்றி யின்னமென் சிறார்களா யுதித்தெமை யாள்வ தொன் றக லாதே. (௧௯)

கன்னி மாரொரு மூவர்ஞா னத்தடங் கரையினின் றுமைக் காண்பா, னுன்னி மாதவஞ் செயும்பலன் கையில்வங் துற்றதங் கவர் பானீர், துன்னி மாதய வளித்தவ ரோடதி சுத்தநற் றவ ரன்னோர், பன்னி மார்தொழ விங்குவந் தெமக்கருள் பயப்பதொ ன் றெனச் சொன்னாள். (௨௰)

நன்று தான்பெறும் பேறுவேண் டியதெமை நயந்துநீ தரும் போக, மொன்று நாமறக் கின்றில மென்றுகேட் டுற்றன வற் ருகத், துனறு நாண்மதி யென்றுந்தத் தாத்திரை யன்னென் றுந் துரு வாசா, வென்று பேர்கொடு மூவரா யாமும திடத்திலுற் பவிப் பேமால். (௨௧)

ஒன்று வேண்டியே யிரண்டினை வெறுத்துமூன் றுணர்ந்து நான்கினை சேர்த்தே, யென்று மைந்தினை யடக்கியா றினைமுனிக் தெழுமெழு முனி வோருநு, சென்று ஞானவா விக்கரை தனிற் றவஞ் செய்கின்ற பொருட் டங்கண், டுன்றி யெம்மையாம் பூசிப் பெம் யாவருஞ் சுகா னந்தம் பெறவேண்டி. (௨௨)

மற்று மின்னன வின்னவ ரோடுரை வழங்கின பொழுதின்கண்
சுற்று மந்தர துந்துமி முழங்கின சொரிந்த னபூமாரி
முற்று மத்திரி யோடன சூயைதன் மகிமையை மொழிவாரியா
ரிற்ற தோர்வகை யுவகையி னியம்பின னென்மன னுயர்சூதன். ()

முற்றிற்று. ஆக திருவிருத்தம் ௨௱௯

## ௯-வது காட்சி கொடுத்த சருக்கம்.

நாரதன் தேவலோகத்தில் இந்திரனாதியாகம் வளர்க்கு மத்திரிமுனி யைத்தரிசித்து சுரர்முனிவரிருக்குஞ் சாலையிலிருந்து அனசூயையில்லத்துப் பொருந்திய புதல்வரது புதுமையாவையுஞ்செப்ப, அருந்தவன் கேட்டுமகத் தைமுடித்தெழுந்து மாதவர் சூழவாச்சிரமத்தைநோக்கிவரச், கண்டமுனிவ ர்முன் வந்தன்னைக்குரைப்ப அவண்மகிழ்ந்திருங்கையில் அத்திரி யாச்சிரமந் துள்வர, தரிசித்துச் சூரியனைக்கண்ட தாமரைமலர் போன்றுவந்து பாத ம் விளக்கி யர்க்கியபாத்தியத்துடன் அட்சதை மலர்கொண்டு பூசனை புரிந்து, மற்றமுனிவருக்கும் தக்கதக்கபடி பூசித்து, என்னைப்பெற்றவன் னையே யென்று அங்குள்ளார் வாழ்த்தப்பணிந்தனள். முனிவரமர்ந்து புன் னியர் சிறுவராயிருத்தல்கண்டு ஆதரவானையுமிப்புதல்வர் யார் என்று வின வ; மாதவனென்னை மியாதோவென்று மனப்பதைத்து அப்பியுள்ளவா றெல்லாமுரைத்தனள். கேட்டு அவளைப்புகழ்ந்து கற்பின்மிக்க தியாதொ ன்று மின்றென்று வியந்து, மூவருருவைமுன்போல விரிந்தியென்று சொ ல்ல; அவள் கரத்திற் பாததீர்த்தத்தை முகந்து கற்றவன்பணி குறைமறச்செ ய்தவளாயிருப்பேனானல், உயர்ந்த கற்பென்னிடத்துளதானல் இம்மூவரும் மழவுருப்போய் பழையவுருவாகக் கடவரென்று வீசினள்; ஓடாக்கினியா னது மறையோதி நெய்வார்க்கப் பெருத்தெழுந்ததுபோல வெழுந்து முன் னின்றார். தண்டு புத்தகம் கமண்டலம் குடைமுந்நூல் குடுமியிவை யிலங்க ப்பண்டு பார்படைத்தவன் அனசூயையின் படைப்பாக வுலகங்கண்டிட நின் றனனெனிற் பெரியது கற்பாம்; சங்கு சக்கரம் பங்கயம் கதை செம்பொனு டையிவை யிலங்கவுலகளிப்பவன் ஒருத்தி தண்ணளிபெற்று மேகம்போல விளங்கினனெனிற் கற்புக்கெதிருண்டோ! சூலம்மான்மழு ஆராவிளம் பி றை விளங்க வுலகழிப்பான் ஒருத்தியாலளிக் தாக்கப்பெற்று நின்றனனெ னில் இவள் கற்பிற் பெரிதியாதோ! மூவருமிப்பிரகாரம் நிற்கத் தேவர் மு னிவர் சாரணர் சித்தர் பன்னகர் கின்னரர் இவரொருத்தருமறிவரிய காட் சியை யொருத்தி பொருட்டளித்தான். தெரிசித் தானந்த வெள்ளத்திடை யமிழ்ந்தார் காட்சியானவம்மூவர் அத்திரியையும் அனசூயையையும் கிரு பையோடு பார்த்து உங்களன்பென்னுந் தளையைநீக்கி மீட்சியாதெழுந்தேம் ; மனம் மீண்டும் நும்மீது பூண்டது; நாம்போலி[illegible]

செய்வாரொருவருமில்லை; ஆதலின் நுங்கட்குவேண்டுவதியாதோ அதைக் கேண்மின் ஈகுதுமென்றருள; முனி இன்னுந்தேவரீரது காட்சி தரிசித்து ஆனந்தமடைந்திருப்பதைத் தவிர வேறொரு விருப்பமுமில்லை யென்றுகூற; அவனருகினின்றவனசூயை யான்பெறும்பேறுமூன்றுள, அஃதாவது என் பிராணநாயகன் மீது காடோறுமன்புவளர்வதொன்று, தேவரீரின்ன மென்சிறார்களாயுதித்து எம்மையாள்வதொன்று, மூன்று கன்னிமாரும் ஞானதீர்த்தக் கரையிலும்மைத்தரிசிக்கக் கருதித்தவஞ்செய்கின்றனர் அவர்க்குப்பலனளித்துக் கருணைகூர்ந்து அவரோடும் முனிவரோடும் அவர் பன்னியர் முதலானவரோடும் ஈங்கெழுந்தருளிவந்து அருள்பாலிப்பதொன்று என்று சொன்னாள். அதற்கு நீ கேட்டதொன்றும் யாமறக்கின்றிலம் அப்படியாகுகவென்றருளிச் சந்திரன் தத்தாத்திரையன் துருவாசன் என்ற பெயரோடு மூவரும் உம்மிடத்துற்பவிப்போம்; முத்தியை வேண்டியிருவினைகளைந்து ஜீவேசுரசகத்தை யுணர்ந்து நான்கு மகாவாக்கியப் பொருளையுட்கொண்டு பஞ்சேந்திரியங்களையடக்கிக் காமாதியாறினை வெறுத்து எழுமுனிவரும் ஞானகானனத்திற் போய்த்தவஞ்செய்கிறனர்; யாவரும் சுகானந்தம் பெறவேண்டியங்கே சென்றுயாம் எம்மைப்பூசிப்பேம் கொள்வேம் என்று இப்பேர்ப்பட்டவைகளை யன்னவரோடருளின காலத்தில், அந்தரதுந்துபிமுளங்கின. பூமாரிபொழிந்தன. ஆகையால் அத்திரியனசூயையிவர் மகிமையை மொழிபவரெவர்! இஃதோரானந்தத்தினைறைந்தனன் என்று சூதர் சொன்னார்.

முற்றிற்று.

## எ-வது இலிங்கோற்பத்திச் சருக்கம்.

தூய மாதவர் கேட்டன சூயையே
யாய கற்புக் கரசென வேமகிழ்ந்
தேயு மூவர்பின் பெய்திய செய்திசொன்
னீயெ னுமுன் னிகழ்த்துவன் சூதனே. (க)

வேறு

இந்திரன்காண் பரும்பிரமன் முதன்மூவ ரத்திரிக்கண் ணை
யைங் கைமேற், சந்திரன்றத் தாத்திரையன் றுருவாச னெ
ன்றுபெயர் தாங்கி வேத, மந்திரமூன் றும்மூன்று வடிவாய்வந்
துதித்ததெனை வந்து தோன்றிச், சுந்தரநா தாந்தபரஞ் சோதிமய
மெனமுன்னோர் சொலவின் றூரால். (உ)

நின்றவர்மூ வருந்தாதை யென்றமுனி வனையவன்பன் னி யெனு மன்னே, யென்றவன சூயையம்மா மலர்கொடருச் சிக்க லிவ ரிருவர் போல, முன்றவஞ்செய் தோரொருவ ரிலையெனமா தவர்தொழுது முழுதும் வாழ்த்த, வன்றவர்முன் னாரதன்வந் தமிர்தகா னம்பொழிய லாயி னானே. (ங)

கானரசங் கற்பகப்பூங் கனியிரச மரம்பையர்க்குக் கானிற் சூழ்பூந், தேனிரசந் தேனினத்திற் கமிர்தரசம் வானவர்க்குச் செ ந்துக் கட்கே, பானரச மானிடருக் கன்னரச மத்திரியொப் பா முன் னோர்க்கு, ஞானரச மெனநுகரப் பொழிந்தமுனிக் கிணையெ வரை நான்சொல் வேனே. (ச)

ஐந்துவகை யிந்தியங்கட் கமிர்தகா னத்தைவிருந் தளித்தே யன்பு, முந்துவகை முனிவனையத் திரிமுனிவ னுபசார மொழிந் து வாழ்த்திக், கொந்துவன மலர்கொடருச் சிக்கமிக்க முனிவனன் பு கூர்ந்தே முன்பு, செந்துவர்வா யனசூயை தாய்மார்மூ வருக் குறைத்த திறஞ் சொல்வானே. (ரு)

பன்னியரான் மறைபகரத் திரியேகின் பன்னிசொன்ன படி யே கேட்டுக், கன்னியரா மன்னையர்மூ வருஞான வாவிநெடுங் கரையி லேபோய்த், துன்னியநே கந்நாளாய்த் தவம்புரிந்தா திரைவிரதந் தொடுத்துக் கேள்வ, ரன்னியமல் லாரொனினு மன்பு பொருந் திடவினிதா யனுட்டித் தாரால். (சா)

வேறு.

ஆதிரைநா ளினைவெய்யோ னுதிக்கும் போதி லங்கவரை மண ம்புரிவா ரயன்மா லீசன், மீதிரையா தகலவென்றோர் காணக் காட் டுந் திருமணக்கோ லக்காட்சி சேவிப் பானீர், போதிரையா னன ன்போன்ற முனிவ ரோடும் போந்ததுநா னுமக்கிது புகறற் கென் றே, மாதிரையா ரமுதெனநா ரதன்றான் சொல்ல வல்லவனும் பன்னியுமுன் மகிழ்வுற் றாரே. (எ)

அங்குநின்று நாரதன்சந் தான கானத் தடைந்துஞா னத்தட த்து ளகன்றீ ரத்தில், இங்குநின்று தவஞ்செயுமூ வரைக்கண் டெங்க

ளிறைவரும்பா லுறைவரின்ற ளென்ற முன்னங், கங்குனின்று நேமியும்புட் சேவல் நீக்கிக் கடிதுவர விடிவரவுக் கண்டாலென்ன க், கொங்குநின்ற குழலியர்க ளுலவும் போது குலவுமன்னங் கரு டனொடு குண்டை மீது. (அ)

கோவிசர்த நீறணிந்து கஞ்சம் வேய்ந்து குல்லைபுனைந் தலர்ந்த ந றுங் கொன்றை சூடித், தாவிலும்பர் மலர்மாரி வழங்க வானிற் றழ ங்குறுபல் லியமுழங்கத் தாழ்ந்து ஞான, வாவியின்க ணேழ்முனி வர் சூழ மூவர் வந்தனர்கண் டெவ்தனரம் மாதர் மூவ, ரோவியங்க ளாருயிர்பெற் றிருக்குந் தானத் தோன்றினு லெனவவர்பாற் றுன் றினரே. (௯)

ஆரணநான் கறிவருமூ வருந்தம் பானின் றகலாத மூவரு மொன் றுகுங் காட்சி, பூரணசோ திச்சபைக்குட் கண்டு தேகம் பூரி த்தார் முனிவரரிப் புதுமைக் கெல்லாங், காரணமா மத்திரிமா மு னியு முள்ளங் கனியுமன சூயையுமக் கடவு ளோரை, யோரணவு ம ருமலர்கொண் டருச்சித்தோர் சொல் லியம்புவரம் மூவருக்கு மிரு வர் தாமே. (௰)

ஆதரித்து யாமியற்றும் பூசை நீர்கொண் டருள்புரிய வேண்டுமெ ன்று ரவரப் போதிற், றுதலர்த்துந் தாமரைக்கண் ணவன்சொல் வானித் தலத்திலொரு லிங்கமதி சயமாய்த் தோன்றுங், காதலித் தெங் கலைகளொடு மலைவி லாதெக் காலமுஞ்சேர்ந் துறுங்கோலங் காணுங் காணும், பாதலத்தி லிருநதொரார செழும்பு மந்தப் படி வமுமெம் வடிவமெனப் பாரும் பாரும். (௧௧)

அந்தவரா சாதிநடு வந்தம் யாங்க ளமரர்கொம்பு முனிவர்தமை யாகும் யோகு, தந்தவடி முதலெழுத்து நிறம்பொன் னோரா சதகு ணத்தோ டெலகியற்று நடுவோ மற்றைத், தொந்தவெழுத் தாய்நிற மிந் திரநீ லஞ்சாத் துவிதகுணத் தொடுகாவற் றொழிலே செய் யும், வந்தமுடி மகாரநிறம் வெள்ளை யாந்தா மதகுணத்தோ டில கொடுக்கம் வருத்துந் தானே. (௧௨)

தானிலங்கு குடிலைவடி வதற்கெக் காலுஞ் சலனமில்லை யதன்

மேற்காய்த் தங்குஞ் சோதி, யானலிங்கந் தனக்காவி யதுவே லிங்க மதற்காவி மூலமொன்று மவைரண் டிற்கும், ஞானலிங்கந் தனக்கு மிர்தத் தகைமை யாவு நண்ணுமெழுத் தைந்துமைந்து முகமாய் நாடி, மாலங்கொண் டிருக்குமிது நிற்க யாமே மற்றெமைப்பூ சித்துமன மகிழ்விப் போமே. (௧௩)

எனதுசொல்லா லேழ்முனிவ ரற்றை நாளுற் றிற்றைவரை தவஞ்செய்கின்று ரிவர்க்கு முங்கண், மனதுருகும் படிக்குவிண் ணு ளார்க்கும் யாமே மற்றெமைப்பூ சித்திடுஞ்சின் மயங்காண் பிப்பா, முனதுளமு மனகூயை மனமு மெம்பா லுறைகவென மூவருமங் குறைந்தார் பின்னர், தனதுயிர்ப்பன்னியுமுனியு மரசி ன்றேற்றந் தனைப்பார்க்கத் தரையினைப்பார்ந் தனரப் போரே. ()

வேறு

பாரிகின்றேரொலிதானெழுந்தலவுபான்மைகொண்டுதவமே ன்மையோர், யாருகின்றிலர்தள்ளாடுகின்றனர்பின்னுவதாயோரமு லெழுவதா, னேரினின்றெழுசுவாலைகொண்டெவருநெஞ்சமஞ்சி முனிமஞ்சாரந், தீரரென்றவரோர்மூவர்முன்றமுவல்செய்குவார் கருணை பெய்குவார். (௧௫)

முனிவனங்கைமனம்விழியில்வந்தெழுமம்மூவருந்தமதுமூல மாய்த், தனிவருஞ்சின்மயவடிவைநெஞ்சினிடைதானினைந்துயரு ஞானகா, னினிதுசென்றனர்பின்முனிவரென்றவர்கள்யாவரும்பழு குதேவருந், தொனியகன்றிதெனவிளைவதென்றுநனிதூக்கினர்த ரையை நோக்கினர். (௧௬)

காதலிற்குடிலேருபமாயபிரகாசமானதுபிரவேசமாய்ப்
பூதலத்திறைவர்கலைகளோடுமறைபொங்குசாகையோடிணங்கியே
பாதலத்தினி கடகின்றெழுந்ததொருபாரநீளரசுபாருளோ
ராதரித்துவிழியாலளப்பரியதாகின்றதது வன்றியே. (௧௭)

அன்னதற்கருகுமேலநாயரனோடரிபிதாமகனுமாயவா, மன் னுதற்கினியசோதியாயமிர்தமயமுமாயருளின்வடிவுமாய்த், துன் னுசிற்பரமஞானலிங்கமதுதோற்றல்கண்டபொழுதாற்றலாற், பன்

னுசித்தர்முனிவரர்விஞ்ஞோர்களிசைபாடினொர்நடனமாடினர். (௧௮)

பாலிலொன்றியநெய்போலவெங்குமொருபான்மைகொண்டிலகுமேன்மையாய், மாலிலொன்றுபுலனுலியன்றவுயிர்மாய்விலாதுலவவேசெய்வாய், நூலிலொன்றுபொருளேதெரிந்தமறைநோன்மையந்தணர்களுல்லவோர், டாலிலொன்றுபரஞானவின்பமுனேயாரறிந்துரைசெய்வார்களே. (௧௯)

தருவுமாயுதவுகருவுமாய்விரவுதழைகணீடுபணேஙிழல்களாய்மருவுமாய்மலருமாய்மலர்ந்தகனிவர்க்கமாயிரசவர்க்கமாயுருவுமாயுருவிலுயிருமாயுயிருணர்வுமாயுணர்வுமுணர்வுருதருவுமாயருவிலருளுமாயவுனேயாரறிந்துரைசெய்வார்களே. ()

பஞ்சுமாய்முறுகுநூலுமாயிறுகுபடமுமாயுடைகொளிடமுமாய், நெஞ்சுமாய்நினைவுமாயமர்ந்திடுமோர்நெறியுமாய்நெறிகொள்குறியுமாய், நஞ்சுமாயமுதுமாயுடன்பருகுநாதனுயதிகபூதமோ, ரஞ்சுமாய்மறைகளுலுமாயவுனேயாரறிந்துரைசெய்வார்களே. (௨௧)

சிகரமால்வரைகடனாகள்வாரிதிகடேவர்மானிடவரியாவரும், பகருமாறுதவுதந்தைதாயெனுமோர்பண்பனுயவுயர்நண்பனீ, நிகரிலாதொரனருயைமைந்தரெனநின்றவாறுபுகல்கின்றதே, தகரமாயவிபியெனவிராவுமுனேயாரறிந்துரைசெய்வார்களே. (௨௨)

உரைசெய்நாதவொலியாயெழுத்துமெழுதுரையுமாயுரைசெய்பொருளுமாய்ப், பரசுபாணிமுதன்மூவராயருள்செய்பவருமாயதுகொள்பவருமாய்ச், சிரசுமாயுரசுபதமுமாயிளியதேகமாய்நிறமரேகமா, யரசுமாயமிர்தலிங்கமாயவுனேயாரறிந்துரைசெய்வார்களே

நீதியாயதின்விரோதியாய்வெளியிலிறைவுமாயிருளின்மறைவுமாய்ப், பேதியாதநவபேதமாய்மருவுபெண்ணுமாயலியோடாணுமாய்ச், சாதியாய்வருசமாதியாயெதிர்கொடாணுமாலயனுமானதோ, ராதியாயொளிகொள்சோதியாயவுனேயாரறிந்துரைசெய்வார்களே. (௨௪)

என்றுரைத்தமரரோதுதித்துமகிழ்வெய்தநீடுலகமெங்கனும்,
துன்றுமற்புதமதாகமாதவர்கள்சுரர்களின்னரர்களாதியா, யன்று
இத்தவரசைப்பின்மூவரெனலாயிலங்கவடிவத்தைநேர், சென்றுப
த்தியொடுகண்டுமூத்திதருசித்திபெற்றனர்கள்சித்தமே. (உரு)

ஓதுஞானவனமுற்றவுற்றவுயிரொக்கஞானவனமாகியப் ,போ
துஞானரசமேநிறைந்ததிதுபோதுசொல்ல முடியாதுபார், மீதுஞா
னவனமேவைகுண்டமிதுவேமனோவதியவெள்ளிவெற், பீதுஞான
நிலைதாமெனத்தவரோடுறில்சூதமுனிகூறினன். (உசு)

முற்றிற்று. ஆக திருவிருத்தம் உருடு.

## எ-வது இலிங்கோற்பத்திச் சருக்கம்.

மூவரும் பின்னரெய்திய செய்தியைச்சொல்லுமென்று கேட்கச் சூத
ர்சொல்வார் பிரமன் முதல்மூவரும் அத்திரிமுனிவனிடத்தில் சந்திரன் தத்
தாத்திரையன் துருவாசன் யென்று நாமந்தரித்து வேதமந்திரம் மூன்று
மூன்றுருவாய் வந்தமைபோல வந்துதித்து அழகு பொருந்திய பரஞ்சோ
தி மயமென்று பழையோர்கூற நின்றார். நின்றமூவரும் பிதாவாகிய முனி
யையும் அன்னையாகிய வனசூயையும் மலர்கொண்டருச்சிக்க மற்றமுனிவா
ர் வாழ்த்த இவர் முன் நாரதன்வந்து கானரசம் பொழியலாயினன். ஐவ
கை யிந்திரியங்களுக்கும் அமிர்தகானத்தை விருந்தாயழித்த முனிவனையத்
திரியுபசரித்து வாழ்த்தி யருச்சிக்க; அதற்கன்புகூர்ந்து அவர் முன்னாக அ
னசூயை முத்தாயர்க்கு மொழிந்ததை மொழியலாயினன். அத்திரியே கன்
னியர் மூவரும் நின்பன்னி சொன்னபடி கேட்டு, ஞானதீர்த்தக் கரையி
னெடுங்காலம் தவம் புரிந்து, ஆதிரை விரதமனுட்டித்து, கேள்வரங்கிய ம
ல்லாரெனினு மங்கியமாம்படிக்கு நோற்றார். ஆதிரையில் சூரியனுதிக்கும்
வேளை அவரை மணம்புரிவார்; குற்றமற்றோர் தரிசிக்க அயன் மாலீசன் தி
ருமணக்கோலக்காட்சி கொடுத்தருள்வார். சேவிக்கும் பொருட்டு அன்பு
பொருந்திய முனிவரோடு சென்றயானுமக்குரைக்க வந்தேனென்று சொ
ல்ல; முனியும் பன்னியுமகிழ்ச்சி கொண்டார். நாரதனங்கிருந்து சந்தானகா
னத்தில் ஞானதீர்த்தத்தினின்று தவஞ்செய்யு மூவரைக்கண்டு உம்பால் உம்
மிறைவர் இந்நாளுறைவர் என்றுரைக்கும்போது பொழுது விடிந்தது. அ
ப்பால் முத்தேவிமாரும் உலாவும்போது அன்னம் கருடன் இடபம் இவற்
றின் மீது கோபி சந்தனம் திருநீறு தரித்து, தாமரை துளசி கொ
ன்றைமாலைசூடி, உம்பர் பூமாரிவழங்கப் பல்லியமுழங்க ஞானவாவியின்
கணேழ் முனிவர்சூழ மூவர்வந்தனர் தரிசித்துவந்தனர்;ஓவியம் உயிர்பெற்றி

ருக்குந் தானத்திலொன்றினற்போல.தேவியர் மூவரும் தத்தம் மிறைவர் பாற்றுன்றினர். மறைகளானறிதற்கரிய மூவரும் தம்பானின்றகலாத மூவரும் ஏக மாங்காட்சி பூரணசபைக்குட் கொடுத்தருள; முனிவரர் தரிசித்துத் தேகம் பூரித்தார். இவ்வற்புதத்துக்குக் காரணமான வத்திரியு மனசூயையும் அக்கடவுளரை யருச்சித்து அடியேங்கள் செய்யும் பூசையைத் திருவுளங்கொண்டு அருள்புரிய வேண்டுமென்று விண்ணப்பித்து நிற்க; தாமரைய் ண்ணுன் அவரைப்பார்த்து இத்தலத்தி லெமதுகலைகளோடு கூட ஒருலிங்கந்தோன்றும்; எக்காலமுமியா மூவருமதிற் சேர்ந்திருக்கும் கோலங்காணப்படும்; அன்றியும் பாதலத்திலிருந்து ஒரு அரசுமுளைத்தெழும் அதன் ஆதி நடுவந்தம்யாங்கள், அமரர் கொம்பு முனிவர்தழைகளாம் அதனடி அகாரம் நிறம்பொன் குணம் )ராசதம் தொழில் சிருட்டியாம்; நடு உகாரம் நிறம் இந்திர நீலம் குணம் சத்துவம் தொழில் காத்தலாம்; முடிமகாரம நிறம் வெள்ளை குணம் தாமதம் தொழில் ஒடுக்கமாம்; எக்காலமு மதுபிரணவசொரூபமாகவே விளங்கும். அதன் மேற் காய் விளங்குஞ் சோதியானலிங்கமே தனக்காவியானலிங்கமாம்; அந்தலிங்கத்துக் காவிமூலமொன்றும்; அவையிரண்டிக்கும் ஞானலிங்கத்துக் குமிழ்ந்தகைமை பொருந்தும்; பஞ்சாக்கரமைந்து மைந்துமுகமாக மகிமைகொண்டிருக்கும். இது நிற்க யாமேஎம்மைப்பூசித்து மனமகிழ்விப்போம்; எமது சொல்லை அற்றை நாடொடுத்து இற்றை நாள்வரை எழுமுனிவர் கேட்டுத்தவஞ்செய்கின்றூர்; இவர்க்கும் உங்களுக்கும் தேவர்களுக்கும் மனது ருகும்படி எமைப்பூசிக்குஞ் சின்மயசொரூபக் காட்சியளிப்போம்; உங்களிருவருள்ளமும் எம்பாலுறைக வென்றருளி அங்குறைந்தார். பின்னர் முனியும் பத்தினியும் அரசின்றோற்ற மறியப்பூமியைப் பார்த்திருந்தார்; அப்பேது பாரின்முனிவரெவரு நிலைகொள்ளாமற் றள்ளாடும்படியாய் உலகினின்று ஓரொலிகிளம்பி அதினின்று மழலெழும்ப அதின்சுவாலையைக்கண்டவரெவரும் உள்ளம் பயந்து இளமையுந் தீரமுமுடைய முனிவர் ஒரு மூவரையுந்தழுவக்கருணைசெய்துஅனசூயையின் மனம் விழிகையில் வந்தெழுமிம்மூவரும் தமது மூலமாய் வரும் சின்மயவடிவைத்தியானித்து ஞானகானனஞ்சென்றனர். பின்னர் முனிவரியாவரும் தேவரும்பயந்தீர்ந்து மேல் விளைவதென்னென்று தரையை நோக்கியிருந்தார்; பிரணவரூபமாகிய பிரகாசமானது பிரவேசமாய் இறைவர்கலைகளோடும் மறைபொங்குஞ் சாகையோடும் இணங்கி, பாதலத்திலிருந்து ஓரரசு எழுந்து உலகத்தோர் கண்ணுலளப்பரிதாய் நின்றது; அதற்கு மேல்புரம் அயனரியரனுமாய் நிலைபெற்ற சோதியாய் அமிர்தமயமாய் அருள்வடிவாய் சிம்பர ஞானலிங்கந்தோற்றுதல் கண்டு, தேவர் முனிவர் இசைபாடி நடனமாடினர். பாலினெய்போல யெங்குங்கலந்து மறைந்து விளங்குமகிமையுடையவனே! மயக்கம் பொருந்திய புலனுலாகிய ஜீவர்களழியாமல் வாழுமாறுசெய்பவனே! நூலிலடங்கிய பொருளைத்தெரிந்தவேதவலிமையுள்ளவர்தணர் நால்வரோடு நீரா

லங்கட்டியைப்போலவதியும் ஞானமூர்த்தமான வுன்னை உணர்ந்து துதிப்ப வரியாவர்! விருக்கமாய் வித்தாய்தனை பொருந்திய இலைகளாய் அதன் நிழலாய் மணமாய்மலராய்க் கனியாய் இரசமாய் உருவாய் அருவாய் உயிராய் உணர்வாய் உணர்வும் உணர்வரிய அருவாய் அருளாய் விளங்கும் உன்னை உணர்ந்து துதிப்பவரியாவர்! பஞ்சாய் நூலாய் படமாய் அஃதணியுமிடமாய் மனமாய் நினைவாய் மறப்பாய் நெறியாய்க்குறியாய் நஞ்சாய் அமுதமாய் அதைப்பருகு நாதனுய் ஐம்புதமாய் நால்வேதமாய் விளங்குமுன்னையுணர்ந்து துதிப்பவரியாவர்! வரையாய்த்தரையாய்க்கடலாய்ச் சுரராய் நராய் அன்னையாய் அப்பனுய்ப்பன்பனுய் நண்பனுய் அனகுயை மைந்தராய் தகராகாசமாய் அக்கரப்பொருளாய்க்கலந்து விளங்கு முன்னையுணர்ந்து துதிப்பவரியாவர்! நாதவொலியாய் எழுத்தாய்ப்பதமாய்ப் பதார்த்தமாய் அரனுதி மூவராய் அருளளிப்பவனுய் ஏற்பவனுய்ச் சிரசாய்ப் பாதமாய்த்தேகமாய்ப் பலவண்ணமாய் அரசாய் அமிர்தலிங்கமாய் விளங்குமுன்னையுணர்ந்து துதிப்பவரியாவர்! நீதிய ய் அவிரோதியாய் வெளியினிறைவாய் இருளின்மறைவாய் அபேதமாய் நவபேதமாய்ப்பெண்ணுணலியாய்ச்சாதியாய்ச் சமாதியாய்த்தாணுமாலயனுய் ஆதியாய் சோதியாய் விளங்குமுன்னையுணர்ந்து துதிப்பவரியாவர்!இந்தப்பிரகாரந் தேவர்கள் துதித்து ஆனந்தமடைய, உலகமெங்கும் அற்புதமாக மாதவர் முனிவர் கின்னரர் முதலியோர் அரசை இலிங்கத்தையெதிர்சென்று தரிசித்துப் பத்தியோடு முத்திதரும் சித்திபெற்றனர். ஞானகானனத்திலுள்ள வுயிர்களெல்லாம் ஞானவனமாகியது. அப்போது ஞானரசம் நிறைந்தது; ஞானவனமே வைகுண்டம் மனோவதி நகரம் கையிலாயம்; இதன்மகிமை சொல்லிமுடியாது; இது ஞான நிலையேதானென்று சூதர் நைமிசாரண்யவர்சிகளுக்குச் சொன்னுர்.

முற்றிற்று.

## அ-வது அருச்சனைச் சருக்கம்.

அன்னவா மரசின் றன்மை யமிர்தலிங் கத்தின் மேன்மை
பின்னவா வுடனர்ச் சித்தோர் பெருமையர்ச் சிக்கும் பான்மை
யின்ன வாமற் றெலாங்கேட் டிடவிருப் புடையே நீமுன்
சொன்னவா றறைதி யென்னச் சூதமா முனிவன் சொல்வான். (௧)

அன்றெழு மரசின் மூல மமிர்தெழு மிலிங்க மூல
மொன்றெழு முனிவர் காண வொருமுனி விழியுள் ளங்கை
நின்றெழு மூவர் செய்தார் நெறிகெழு பூசை செம்பொற்
குன்றெழு வனைய தோண்முக் குணத்தொரு மூவர் கொள்ள. (௨)

ஆர்வுறு மிலிங்க மூலத் தயனைச்சந் திரனு நாப்பண்
சேர்வுறு மரியைத் தத்தாத் திரையனுஞ் சிவனை யந்தத்
தோர்வுறு துருவா சரவு முனுற்றினர் பூசை யங்ஙன்
சார்வுறு பவர்க்கு முத்தி யளித்திட தம்மைத் தாமே. (௩)

பூசைசெய் பவருஞ் செய்யும் பூசைகொள் பவரும் பூசைக்
காசைசெய் பவனைச் செய்யு மவருமிங் கிவரென் றுள்ளக்
காசையங் ககற்றும் வானோர் கணித்துமா நிலத்துண் மூன்று
தேசையிங் கியற்றும் லிங்கத் தேயருச் சிப்பான் மெய்ப்பான். (௪)

யாந்தரு பொருள்கொண் டின்ன மியற்றுவீர் பூசை யென்னப்
போந்தரு மலரோ டாதி பூசனைக் கேற்ற யாவு
மீந்தருள் செயுமென் றுரவ் வியல்புகண் டயலே நின்ற
தேந்தரு வளித்த மென்பூத் தீங்கனி முதல நேகம். (௫)

தேனுநெய் தயிர்பா லீந்த திரைசட லென்னத் திக்கின்
வானுளோர் கரிக ளெட்டு வரைகளெண் வசுக்கள் கூர்மந்
தானுளா மனந்த னாதி தனித்தனி யிவர்கள் பூசைக்
கானவை வேறு வேற தாய்க்கொணர்ந் தவர்மு னுய்த்தார். (௬)

அரனரி யயனு மூவ ராமிவர் மூவ ருந்தா
மரனரி யயனு மூவ ராந்தமைப் பூசை செய்ய
வரனரி யயனுந் தானு வவர்முக நோக்கி யவ்வா
றரனரி யயனுத் தோன்று மரசையர்ச் சிப்பீ ரென்றும். (௭)

அரிதனி லரசைப் பூசி யாதிலிங் கத்தைப் பூசை
புரிதல்வே றியர்வே தத்தைப் புகல்கிலார் புறநூ லோதித்
திரிதல்தாய் தந்தை தாகஞ் சேரவந் தணருக் கன்னஞ்
சொரிதலோ டொப்ப தாமச் சுவத்தமுத் தொழிலுஞ் செய்யும். ()

அச்சுவத்தத்தை பூசித் தாலதற் கொப்ப தில்லை
யச்சுவத் தம்மே முன்ன தாஞ்சிவ லிங்கம் பின்னு
மச்சுவத் தம்மே லிங்க மிலிங்கமே யச்சு வத்த
மசசுவத் தம்மே முத்தி யளிப்பதற் காதி யென்றும். (௯)

தேவர்தம் பெருமான் சொல்லச் சினையர சினையர்ச் சித்தார்
மூவரப் பூசை கொண்டார் மூவரும் பின்னர் மூவர்
தாவர லிங்கத் தாதி தனிநடு வினிலங் கத்தின்
மேவர மடவா ரோடும் வெளிவர நின்ற காட்சி. (ய)

வேறு

கண்டார்களி கொண்டாரிடர் காணருயர் சேனோர்
விண்டாரமு துண்டாரென வியந்தார்தவத் துயர்ந்தா
ரெண்டாரணி கொண்டாடிமி லிங்கத்தி லியங்கு
மண்டான்முத லுண்டாயடை வதுமங்கதி லாமால். (கக)

முத்திக்கொரு லோகம்வழி மூவர்க்குயர் தேகஞ்
சித்திகருமெய் ஞானந்தவர் சேமித்தநி தானம்
பத்திக்கெது மோகம்மது பாலித்திடு மேகஞ்
சத்திக்கரு ளங்கந்திகழ் தாணுச்சிவ லிங்கம். (கஉ)

பூசித்தவ ரும்பூசனை பூண்டேற்பவ ரும்மாய்
நேசித்தவ ரவர்மூவர்தந் நிலைகண்டுநி லைத்துப்
பாசத்தளை தானற்றுள பசையற்றிசை வுற்றே
யோசித்தெழு மெழுமாதவ ருயிர்முத்தியி லுற்றார். (கங)

ஒருமூவரு முனிலோசன முள்ளங்கையு வந்தே
தருமூவரு மானரவர் தாதைக்குறை செய்வார்
வருமூவரை நீர்பூசனை வழிபாடுசெய் வீரென்
றருமூவரு மிலிங்கத்துற லானாரென லானார். (கச)

அன்னோருரை கொண்டத்திரி யானோனைய னாதி
முன்னோர்தரு வாசாதிய முதலோரவர் முதலாய்
மன்னோர்சிவ லிங்கத்துரு வானோர்தமை முனிவன்
றன்னோரிதை யப்பாவனை தானோர்தல்செய் தானால். (கரு)

தேர்ந்தேமன திற்பாவனை செய்தேயக ரத்தோ
டார்ந்தேபர காதத்துரு வாயும்முக ரத்தோ
டோர்ந்தேயுயர் விந்துத்தனி லுயர்ஞானம தாயும்
வார்ந்தேமக ரத்தோடுசின் மயசிற்பர மாயும். (கசா)

மூவாமுத லாயும்மருள் முகலிங்கம தாயுந்
தாவாதுய ரரசாகிய தருராசனை யுள்ளத்
தோவாமுனி வன்பூசைசெய் துறுதன்மையை ஞானக்
கோவாவெதிர் கண்டான்மகிழ் கொண்டாளன சூயை. (கஎ)

திருமாதவன் மெய்யைப்பரி சித்தேதரி சித்தே
யொருமாதர சினையன்னவ னுள்ளத்தது வாகத்
தருமானத பூசைத்தொழி றவருதுமை முக்கட்
பெருமானையர்ச் சிக்கும்படி பெரிதர்ச்சனை புரிவாள். (கஅ)

எவ்வாறருச் சனைசெய்தன ளென்றாலது வொன்றா
லவ்வாறறி குவதாரவ னவ யது வானோர்க்
கிவ்வாறியல் பவராமிவ ரிருவர்க்கருள் புரிவான்
வெவ்வாறணி யரனுதியர் வெளியாயின ரொளியாய். (ககூ)

வெளிவந்திவ ரிருவோரிரு வினைவேரற நூறி
யெளிவந்துவெனவிம்பரி லேமுத்திய ளித்துத்
தெளிவந்தன ரவ்வேளையிற் செழுமாதவ ரெழுவோ
ரளிவந்தொரு மொழிகூறுது மடியோமென வொடியா. (உய)

ஓராயிரம் யுகமாயுமுன் றுயர்மாதவம் புரிந்தோ
மோராயருச் சிப்போர்செய லேற்போர்செய றெரிந்தோ
மாராயருச் சனையின்செய லறிந்தோமினி யாமே
நோராயியற் றும்பூசனை நீர்கொண்டருள் வீரே. (உக)

என்னுமுன நந்தானுவி யம்புமுதல் யுகம்போய்ப்
பின்னுனையு கத்திற்றழற் பிழம்பாமிலிங் கத்தின்
முன்னுகவர்ச் சிப்பீரென மொழியத்தவர் மொழிவா
ரந்நாளது வெந்நாளஃதி யாரேயறி வாரே. (உஉ)

இயலாயுக பேதத்தினை யெவரேயறி குவரென்
றயலாயெழு முனிவோர்சொல வவர்மூவரு ளறுதிச்
செயலான்மொழி குவனுலுற திரேதாயுக காலம்
புயலாரர செனல்போயொரு துளவாயலர் பொதுனும், (உங)

அக்காலம திந்தேயெமை யர்ச்சித்திடு மென்றே
புக்காலது கர்ந்தோனவி லிங்கத்திடை புக்கான்
முக்காலமு ணர்ந்தோரெழு முனிவோரெதிர் கால
மெக்காலம தென்றெண்ணமோ டேயங்கணி ருந்தார். (௨௪)

முந்தையுகத் தரசாமிது முறைபின்றுள வேயா
மெந்தையவ ருருவாமதி லிங்கத்தினி யற்கை
யந்தமறை முதலாயறை வரிதாமென மறையின்
சந்தந்தரு சூதன்பெருந் தவரோடுரைத் தனனால். (௨௫)

முற்றிற்று. ஆக திருவிருத்தம் ௨௯௰.

## அவாது அருச்சனைச்சருக்கம்.

அரசு இலிங்கம் இவற்றையருச்சித்தோர் பெருமை அருச்சனைவிதி— இவையனைத்துங்கேட்க விரும்பினோம், முன்னுரைத்தபடியுரைப்பீரென்று கேட்கச் சூதர் சொல்லுகின்றார். அரசின்மூலமும் இலிங்கமூலமும் ஒன்றுதான்; சப்தரிஷிகள்காண முனியின் விழிஉள்ளம் கை இவற்றினின்றெழு மூவருமுக்குணத்தொரு மூவர் கொள்ளும்படி பூசை செய்தார். இலிங்கத்தடியில யனைச்சந்திரனும், நடுவிலரியை தத்தாத்திரையனும், முடியிலரனைத்துருவாசனுமாய முத்தியளிக்கத் தம்மைத்தாமே பூசை செய்தார். பூசைசெய்பவருங்கொள்பவரும். அதன்பலனளிப்பவருமிவரென்று மயக்க மறுத்ததேவர்கணினைத்து உலகத்தின் மூன்று தேசை யியற்றுமிலிங்கத்திலருச்சிப்பார். யாந்தருபவற்றைக்கொண்ட ருச்சியுங்களென்று அருகேநின்ற தருக்கள் பத்திரம் பூ பழமுதலியதையும், பசுக்கள் நெய் பால் தயிர் முதலியதையும் அளித்தன. தேவர்கள் அஷ்டதிக்குப் பாலர்கள் அஷ்டகயங்கள் அஷ்டகுல பருவதங்கள் அஷ்டவசுக்கள் அநந்தனாதி யஷ்டநாகங்கள் ஆமை இவர்கள் தனித்தனி பூசைக்கேற்றன வேறுவேறாகக் கொணர்ந்து அவர் முன் குவித்தார். அயனரி யரனாகிய மூவரா மிவர் மூவருந் தாமான அயனரி யரனுந் தானுமிவர்முக நோக்கி அயனரியரனும் அரசை யருச்சிப்பீர் அரசைப் பூசியாது இலிங்கத்தைப் பூசைசெய்தல் வேதியர் வேதத்தையோதாது, புறநூலோதித் திரிதலும், தந்தைதாய் தாகித்துநிற்க அந்தணர்க்கு அன்னம் அளித்தலும் ஒப்பாம். அசுவத்த முன்னதாம் இலிங்கம் பின்னதாம். அசுவத்தமேலிங்கம், இலிங்கமே யசுவத்தம். அசுவத்தமே முத்தியளிப்பதற் காதி என்று தேவர் பெருமான் ஆஞ்ஞாபிக்க அரசினையருச்சித்தார். அருச்சனையேற்றார். பிற்பாடு மூவருந் தாபரலிங்கத்தின் அடிமத்தி யந்தத்தின் மடவாரோரடுங் காட்சிகண்டார், களிகொண்டார்,

இடர்காணார், தொழுதிட மனநாணார், தேவா மிர்துண்டா ரெனவியந்தார், தவத்துயர்ந்தார், தாரணி கொண்டாடு மிலங்கத்தில் விண்டு அரன் அயன் உண்டாவதாயும், ஒடுங்குவதாயும் முத்திக்கொரு லோகமாயும், மூவர்க்குயர் தேகமாயும், சித்திக்கு மெஞ்ஞானமாயும், தவர்சேமித்த நிதானமாயும், பத்திக்கேதுவான மோகமாயும், அதைப்பாலிக்கு மேகமாயும், சத்திக்கருளங்கமாயும் தாணுச் சிவலிங்கமாயும், பூசிப்பவராயும், அஃதேர்ப்பவராயும், விளங்காநின்ற மூவர் நிலைகண்டு பாசத்தளையற்று எழுமாதவரு முயிர்முத்தியிலுற்றார். ஒருமூவரும் முனிகண்ணையி லுதித்துச் சந்திரன்முதலிய மூவருமானார்; அவர் தாதையைப்பா து நீவிர் அருச்சிப்பீரென் றுரைத்து இலிங்கத் தொடுங்கினர். அவ்வு புட் கொண்டு அத்திரி அயனாதி மூவரும் சந்திரனாதி மூவருமாக விளங்கி இலிங்கமாத்திரமா யிலங்குக் தாணுவை யிதயபாவனையா லுணர்ந்து, அகரத்தை நாததத்துவமாயும் உகரத்தை விந்துதத்துவமாயும் மகரத்தை ஞானரூபமான சின்மயசொரூபமாயும் மூவர்முதலாயும் அருண்முக லிங்கமாயும் அரசவிருட்சமாயும் பூசைசெய்து தரிசித்து ஆனந்தமடைந்தார். அனசூயை முனிவர் பூசைசெய்த தன்மையை ஞானக்கேணவால் தரிசித்து மகிழ்வடைந்தாள். முனிவரது மெய்யைத்தொட்டுத் தரிசித்து அரசினையவனது இருதயலிங்கமாகப்பாவித்து மானதபூசை விதிதவறுமன் முக்கட்பெருமானையும் உமையையுமருச்சனை செய்தாள். அஃதெவ்வாறு செய்தாளெனின்; அவன் அவள் அது வாயிலங்குங் கடவுளருக்கு அப்படியே தாம் விளங்குதல் இவர் இயல்பான மானதபூசையாம். இவ்விருவருக்கருள் புரியும்பொருட்டு அரனாதி மூவரும் ஒளியாய் வெளியே தோன்றினர். வெளிவந்து இவ்விருவர் இருவினை வேரற அறுத்து இகத்தே முத்தியளித்த காலத்தில், சத்தரிஷிகள் வந்து அடியேங்கள் ஆயிரம்யுகமாக அலைந்தலைந்து தவஞ்செய்து அருச்சனை செய்வோர் ஏற்போர் செய்வோர் தொழில் ஏற்போர்தொழில் இவையுணர்ந்தேம்; இனியாமே இயற்றும் பூசனையை தேவரீர் கொண்டருள்வீரென்று விண்ணப்பஞ்செய்தார். என்று சொல்லுமுன், தாணுமுதல் யுகஞ்சென்ற இரண்டாவது யுகத்தில் தழற்பிழம்பாமிலிங்கத்தில் அருச்சிப்பீரென; இவர்கள் அஃதெந்நாள் எவராகுவர் என்று வினவ; அதற்குச் சிவன் திரேதாயுகத்தில் அரசாயும் திரேதத்திற்றுளவாயும் விளங்கும், அதையறிந்து எம்மைப்பூசிப்பீரென்று சொல்லி இலிங்கத்தின் மறைந்தான். திரிகாலங்களையுணர்ந்த எழுவரும் அக்காலத்தை யெதிர்பார்த்து அங்கிருந்தார். இந்த விலிங்கமகிமையை மறையும் அறையவரிதாமென்று சூதர்சொன்னார்.

முற்றிற்று.

சாரு நான்மறை முனிவரர் கேட்டதி சயித்து
மேரு வாமெனச் சூதனை வியந்தனர் வியந்து
பாரும் வானமும் பிரணவ மெனும்பரப் பிரம
தாரு வின்செயல் சாற்றென விரித்தவன் சாற்றும். (க)

நற்கு ணந்தரு முக்குண மதுபிர ணவமாஞ்
சிற்கு ணந்தருந் தியாவிக்கிற் பிரமமாஞ் சிறந்து
சொற்கு ணந்தரு மாயையின் புணர்ப்பின்றித்தோன்று
நிற்கு ணம்பெறுஞ் சின்மய வடிவமாய் நிற்கும். (உ)

ஆதி யாமுகத் தரசதாங் திரேதத்திற் றுளவாங்
காத லாந்துவா பரத்துயர் வில்வமாங் கலியிற்
சாதி யாநறுங் கொன்றையா மோருருத் தானே
சோதி யாய்ப்பல பேதமாய்த் தோன்றுமத் தொழில்போல். (ங)

மறையின் வண்ணமா மரசினி றுலிலரு மறையோ
ரறையு மந்திர மோருருச் செபிக்கிலா யிரந்தா
னிறைய வோதிய பலந்தரு மரும்பவ நீங்கு
மிறைவ னுமிதென் றெண்ணவெண் ணியவெலா மெய்தும். (ச)

எய்தி யவ்வர சடியினி லிருந்தவ ரெழுவர்
செய்தி யோகத்தாற் றமதுரு வணுவெனச் செய்து
நொய்தி னீடுகற் பங்கள்சென் றிடத்தவ ரோன்மை
மெய்தி கழ்ந்திருந் தனரருச் சனைசெயும் விருப்பால். (ரு)

சென்ற கற்பங்கள் செல்லநல் லோர்பர சிவமாய்
நின்ற பேரர சடியில்வீற் றிருக்குமந் நேர
மொன்ற வோரொலி யெழுந்ததேழ் கடலுமொன் றாய்ச்சேர்ந்
தன்று மேற்படக் கீழ்ப்பட லானதிவ் வகிலம். (சா)

உலகம் யாவையும் பரந்தெழுந் தோங்கும்வா ரிதியாங்
கிலகு ஞானகா னனத்தைநீங் கியதுமற் றெழுவர்
நிலவு சச்சிதா னந்தநா தாந்தமா நெஞ்சி
லலகில் பல்வினைத் தொடர்பிரு ணீங்குமா றதுபோல். (எ)

சுற்ற வாரிதி பரந்தெழும் பிரளயந் தோறு
முற்ற தில்லைமெய் ஞானகா னனத்துண்மூ வொளியாய்ப்
பெற்ற தாருவின் பெருமையா ருணைசெய்வார் பின்னர்
மற்ற கற்றிரே தாயுகம் பிறந்ததவ் வரைப்பின். (அ)

அன்ன போதிலப் போதியாந் தருவரு மறையாம்
பன்னு சாகைக ளோடுமெனு ஞானமே பரந்த
தென்ன வேதுமா யானது வானவ ரிறும்பூ
துன்ன ஞானகா னைததநி சயத்தையா ருணைப்பார். (கூ)

போதி யாய்த்துள வாகிய தருவினைப் போத
நிதி யாய்த்தவம் புரிந்ததோ ரெழுவரும் நினைத்தே
பேதி யாத்தம துளத்தகத் திருத்தியே பேணி
யாதி யாய்ப்பதி ஞுறுப சாரத்தோ டமைந்தே. (ய)

பற்று மைம்புலன் வழிச்செலா துளத்தையுட் படுத்தி
மற்று நூற்றிரு பத்தையா யிரமெனு வருட
முற்று நாடொறு மூன்றுகா லத்துமுள் ளுவந்தே
முற்று நான்மறை முறையருச் சனைசெய்தார் முனிவர். (கக)

செய்யும் பூசனை முறைவழா தியற்றிய திறங்கண்
டெய்யு மெயயெழு முனிவர்முன் மூன்றுரு வொன்றாய்க்
கையு மான்மழு வுங்கறைக் கண்டமுங் கருணைத்
தையல் பாகமு மாயெதிர் தோன்றினன் றுணு. (கஉ)

தோற்றுந் தாணுவைத் தொழுதெண் டஞ்செய்து துதித்துப்
போற்று மேழ்முனி வரரையும் பார்த்துமுப் பொழுதுந்
தேற்று சிந்தையோ டெமையருச் சித்தநுந் திறமை
சாற்றுந் தன்மையன் றுமக்கெது வேண்டும்யாந் தருவோம். ()

என்று கூறவம முனிவர்தா யினைக்கண்டா விளங்கோக்
கன்று போலநின் றிரங்கிவாய்க் கியைந்தன கழறித்
துன்று நித்தியம் பெற்றன நீயெதிர் தோன்ற
நன்றுன் பொன்னடி யின்னமர்ச் சனைசெய நயந்தேம். (கச)

இங்கி தற்கரு ளென்றலு மன்றவர்க் கீசன்
றங்கி தற்குமே லுத்தர சோமதீர்த் தத்தி
னங்கெமைத்திரு மாலெனு வேங்கினைத் தருச்சித்
துங்க ருத்துமுற் றுறப்பெறு வீரென வுரைத்தான். (கரு)

மற்ற கற்றவர் பற்பல்கா லர்த்தவம் வருந்திப்
பெற்ற வப்பெரும் பேறினைத் தரிசிக்கப் பெற்றோ
மிற்ற துற்றதுன் னுடனில் யானென தென்னும்
பற்ற கற்றுவ தென்றினி யென்றவர் பகர. (கசு)

பகரல் கேட்டரு முனிவர்காள் பவக்கடல் படியீர்
புகரின் முத்திய தேபெறு வீரவண்பொருந்தி
நிகரின்மாலையா னெனவருச் சனைசெய்வீர் நீரொன்
றகர மாகிங்கின் றனகன் றுனுட னங்கண். (களஎ)

அச்சு வத்தகா னனமென ஞானகா னனந்தான்
கிச்ச கற்றுமப் பிரளைய கேத்திர மென்னப்
பிச்ச கற்றுஞ்சிட் டிக்கிரா மம்மெனப் பெயரா
யிச்ச கத்தின்மு வருக்கும்வாழ் வென்னவீற் றிருக்கும். (கஅ)

ஆதித் தொல்லுகத் தச்சுவத் தமமதா யதற்பின்
பேதித் திவ்வுகத் திற்றுள வாசிய பின்பு
சாதித் துத்துவா பரத்தினிற் கூவிளந் தானுய்
நீதிச் சுத்தமா தவர்தொழப் பிரமமாய் நிற்கும். (கசு)

இத்து வாபர யுகத்தினில் வியாதனு மிதையத்
தத்து வாவறி வாமதே வனும்வசிட் டனுமே
ரொத்து வாமதி முகத்துமா பதியென வுடனே
சித்து வாளவில் வத்தினை யருச்சனை செய்வார். (உய)

திரிமு கோதக மெனத்திரி வேணிய தென்ன
விரியு ஞானவா வியுந்தனி வில்வமும் விளம்பற்
கரிய லிங்கமுந் தங்குமெஞ் ஞானகா னனத்தி
னுரிய மேன்மையா றறிவரென் றவர்க்கவ னுரைத்தான். (உக)

முற்றிற்று. ஆக திருவிருத்தம். உாஅக

## ௯-வது சத்தரிஷி பூசித்த சருக்கம்.

வேதமுணர்ந்த நைமிசாரண்ய முனிவர் கேட்டு அதிசயித்து, சூதரை மகாமேருவுக்குச் சமானமென்று வியந்து, பிருதுவிமுதல் ஆகாயம்வரை வியாபித்து விளங்கிய பிரணவமென்னும் பரப்பிரமதாருவின் மகிமையையருள்வீரென்று வினவச் சூதர்சொல்வார். சுத்தசத்துவத்தினின்று தோன்றியமுக்குணமேபிரணவமாம்; அதனைத்தியாகிக்கிற்பிரமமாஞ்சிற்குணந்தரும்; மாயாசப்பந்தமின்றி நிற்குணசின்மயசொரூபமாய்த்தருவிளங்கும். முதலுகத்தில் அரசாம், இரண்டிற்றுளவாம், மூன்றில் வில்வமாம், இக்கலியிற் கொன்றையாம். ஒரு வஸ்துத்தானே சோதியாய்ப் பல்பேதமாய்த்தோன்றுவதுபோலாம். வேதவன்னமாகிய அரசினிழலினிருந்துவேத மந்திரத்தை ஒருருச்செபிக்கின் ஆயிரமுருச்செபித்த பலனளிக்கும். அவ்வரசைப் பவமொழிக்குஞ் சிவமெனக்கருதிற் கருதியவனைத்துங் கைகூடும். அதனடியில் எழுவரிருந்து செய்த யோகத்தால் தமதுருவையணுவாக்கியநேககற்பமிருந்து அருச்சனைசெய்து வீற்றிருந்தார். அக்காலையில் ஓரொலிகிளம்பி எழுகடலுமொன்றாய்ச் சேர்ந்து மேல்கீழின்றி உலகமெவற்றினும் பரந்தெழுந்தது; சச்சிதானந்தசொரூபமாயும் நாதாந்தமாயும் விளங்கிய எழுவர் நெஞ்சில் பல வினைத்தொடர் நீங்குமாறுபோல ஞானகானனத்தை நீங்கியது. பிரளயந்தோறும் அழிவில்லை ஞானகானனத்தின் மூவொளியாய் விளங்குந்தாருவின் மகிமையையாவருரைப்பார்! திரேதாயுகம் பிறந்தகாலத்தில் அரசாயிருந்த தருவேதமாகிய சாகைகளோடு ஞானம் பரவியதுபோல் துழாயாயிற்று. தேவர்களதிசக்கும் ஞானகானனத்ததிசயத்தை யாவருரைப்பார்! அரசாய் துளசியாகிய தருவினை ஞானமுறைமை யாயெழுவரும் தவம்புரிந்து தமதிதயத்தமைத்து, சோடசோபசாரத்தோடு மனம் ஐம்புலன் வழி செல்லாதடக்கி, லட்சத்திருபத்தையாயிரம் வருடம் மூன்று காலம் அகமகிழ்ந்து, வேதவிதிப்படி யருச்சனைசெய்தார். செய்யுந்திறனறிந்து அவ்வெழுவர் முன் மூன்றுருவொன்றாய் மான்மழு நீலகண்டம் உமையொருபாகமாய்த் தானுகாட்சிகொடுத்தார். அவரை நமஸ்கரித்துத் தோத்திரித்து வணங்குமுனிவரைப்பார்த்து, ஒரு நான்முக்காலத்திலும் அருச்சித்தது சொல்லுந்தகைமையதன்று; நீவிர்விரும்பினதியாது அன்னதளிக்குதுமென்றுகூற; முனிவர்கற்றுவைக்கண்ட கன்றெனநின்றிரங்கி வாய்கியைந்தன கூறி நித்தியத்துவம் பெற்றனம் இன்னம் நின்னடியருச்சிக்க விருப்புற்றனம் அருள்வாயென; ஈசன் இதன் வடமேற்கில் சோம தீர்த்தத்தில் எம்மைமாலெனநினைத்து அருச்சித்து நுங்கருத்து முற்றப்பெறுவீரெனவுரைத்தான். மற்றமுனிகள் பற்பல காலம் வருந்தித்தவஞ்செய்து பெறும்பேறனைத்தும் உனனைத்தரிசிக்கப்பெற்றேம், இன்றஃதுற்றது என்றுகூற; உம்வாணாள்களில் யானெனதென்னும் பற்றறுவீர் பவக்கடலடையீர் முத்தியேபெறுவீர் அங்கேபோய் மாலையானென அருச்சனை செய்வீர் என்று அக

ரமாய் நின்றான் உரைத்தகன்றான். அசுவத்தகானனமென்ற ஞானகானனம் இச்சகத்திற் பிரளயக்ஷேத்திரம் எனவும் சிருட்டிக்கிராமமெனவும் பெயராய் மூவர் வாழிடமாயிருக்கும். முதலாவது உகத்தில் அரசாய்த்திரேதத்திற்றுளவாய் துவாபரத்தில் வில்வமாய் நிற்கும்; இத்துவாபரத்தில் வியாதன் வாமதேவன் வசிஷ்டன் இம்மூவரும் உமாபதி யெனவுன்னிவில்வத்தையருச்சனைசெய்வார். திரிமுகோதகம் எனவும் திரிவேணி எனவும் விரியும் ஞானவாவியுஞ் சொல்லற்கரிய விலிங்கமும் விளங்குகின்ற ஞானகானனத்தின மகிமையையாவரறிவார்! என்று சூதர் சொன்னார்.

முற்றிற்று.

## ௰-வது வசிட்டாதியர் பூசித்தசருக்கம்.

கருமுனி வோர்தங் கதையினை யோர்ந்து களிகூர்ந்து
திருமுனி வோர்பூ சனைசெய்து மேவுந் திறன்யாவும்
வருமுனி னிகூ றெனஃகசை கூற் மகிழ்வோடு
மொருமுனி சூதன் வரமுனி வோருக் குரைசெய்வான். (௧)

ஐந்து வகைத்தொழி லுஞ்செய்வ தற்புத மாய்வந்த
தைந்து வகைப்படி வந்தவெ ழுத்தென லாய்நின்ற
தைந்து வகைப்பர ராகிய கூவிள மகிலத்தோ
ரைந்து வகைக்கும டாதப ரப்பிரம மஃதாமால். (௨)

மேவின கூவிள மூவிதழ் கொண்டரன் மெய்திண்டித்
தூவின ரத்தரு வின்னடி மண்புன லோய்ந்தோர்வெண்
சேவினர் சென்னியி லபிடேகஞ் செய்த செய்யோர்மா
லேவினர் தென்கை லைக்குள் விருப்போ டிருப்பாரெ. (௩)

வேதியர் மூவர்கள் பூசைசெ யுந்திற மேசொல்கே
ளாதியின் மாதுமை தாதையு மாகி யடங்காத
சோதிதன் மாதுல னாகிய தான்மிகு தூய்தாகித்
தீதிய லாதவி மாசல மீது செறிந்தாரால். (௪)

செறிவுறு தேவர்கள் முனிவர்க டெக்கண திசைசெல்லு
மறிவுறு கங்கையி றந்ததோர் தேயத் தவண்மேன்மை
செறியுறல் கண்டன ராங்கவர் தங்கள்கண் ணோராகப்
பிறிவுறு முத்தொழின் மூவரும் வந்தனர் பிந்தாமால். (௫)

முன்புற வந்ததோர் மூவரை மாதவர் மூவோரு
மின்புற யாங்கள் செய்கின்ற தவப்பய னெனநின்றீ
ரன்புற மூவடி வும்மொரு வடிவென் வாய்கின்றே
துன்பற வாண்டருள் வீரென வன்னவர் சொன்னூரால். (௬)

சொற்ற துணர்ந்தொரு மூவரு நின்றெதிர் சொல்கின்றூர்
மற்றது தென்கட லின்கரை ஞானவ னஞ்சேரப்
பெற்றதோர் வில்வத் தருவதன் மேல்பரப் பிரமம்மா
யுற்றது சிற்குண லிங்கம திற்கண் டுணர்வீரே. (௭)

அங்கப் பிரணவ லிங்கத் ‌‌‍தமதுரு வதுகாணத்
திங்கட் செறிதரு ஞான னத்திடை சேர்வீரா
லுங்கட் குறுதியெ னச் ால மூவரு முடனேபோய்ச
சங்கத் தமிழ்மலை யின்கட் குறுகினர் தங்காமல். (௮)

தம்மன திற்றெளி மாணிக் கச்சுனை தனின்மூழ்கி
வெம்மைம திச்சடை யானெனி னைந்தனர் மெய்ப்பாலோர்
செம்மன திற்களி கூரமுன் னுற்றெளி திற்போய்நீ
ரம்மென் மலர்ப்பொழில் ஞானவ னத்தைய டைப்பீரால. (௯)

என்றரு ணந்தியை ஞானவ னத்திவ ரின்றெய்தச்
சென்றவ னுய்த்தி டெனச்சர ணந்தொழு தேயங்க
ணன்றென நந்தியு முன்புசெ லப்பின டந்தேயங்
கொன்றினர் வில்வ வனந்தனி லும்பரோ டோர்மூவர்.

புண்ணிய நல்வடி வானவர் போதுறு போதங்க
ணண்ணிய பல்லுயிர் யாவு முறும்பகை நாடாம
லெண்ணிய ஞானம யங்கொடி ருந்தன வெனில்ஞானக்
கண்ணிய னற்றவ ருற்றதை யாவர் கணிப்பாரே. (௧௧)

அரவொடு மயிலு மரியொடு கரியு மருங்கோவு
முரவிடு புலியு மாதிய கட்புற் றுடன்மேவி
விரவிடு மியல்கண் டருள்முனி வோர்கள் வியப்பெய்திப்
பரவிடு வில்வ வனத்திடை வந்தனர் பண்பாக. (௧௨)

இங்குறை பங்கய னோமுதன் மூவர்க ளௌவந்து
தங்குறை வற்றவ சிட்டா தியரிவர் தாமூவர்
கொங்குறை நற்றிரி வேணியின் மூழ்கிக் குழைமேவொடு
மங்குறை வில்வ வனப்பெரு மானை யருச்சிப்பார். (௧௩)

வேறு.

தேவ லிங்கத்தின் மூலத்தின் வேதன்மந் திரத்தா
லாவ லால்வசிட் டன்னருச் சித்தன னயனைக்
காவ லங்கத னடுவினிற் கண்ணன்மந் திரத்தான்
மாவ லங்கொடு வியாதனர்ச் சித்தனன் மாலை. (௧௪)

தாணு லிங்கத்தின் முடியிலஞ் செழுத்தையுச் சரித்துப்
பூணு மர்ச்சனை வாமதே வன்றனி புரிந்தான்
பேணு மச்சிலா தரனரு ணந்தியெம் பெருமான்
காணு மர்ச்சனை புரிந்தன னரன்றனைக் கருத்தில். (௧௫)

இந்த வாறிவர் மூவரும் பூசனை யியற்ற
வந்த வாறுமூ விடத்திவ ரருச்சித்த வாறங்
கெந்த வாறந்த வாறொரு லிங்கத்தி னிடத்தி
லந்த வாறணி யொருவனே மூவரு மானான். (௧௬)

மூவி டத்தினிற் றோன்றிய மூவரை மூவர்
மேவி டப்படு காட்சிகண் டனருளம் வியந்தோர்
தேவி டத்தினி லொன்றிலோன் றபினமாய்ச் செலப்பார்த்
தோவி டற்கரு மூவரு மதிசயித் துவந்தார். (௧௭)

தேவ நந்திதன் றியாநபா வனையினுற் றெளிந்தே
யாவ னாந்திடத் தனதுயிர் பரமனு வதுகண்
டோவ னந்தபே ரானந்த வாரியுள் ளுறைந்தான்
பாவ நந்தவங் கியாருஞா னக்கடல் படிந்தார். (௧௮)

மூத்த ராகிய வசிட்டனா தியரொரு மூவ
ரத்த ராகிய மூவர்க்கும் வீற்று வீற்றாகிச்
சுத்த ராய்ச்சொலு நாமமா யிரங்களுந் துதிக்கச்
சித்த ராற்புகழ் தாணுவங் கெதிர்நின்று செப்பும். (௧௯)

உங்கள் பூசனைக் குவந்துநாம் வரந்தா லுற்றோ
மெங்கள் வேட்கையி துமதுவேட் கையதென்ன வெனவெண்
டிங்கள் சூடிய முதல்வனீ யாங்களே செயுநே
யங்கொள் பூசனை மகிழ்ந்திட வேண்டுமென் றறைய. (உ௰)

என்னை யர்ச்சித்து வாமதே வாவிவ ணிருத்தி
தன்னை யொத்தவி யாதபொற் பதுமதிர்த் தத்து
ளன்னை யொத்தமா லைத்தாதித் துறைவசிட் டாதீ
முன்னை யத்திரி தலத்திருந் தருச்சிப்பான் முகனே. (உ௧)

என்று சோதிலிங் கத்திறை மறைந்தன னிவர்தா
மொன்று தேவர்கா லம்மறு பத்துமூன் றெழிய
வென்று பூசைசெய் தனர்கலி யுகம்வர வில்வங்
கொன்றை யானதோர் முனிபணிந் தனனெனக் குணித்தார். ( )

மூற்றிற்று. ஆக திருவிருத்தம். ௬௱௩௬

## ஐ-வது வசிஷ்டாதியர் பூசித்த சருக்கம்.

சத்தரிஷிகளருச்சித்த விதிகாசத்தையுணர்ந்து மகிழ்ந்தனம் மேல் வசிஷ்டாதியர் அருச்சித்தவிதயியாவும் உரைப்பீரென் றுகூறச் சூதர்சொல்வார். பஞ்சகிருத்தியஞ் செய்வதற்கைந்து முகூர்த்தமாய் வந்தவக்ஷரப்பொருளாய் நின்ற வைம்பரராகிய கூவிளம் உலகத்திலைந்துவகைச்சும் வியாபித்த பிரமமாம். வில்வத்தின் மூவிதழைத்தனக்கு வடிவமாகக்கொண்ட பரமசிவத்தின் மேனியைத்தொட்டு அருச்சனை செய்தோரும்! அவ்வில்வமிருத்திகை அதனபாததீர்த்தம் இவற்றிற்றோய்ந்தோரும், சிவபெருமான் முடியில் அபிடேகஞ்செய்தோரும், தெனகைலையில் விருப்போடிருப்பார். இனிவசிஷ்டாதியர் மூவர் பூசைசெய்த விதத்தைச்சொல்கேன்; ஆதியிலுமையவடந்தையுஞ் சோதியின் மாமனுமாகிய தாம் தேவர் முனிவரோடு இமோர்ப்பருவதத்துச்சியிற்போய்ச்சேர்த்தார். சேர்ந்தவர்கள் தெக்ஷணதிசையிற் செல்லுங்கங்கையையுமது பிறந்ததேயத்தையும் அதன் மகிமையையும் அவரவர் தங்கள் கண்களான்வகை பெறக்கண்டனர். முத்தொழிலியற்று மூவருமவ்விடம்வர அவரை இம்மூன்று மாதவரும் தரிசித்து யாங்கள் செய்தவப் பயனெனநின்றவரே! யாமின்புற அன்புறு மூவடிவும் ஒருவடிவாய் நின்று துன்பற ஆண்டருள்வீரென்று விண்ணப்பித்தார். அது கேட்டு மூவருந் தென்கடற்கரையில் ஞானவனத்தின் ஒருவில்வத்தருவுளது; அதன் மேல்புறம் பரப்பிரமமாகிய சிற்குணலிங்கமுண்டு அதிற்றரிசித்ததறிவீர், அத்தப்பி

ரணவலிங்கத்தில் எமதுருவைத்தரிசிக்க ஞானவனம்போய்ச் சேர்வீரேல் உங்களுக்குறுதியாயெய்து மென்றுசொல்ல; மூவருமுடனே போய் பொதிய மலையிற்றருகினர்; தருகி மாணிக்கச்சுனையின் மூழ்கிச்சிவபெருமானைச் சிந்தித்தார், அதற்குவந்து பிரத்தியக்ஷமாய் ஞானவனத்தை யடுப்பீரென்று நந்தியருள; அவ்விடஞ் சேர்ப்பிப்பீரென்று அவர் பாதத்தை யிவர்தொழத், தேவர்களோடும் மூவர் நந்தி முன் செலப்பின் சென்றவ்வனம் அடைந்தனர். போதநண்ணிய வெண்ணரு சீவன்களும் பகை நாடாமல் ஞானமயமாயிருந்தன வென்னில், ஞானக்கண்ணியர் மற்றவர் இவருற்றதையாவர் கணிப்பார்! அரவொடு மயிலும் யானையோ டாளியும் பசுவொடு புலியும் நட்பாகி ஒன்றோடொன்று கூடியிருத்தல்கண்டு முனிவர்கள் வியப்பெய்தி விசாலமான வில்வனத்திடை வந்தார்கள். வந்த வசிஷ்டாதி மூவர் திரிவேணியின் மூழ்கிப்பத்தியோடும் வில்வவனப்பெருமானை யருச்சிப்பார். தேவலிங்கத்தில், மூலத்தில் வேதமந்திரத்தாலயனைவசிஷ்டனும், நடுவிற் கண்ணன் மந்திரத்தான் மாலைவியாதனும், முடியிற் பஞ்சாக்ஷரத்தாலரனை வாமதேவனுமாக அருச்சனைசெய்தார்: மற்றையரும் நந்திபெருமானும் அரனையுரனிற்றரிந்து அருச்சித்தார். இந்தப்பிரகார மூவரும் பூசையியற்ற எப்பிரகாரஞ் சிந்தித்தருச்சித்தார்களோ; அப்பிரகாரமே ஒருலிங்கத்தில் ஒருவனே மூவராய் மூவிடத்திற்றோன்றிக் காட்சிகொடுத்தார்; தரிசித்ததிசயித்து ஒரேயிடத்திலொன்றிலொன்று அபின்னமாய்ப்போதல் பார்த்து உவந்தார். நந்திதன்றியான பாவனையினுற்றெளிந்து அன்பினுற்றனது சீவன் சிவமாதலைக்கண்டு பேரானந்தக்கடலினமிழ்ந்தினன். மற்றமுனிவரும் ஞானக்கடலின் மூழ்கினர். முத்தராகிய வசிஷ்டாதி மூவரும் அத்தராகிய மூவர்க்கு வேறு வேறாகிய சகஸ்திர நாமங்களாற்றுதிக்கத், தானு உங்கள் பூசனைக்குவந்தனம் வரமளிக்குதும் நும்விருப்பென்னையென; முதல்வனே! யாஞ் செய்யும் பூசனை மகிழ்ந்து ஏற்கவேண்டுமென்று விண்ணப்பிக்க; ஈசன் வாமதேவ! என்னையருச்சித்து இவணிருந்தி, வியாச! பதுமதீர்த்தத்தின் மாலையருச்சித்துவதி, வசிஷ்ட! அத்திரிதலத்தில் அயனையருச்சித்துவதி, என்றருளிச் சோதிலிங்கத்தின் மறைந்தனன். இவர் தேவவருடத்தில் அறுபத்துமூன்று வருடம் அருச்சித்தனர்: கலியில் வில்வம் கொன்றையாயின. ஒரு முனிவன் அதைப்பணிந்தனனென்று சூதர் சொன்னார்.

முற்றிற்று.

## ௰௯-வது சங்கராசாரியர் பூசித்த சருக்கம்.

நற்றிடவ சிட்டன்முதன் மூவர்சிவ பூசைசெய்து நண்ணும் வகை நீ, சொற்றிடவு ணர்ந்தேமன திற்றுயரோ ழிந்ததுயர் சூத முனிவ, மற்றிடமு மைக்குதவு வானையொரு சங்கரம காமுனி

வன்வங், துற்றிடவ லஞ்செய்கதை யோதெனவம் மாதவர் நுன்
ஞேதி டுவனுல். (௧)

வானவர்க ளிப்பமறை மார்தவர்த ழைப்பவவண் மன்னுயிர்களே
யானவைசெ ழிப்பவுயர் சேரலனு மற்புதமி தாகு மெனவே
மீனவர்து திப்பவளர் கேரளம திற்சுருதி வேதிய ரெலா
ஞானவர னுற்பவம தாமௌவ மூத்திடவ நாளி லொருநாள். (௨)

வேதியர்க ளிய கமதி லாகியவி பூதியதன் மேன்மை முதலா
நீதியறி விப்பவவர் சாதியிலு தித், னமே ' ஙின்ம லனருட்
சோதிவரு ணப்பிறைவ ளர்ந்தரென வேட்டிகை தோறு மறைநூ
லோதியுண ரத்தகுமெண் ணெண்கலைக டாங்கிவளர்ந் தோங்கின
னரோ. (௩)

வேதமுறு பேதமதி னங்கமுறு சங்கம விகற்ப முணரும்
போதமற வாதவிதி காசமுயர் காரணபு ராண மதெலா
மேதமற வோதியம காபிரம சாரியிவ னேயென முனோ
ரோதகிறை தத்துவம றிந்துபரி பூரணரோ டொப்ப வுறைவான்.

சரிதைமுதன் மூன்றையுமு ணர்ந்துசிவ ஞானமுணர் தன்
மை வடிவா, மிருதையன் விருப்பொடுவெ றுப்பெனுமி ரண்டுமற
வென்று தவமே, புரிதயவி ஞன்முதன்மை யீசனென நீறுடல்பொ
ருந்த வணிவான, கருதரனி டத்தலது மற்ரேர்பொரு ளத்துறுக
ருத்தி னைவிடான். (௫)

மூன்றுபுரி நூலணியு மார்பனொரு கோவணமு யங்கு முடை
யா, னேன்றபர னஞ்செனுமெ ழுத்துரைசெய் நாவினனி யைங்
துல கெலாங், தோன்றவரு ளாதிபரை மந்திரமி ருக்குமன துங்க
னறிவா, லான்றசிவ ஞானமுனே யென்னவளர் வானவனே யார்கி
கர்வரே. (௬)

சங்கரா சாரிய னன்றெனத் துன்றுமா தவமியற்றுஞ்
சங்கரா சாரிய னுமமே கொண்டதா டங்கமான
சங்கரா சாரியன் றன்மனத் துறைகிலார் தம்மை வாழ்த்துஞ்
சங்கரா சாரிய னென்னுமோர் பெயருடைத் தானு வன்னுன். (௭)

ஐந்தையும டக்கியெது வேதிடையொ டுக்குவதவ் வாறது செய்தே, சிந்தையைய யருட்பரசி வத்திடைய மைத்தெழுது சித் திர மெனச், சந்தயம டிச்சலன மற்றவனு ரைத்திடுச மாதி நிலை யில், வந்தயனி கர்க்குமுனி கண்ணின்முன மண்ணலொரு வாய். மை பகர்வான். (அ)

வெளியுறமு னின்றரிய ளீபிரம சாரிதவ மேபு ரிவதற், கெளி யுற மனத்திலுள தென்னெனவு நீயெனவும் யானென வும்வே, றளி யறநி னைப்பதல வொன்றெனவு மன்றுபுக லாதி முனமே, களியுற வோர் சங்கரம காமுனிவ ணங்கியொரு கட்டுரை செய்வான். ()

பரம்பரதி கம்பரப ராபரத யாபரப ராதி னதுபால், வரம் பெறநி னைந்ததுனை யேபரவு மாறலது மற்று மிலையின், றுரம் பெறநி னல்வடிவு கண்டுகளி கொண்டதெ னுளம்ப யனெலா, நிரம்புறவ டைந்தனவி தற்குபரி யென்கொலென நின்று தொழு தான். (ய)

நின்றுதொழு கின்றவன்மு னின்றுதள தாதியுரு நேரு றவ னே, னன்றுவிழி கொண்டினிது கண்டிடவ ளித்தபொழு தங்க சைவிலா, தொன்றலதி ரண்டறவு ளொன்றுமவ னைப்பெரிது வந் த ருளினற், சென்றவன தங்கைமலர் பற்றியொரு கொன்றைநிழ ல் சென்றனனரோ. (கக)

அண்டமும கண்டமும டக்கியுயிர் யாவையும கத்த மையவு ட், கொண்டகுடி லைப்பொருளை யந்தணன்வ லச்செவிகொ டுப்ப வுடனே, விண்டளன்வெ ளிப்படல மூறுபட மெய்ப்பொருள்வெ ளிப்படலெனக், கண்டனன ருட்பிரம சாரிபர மாயைதரு கற்ப னையெலாம். (கஉ)

நீண்டபிர மாண்டமதின் மூர்த்திகள்வி யாத்திகணி ரந்த ர மதாய்க், கூண்டபர சத்திகள்வி பத்திகள்பொ ருந்தியபல் கோடி விதமாய்ப், பூண்டமையில் சேதனம சேதனம வற்றினுள போக முடனே, வேண்டரிய தத்துவவி கற்பமுணர் நாதமொடு விந்து முதலாய். (கங)

எட்டுலக பாலர்திசை யெட்டுவரை யெட்டரவோ ரெட்டு ம
தமா, வெட்டுறையு மூர்த்தமதோ ரெட்டுததி யேழுலகீ ரேழும்
வெளிகா, லெட்டிலொரு பாதிமறை யெட்டினிலோ ரைந்துகு
றை யென்ற சுடரோ, டெட்டரிய வண்டமிண் டத்துமுணர் வெ
ட்டவறி வெய்தி னனரோ. (கச)

வேறு

மறைதரு சத்தப் பிரமத்தின் முன்னர் வழங்கிய வகையெலா
ங் கண்டோ, னறைதரு சதுரங் குலத்தையு மளத்தற் கரும்பெரு
ங் கடவுளா யறிந்தான், பிறைதரு மவுலிப் பிஞ்ஞகன் மலர்த்தாள்
பேசுஞன் மறையினூற் றுதித்தா, னுறைதரும் பிரண வப்பொரு
ளீச னுணர்த்தவெவ் பொருளுமோர்ந் துணர்ந்தான்.

அன்னவன் றுதிகேட் டென்னின்வே றிலையா லறிந்திடென்
றுரைத்தரன் பின்னர், தன்னவ னீயென் சபையிலென் னடனந்
தனைத்தரி சித்துவா ரிதிசூழ், பொன்னவி ருலக மனைத்துமா னு
கப் பொலிதரு காட்சிகா ணென்று, சொன்னவ னிமலன் கமலபா
தத்தைத் தொழுதுசிற் சபையில்வந் தடைந்தான். (கசு)

அடைந்தவன் சிவஞா னச்சபை நடுவி லலர்கதிர் ஞாயிறோர்
கோடி, மிடைந்தன ஞானத் திகழொளி திரண்டு வெளியினின்
றெழுமல விருள்கீழ்க், கிடந்தனப் படிந்த முயலகன் முதுகிற் சேடி
லான் புரிந்தவா னந்த, நடந்தனைத் தரிசித் துளங்களி கூர்ந்து
ஞானகா னனத்துறைந் தனனால். (கஎ)

அண்டகோ டிகளுட் கொண்டவான் பொருள்க ளனைத்தையு
ந் தன்மனத் தகத்திற், கண்டவே தாந்த சச்சிதா னந்தக லாதரன்
சங்கர குரவன், கொண்டதோர் பொருளங் கவர்க்களித் ததுபோ
ற் கொன்றையன் கொன்றையைக்குடிலே, விண்டதோர் பொருளை
ன் றுளத்தினி னினைப்பார் மேவுவார் வெள்ளியங் கிரிமேல். (கஅ

ஞானகா னனமும் ஞானவா வியுமெய்ஞ் ஞானபூ ரணவொ
ளிச் சபையு, ஞானமா மமிர்த லிங்கமு ஞான நறுமலர்க் கொன்
றையு ஞான, மானதோர் ஞான தீர்த்தமு மாசு மத்திரி யிருக்கை

யுங் கண்டார, ஞானதேசா ரூர்தி யாய்க்கொளும் பரன்பே ராட்சியா
ங் காட்சிகண் டவரே. (௧௯)

பாட்டிசைச் சுரும்பர் கூட்டுணு ஈறவப் பசுந்துணர் கற்பகப்
பொதும்பர், கோட்டினிற் பெறுந்தார் சூட்டும்வச் சிரத்தூம் கொ
ண்டலா கண்டலன் முன்னோர், வீட்டினுக் கரசாய் கவுதமன் சா
பம் வீட்டினான் றன்னிடத் ததனு, ஞுட்டினிற் சிறப்பாஞ் சுசீந்தி
ர மெனும்பேர் நாட்டுமஞ் ஞானகா னனமே. (௨௰)

வேறு

எக்கனு முளதோவிவ் வியன்முது கலையோடு
முக்கணன் முதலாய மூவரு முறைகின்ற
தெக்கண கயிலாயஞ் சுசீந்திர மெனலாமென்
றக்கண முனிவோருக் கறைந்தன னுயர்சூதன். (௨௧)

முற்றிற்று.— ஆக திருவிருத்தம் ௩௱௨௰௪.

## ௰௧-வது சங்கராசாரியர் பூசித்தசருக்கம்.

வசிஷ்டன் முதன் மூவர் பூசித்த வகையைச் சொல்லக்கேட்ட கமகிழ்ந்தோம், மேலான சூதமுனிவரே! உமைக்கொருபாகமளித்த சிவனைச்சங்கர முனிவன் பூசைசெய்த கதையையோதென்று நைமிசாரண்ய முனிவர் கேட்கச்சொல்லுவார். தேவர்கள் சந்தோஷிக்க வேதமாதவர்தழைக்க உலகத்துள்ள சீவராசிகள் செழிக்க சேரலன் அற்புதமடைய பாண்டியர் துதிக்க கேரள நாட்டில் வேதவேதியரனைவரும் ஞானவரன் பிறந்தனனென்று சொல்ல,ஒருகாலத்தில் அந்தணர்களியாகத்திலாகிய விபூதியின் மகிமைமுதலிய நீதிகளை யறிவிக்கும் வைதீகப்பிராமணர் குலத்தில் நின்மலனருட்சோதியானது அவதரித்து, பிறைபதினறுகலைகளையுந்தரித்து நாடோறும் வளர்வபோலக், கடிகைதோறும் வேதமுதலிய வெண்ணெண்கலைகளைத்தரித்து வளர்ந்தனர். வேதம் நான்கும் அதனங்கம் பொருந்திய சங்கமும் விகற்ப முணரும் போதமும் இதி காசமும் புராணமும் இவையனைத்துங் குற்றமறவோதி, பிரமசாரியிவரேயென்று பெரியோர் கூற நிறைந்ததத்துவமறிந்து, பரிபூரணரோடொப்பச்சஞ்சரித்து, சரிதைமுதல் மூன்றையுமுணர்ந்து, சிவஞானமுணருமிருதயரும், விருப்புவெறுப்பென்னு மிரண்டினை வென்று தவம்புரிதயவினரும், முதன்மையான ஈசனென்னும்படி உடன் முழுவதும் நீறணி பவரும், யாதொரு பொருளையுங் கருதாதவரும், பரமொன்றையே கருதுங்கருத்தினை விடாதவரும், முப்புரி நூலணியுமார் பினரும், கோ

வணமிலங்கும் உடையினரும், ஐந்தெழுத்துரைக்கும் நாவினரும், உலகெலாந்தோன்ற அருளாதிபரை மந்திரமிருக்குமனதுங்கன்றிவரச் சிவஞானமுனையெனவளர்பவருமானார். அவரை யாவர் நிகர்வார்! சங்கராசாரியர் நல்லவரெனறு நினைத்து உலகம் நெருங்கித்தவமியற்றும். சங்கராசாரியார் நாமத்தையே யுலகஞ்செவியாபரணமாகக்கொள்ளும். சங்கராசாரியரைத் தம் மனத்துட்சிந்தியாதரை வாழ்த்துஞ்சங்கத்தவரை ஆசிரியாரென்னும் பெயரைக்கொண்ட தானுவுக்கொப்பானவர். ஐம்புலனடக்கி, எதை யெதனிடையொடுக்கவேண்டுமோ அதையதனிடையொடுக்கி, சிந்தையைப் பரமசிவத்திலமைத்து, எழுதிய சித்திரம்போலசைவற விருந்து சந்தேகமறச்சலன மற்றசமாதி நிலையில் அயனிகர்க்கு முனிமுன் பரமேசுரனருள்வான். துவிதமாக வொன்றையுஞ்சுட்டி யறியற்க, நீ பிரமசாரி விரதம் புரிதல் மனத்தில் யான் எனது நீ எனவும் நினைப்பதல்ல, அனைத்தும் ஏகமென்றுந் துவிதமென்றுங்கொள்வதல்ல, என்றருளிய விறையை வணங்கி யொன்றுரைசெய்வார்; பரம்பர சிதம்பர பராபர தயாபர ஈ ன்பால்வரம் பெறநினைந்தது உன்னையத்துவிதமாக வணங்கு மாறல்லது வேறில்லை; எனதுள்ளமானது உனதெதார்த்தசொரூபத்தை அபரோக்ஷாநுபவமாக வறிந்து இன்புற்றதெளினும் பயனெலாம் நிரம்பவடைந்தனன்; இதற்கோர்கைம்மாறு எனனையென்று தொழுதார். அவர் முன்னின்று அவர்க்குப் பூர்வசொரூபமாகிய தனதான்மசொரூபந்தெரியக் கடைக்கணித்தளித்தபோது, அவ்விடத்து நிச்சலனமாய, ஒன்றிரண்டற்ற அத்துவித சொரூபமாத்திரமாய் விளங்குமவரை பெரிது வந்து அருளினுலவர் கையைப்பற்றி, ஒப்பற்றகொன்றை மரநிழற்கண்ணிருத்தி, பல்லாயிரகோடியண்டங்களையும் அகண்டங்களையும் சேதனுசேதனங்களையும் தான் மாத்திரமாய் வியாபித்து தன்னுளடக்கி விளங்கும் பிரணவத்தின் பொருளைவலச்செவியில் உபதேசித்தனன். உடனே விழிமாசுகெடதெளிபொருள் புலப்படல்போல, மாயை அதன் கற்பனை பிரமாண்டம் அதனையாக்கியளித்தழிக்கு மூர்த்திகள் வியாப்திகள் பராசத்திகள் விபக்திகள் பலவிதச்சேதனங்கள் அசேதனங்கள் அவற்றின் போகங்கள் போக்கியங்கள் தத்துவங்கள் நாதம் விந்து அஷ்டதிசை அஷ்டபாலகர் அஷ்டபர்வதம் அஷ்டநாகம் அஷ்டகெஜம் அஷ்டமூர்த்தம் சத்தசாகரம் ஈரேழுலகம் ஆகாயம் காற்று நால்வேதம் முச்சுடர் அண்டம் பிண்டம் இவையனைத்துந்தான் மாத்திரமாய் வியாபித்து விளங்குகின்றேமென்ற விருத்தியற்ற ஞானத்தையடைந்தார். வேதந்தருசத்தப்பிரமத்தின் முன்வழங்கியவனைத்தையுங்கண்டார். சதுரங்குலத்தை யளத்தற்கரும் பெருங்கடவுளா யுணர்ந்தார். சந்திரனை முடியிலணிந்த பிஞ்ஞகன்றனை வேதத்தாற்றுதித்தார். பிரணவப்பொருளை ஈசனுணர்த்த எப்பொருளு மோர்ந்துணர்ந்தவர் துதிகேட்டு; திரிசியப்பிரபஞ்சமனைத்தும் என்னின் வேறில்லாததனுல் நான் மாத்திரமாய்ச்சேஷித்து விளங்குகின்றேனென்றும் சுவாநுபவத்தாலுணர்

வாயென்றும், என் சபையில் எனது நடனந்தரிசித்து, கடல்சூழ்ந்த உலக மனைத்தும் நானுகவிளங்குகின்ற காட்சியைத் தரிசிப்பாயென்று மருளிய நின்மலன் சிற்சபையில் வந்து சிவஞானச்சபை நடுவிற் பிரகாசியா நின்ற சூரியர் ஒருகோடி உதித்தாற்போல, ஒளிதிரண்டு வெளியினின்றெழுந்து, மலவிருள் கீழ்க்கிடந்ததெனப்படிந்த முயலகன்முதுகில் ஆனந்தத்தாண்டவம் புரிந்து மறைந்தனன். தரிசித்து உள்ளங்களிகூர்ந்து ஞானகானனத்தில் வதிந்தார். அண்டகோடிகளை யெல்லாந் தன்னுளடக்கி வியாபித்த வான்பொருளனைத்தையுந் தனதிதயத்திம் றதாகாரமாகக்கண்ட வேதாந்த சச்சிதானந்தமதிதான் சங்கரகுரவன். அவர் கொண்ட பொருளங்கவற்க் களித்ததுபோற், கொன்றையை பிரணவந்தை உபதேசித்ததோர் பொருளென்று உள்ளத்திற் சிந்திப்பவர் கயிலையையடைவார். ஞானகானனமும் ஞானதீர்த்தமும் ஞானசபையும் அமிர்தலிங்கமும் கொன்றையும் அரசும் அத்திரியாச்சிரமுந்தரிசித்தவரே பரமசிவத்தைத்தரிசித்தவர். இந்திரன் கௌதமர் சாபத்தையந்தலந்திருந்து நீக்கிச்சுத்தமான மகிமையால் அந்த ஞானகானனத்துக்குச் சுசீந்திரமென்று பெயர்கூறுவர். இம்மகிமை யெவ்விடத்துமுளதோ! முக்கணன்முதலாகிய மூவருந்தம்பூரண கலையோடு அங்குறைதலாற் றெக்கண கயிலாயஞ் சுசீந்திரமெனப்படும் என்று சூதர் நைமிசாரண்ய முனிவருக்குச்சொன்னூர்.

முற்றிற்று.

## ௰௨-வது அயிராவதச்சருக்கம்.

சங்கர வரகுரவன் சரிதையின் விரிவெல்லா
மிங்கர னனநீயின் றியம்பினை யினிநன்றே
செங்கர குலிசன்செய் திறமுரை யெனுமுனிவோர்க்
கங்கர கரவென்றே யருள்முனி புகல்கின்றான். (௧)

மேனகை முதலான மின்னனை யார்சூழ்தற்
கான்கர் வலனுேனை வனகவி கைபொம்பாற்
றூனகை யழல்காமத் தழுமரி யானுகி
மானகை தருகௌத மன்றரு சாபத்தால். (௨)

ஆண்குறி யொன்றுலே யழகுறு முடலெங்கு
மேண்குறி பெண்குறியா யிரமுறல் கண்டின்றி
நாண்குறி யாய்நின்ற நம்பன தருளாலே
காண்குறி யாவர்க்குங் கண்ணென வேதோன்ற. (௩)

கோவல னுக்கேபெண் குறியென வேதோன்றத்
தாவற வாழ்காலந் தனிலொரு காலத்திற்
றேவச ஸைபக்கண்ணே செம்பொனும் வெள்ளியுமாய்
மேவுறு போதகலா விவாதமதாயினதால். (௫)

மறையவ னறைகுவனுன் மறநெறி முழுதுமுண
னிறைகுவர் நெறியினிலார் நிறைபொறை முறையதிலார்
கறையுறை மனதுடையார் கடுவிட மனையமெய்யார்
குறையுறு பழிபுரிவார் கொலைசெய்து நிலைதிரிவார். (௬)

கொடியவர் நிசிசரர்தங் குருவென வருபவனீ
கடியள வறிவுடையோய் ஈனபுக ரெனுநடையாய
முடியவுன் னுடனெவரே மொழிகுவ ரெனமறைதேர்
நெடியவன் மொழிதரவே நிதியெதிர் பிருகுசொல்வான். (௬)

ஆயநி சாசரருக் கருள்குரு நானனே
னீயெனி னல்லோர்க்கே நிகரறு குருவானாய்
போயின னகலிகையாற் போயொரு பெண்குறியாற்
றாயன லுடலமெலாந் தோற்றின பெண்குறியே. (எ)

அவ்வாண் குறியொன்று லாயிரம் பெண்குறிகொண்
டிவ்வான் புரக்கின்ற விவற்கன் றேகுருநீ
செவ்வான் பரித்தற்குச் செவ்விய னேவிவனிங்
கொவ்வான் பரதாரத் துறைவோ னிறையாமோ. (அ)

பன்னப் படுமோவிப் பாவந் தனையென்னப்
பின்னப் படவெள்ளிப் பித்தனை யாநின்றே
யென்னப் பகர்சொல்லா லிந்திர னந்தரமாய்
மன்னப் படகாணி மற்றொரு சார்புக்கான். (கூ)

அப்பொழு தங்கதுகண் டந்தண னுந்தன்மன
வெப்பொழி யாதுறையுண் மேவினன் மேவியபின்
றப்பொழி யாதுவிணீர் சூழ்புகல் கேளுமென
விப்பொழு திந்திரனுக் கிடமகலும்படிதான். (௰)

எண்ணின னோர்கரும மிந்திர னைக்கொணர்வான்
கண்ணின னுதவனீ காரிருண் மாறுதல்போற்
பண்ணின பாவமெல்லாம் பாற்றவவ் வாற்றலன்முன்
னண்ணிநம் முன்கொடுவா வென்றன னன்மறையோன். (கக)

அந்தணன் மொழியதுகேட் டாசல னிந்திரன்வாழ்
நந்தன வனமேகி நண்ணின னவன்முன்னங்
கொந்தள வியதருவின கோமக னீகுருமுன்
வந்தரு ளெனவன்னான் மனநினை வதுசொன்னான். (கஉ)

உன்மன விருளொழிவா னொருகரு மங்குருவின்
றன்மன தினிலுன்னித் தானுனை யழையென்றே
யென்மன மகிழ்வுறவிங் கேகினன் வருகென்ன
நன்மனு வனையானு நண்ணினன் மறையொன்முனே. (கங)

நண்ணிய வாசவனை நான்மறை யோனோக்கிப்
புண்ணிய வேள் ?யொன்றாற் போக்குவ னின்னிடறைப்
பண்ணிய வாறுசெய்தாற் பயனுகர் தரவேநா
னெண்ணிய மூவரைநீ யின்றுகோ னாவென்றான். (கச)

புத்தியி தேயென்னப் போயினன் மாதவர்வாழ்
சத்திய லோகத்திற் சதுமுகன் முன்சென்றே
சித்தியி னொருவேள்வி செய்கின் றனனவனை
நித்திய னேவருவா யென்னவந் நின்மலனும். (கரு)

கருமுகி லெனும்மேனிக் கடவுளுன் னொடுகூட
வருகுவ னெனிலியானும் வருவனவ் விடையென்னத்
திருமறு மார்பன்முனஞ் சென்றுபு கன்றிடமற்
றொருதனி முதல்வந்தா னுடன்வரு குவனெனனும். (கசு)

வேறு

உடுவி லோங்கி யுயர்வெள்ளி யோங்கலி
னடுவி லாயிர ஞாயிறு தித்தன
வடுவில் சோதிமுன் போய்நின்று வாழ்த்தவெங்
கடுவி லோங்கிய கண்டனுங் கண்டனன். (கஎ)

காணு மாயிரங் கண்ணனைக் கண்ணுறீஇத்
தாணு நின்வர வென்னெனத் தன்னுளம்
பூணு மாகுல மும்பொன் புகன்றதும்
பேணும் வாசவன் பேசம கேசனும். (சஅ)

நவ்வி யங்க ணுமைநமை நாடியே
யவ்வி யந்தவி ரர்ச்சனை செய்திடுஞ்
செவ்வி யிங்கிது தீர்ந்தபின் னெய்துது
மவ்வி யன்பதிக் கென்றனு மும்பர்கோன். (சகூ)

வீழ்ந்தி றைஞ்சி விடைகொடு மூதறி
வாழ்ந்த நெஞ்சுடை யந்தணன் முன்னுறீஇத்
தாழ்ந்தெ ழுந்திவர் சாற்றிய கூற்றெலாஞ்
சூழ்ந்து சொனனபின் னந்தணன் சொல்லுவான். (உ௰)

வினைவந் தெய்தில்வி தியென்றெண் ணுதுசிந்
தனைநொந் தேதினிச் சற்றுந்த ளர்வுறேல்
நினைவந் தெய்திடர் நீக்குவன் யானென
முனிவன் சொல்ல முகமலர்ந் தானரோ. (உக

முற்ற தற்குற மூவருந் தாமதஞ்
சொற்ற தற்குநின் றுன்மொழி தற்குநான்
கற்ற தற்குமோர் காரியமென்மனத்
துற்ற தக்கணு றில்வினை யோடுமே. (உஉ)

என்ற பொன்னையி ரும்பொன் னுலகினோ
னென்ற வோதுதி யென்னவு னைசெய்வான்
மன்றன் மேருவ னக்குயர் தென்றிசை
சென்ற தென்கடற் குத்தா தீரத்தே. (உ௩)

கூர்ந்த கன்னி குமரிப் பகவதி
சார்ந்த தானத்தின் மேற்கருந் தாபத
ரார்ந்த ஞானவ னமுண்ட தனடுச்
சேர்ந்த தாதி சிவானந்த லிங்கமே. (உச)

அங்க ணெய்தி யமிர்தலிங் கத்தைநின்
செங்க ணூற்றரி சித்தருச் சித்திடிற்
றிங்கண் மாலையன் மாலையன் சேர்வுறுன்
பங்க லைந்தப பூங்கணுந் திருமால். (உரு)

என்னு நன்மையி ருங்குறை வோதமுன்
றுன்னும் வேந்தன னெழுதுவ ணங்கிநின்
றுன்னு மோகையொ டுவிடை கொண்டவன்
மன்னு மாறுவெள் வாரணத் தேறினான். (உசா)

தேரு மாவுஞ் சிவிகையும் வானவ
ரியாருஞ் சூழவிண் ணெய்திவி மானம
தூரும் வாசவ னுற்றன னத்தலஞ்
சாரு மெல்லையிற் சார்வுறு மெல்லையில். (உஎ)

ஈங்கு நிற்றி யெனநந்தி முந்திவந்
தாங்கு கூறலுங் கூறின வவ்விடத்
தோங்கு தேரொடு முற்றன னதலாற்
றேங்கு மத்தலந் தேரூர தென்பரால். (உஅ)

நந்தி பின்னு நவில்வணிந் நாளினின்
முந்தி மூவிரு திங்களுண் முன்பிதோ
சந்தி கோரக்க மால்வரை தன்னிலே
வந்தி மாதவஞ் செய்துபின் வாவென. (உகூ)

மொய்த்த கோரக்க வெற்பின் முகட்டிடை
சித்த தீர்த்தமொன் றுண்டதன் றீரத்தி
லத்த னாதி யவரைநி னைத்தனோன்
மெய்த்த வஞ்செயத் தீர்ந்தது வெவ்வினை. (௩௰)

அந்த வேளையி லந்தணன் வானவர்
தந்த மாசையிற் சூழ்தரத் தாழ்வற
வந்தம் மால்வரை கண்டனன் வாசவன்
முந்தை மாதவஞ் செய்யுமு றைமையே. (௩௧)

அரிய பொன்பொன் னடிதொழு தந்தவெண்
கரியைப் பார்த்திந்தக் கார்வரை நாப்பணே
விரியத் தீர்த்தமுண் டாக்கென வெண்கரி
கிரியைப் பாய்ந்ததெ ழுந்தது செங்கையே. (௩௨)

ஆய தீர்த்த மவுடத தீர்த்தமென்
றேய பேர்பெற் றியலுமத் தீர்த்தத்திற்
காய மூறுமு வாமதிக் காலத்திற்
றோயப் பாவந் தொலையுந் தொலையுமே. (௩௩)

இந்த வாறுகண் டேமகிழ்ந் தக்கரிக்
கந்த வாறறி யந்தணன் கூறுவான்
முந்த வாறுமு டித்தவற் போற்றியோர்
சந்த வாறுகொ ணர்ந்திடத் தக்கதாம். (௩௪)

ஞான கானன நாதனைப் போற்றியத்
தானம் விட்டுத் தரத்தெய்திக் காலசித்
தான தானத் தமர்ந்தக ணேசனை
மான யோகிக டம்மைவ ணங்கியே. (௩௫)

மேற்கு வேள்விக் கிரியவ் வியன்கிரிப்
பாற்கு கன்சிறப் பானுறை வானவன்
காற்கு நீவணக் கஞ்செய்து போய்ப்பெரு
மாற்கு லஞ்செறி மாமலை யத்தையே. (௩௬)

கிட்டிப் பாய்ந்தக் கிரியறக் கீண்டுற
முட்டித் தீம்புனன் முற்றமு யன்றுகீ
ழெட்டிப் பாய்தற் கிடந்தது கோடுகொண்
டட்டிப் பாரைகெட் டாறுசெய் தாற்றினே. (௩௭)

தாணு மூர்த்திதன் சன்னிதிக் கேதர
வேணு மென்றவி யாழத்தை வேந்தனைக்
காணு நீள்புழைக் கையால்வ ணங்கியே
சேணும் வாழ்த்திடச் சென்றதவ் வேழமே. (௩௮)

வேறு

வெள்ளி யானையும் பொன்னுரை யின்படி மேவி
வள்ளி மேவும்வேள் விக்கிரி முருகனை மதமே
துள்ளி யானைமா முகத்தனைச் சாத்தனைத் தொழுது
தெள்ளி யற்றமிழ் மலையையும் வணங்குதல் செய்தே. (௩௯)

ஆர்த்த கோட்டிரு முக்குறற் றுணைகீ டருவிக்
காத்த யானையை வெளுத்ததோர் யானையுட் கறுவி
நேர்த்த தாமென நேர்த்துத்தன் வலியெலா நிரம்பப்
பார்த்து வெண்மருப் பாற்கிரி யூடுறப் பாய. (௪௰)

தோன்று தண்டமிழ்க் குறுமுனி குண்டிகைத் துளைமேற்
கான்ற நீர்புறத் தெழுதல்போல் வெளுத்ததிண் களிற்று
னூன்று பாதலத் தூறுபே ராறுவெற் பூடுற்
றேன்ற தாரையாய்ப் பாரெலாம் வியப்பவந் தெழுவே. (௪௧)

ஈடு கொண்டவெண் களிறுகண் டுளமகிழ் வெய்திக்
கோடு கொண்டெழு தாறுசெய் தாற்றொடுங் கூடி
மூடு கொண்டல்போ லேகுதல் பகீரதன் முன்னாட்
சேடு கொண்டவா னதியொடு போதல்போற் சிறக்கும். (௪௨)

துன்று மால்கரி பின்றொடர்ந் தெழுநதித் தோற்ற
மன்று மாச்சிற கரிந்தவ னமதுவெற் பதனை
யின்று போந்திடென் றவன்களி றதனையே வினவென்
றொன்று மாமுனி விடுத்தபே ரரவவம் பொக்கும். (௪௩)

ஆழுங் கோடெழு வழிப்புனன் மலையவெற் பதனைப்
போழு மாகரி முன்புறப் பின்புறப் போத
றாழு மக்கரி கவுட்குளி நிரம்பியே ததும்பி
வீழு மாமதத் தாறுபின் றொடர்தல்போல் விளங்கும். (௪௪)

இன்ன தாகநன் னதியினைத் தென்றிசைக் கெய்தி
முன்ன தாகிய காலசித் தாலய முன்போய்
மன்ன தாங்கண நாதனை வணங்கியவ் வாறு
டன்ன தானஞா னுடவி தனக்குமேற் காக, (௪௫)

கொணர்ந்து பூருவ திசைக்கண்ணு ளொருழுகிடக் குறித்துத்
தணந்து தன்னையே நேரொக்குங் கோரக்க சயிலத்
தணைந்து சென்றுதன் னிறையினை மறையினை யாராய்ந்
துணர்ந்த வேந்தனைப் பணிந்ததவ் விந்திர னூர்மா. (சசு)

பணிந்தெ ழுந்தவத் தந்தியை யந்தணன் பாராத்
தணிந்து நீசொடு வந்தநின் னதியினைத் தரைமா
தணிந்த வாடைமா சறவிடுத் திடுகென வடுபோர்
துணிந்த வேழமு மன்னதே முறையெனத் தொழுது. (சஎ)

ஊடல் செய்தகன் மாதரைத் தூதர்சென் றுரையா
னூடல் செய்தழைத் திறைவர்பா லரிதினி னணுகக்
கூடல் செய்தென நதியினை விடுத்துளங் குளிர்கொண்
டாடல் செய்தது கயிலைநீர் படிந்தெழுந் ததுபோல். (சஅ)

கரியு மாங்ககன் றீங்கிரு வரைத்தொழக் கண்டுன்
னரிய கோட்டினால் வருதலி னினியகோட் டாறென்
றுரிய நாமமும் பெறுகவிந் நதிபடிந் துறவே
புரியு மன்பினோர் நினைத்தவா முடிகவெப் பொழுதும். (சகூ)

மென்மை யாநதி டன்னதி யுறுகமென் மேலும்
வன்மை மீறுக நீயெனக் களிற்றினை வாழ்த்தித்
தன்மை யானவா னாடிவிக் கொருவட சாரி
னன்மை யானகோட் டாற்றகன் கரையிலங் நாளில். (ருய)

அண்டர் சூழ்வுறத் தாணுவி னருள்பெற வரசன்
கொண்ட லூர்தியைக் கொடுபுகுந் தளன்மகிழ் கூரக்
கண்ட நேரம்வான் றருவினை நினைக்க வக்கணமே
விண்ட தாருவு மேவவங் கீழலின் மேவிக். (ருக)

குருவின் வாய்மொழி கொண்டருட் குருவரு குறவான்
றருவி னுயக னினியதைத் திங்களிற் றுடங்கிப்
பொருவின் மாதவம் புரிந்தன னெனமறைப் பொருளைத்
திருவி னீய்ந்தருள் சூதனே தினனருந் தவர்க்கே. (ருஉ)

முற்றிற்று. ஆக திருவிருத்தம் ஙஎசு.

மேலான சங்கராசாரியர் சரிதமெல்லாம் விரிவுற அரனுக்குச் சமான
மான தேவரீர் அருளினீர், இந்திரன் சரிதம் உரைப்பீரென்ற முனிவருக்கு
அரகரவென்று சிந்தித்துச் சூதர்சொல்வார். மேனகைமுதலாகிய தேவஸ்
திரிகடன்னைச்சூழ கற்பகச் சோலைக்கண் வாழும் வலாரி அகலிகையின் அ
ழகால் வருந்தி காமாக்கினி சகியாதவனாகிக் கௌதமர்சாபத்தால் ஆண்குறி
யொன்றினால் அழகுள்ளவுடம்பெக்கும் ஆயிரம் பெண்குறி யாதல்கண்டு, உள்
ளம் வெட்கி நய்பனைத்தவமுனுற்ற, அவனருளால் யாவர்க்கும் கண்ணாகவும்
தனக்குப் பெண்குறியாகவும் தோன்ற வாழுங்காலொருநாள், தேவசபையி
ல் வியாழனுஞ் சுக்கிரனுஞ் சேர்ந்தபோது, பொன்னவன் வெள்ளியை நோ
க்கி உன்னுன்மற நெறிநிற்பார் அறநெறியில்லார் நிறைபொறைமுறையில்லா
ர்குற்றமுற்ற மனமுடையார்விடமனையமெய்யர்பழிசெய்வார் கொலைபுரிவா
ர் நிலைதிரிவார் கொடியார் ஆகியவிப்பேர்ப்பட்ட நிசாசரருக்குக் குருவென
வருபவனும் கடியவனும் அறிவுடையோரால் புகரெனும் நடையினனெனக்
கூறப்படுவனுமாகியவுன்னோடெவர் பேசுவார்! என்றுகூற; அவன் முன் சு
க்கிரன் இத்தன்மையான விவர்கட்கு யான் குருவானேன்; நீ அகலிகையி
னிமித்தம் உடலெங்கும் பெண்குறியாகக்கொண்ட இந்நல்லோற்க்கோகு
ரு! இவன் இத்தேவலோகத்திற் பிரகாசித்தற்குச் செவ்வியனோ! பரதாரத்
துறைவோனாகிய இவன் இறையாவனோ! இப்பாவஞ்சொல்லத்தக்கதோ! எ
ன்று மனம் வேறுபடவிகழ்ந்து பித்தங்கொண்டவரே யென்று கூற; அச்
சொல்லால் இந்திரனும் அந்தரமாய் நாணி மற்றொருசார்படைந்தனன்.
அது கண்ட சுரகுரு தன்மனச்சூடு சகியாமற்றன்னிருப்பிடஞ் சென்று
தேவர்களே! கேண்மின் இப்பொழுது இந்திரனுங்கிடறகலும்படி யொரு
கருமமெண்ணினன்; அவனைக்கொணரும்பொருட்டு ஆதவன் கரியயிருளை
மாற்றுதல்போல, அவன் பண்ணியபாவமெல்லாமாற்றக்கதிரவனே! நம்மு
ன் அவனைக்கொடுவா வென்றனன். அதுகேட்டுப்பகலோன்நந்தவனத்துக்கு
ப்போய் அவனைச்சந்தித்து இதனையுணர்த்தி, இந்திரனே! அந்தணன்முன்
வந்தருளென்ன: வாசவனும் அவன் முன்வந்தனன். மறையோன் அவனை
நோக்கி உன்னிடறை யொரு வேள்வியாற்போக்குவன், அதற்கு மூவரையு
மிங்கழைத்துவாவென்றான். புத்தியென்று சத்தியலோகஞ்சென்று பிரமனை
யழைக்க, கரியமால் வருவான் எனின் யானும் வருவேனென; உடனே யவ
னையழைக்க, பரமன்வரில் வருவேனென; அக்கணம் ஆயிரங்கதிரவன் உதி
த்ததென்ன விளங்குஞ்சோதியைத்தரிசித்து ஸ்துதித்து நிற்க, கறைக்கண்
டன் நும்வரவென்னென்று வினவ; அதற்குத்தன்மனத்துயரும் பொன்பு
கன்றதும் விண்ணப்பிக்க: நம்பன் உமை யுமைநாடி அருச்சிக்கும் சமை
யமிது இது தீர்ந்தவுட னும்பதிக்கெய்துது மென்றருள; அநுமதி பெற்றி
றைஞ்சி பிரஹஸ்பதிமுன் வந்து நமஸ்கரித்து இவர் சொன்னதைப்பன்ன
க், கேட்ட ஆண்டளப்பான் வினைவந்தெய்தில் விதியென்றெண்ணாது சசிம
ணாளனை நோக்கிச்சிந்தைநொந்து சற்றுந் தளரேல்! உனை வந்தடையுமிட

றையிதோ நீக்குவன் என்று முகமலரும்படி முனிவன் சொல்லி, மூவருந் தாம்தஞ்சொற்றதற்கும், நின்றுன் பொழிதற்கும், வேள்வி முற்ற வியற்று தற்கும். யான் கற்றதற்கும், ஓர் காரியமென் மனத்துற்றது; அவ்விடஞ்சே ரில் வினைமாறுமென்று சொன்ன ஆசிரியனை நோக்கி வாசவன் அஃதென் னை சொல்வாயென; பீதகன் மேருவுக்குத் தெற்காகவும் குமரிக்கு மேற்காக வும் ஞானவன்முண்டு அதில் வீற்றிராநின்ற அமிர்தலிங்கத்தைத்தரிசித்து அருச்சித்திடில் மாலயன் சேர்வர் உன் பழவினையுந்தீருமென்று சொல்லக், குரவனைவணங்கிச்சந்தோஷத்தோடும்விடைகொண்டு வெள்ளானை மீதேறி தேர்குதிரை சிவிகையோடு வானவரியாவருஞ்சூழ விண்ணிலிருந்து புறப்ப ட்டு அத்தலநோக்கி வருகையில், நந்திமூர்த்தி வந்து இங்கே நில்லென்றுகூற த், தேர்முதலியவற்றோடு நின்றனன். ஆதலான் அத்தலத்துக்குத் தேரூரெ ன்று உயர்ந்தோருரைத்தனர். நந்தி பின்னரும் அமரர்கோனைப்பார்த்து உன் வாணுளில் இதோ வெதிர்தோன்றுகின்ற கொரக்கர் மலையில் ஆறுமா தந் தவஞ்சய்து வாவென; அப்படியே யம்மலை யுச்சியிற் சித்ததீர்த்தத்திலந் தனை நினைந்து மெய்த்தவஞ்செய்யவினைகடீர்ந்தது. அக்காலத்தில் அந்தண ன் வானவர் தந்தமாசையால் இந்திரனை வந்துசுற்றி மொய்க்கக்கண்டு அ ரிய குருவின்றிருவடி தொழுது நின்றனன். அப்போது ஐராவதத்தைப்பார் த்து இந்த மலை நடுவில் ஒரு தீர்த்த முண்டாக்கென, வெள்ளானையம்மலை யைப்பாயக் கங்கையெழுந்தது; அது ஔடததீர்த்தமென்று பேர்பெற்று விளங்கும்; அதில் அமாவாசை பூரணையித்திதிகளிலாடிற் சகல பாவமுந்தீரு ம். இந்த நதியைக்கண்டு மகிழ்ந்தகரியைப்பார்த்து அந்தணன் ஐராவதமே! கங்கை சூடியைப்போற்றி, ஞானகானன நாதனைவணங்கி, அவ்விட நீங்கிய தற்குத்தரஞ்சென்று காலசித்தாலயக்கணேசன் யோகிகள் வேள்வி மலைக் குகன் இவரடி தொழுது, மேகந்தவழுமலையத்தைக்கிட்டிப்பாய செட்டாறு வரும்; அதனைத்தாணுமூர்த்தி சந்நிதிவழியேகொண்டு வரவேண்டுமென்ற வியாழனையும் இந்திரனையும் புழைக்கையால் வணங்கி மேற்சொன்னபடி போய்த்தமிழ் மலையையும் வணங்கி, வலிகொண்டு வெண்மருப்பாற் கரியூடு றப்பாயத், தண்டமிட்குருமுனி குண்டிகைத்துளைமேல் விழாநின்ற நீர்புற த்தெழுதல்போல், பாதலத்தாறும் பேராறுமலையூடு தாரையாய்ப்பாரெலாம் வியப்பப்பரவி வந்தெழ, வெள்ளானை கண்டு சந்தோஷித்துக் கோட்டால் வழி செய்து ஆற்றோடுங்கூட காலசித்தாலயக் கணபதியையும் வணங்கி ஞானகானனத்துக்கு மேற்காய்க்கொணர்ந்து கீழ்த்திசைக் கண்குறித்துப் போய் கோரக்கர் மலையயணைந்து சென்று வியாழனையும் இந்திரனையும் பணிந்தது. பணிந்த வெள்ளானையைப் பார்த்து நீகொடு வந்தநதியைச் சமு த்திரசங்கமஞ்செய்வி யென்றுகூற; அது முறையென்று தொழுது நதியை க்கடலிற் கூடச்செய்து களித்து அவ்விடம் விட்டு வந்து இவரைப்பணிய, நோக்கிக்கோட்டினுல் வருதலின் இவ்வாறு கோட்டாறென்று நாமம்பெறு க, இந்நதி படியுமன்பர்க்கு நினைத்தவா முடிக, மகிமையான தனைத்தையுமி

ந்ததிபொருந்துக், மென்மேலும் நீ பெலமீறுக, என்று கரியை வாழ்த்தி ஞானுடவியின் ஒரு வடபாரிசத்திற் கோட்டாற்றின் கரையில் அந்நாளிற்றேவர்கள் சூழ தாணுவின் அருள்பெற இந்திரனைக் கூட்டிக்கொடுபோய் கருணைகூற, அந்நேரம் இந்திரன் தேவதாருக்களை நினைக்க, அக்கணமே அவை வந்து நெருங்க, அந்நீழலினிருந்து குருவின் வாய்மொழிகொண்டு தைமாதந்துடங்கி மாதவம் புரிந்தனன். என்று வேதார்த்தத்தை யீந்தருளாநின்ற சூதர் ஓதினர்.

முற்றிற்று.

## ௰௩-வது தீட்சைச்சருக்கம்.

தவஞ்செய்து பரனை யேயர்ச் சனைசெய்தர்ச் சனைக்கே யாதி
சிவஞ்செய்த செயலும் போர்வச் சிரன்செய்த செயலு ஞானோற்
பவஞ்செய்த சிந்தை யாய்நீ பகர்தல்செய் யெனவே சூத
னவஞ்செய்நூன் முனிவர் கேட்ப நவின்றன னடந்தவெல்லாம். ()

சுத்தமா மகர மாதந் தொடங்கிமா தம்பன் னொன்றுஞ்
சித்தமா மமிர்த லிங்கத் தேகமத் தியின்மூ லத்தி
லுத்தமாங் கத்தின் விண்டீ வுடனய னரனை வாழ்த்திச்
சித்தமா மலரா லர்ச்சித் திறைஞ்சினு னிறஞ்செய் தோளான். (௨)

அண்டர்நா யகன்ற னுள்ளத் தன்பினு லால முண்ட
கண்டனூர் கமலம் பூத்த கண்ணனு ரிருவ ராய்வான்
றொண்டனூர் பரவ மூன்று தானத்துந் தோன்றக் கண்டு
கொண்டனு னுற்ற வாறு கூறநான் குணிப்பி லேனே. (௩)

சூழ்ந்தனன் சூழ்ந்து கையாற் றொழுதனன் றொழுது தாண்மேல்
வீழ்ந்தனன் வீழ்ந்து மேனி விதிர்த்தனன் விதிர்த்தா னந்தத்
தாழ்ந்தன னாழ்ந்து நேர்நின் றழுதன னெழுபார் வாழ
வாழ்ந்தன னினிநா னென்ன வாழ்த்தினன் வானோர் கோமான். ()

அண்டகோ டிகளைத் தானீன் றளித்தழித் தருண்மே ருக்கோ
தண்டபா ணியுமா யார்க்குந் தாயுமா நீயே நின்னைக்
கண்டதோர் முனிவன் பந்தி கன்னிபூண் முலைப்பா லூட்ட
வுண்டபா லனுமாய்த் தோன்று முன்னையா ரறிய வல்லார். (௫)

அன்றைதரு மறைகொ ணூலா லளப்பதற் கரிதாய் நிற்கு
மிறையுன தடிநீ ழற்கீ ழியாவையு மடக்கு நீயே
நிறைசது ரங்கு லத்தி னிழலி லடங்கி நித்த
முறைதரு தானு வாகு லுனையெவ ரறிய வல்லார். (சு)

அன்புறன் பர்கணெஞ் சென்னு மனுவகத் தடங்கு நீயே
யின்புறு மகில லோக மெங்கணு மிருப்பக் கண்டோ
முன்புறு பிணியுந் தீர முயல்வுறு மருந்து மேற்றுத்
துன்புறு பவனு மாமுன் றெழிலெவ ரறிய வல்லார். (எ)

பெருமையாய்ச் சிறுமை யாகிப் பெண்ணுமா யாணு மாகிக்
கருமையாய் வெண்மை யாகிக் கண்ணுமா யொளியு மாகி
யருமையா யெளிமை யாகி யகமுமாய்ப் புறமு மாகி
யொருமையாய்ப் பன்மை யாகு முனையெவ ரறியற் பாலார். (அ)

இருவரோ டொருவ னாகி யிருளொடு வெளியும் போலப்
பொருவரு பேத மாகிப் பொன்னொடு பணியும் போல
மருவருமபேத மாகி மண்ணொடு விண்ணும் போல
வுருவரு வாகி நின்ற வுன்னையா ரறியற் பாலார். (கூ)

ஐயநின் னருளல் லான்மற் றசையுமோ வணுவு நாயேன்
செய்யவல் லனசெய் தேனுன் செயலல்லாற் செயல்வே றுண்டோ
வெய்யவல் வினைதீர்த் துய்ய வேயருள் புரிநீ யென்னத்
தையல்பா கனையே பாக சாதனன் றுதிசெய் தானல். (ய)

மூன்றுசத் திகளுஞ் சேர்ந்த மூன்றுமூர்த் திகளு மொன்றாய்த்
தோன்றுநந் தானு வன்றேன் றுதிசெயுந் துதிகேட் டுள்ளத்
தோன்றுநீ நினைத்த தோர்ந்தோம் யாமதற் கெமது முன்ன
மூன்றுமோர் சுசிமுன் னெய்தி லுடன்சுசி செய்வோ முன்னே. ()

வேறு

கூர்மமொன்றையனந்தனொருவனைக்குலமருத்துவரோரிரு
வோரைநன், ஞர்மனுஞ்சுடர்மூன்றைமறையோருநான்கைப்பூத
மோரைந்தையாறங்கத்தைத், தார்மனுங்கடலேழையோரேழுமா
தாக்கடம்மைவசுக்களோரெண்மரைப், பார்மன்னுமணியொன்ப
தையொன்றெடுபத்துருத்திரர்தம்மையும்பாரினில். (கஉ)

முற்றநற்றிசைகாவலாகூவவெல்லைமூன்றுநாகங்கடேனாறமி
யக்கர்கள், பற்றுகேசரர்கின்னராசாரணாபாதலபூதுளராசர்முனி
வரர், மற்றவநதராசித்தாழுநுமுதனமனனாதேனுவளாதருசத்தி
யோ, மறமதேவகணங்கணற்றுரையுமொக்கநீயளழைத்துக்கோடு
வாடுவன. (கங)

இயருவந்துருமீஇயவர்கிரியாமியமடவநதனைசெயமெனக்
கொணைறயின, கொங்குவகச்சடையானசைலப்பெருகுகொண்டு
லூரிமியெபகோசமன்னருளிதோ, வயருவமொருமேவருமுனபுநான
ழைக்கவதிலினரிகாரியாருமென, பயருவநதனைவாமோவென
பெண்ணிமுன்பண்ணித்தவகணைனடமறவரியாரதனள (கச)

பாரதகபோதிலக்வக்தனுனந்தனவபாதுபபோதுபணிகதே
யோரதிரிப, போக்கபோதூனைமுனைனின்றனமேனுமெழுமிறப்பு
றுந்தவிருமானுநீயனமேறு, வாசத்தபோதமறைதேடுநீவெளியு
னபோதிலயாவேதரியர, னோதகயோதிருளேதருளேசெயநீமனத
தினினைக்கிடவேணடுமே. (கரு)

காடடுநினறிருக்கணடகண்டவிழிகாணுமோவுனைக்கண்டுநி
னறெணடன்வி, ணட்டுவேகதனிலனுகருயினனருணம்குநாளுமி
ங்களாகவேண்டுமோ, வீட்டுதுணைபத்துக்காளவனிஙகிவறகிரயருவா
யெனறிரங்கவிரங்குநீர, சூட்டுமவேணியபிரானுமபாடோனயனம
துயதாகவோசொற்புகனறுணமேரா. (கசு)

கேட்டியிந்திரவின்றுநமவெள்ளியங்கிரியிற்செனறுநங்காத்தி
னைமூர்த்தியரிய், ஈட்டிமங்கணநாதாக்குநாதனுநநிலவடிவா
மிடபத்தினைக், கூட்டிவந்ததுபோறகொணாநதாலவாதுகூடுவார்
முனங்கூறினபேரெனச், சூட்டிலங்குதிணடோளானபுரமனைத
தொழுதுவெளவிச்சுடாக்கிரியண்மினன. (கஎ)

போற்றுமாயிசமாற்றளதிகமாப்புகலுருசனம்யப்பொன்ம
யமாயொளி, தோற்றுநகியைமுந்துறவாய்த்துள்ளேசூழ்ந்தஞான
வனத்தினில்வந்தவெள், ளேற்றுவுரகனனபாலனைடந்தாயுவணிரு
ந்துமூவரிலீசர்க்குத்தெனபுறத், தாம்றுமாயுனிருபயிவர்க்கேநடு
வாகவேதத்தயனிருப்பாக்கினன். (கஅ)

அன்றுதொட்டுத்திரிமூர்த்திதானமென்றுனாமஞ்சர்தான வனத்திற்குத், தொன்றுதொட்டுவரலானதிந்திரன்சுத்தனுகுஞ்சு பாவமுஞ்சூழதற்கு, மன்றுதொட்டுநெடிப்போன்றன்செய்கையின் மாண்புங்காண்கவளர்ஞானகானத்தெண், குன்றுதொட்டுமுன்கூறுங்கடவுளர்கூட்டம்யாவுங்குழீஇவந்தடைந்தவே. (௪௯)

வேறு.

லிங்கம தற்கு மிதழித னக்கு மிடையே சீர்
தங்கரி னைத்தோர் சபையமை வித்தச் சபையோ ரா
யங்குரி மைக்கன் புள்ளவர் வெள்ளியல் லாகல் லோர்
வெங்குரு வொத்தமுந் நூற்றுவர் போற்றற வேசெய் தான். ()

முற்றவ தற்குவ டக்குவ டக்கே முகமா க
வுற்றதோர் காளியு மச்சபை காவ லுறச்செய் தே
மற்றவ ணேசுர ருற்றது கண்டும காதே வன்
னற்றவ வாசவ னைச்சுசி யேசெய நாடிற் றுன். (உ௧)

சாரிற் சேர்பவ ரேதம தானது தானெய் யிற்
றீரிற் றிர்வத லாதக லாதிது தீர்வா மென்
றோர்வுற் றேநில மாதொரு கொள்கல முதவென் னப்
பாரிற் றேனுநெய் தரவென வேபசு பதிவின் டான். (உஉ)

விண்டொரு தேனுவ தாகிநெய் யேதர வேதா மூ
தண்டக டாகம தேகல மாகவ ளித்தான் கைக்
கொண்டவ னேதழ லாயுயர் தெய்வரு லங்கா ணீர்
கண்டவிம் மூன்றுமம் மூவரு மாம்வகை காண்பி ரால். (உ௩)

வியனில மூவரும் யானென வோர்மொழி விண்டான் விண்
டயனுறு கோள்கல மதிலரி நெய்யுற வங்கே சின்
மயனழ லாய்வழி மூவர்க டானெனும் வகைகா ணுஞ்
செயலறி விப்பது போல வெழுந்தது செந்தீ யே. (உ௪)

தன்றனி முத்திரை யாகிய நந்தி தனைப்பூ சித்
தன்றன லொத்தநெய் பூடுவி டப்பெரி தாய்வா ச
வன்றனி மித்தமி தாமென வன்னவன் வாழ்வா னிற்
சென்றன வுற்றத முற்றில தேவர் திகைத்திட் டார். (௫உ)

மின்னிகர் மெய்யுடை வானவ ரற்புத மேயெய் தத்
தன்னிக ராகிய மூந்நா றந்தணர் சான்ற க
வென்னிகழ் இஃறகெ னத்தனி நின்றவி னிறைமயோ னைப்
பொன்னிக ரீச னமைத்தொரு நன்று புகன்று னல். (௨௬)

இத்தரை யோரும்விண் ணோர்களி யாவரு மேகா ண
நித்திரை யொத்துய ராரழ னெய்யிடை நீமூழ் கி
முத்திரை யாகிய நந்தியை யங்கை முகந்தே றிச்
சுத்தரை யொத்தவ பாதமி லாதுதொ லைப்பா யால். (௨௭)

வேறு.

என்றுபு கன்றவ னைத்தொழு துள்ளி விருத்திய ருத்தியுட
னன்றழ னெய்யி லமிழ்ந்தியோர் நந்தியை யங்கைய டங்கவெடுத்
தொன்றின தோர்வட வானல மேலெழ லூர்திரை வாரிதியிற்
சென்றுப டிந்து முகந்தொரு சாரது சேர்முகி லொத்ததுவே. ()

இந்திர னெய்யி லமிழ்ந்திடு போதவ னேசெய்த பாவவிரு
ளந்தர மீதுறி னூறுவன் யானென வாயிடை மேயதுபோற்
சுந்தர வானடு வேநடு வாயொரு சூரியன் மேவினனாற்
சிந்திய வெந்திசை யேகின தோவிறை தீவினை கண்டிலதால். ()

ஞானவ னத்திரி வேணியின் மூழ்கிய நன்மையர் தன்மையெனத்
தானவ னுத்தம னாகிய ருட்சபை தன்னைய டைந்தருள்கூர்
வானவ னைத்தொழ வேயவன் முத்திரை மற்றறிதற் கரியோ
னனவன் மெய்ப்பொரு ளாகம மைத்தன னற்புத மற்புதமே. ()

சாற்றினி ரும்பைப் பரிசன வேதித் தயிலத் திடையிட்டுத்
தேற்றின சித்தர் பசும்பொன தாகச் செய்யுஞ் செயலென்ன
வேற்றினர் தஞ்செய லீதற் புதமென யாவரு மாதரவாய்ப்
போற்றின ரீசனை யேவலம் வந்தனர் பூமழை சிந்தினரால். (௩௧)

அந்தர துந்துமி யைந்துமு முக்கின ராடினர் பாடினர்முன்
னிந்திர னைப்பெரி தாசி யியம்பின ரிங்கக ளங்கமதாஞ்
சந்திர னொத்தசு சீந்திர னென்றனர் தாபத ரானவர்பின்
சுந்தர ஞானவ னத்தையு மன்றுசு சீந்திர மென்றனரால். (௩௨)

முத்தல முத்தொழின் முக்குண மார்கிய மூவருமீ யாவருநீள்
கொத்தலர் கொன்றையி னீழலில் வந்துகு லாவியு லாவிநிறைந்
தத்தல மேவிய விந்திர னைச்சுசி யாக்கிய யோக்கியமா
மித்தல மேமுத னென்மத்தல நேர்சொல வொத்தல மிங்குளவே ()

மூவுல கத்துள வானவ ரியாவரு மூற்றின ருற்ற விண்ணோர்
காவல னைப்பெரி தாகவி யந்துக ளித்தனர் காவலனுந்
தேவர் குழுக்களு மூவர் தமைத்தரி சித்தன ரப்பொழுதே
யாவன் மிகுத்தவன் மேவிய வற்புத மாரறி விப்பவரே. (கூச)

ஒன்றுறு கொன்றை யிலிங்கமு நற்சபை யுந்தரு மூவருமாய்
மன்றுறு வன்னியு நன்றுற வேவலம் வந்தரு டேசிகனைத்
துன்றுற நின்றுப ணிந்துயர் வானவர் சூழ்தர வாழ்தருவே
யன்றுறல் கண்டொரு கொன்றையின் மூலம மர்ந்தன னிந்திரனே.

முற்றிற்று. ஆக திருவிருத்தம் சகக.

## யகூ-வது தீட்சைச் சருக்கம்.

தவஞ்செய்து பரனையருச்சித்ததும் அதற்கவன் கருணைசெய்ததும் அப்பால் இந்திரனை நடந்துகொண்டதும் சூதமுனிவரே சொல்வீரென்று கேட்க ஓதலாயினர். தை மாதந் துடங்கி ஒரு வியாழவட்டம் பன்னிருவருடம் அமிர்தலிங்க நடுவில் அடியில் முடியில் விண்டு அயன் அரன் இவரையருச்சித்து வணங்கி வலம் வந்து கையாற்றொழுது பாதத்தினமலசரித்து உடல் புளகித்து ஆனந்தத்தாழ்ந்து நேர்நின்றழுது ஏழுலகமும் வாழ்த்த, அண்டகோடிகளை ஈன்றளித்தழிக்கு மேருக்கோதண்ட பாணியுமாய், முனிபங்கியின் முலைப்பாலுண்ட பாலனுமாய் விளங்கு முன்னையாவருணரவல்லார்! வேதத்தாலளத்தற்கரிதாய் நிற்குமிறையவனே! உன்றிருவடி நிழற்கீழெழுவரையுமடக்குநீயே, சதுரங்குலத்தினீழலினடங்கி நித்தம் விளங்குநீ தானு வானுலுனையாவரறிய வல்லார்! அன்பர்து அன்பர் நெஞ்சிலுறையடங்குப்வனு நீயே! அகிலலோகமெங்குனும் வியாபித்திருப்பவனு நீயே! பழவினைப்பிணியுமதைத்தீர்க்கு மருந்தும் அருந்துபவனும் தீர்ப்பவனுமாகியவனைத்து நீயே! உன் கிருத்தியத்தை யாவரறியவல்லார்! பெருமையாய்ச் சிறுமையாய்ப் பெண்ணுமாய் ஆணுமாய்க் கருமையாய் வெண்மையாய்க் கண்ணுமாய் ஒளியுமாய் அருமையாய் எளிமையாய் அகமுமாய்ப் புறமுமாய் ஒருமையாய்ப் பன்மையாய் விளங்குமுன்னை யாவரறியவல்லார்! இருவரோடொருவனாய் இருள்வெளிபோலப்பேதமாய்ப் பொன்னிற்பணிபோல அபேதமாய் மண்விண்போல் வுருவுருவாய் விளங்கு முன்னையாவரறியவல்லார்! ஐ

ய; நின்னருளன்றி யெவ்வணுவு மசையுமா! நாயேன் செய்யத்தகாதன செய்தது நின்செயலன்றி வேறுண்டோ! வெய்யவினை தீர்த்து உய்யஅருள் புரிவாயென்று தையல்பாகனை பாகசாதனன் றுதிசெய்தான். முச்சத்தி சேர்ந்த மும்மூர்த்தியுமொன்றாய்த்தோன்றுந் தாணுவிரங்கி நீ நினைத்தவாறு தோம் எமது முன் கூர்மமொன்றையும் அனந்தனொருவனையும் மருத்துவரிருவரையும் சுடர்மூன்றையும் வேதநான்கையும் பூதமைந்தையும் அங்கமாறையும் கடலேழையும் மாநரேழுவரையும் வசுக்களெண்மரையும் மணிபொன்பதையும் ஏகாதசருத்திரரையும் அட்டதிக்குப்பாலரையும் அட்டபர்வதம் அட்டநாகம் அட்டகயம் இயக்கர் கேசரர் கின்னரர் சாரணர் நாகர் முனிகள் அந்தரர் சித்தர் மநுமுதன்மன்னர் தேனு சத்தியோடுற்ற தேவகணங்கள் இவர்கள் முதலான பேரையொக்க வழைத்துவாவென்றருளக்; கொண்டலூர்தி எங்கோமானே! முன்மூவரையும் யானழைக்க வந்திலர்; இன்றிவரியாவரும் என்பங்கில் வர்துணைவரோ! என்று முன்பணித்த வந்தணனைப்பார்த்தனன். அப்போதந்தணன் ஈசனைத்துதித்து; நின் சந்நிதி முன் இருணிற்குமா! தீவினை காணப்படுமா! நின்றொண்டனை விவனுக்கு நின்னருணல்கு நாளின்றாளாகவேண்டும், இவன்றுன் பத்துக்காளல்லன்; இங்கிவனுக்கிரங்குவாயென்றிரங்க, சிவபெருமான் இந்திரனே கேள்! கையிலையிற்சென்று நந்தியைக்கூட்டிவர்தால் முன் கூறியவனைவருங்கூடுவரென்றருளப், பரமனைத்தொழுது வெள்ளியங்கிரியிற் சென்று நந்தியை முந்துறவழைத்துக்கொண்டு ஞானவனத்தில் வந்து இடபாரூடர் பாலடைந்தான். மூவரில் ஈசற்குத்தென்புறமாயனுக்கும் வடபுரம் அயனுக்குமாக விருப்பிடமாக்கினன் அன்று தொட்டு சந்தானவனத்துக்குத்திரி மூர்த்தித்தானமென்று பெயர் வழங்கிற்று. அந்த ஞானகானனத்தின் முன் கூறுங்கடவுளர் கூட்டமியாவுங்குழீஇ வந்தடைந்தன. லிங்கத்திற்கு மிதழிக்கு நடுவில் ஓர் சபையமர்வித்து அச்சபைபாராயும் அதற்குரிமைக்கண்ணன்புள்ளவராயும் நல்லோராயும் குருவொத்த முன்னூற்றுவரைப் போற்றவைத்து அச்சபை வடக்கே வடக்கு முகமாகக்காளியைச் சபைக்காக்கச்செய்து; அப்பால் வாசவனைச் சுசிசெய்யத்திருவுளங்கொண்டு தன் பங்கிற் சார்பவர் சோபவாதமானது நெய்யிற்றீர்வதன்றி மற்றதீற்றீராதென்றுராய்ந்து நிலமாதே ஒரு பாத்திரமுந்தேனுநெய்யுமுதவென்று பசுபதியருள, விண்டுதேனுவாய் நெய்தர அயன் பாத்திரமாயதனைக்கொள்ள அழிப்பவன் தழலாய் மூவருமூன்றுருவானதை காண்மினோனென்றொரு மொழிவிண்டான் காணுஞ் செயலறி விப்பதுபோலச் செந்தீயெழுந்தது. ஒப்பற்ற தன்னிடப முத்திரையைப் பூசித்து அக்கினிக்கொப்பாயக் காய்ந்த நெய்யிற்போட்டு தேவருமுநிவருமுன்வந்த சகலரும் முந்நூற்று வரும் சாட்சியாகவதின்மூழ்கி முத்திரையை யெடுத்து பரிசுத்தரை ஒத்து அபவாதமொழிப்பாயென்று ஈசனருள; அவ்வாறதின் மூழ்கி முத்திரை யெடுத்தெழுந்தான்: அவனைப்பரி ...வவிருள் நெய்யிலவன் வீழ்டோது பற்றவிடமின்றி அந்தரமீதாருவன

யானென்றவ்விடஞ்சென்றது. இவனும் வானடுவிற் சூரியனைப்போற் பிரகாசிக்கத் தீவினைபோன திசைதெரியாமற் போயிற்று. ஞானவனத்திற்றிருவேணியின் மூழ்கிய தன்மையானுத்தமனாகி யருட்சபையடைந்து அருள்கூர்வானைத்தொழ அரியயனாரும் அறிதற்கரியோனானவனு மெய்ப்பொருளாகமறைந்தனர். இரும்பைப் பரிசனவேதித்தயிலத்திலிட்டு சித்தர் பொன்னாக்குவதுபோல, ஏற்றினன் செயலீதற்புதமென்றியாவரும்போற்றினர்; வலம்வந்தனர் பூமாரிபொழிந்தனர் அந்தரதுந்துபி முழக்கினர் ஆடினர் பாடினர் முனீந்திரனைப்பெரிதாயியம்பினர் அகளங்கமாகிய சந்திரனையொத்த சுசீந்திரனென்றனர் ஞானவனத்தைச் சுசீந்திரமென்றனர்! முத்தொழில் முக்குணமுள்ள மூவருமியாவரும் முத்தலத்திற் கொத்தலராகின்ற கொன்றையின் நிழலில் வந்து குலாவியுலாவி நிறைந்தனர்; இந்திரனைச் சுசியாக்கிய யோக்கியமான வித்தலத்திற் கொப்புச்சொலவேறெத்தல முளதென்றனர்; மூவுலகத்தாரனை வருந்தேவரும் இந்திரனைப்பெரிதாய்வியந்துகளித்தனர் இந்திரனுந் தேவர்குழூஉக்களு மூவரைத்தரிசித்தனர்; ஆவன் மிகுந்து அவன் மேவியவற்புதத்தை யாவர் அறிவிப்பர்! கொன்றை இலிங்கம் தருசபை வன்னியிவையனைத்தையும் வலஞ்செய்து வியாழனையும் பணிந்து தேவர்சூழ இந்திரன் கொன்றையடியிலமர்ந்தனன். என்று சூதர் சொன்னார்.

முற்றிற்று.

## கச-வது இந்திரன் பூசித்தசருக்கம்.

அசைவற நசையுற வமர்ச்சி பதியுட னத்தல மகிமையெலா,
மிசைபெற சசிபுனை பசுபதி யுரைசெய்வ னித்தல மீதுறிலோர்,
வசையுறு கொடுவினை யிலையிட ரிலைநலம் வரும்வழி யேவநவோர்,
மிசையுற வமுதருள் பவர்நுகர் பவரவண் மேவியெ னமப்பணிவோர். (க)

தோமறு ஞானம டைப்புள ரேய்பவர் தூயசு சீந்திரமென்
றோமுற மந்திர மாகவு ரைப்பவ ரெமதிட மிதுநோக்கித்
தாமுற வந்தனை புரிபவர் போக சமூகமெ லாந்துய்த்தே
நாமுறு நன்கயி லாயாக மக்கென நண்ணுவர் திண்ணமிதே. (உ)

இங்கெம தாலய மாமிடம் வந்தித ழியைவலம் வந்தோர்கட்
கங்கெம தாலய மீய்வது சத்திய மாமுறு கொன்றைநிழற்
றங்கிய நாளுயர் தென்புல வாணர்த மைக்கரு திச்சுருதித்
துங்கர் தமக்கருள் செய்தவர் செய்தவர் சூழ்கதி யெய்துவரே.(ஙு)

வேறு.

பார்த்த லத்தறு பத்துநூற் கோடியாய்ப் பரந்துபா வந்தீர்க்குந்
தீர்த்த மியாவுமித் திரிமுகோ தகத்திடை சேருமத் தீரத்தி
லார்த்த மார்கழித் திங்களி லாடினோர்க் கந்தி தொறுமாடச்
சார்த்து மப்பலன் சாருமத் தலம்பல தலந்தரும் பயனல்கும். ()

அரம டந்தையர் மங்கைய ரமரரிங் கமர்தரு நரர்வானிற்
சுரபி யாவினங் காவினங் கற்பகச் சூழனுன் மறைநீழற்
பிரண வந்தனி லிங்கமக் கொன்றையே பிரமமா தரமான
பரம ஞானமே யித்தல மொப்பதிப் பாரிலெத் தலந்தானே. (௬)

இதழி தன்னையு மயனையு மாலையு மென்னையு மென்பாற்செவ்
விதழி தன்னையு மேய்ந்தமா வாசியி லிருஞ்சிவ நிசிதன்னிற்
றிதித மிற்பதி னொன்றினிற் கிழமையாந் திங்களிற் சிறப்பாகத்
திதித மிற்பெற வலம்வரு வார்க்கியாஞ் சேரிட மளிப்போமே ()

ஞான கானமா மித்தல மகிமையை நவில்பவர் கேட்போர்கேட்
டான கைப்பொரு ளளிப்பவ ரிவர்க்கியா மருங்கதி யளிப்பேமாற்
றுன மியாவுமப் பதியினிற் செயவொன்று தானயு தமதாமென்
றீன மேயிலா வாசவற் கீசனன் றியம்பலு மவன்சொல்வான். (எ)

ஏது மாதவ மியான்செய்தே னய்யநீ யென்னைவந் திளிதாண்டிப்
போது மாபதி மான்மியஞ் சொற்றிடப் போதுமென் றிடப்போகா
தோது மித்தல மான்மிய விரிவெனக் குரையெனப் பரமேச
னீது வாமதே வன்றனைக் கேளுரைத் திடுவன்யா னவனென்றான்

என்ன வேபுகன் றேகின னும்பனு மேகவேந் தனும்வானோர், துன்ன வேதிரி வேணியாம் வாவியிற் றோய்ந்துவே தியர்சூழ்ந்து; மன்ன வேகலிங் கத்தையே வலஞ்செய்து வந்துகோன் மையின் மூலத், தன்னவேதவி னோருறத் தாணுவே யானவேத் தலைவயின் கன்ர. (௯)

சென்று தேவர்கள் குழீஇயவ வையினமர் தேவனே யெனு னுளக், குன்று போலுறை வாமதே வனைக்கரங் கூப்பிமான் மியங்

கேட்ப, நின்று வாழ்த்தியங் கிருந்தனன் கதைசொல நினைந்துபுத் தகங்கையேற், றன்று கேளெனத் தூரணுவை வேண்டியுன் றுரைத்தன னொருவாய்மை. (௰)

இறைவ னின்கதை கேட்பவ ருரைப்பவ ரெனுமிவ ரிருவோர்க்கு, நிறைவு றம்பலன் கொடுப்பது நீகதை நீரினுக் கியலாகக் குறைவ றுந்தநு வெற்றிவ னுற்றிடப் கூற்றுதைத் தவனேயா, னறைவ னென்றுயர் தேத்தினன குரவனு மானேமா முகத்தோனே. (௧௧)

பின்னும் வாழ்த்துதற் குரியரை வாழ்த்தியே பெருகுதீர்த் தமுமூர்த்தி, மன்னும் லிங்கமுங் கொன்றையு மாச்சிரா டம்பெறு வரலாறும், புன்னு மாமது சூதனன் மகிமையும் பகர்ந்துமேல் பாலாக, மன்னு வேள்வியங் கிரிக்குகன் மேன்மையும் வகுத்தனன் வகுப்பாக. (௧௨)

வந்த ருத்திரர் பதினொரு வாகள்பெறு மகிமையு வனமீன்போ தந்த வாலையத் தியல்பையு மற்றுமா தவரிமை யவாவேந்தன், சிந்தை கூர்தரக் கேட்பவ ரமிர்தொடுந் தேன்மழை பொழிந்தாற் போ, லந்த மாதவ னுரைத்தன னிரைத்தன ரலர்மழை யவணெல்லாம். (௧௩)

நாவ தேதுதி செயவிய முழங்கவென் னுதனு கியவாம, தேவ தேவனை வணங்கியே பூசனை செய்துவெண் கரியேற்ற, காவ தாக்கியவ் வனத்தினை வலஞ்செய்வித் தலங்குகொன் றையிற் றுன்றும் பூவ தேமணங் கமழ்சிவ சபைநடுப் புகுந்தனர் புலவோரே. (௧௪)

வாச வனபர மேசனைப் பூசனை வரிசையிற் செயவேண்டி
தேச வன்புசா றேசிகன் றன்னொடு கேர்பெற வினவுற்றுப்
பாச வன்பிறை தீர்ந்தசிந் தையிற்சசி பதிதம னையுன்னத்
தேச வன்புகழ் விச்சுவ கன்மனுங் கிருட்டிணன் பணிகேட்ப. ()

இட்டி நின்றதோர் விச்சுவ கன்மனீ கேளெனை யாள்வார்க்கு
விட்டி லங்குபொ னாலய மியற்றென விடுத்தலு மவன்வான
மட்டு யர்ந்தகோ யிலைச்செய்தக் கோயிலின் மட்டிலுத் தரவாவி
தொட்டி யைந்தகந் தனவனத் தோடுபூஞ் சோலையுஞ் செய்தானல்,

வருண னான்குறு வீதியும் வீதியின் மாடகூ டமுமுந்நூ
றருண யந்தவந் தணர்தமா ளிகையுநீ ளன்னசா லையுமியாவும்
பொருண யந்தவிந் திரபுரி யெனவவண் புரியவிந் திரன்கா ணூஉக்
கருணை தந்துபல் பொருள்களும் விச்சுவ கன்மனுக் களித்தானே.

தாணு நாதனை யறுபத்து நான்குப சாரபூ சனைசெய்யப் (றுகக்
பூணு மாசையால் வெள்விடைக் கொடிமுதற் பொன்செய்தே ரீ
காணு மாநிலங் களிகொளப் புரிந்துதன் கண்களா யிரத்தானு
மேணு லாவிலிங் கத்துமூ வுருவுகண் டேத்தவந் தெதிர்தோன்ற.

கண்டு கண்டுளி தரவுடல் புளகெழக் கரங்கள்சே கரமீதிற் (னூற்
கொண்டு கொண்டுபே ரின்பசீ தளக்கடற் குளித்துளங் களித்தா
பண்டு பண்டுள முனிவரர் ரமரர்பூ பாலரன் பாற்காண
விண்டு விண்டநெய் யழலிடைக் குளித்துமுன் வெவ்வினை யொழி
த்தானெ. (கசு)

வேறு

அவ்விடத் தப்போ துற்றுளோ ரெவரு மண்டர்கோன் றெரு
ண்ட னுதலினுன், வெவ்விடத் திருண்ட கண்டன்மூ வடிவும் வெ
ளிப்படக் கண்டுகண் டுவந்தா, ரெவ்விடத் தவரும் புகழுமிந் திர
னுக் கிரங்கியென் னருளினி னிறையஞ், செவ்விடப் பட்டாய் நி
னக்குவேண் டுவன செப்பெனச் செப்பினன் செம்மல். (உ0)

செம்மலம் புயத்தாள் கைதொழூஉப் பரவித் தீவினை யாவை
யுந் தீர்த்தா, யிம்மல ரிதழி தனையிலிங் கத்தை யெளியனேன்
வலஞ்செயச் செய்தாய், மும்மல மகற்றும் வாமதே வன்பான்
முதற்றல மகிமைகேட் பித்தாய், மெய்ம்மலர் வடிவு காட்டினை யி
னிநான் வேண்டுவ தீண்டுறை குவதே. (உக)

என்னுமன் னவனை நோக்கிநீ கேளென் றியம்புவ னயம்புனை
பவன்சீர், துன்னுமிச் சபைமுந் நூறுவிண் ணவருந் தூயவந்
தணர்களா யென்னைப், பன்னுமர்ச் சனைசெய் திங்கினி திருப்பப்
பைம்பொனூட் டும்பரேத் தெடுப்ப, மன்னுபோ கங்க ணுகர்ந்தி
னி திருத்தி வானகத் தானவிவ் வுகத்தில். (உஉ)

இக்கலி யுகம்போய்த் துவாபர யுகம்வந் தெய்துநாள் விச்சுவ கன்மன், மிக்கவென் றனையர்ச் சனைபுரி குவளவ் வேலையிற் கங்கை மா நதிவந் தொக்கும விலிங்க மூலமுற் றதுதா ளொருமுகத் தாற் புகுந் துரகர், தொக்கவேழ் பிலமும் வழியதாச் சென்று துன்று மங் ககன்றுமுன் றோன்றும். (உரு)

முண்டக விருக்கு மண்டகோ ளகையின் முழுதுமுற் றெழு துபா தாளத், தெண்டக வுறைவோர் குறைதவிர்த் துறைவ தெ வ்வழி யேகுமவ் வழியே, கண்டக மகிழ்ந்திங் கெய்தியங் குளரெங் கழலினை வணங்கவக் கங்கை, மண்டகு மதல நெறியடைந் திந்த வனத்தினின் றகன்றுகீழ்த் திசைபோய். (உச)

ஒருமுகங் கொடுசென் றுவரிபுக் கவணின் றுடனெழுந் தெ ழுவ ரருதிக்குந், திருமுக மாயங் குறையுமக் கங்கை சேருமற் றோர்முகங் கொடுபூந், தருமுக விண்ணுட் டேகுமவ் வழிநீ தா னிமை யவரொடு மிரவில், வருமுகப் பால்வந் தெனைப்பணிந் தே கி வானநா டாளுதி போகி. (உரு)

வேலையின் றுணு தீர்த்தத்தின் மருங்கின் மின்னிதழ்க் கன் னிபொன் னிதழ்ப்பூ, மாலையங் கையிற் கொண் டென்னையே நினைத் தென் மனையளாத் தவம்புரிந் துரையு, மாலையந் தொழுதி யென் முடிக் காட்டு மப்புனல் காட்டுது மதுகா, றேலவிங் குறைதி பின் னருன் பொன்னுட் டேகுதி யென்றன னிறைவன். (உசு)

பின்னரச் சபைக்கே யுரியராய் வகுத்த பெரியர்மூந் நூற்றுவ ரன்னோன், முன்னர்நின் றடியே முற்றுமிங் கமர்வோ முழுதுநீ யருள்செய்வா யெனினு, நன்னரன் புடனின் னகர்புரந் தெமை யென் றுளுமுன் னின்றெவர் புரப்பா, ரன்னரின் னவரென் றரு ளென வதுகேட் டவர்க்குநந் தாணுவொன் றறைவான். (உஎ)

வேறு

நீயி ரிங்குவே தியர்களாய் வேததா னெறிநும்
வாயி ரங்கின்றெம்மையெம் முருவமாய் மருவு
மாயி ரங்கணன் றொழுகின்ற கொன்றையை யருச்சித்
தேயி ருங்கருத் தேயொரு மித்திவ ணென்றும். (உஅ)

இங்கி தன்வட பால்மயேந் திரகிரி யதன்கீழ்த்
தங்கி யென்னயக் கண்ணனர்ச் சிப்பனத் தலத்தி
லங்கி நன்குல வேந்தனு மயனென்போ னளித்த
பொங்கி ளங்குமா ரன்னுள னன்னளன் போல்வான். (௨௯)

ஐந்தை வென்றவா லாமிர்த னெனும்பெய ரண்ண
றந்தை போயபின் றயரத னகற்றவே தனித்து
முந்தை நீத்தது ன்றெனை வென்றனே முன்னிச்
சிந்தை கூர்சகோ தரியொடு வந்தவண் சேர்ந்தான். (௩௰)

சேர்ந்து மாலிடப் பாலெலனைத் தெய்வவே தியரைக்
கூர்ந்த ருச்சனை புரிபவ னவனைநீர் கொடுவந்
தார்ந்த வின்னக ரவன்கணுய்த் திடிலர சாட்சி
நேர்ந்தோர் வெண்குடை நீழலிற் புரப்பனின் னிலத்தை. (௩௧)

ஈது செய்திரீண் டிருத்திர்நன் காகவென் றீச
னோது வாய்மையா ரமிர்தெனச் செவியிலூ டுறவப்
போதவ் வேந்தனைக் கொணருவ மென்மனம் பொருந்திக்
காத னந்தியை விடுத்தனர் துதிசெய்தக் கணத்தில். (௩௨)

சென்று நீடிருப் பாற்கட லெனுநதி தீரத்
தொன்று மாயவ னைத்தியா னஞ்செய்தங் கொளிசேர்
குன்று போன்றுயர் தோன்றலைக் குறுகிநிற் கொணர்வா
னின்று நின்வயின் விடுத்தன னிறைவனென் றியம்ப. (௩௩)

அண்ண லோர்வகை யநுமதித் தவனிணை யடிதாழ்ந்
தெண்ண மவ்வண்ண மென்னிலஃ தாகவென் றீசன்
கண்ண னென்றிவர் தமைத்தொழ வவர்மனங் களித்து
வண்ண நீடொளி வாளுடன் கேடகம் வழங்கி. (௩௪)

அரசு செய்குவா னினிதவ ணேகென வவனு
முரைசெய் தங்கையோ டங்கவற் றெழுதெழுந் துலகோர்
பரசு நந்திபின் சென்றுபூங் கொன்றையாம் பரனைத்
திரைசெய் வாவியைத் தாணுவைத் தெரிசனை செய்தான். (௩௫)

இறைவ னீண்டடைந் தனனென முனிவர ரியற்ற
மறைகொள் வேதிய ராதியோ ரெதிர்கொடு வரிசை
குறைவு றாதுசெய் தெமையெலா மநுநெறி கூறி
முறைவ மாதுகாத் தருளென வியந்தனன் முழுதும். (ங௬)

உலகின் மன்னுயிர்க் கின்னுயி ரன்னவ னுடனுற்
றிலகு தங்கையை யங்கொரு வேதவித் திவனென்
றலகில் கீர்த்தியோ ரந்தணன் வேட்பவாங் களித்துத்
திலக மன்னவ டருமரு கர்களொடுஞ் சிறந்தே. (ங௭)

இன்ன வாகவன் னகர்புரந் தனனவ னிருப்ப
வன்ன காலம்வெள் ளானைசெவ் வானோர் பவனைத்
தன்ன வாவொடு மிரந்துநீ யென்முனஞ் சாரென்
றுன்ன வானிறைக் கருளுநந் தாணுவொன் றுரைக்கும். (ங௮)

தான ஞானவித் தலத்திற்கு மேற்குயோ சனையொன்
றூன வெல்லையி லாதிகே சவனுள னவனே
மான ருத்திர ராகிய பதினொரு வருஞ்சூழ்ந்
தீன மில்குணத் தாற்றவர் போற்றவீற் றிருந்தான். (ங௯)

தூய ருத்திரர் சூழ்தர நடுவில்வாழ் சோதி
மாய னைப்பெருஞ் சக்கர நதிவலம் வருமா
லாய வன்னதி கங்கையை நிகர்க்குமங் கதனிற்
போயோர் நாட்படிந் தோர்களே மனிதரிற் புனிதர். (சய)

வருக்கை வாழைமாத் தாழைபல் பழங்கொடு வானோ
ரிருக்கை யெய்தலன் னதியிரு பால்கரத் தேந்தித்
தருக்க னிந்ததோர் கனியதிக் கனிக்குநேர் தகாதென்
றுருக்கொள் செம்பொன்னுட் டவர்கொள நீட்டல்போன் றுல
வும். (சக)

தீதி லாதமெஞ் ஞானிக ளுளமெனத் தெளிந்து
சோதி நாண்மலர் கலைத்திரைக் கரங்களாற் றூவிக்
கோதி லாப்பல கனிகணீ வேதனங் கொடுத்தே
யாதி கேசவன் றனைவலஞ் செய்யும்வாட் டாறு. (சஉ)

அந்த மாநதி தனிற்படிந் தாதிகே சவனைச்
சந்த மாமல ரானருச் சனைசெயுஞ் சமையத்
திந்த மாநிலந் தொழுவவ ணெய்துவ னென்னா
முந்த மா கரிக் கலறந்தகன் றனன்மறை முதல்வன். (சங)

அன்ன வாறுகேட் டவ்வயி ராபத மமலன்
சொன்ன வாறருந் தவஞ்செயப் புகுந்ததாற் றாயோ
ருன்ன வாறுமா முகன்கதை யினிதுள துமக்கிங்
கின்ன வாறெனச் சொல்வதே பெரிதரி தெவர்க்கும். (சச)

கந்த வேள்செயல் காந்தமெக் காந்தத்தோர் காண்டத்
தந்த மேசுசிந் திரத்தல மகிமையங் கதனிற்
சந்த வேலன்வேள் விக்கிரிக் கதையவன் றனதை
முந்த வோதிய தென்றனன் சூதமா முனிவன். (சரு)

முற்றிற்று. ஆக திருவிருத்தம் சருசு.

## ௰ச-வது இந்திரன் பூசித்த சருக்கம்.

அன்போடசை வறவிருக்கு மிந்திரனுடன் சசிபுனைந்த பசுபதி அத்தல மகிமை யெல்லாம் அருளிச்செய்யலாயினர். இத்தலத்தடையிற் பழிபொருந்திய தீவினை இடறு இவையில்லை; நல்வினை வழிவருபவரும் தேவாமுதளிப்பவரும் அஃதுண்பவரும் அங்கே சென்றெமைப்பணிபவரும் ஞானதீர்த்தமாடுபவரும் சுசீந்திர மென்ற தையேமந்திரமாயுரைப்பவரும் எமது ஸ்தல நோக்கி நமஸ்கரிப்பவரும் போகசமூகமனைத்தும் புசித்து எமது கைலையைத்தமதெனவடைவர். எமதாலயத்தில் வந்து இதழியைவலஞ்செய்பவர்க்கு கைலையையளிப்பது சத்தியம்; கொன்றை நிழலிற்றங்கித் தென்புலவாணர் கடன்செலுத்துவோர் கதியெய்துவர்; உலகத்திலுள்ள வறுபத்துநாற்கோடி தீர்த்தங்களுந்திரிமூகோத கத்திடைசேரும், மார்கழி மாதத்திலதிலாடினோர் சகல தீர்த்தத்திலுமாடின பலனடைவர்; அத்தலமற்றைத்தலந்தரும் பலன்றரும். தேவஸ்திரிகண்மங்கையர் தேவர்நரர் காமதேனு ஆவினம் கற்பகச்சோலை காவினம் நான்மறை நீழல்கொன்றை நிழல் பிரணவலிங்கம் பிரமமானதான் பிரமஞானமித்தலம் ஆதலானெத்தலமிதற்கொப்பது! கொன்றை அயன் அரி உமை என்னை, அமாவாசி சிவசிசி ஏகாதசி சோமவாரம் இந்தச்சுதினங்களில் பிரதக்கணஞ்செய்வோர்க் கியாங்கைலையையளிப்பேம்; இத்தல மகிமையையுரைப்போர் கேட்போர் பொருளளிப்போர் இவர்க்கியாங்கதியளிப்பேம். அப்பதியிற் செய்யுந்தானம் ஒவ்வொன்

றும் அயுதமாம்; என்று வாசவற்கீசனருளினர். இதற்கிந்திரன் ஐய! என்
னை வந்தாண்டு இத்தலமகிமையையருளயான் என்ன மாதவஞ்செய்தேன்!
அம்மகிமையின்னம் விரித்தருள்வா யென்றுகூற; யானுனவாம தேவனைக்கே
ள் உரைப்பானென்றருளி மறைந்தனன். வலாரிவானோர் செருங்கத்திரி
வேணியின் மூழ்கி, இலிங்கத்தை வலஞ்செய்து கொன்றையடியில் வேதவி
ண்ணோர் சூழஞானக் குன்றுபோலவிளங்கும் வாமதேவனைக்கைகூப்பி, மா
ன்மியங்கேட்க வந்திருந்தனன். முனிபுத்தகங்கையிலெடுத்துக்கேளென்
று தாணுவைப்பிரார்த்தித்து, இறைவன் கதை கேட்பவர் உரைப்பவர் இரு
வோர்க்கும் பலனளிப்பவர் யாவரும் நீயே! என் குறைவறத்தநுவேற்று இ
வணுற்றிடில் அறைகுவனென்று அருளினமையாற், கூற்றுதைத்தவனே!
யானறைகுவனென்றேத்தி, ஆனைமுகத்தனையும் மற்றைத்தேவர்களையும் வண
ங்கி, தீர்த்தம் மூர்த்தி இலிங்கம் கொன்றை ஆச்சிராமம் இவற்றின் வரலா
றும், மதுசூதனன் வேள்விமலைக்குகன் இவர்மகிமையும் மற்றுள்ளமகிமை
யும், மழைபொழிந்தாற்போலுரைத்தனன். உம்பர் அலர்மழையானிரைத்
தனர்; அமரர்கோன் உடலிளக நாவினல் வாமதேவனைத்துதிசெய்து, ஈச
னைவணங்கிப்பூசனைசெய்து அவ்வனத்தை வலம் வந்து சிவசபையிற் புகுந்
து பரமேசனை யருச்சிக்கவேண்டித் தேசிகனோடும் விசுவகன்மாவை நினைக்
க, அவன் வந்து என்னையழைத்த பணிஎன்னென; என்னை யாழ்வாற்குப்
பொன்னாலையமியற்றென்றுகூற; அவன்வானளாவியகோயிலும் அதன் வ
டக்கு வாவியும் நந்தவனமும் சோலையும் பிர்ம க்ஷத்திரிய வைசிய சூத்திர
ர் வீதியும், வீதியின் மாடகூடமும் மூந்நூற்றந்தணர் மாளிகையும் அன்ன
சாலையும் மற்றனைத்தும் இந்திரபுரி யென்னவமைத்தான். அதைக் கண்டு
களித்துப் பலபொருளுதவினன். அப்பால் தாணுவை யறுபத்துநான்குபசார
ப்பூசைசெய்ய வாசையாய்த்துவஜாரோகணமுதல் இரதாரூடம் வரையு
ள்ள விழாவியற்றத், தாணுதன் மூவுருவோடு காக்ஷிகொடுத்தருளத்; தன்
கண்ணாயிரத்தானுமானந்த பாஷ்பம் பெருகவுடலபுளகிப்பக்கரஞ்சிரமே
ற் கூப்பிப்பேரின்பக்கடலிற் குளித்தார்; அப்போதவ்விடத்துள்ளாரெவ
ரும் அண்டர்கோன்றெண்டனுதலினனீலகண்டன் மூவடிவும் வெளிப்பட
தரிசித்து வந்தார். முன்முனிவரமரர் முதலியோர் காணவழனெய்யிற் கு
ளித்து வெய்யவினைதீர்த்தவன், எவ்விடத்தவரும் புகழ இந்திரனுக்கிரங்கி
யென்னருளினின்னிருதயஞ் சுத்தமாய் விடப்பட்டாய், ஆதலின் வேண்டு
வகேளென்றீசனருள; இந்திரன் அயனாற்றுதிக்கப்பட்ட பரமனே! இத்தீ
வினையாவையுந் தீர்த்தவனே! கொன்றையையும் இலிங்கத்தையும் வலஞ்செ
ய்வித்தவனே! வாமதேவனுன் மூர்த்தி மகிமை ஸ்தல மகிமை கேட்பித்தவ
னே! சத்தியசிற்கன வடிவைத்தரிசிப்பித்தவனே! யான் வேண்டுவதீண்டு
றைகுவதேயென்றான். அவனை நோக்கி இச்சையையின் மூந்நூறு தேவர்
கள் அந்தணரா யென்னைப்பூசித்திங்கிருப்பவும் தேவர்களைத்தவும் நிலைபெ
ற்றபோகம் புசித்திங்கிருத்தி, இக்கலியுகம் போய்த்துவாபரயுகத்தில் விசுவ

கன் மாவெனைப்பூசிப்பான், அக்காலையின் மூன்று முகத்தோடு கங்காநதியானது அவ்விலிங்க மூலத்திற்றோன்றி, ஒரு முகத்தாலெழுந்து வாரவழியாய் நாகலோகஞ்சென்று அங்குறைவோர் குறைதவிர்த்தெம்மைத் தொழப்பரவியும்; மற்றொருமுகத்தான் முண்டகனிருக்கும் அண்டகோளகை மட்டும்போய் அங்குள்ளாரெமைத்தொழப்பரவியும், அதன் வழி இமையவரோடும் எனைப்பணிந்தேகிவான ஈாடாளுதி, எனக்கபிடேகஞ்செய்யுந் தீர்த்தங் காட்டுதும் அது வரையுமிங்குறை நீ பின்னர் நின் பொன்னுடாளுதி என்றருளினார். பின்னர் அச்சபைக்குரியரான மூந்நூற்றுவர் வந்து தொழுது அடியே மிங்கமர்வோம்; முற்றநீ யருள்வாயெனினும் அன்போடுகூட விந்தகர் புரந்து எமையென்னுளும் புரப்ப வரியாவர் அருள்வாயென; நீயிரிங்கு வேதியராய் வேதநூனெறிவழுவாது எம்மையுங் கொன்றையையுமருச்சிப்பீர், இதன் வடபால் மயேந்திரகிரியின் கீழ்த்திசையிற் கண்ணன் எனையருச்சிப்பான் அத்தலத்தில், சூரியகுலத்தில் வந்த மயனென்னு மரயன் பெற்ற நளனுக்கொப்பான வாலாமிர்தனென்னும் பெயரான் புலனைந்தை வென்றவன் தன்றந்தை போயபின் தயரதனவனையகற்ற, அவன் பழமையை நீத்தது நன்றென்று என்னையே சிந்தித்துத் தன்மேலிரங்கிய சகோதரியோடும், இவண் வந்து என்னையும் வேதியரையும் அருச்சிப்பான் அவனைக் கொடுவந்து இந்நாட்டையளிக்கில் அவன் ஒரு குடை நிழற் கண்ணுள்வான். இது செய்து இங்கிருப்பீராக வென்றருள; அது கேட்டு அவ்வேந்தனைக்கொணர்வேமென் மனம் பொருந்தி நந்தியை விடுத்தனர் அக்கணத்திற்சென்று திருப்பாற் கடலென்னுர் தீரத்தெழுந்தருளியிருக்கு மாயவனைத் தியானம்பண்ணி, மலைக்கொப்பான அவ்வரசனை யடுத்து உன்னைக்கூட்டி வரும்படி யென்னை விடுத்தனன் என்று சொல்ல; சிறியேனையும் ஒருபொருளாகக்கொண்டதோ! வென்று பரசிவத்தின் திருவடிதொழுது அதன் கருத்தெவ்வண்ண மவ்வண்ணமாகுகவென்று ஈசன் கண்ணனிவரைத் தொழ அவர் திருவுளங்கூர்ந்து வாளுங்கேடகமுங் கொடுத்து அவ்விடத்திற் போயரசாக்ஷிசெய்வாயென்றநுப்ப; அவரைத்தொழுதெழுந்து உலகோர்போற்ற நந்திபின்சென்று, கொன்றையாம் பரனை வாவியைத் தாணுவைத்தரிசித்தான். அரையன் இங்கு வந்தனனென்று முனிவர் மறையவர் முதலியோர் எதிர் கொண்டு வந்து வரிசைசெய்து, எமையெலாமறநெறி முறைவழுவாது காத்தருளெனச், சந்தோஷித்து மனுனுயிர்க் கின்னுயிரானவவன்றன்மங்கையை வேதவிர்த்தியார்த்தியாகிய வோரந்தணன் வேட்பக்கொடுத்து, அவள்கட்டுற்பவிக்கு மருகரோடுஞ் சிறப்பாக வந்தகரை யரசாக்ஷிசெய்திருந்தனன். அக்காலத்தில் வெள்ளானை செவ்வானை யொத்தவனைக் காக்ஷிகொடுத்தருள்வாயென்றனம்பிற்றுதிப்ப, இறைவன் இத்தலத்திற்கு மேற்காக வொருயோசனை தூரத்திற் பதினொருருத்திரர் சூழத் தவர்பொற்றக கேசவன் வீற்றிருக்கின்றான்; அவனைச் சக்கரநதி வலம் வரும்; அது கங்கைக்குச்சமானமாம்; அதிலொரு நாளேனும் படிந்தவரே மனிதரிற் புனி

தர்; அந்த வட்டாற்றிற் படிந்து கேசவனை யருச்சிக்குஞ் சமயத்திலிவ்வுலக த்தொழ அவ்விடம் வருவேனென்று கரிக்கறைந்து மறைந்தனன். அது கேட்டு ஐராவதஞ்சொன்ன வாறருந்தவஞ் செய்யப்புகுந்தது. ஏனைமிசார ண்ணிய வாசிகளே! இனி ஆறுமுகன் கதையுளது அதை யின்ன பிரகாரமெ ன்று சொல்வது அரியபெரியதாம். அக்கந்தவேள் சரிதத்தைக் காந்தத்தி லோர்காண்டத்திற் சுசீந்திர மகிமையில் வேள்வி மலைக்கதையைச் சிவன் முன்னருளினன். என்று சூதர் சொன்னார்.

முற்றிற்று.

## ௰௫-வது வேள்விமலைச் சருக்கம்.

அன்ன தாயினும் வேள்வியங் கிரித்திற னனைத்து
முன்ன தாகயான் மொழுகு துமக் குரைத்ததன் முறைமை
பின்ன தாகயான் விரித்துணர்த் துவனெனப் பேச
வின்ன தாமென வம்முனி வரர்க்கவ னிசைப்பான். (க)

அன்று கொன்றைமூ லத்தில்வா சவன்றனி யசுவ
நின்று மாதவம் புரியநம் பரமனு நினைந்து
துன்று நான்முகன் வடிவமாய்ப் பரியின்முன் றோன்றி
நன்று நின்செய லென்றதற் கின்னண நவில்வான். (உ)

ஏர கமெனும் வேள்வியங் கிரியது விதன்பாற்
சூர கந்தனை வேல்கொடு குடைந்ததோர் தோன்றல்
கார கம்பெறு நறுங்குழல் வல்லியைக் கலந்தே
சீர கம்பெற நின்றன னவன்சதா சிவனே. (ங)

வேறு

விந்தவெற் பினிற்சுரர் வியப்ப மான்வயிற்
றந்தமான் மணிதனத் தவத ரித்தென
வந்தவல் லியைத்திரு மணஞ்செ யக்கொணர்ந்
திந்தவேள் வியங்கிரிக் கெய்தும் போதினில். (ச)

தேவரு முனிவருஞ் சித்த சாரணர்
யாவரும் வித்தியா தரரு மேந்தெழின்
மூவரும் வந்தவண் முந்தி னொரெனி
லோர்வரு மக்கிரிக் கொப்பென் சொல்வதே. (ரு)

சோதிமா கம்மணி விளக்குஞ் சூழ்ந்தொளிர்
சோதிமா மரந்தரு சுடரும் தெய்வதச்
சோதிமார் மெய்யொளிப் பிழம்புந் தோமிலாச்
சோதிமா மயமெனத் தோற்று மக்கிரி. (சு)

வானுளோர் சொரிமலர் மழையிற் றண்ணிறுங்
கானுளார் மலர்மழை பொழியக் காரெனத்
தானுளாந் துந்துமி முழக்கிற் றண்டலைத்
தேனுளா மருவியின் றிரளங் காக்குமே. (எ)

வேறு

நாதத் தும்புரு நாரத கீதமு நடுவே
கீதப் பூவையுங் கிளிகளுங் கீர்த்தனங் கிளக்கும்
போதித் தேவரம் பையர்நடம் புரியுமப் பொழுதே
காதற் றோகைமா மயிலினத் தாடலுங் கலக்கும். (அ)

ஈசன் மாலயன் றனித்தனி வீற்றுவீற் றிருப்ப
வாச வன்முதற் றேவரு மவணவண் வதிய
நேச வைந்தரு சுரபிசிந் தாமணி நிதியம்
பாச வாகுதித் திரவியம் யாவையும் பரப்ப. (கூ)

உலகின் மங்கள முகிழ்த்தமெண் வசுக்கடேர்ந் துரைப்ப
விலகு நான்முகன் மணவினை முறறச்சடங் கியற்ற
வலகில் வானவ ரியக்கர்கின் னரர்கள்கொண் டாடத்
திலக வானுதன் முனிவர்பன் னியர்குழாஞ் சிறப்ப. (ய)

பொருவி னுட்களுங் கோட்களுஞ் சுபங்களாய்ப் பொருந்த
வுருவின் மிக்கவல் லியையமணக் கோலஞ்செய் துவந்து
திருவும் வாணியு மளவளாய்க் கொண்டயன் செய்யுங்
கரும வேள்விமுன் னுய்த்தனர் மெய்த்தவர் காண்க. (கக)

இருவர் தம்மையுந் தமனியப் பீடமீ திருத்தி
யொருவ னுன்முகன் மங்கல விதிச்சடங் குளூற்றித்
திருவ ரேசனுங் குகன்கையில் வல்லிகை சேர்த்தி
மருவு நீர்விடுத் தளித்தனன் மறையினுல் வாழ்த்தி. (கஉ)

றூந்தை யாகவன் னியவலம் வந்ததி மோகத்
தந்தை தாய்பதந் தொழப்பரிந் திருகையாற் றழீஇக்கொண்
டெந்தை வாவன்னே வாவென வுச்சிமோந் தெடுத்துச்
சிந்தை கூர்ந்தள வளவியுண் மகிழ்ந்ததி சயிப்ப. (கங)

திகந்த மெங்கணு மங்கல வாழ்த்தொலி திகழச்
சுகந்த வாசனை யண்டரண டம்மெலாந் துவள
வகந்தை தீர்முனி வோர்துதி செயமண வறைக்கு
ளுகந்து மெல்லணை மீதுவீற் றிருந்தன ருவந்தே. (சச)

ஆதி யாம்பிர மமும்பிர மத்தைவிட் டகலாச்
சோதி யாம்பரா பரையும்வீற் றிருந்தெனத் தோற்று
நீதி யாந்திருக் காட்சிகண் டுவந்தனர் நிவந்த
சாதி யாமிமை யவருமூ வருமருந் தவரும். (சரு)

வேறு

இன்னிய மிசைத்திடு மிசைப்பு மாதவப்
பன்னியர் மணவியல் பாட்டும் வேட்டுவக்
கன்னியர் குரவையுங் கூத்துங் கார்க்குலந்
துன்னிய மணமலைச் சூழ லெங்குமே. (கசா)

இந்துவு மிரவியு மிமைப்பி லார்களும்
வந்துள யாவுமுண் மகிழ மாநிலச்
செந்துவும் பழம்பகை தீர்ந்து சேர்தர
முந்துதன் மத்திரு முறைகொண் டாடவே. (கஎ)

திருமணஞ் செய்தனு தினமுஞ் செல்வமே
தருமணக் கோலத்தோ டுறையுஞ் சண்முகக்
குருமணம் புரிதலிற் குவலை யம்மெலாம்
பெருமண மலையெனப் பெயர்பெற் றோங்குமால். (கஅ)

அம்மலைப் பெருமையா ரறிவர் சண்முகச்
செம்மலைக் கலந்துநித் தியமுஞ் சேவிப்போர்
தம்மலைப் படர்ந்துசிந் தனையிற் றங்கிய
விம்மலைத் துரந்ததன் விருப்பை நல்குமே. (ககூ)

அந்தவேள் விமலையி லடைந்து சண்முகக்
கந்தவேள் காட்சியைக் கண்க ளான்முகந்
தெந்தவே ளையுமுவந் திறைஞ்சு வோர்க்குளந்
தந்தவேட் கையின்பயன் சாருஞ் சத்தியம். (உ௰)

இந்தமால் வரையினின் றிடையில் வெற்பெலா
முந்தவே கடந்ததி மோக வல்லியோ
டிந்தவேள் விக்கிரிக் கெய்தி யேமணந்
தந்ததா லிம்மலை தனக்கொப் பெம்மலை. (உக)

வேறு

நாடின குகன்சிந் திக்க நண்ணின கணேச னஞ்சுற்
றோடின வல்லி யின்னோர் மூவரு மொருமித் தன்னுட்
கூடின தலமுக் கூடல் குலவரு வியுமாந் தீர்த்தந்
தாடின பேருக் குள்ளத் தவலந்தள் ளாடிப் போமே. (உஉ)

அத்தலத் திற்கு மேலோ ரதலபா தலத்திற் செல்லு
மெய்த்தலப் பிலமாங் கூவன் மேவுவேற் குமரன்கஞ்சக்
கைத்தலக் கொடியைக் காணுங் காட்சிக ண்ணுடி யின்பந்
துய்த்தலிற் றிகழ்கண் ணுடிச் சோலையென் றுளதோர் சோலை.

சோலைக ளனந்த மந்தச் சோலைகட் கயலே வேடர்
சாலைக ளனந்த மந்தச் சாலைகட் கருகே மேக
மாலைக ளனந்த மேக மாலைகள் போலங்கங் கேழ்
வேலைகள் போனின் றார்க்கும் வேழங்க ளனந்த மங்கண். (உச)

வேறு

பாங்க ரெங்கணுஞ் சாந்தவா ளிடங்களெப் பாலுந்
தாங்க ரும்பெரும் பூதவே தாளத்தின் றனங்
கோங்க ரும்பிவர் சாரனற் குருபரன் கோயி
லாங்க தற்குமேற் கதன்கிழக் கீசரா லையங்கள். (உரு)

வேறு

ஆகையா லம்மலைக் கேசென் றண்ணலை
யோகையா லருச்சனை புரிதி யுன்மனச்

சேகையா னதுதிர்த் துறுதி செய்வன்வல்
வாகையா னென்றய னுரைப்ப வாம்பரி. (உசு)

வேதனை நோக்கியான் விலங்கு வேலுடைப்
போதனை யருச்சனை புரிவ தோவென
நாதனுஞ் சபைமுந்நூற் றுவர்க்கு நான்மறை
நீதனுஞ் சுனந்தனை நினைக்க வந்தனன். (உஎ)

வந்தனை சுனந்தவிவ் வாம்ப ரிக்குநீ
யந்தநற் றேசிக னாகி வேலுடைக்
கந்தனை யருச்சனை புரியுங் கன்மங்கள்
சிந்தனை தெளிவுறச் செப்பச் செப்பினன் (உஅ)

வேறு- வாய்ந்த வேள்விம லையினிற் சென்றுவேற்
சேர்ந்தன் றாளிலர்ச் சித்துச் செழுமறை
யாய்ந்த கந்தன சுவநி னைந்தவா
றீய்ந்த பின்னரிங் கெய்தெனப் போயினன். (உகூ)

போய பின்னர்கல் லியாணப் பொருப்பினிற்
றாய மாவுஞ் சுனந்தனுஞ் சென்றிறை
யாய வேளைய ருச்சித்த சுவத்தினுக்
கேய நன்கருள் செய்ய விருவரும். (௩0)

உன்னு ஞானவ னத்திலன் றேருற
மின்னு மோரிலை வேலனி ருப்பிட
மன்னும் வாசிபு ரம்பிர மாபுர
மென்னும் பேர்பெற்ற திவ்வுல கேத்தவே. (௩௧)

வேறு.

செகமகிழ் கிரேதா யுகத்தகத் தியன்பூ சித்தனன் குகனையவ்வுகத்திற், சுகமருள் கமலை பூசனை புரிந்தா வெபர யுகத்தினிற் சோமன், மகவினைக் கருதிக் கோதைய மெனுமோர் மடுவினைப் படிந்தருச் சனைசெய், தகமகிழ்ந் தனனிக் கலியுகத் தளகைக் கதிபன்வந் தனைசெய்தங் கமர்ந்தான். (௩௨)

வானவர் முனிவ ரந்தண ராசர் வணிகராங் கவர்மட மாத (ணங்
ரானவ ரபிடே கம்நிவே தனம்பொன் னணிமணி யாடையா பர
தானமே முதலீய்ந் தருச்சனை புரிந்து சந்ததம் வந்தனை செயமெய்
ஞானவை பவமா தியவளமி யாவு நல்குவன் முருகனென் னுளும்.

முறுவன்முல் லையதாம் வல்லியை மணந்த முருகனு மங்கள
முருகன், கிறுபையோ டந்த முருகன்வீற் றிருக்குங் கிரியுமங்
களகிரி யுதன்பா, லுறுடவ ரெவரு மங்கள ரூப முன்னுகா ரியமு
மங் களமாய்ப், பெறுடவ ரவர்மங் களபுர மெனும்பேர் பெற்ற
தென் றருந்தவர்க் குரைத்தான். (௩௪)

முற்றிற்று. ஆகத் திருவிருத்தம் சகூ௰.

## ௰௫-வது வேள்விமலைச் சருக்கம்.

அப்படியானாலும் வேள்விமலையின் வரலாறனைத்து முன்னரியாந்தொ குத்துரைத்தனம்; இன்னமுமதை விரித்துரைப்பாமென்று அம்முனிவர்க்குச்சூதர் சொல்வார். அன்று கொன்றையடியில் வாசவன் குதிரை நின்று தவம்புரிய, நம்பரன்றிருவுள்ளத் தடைத்து நின்கிரியை நன்றென்று அதற் கியைந்து இப்படி யென்று சொல்வான். ஏரகமென்னும் வேள்வியங்கிரியாகிய விதன்பாற் சூரன்மார்பை வேல்கொண்டு குடைந்த வீரன் வாசனை பொருந்திய கூந்தலாபாரத்தையுடைய வல்லியைக்கலந்து அகமகிழநின்ற னன் அவன் சதாசிவனும். சுரர் வியப்பவிந்தகிரியின் மான்வயிற்றவதரித்து வந்த வல்லியைத் திருமணஞ்செயக்கொணர்ந்து இந்த வேள்விமலைக்கெய்தும் போதிற், றேவர்முனிவர் சித்தர் சாரணர் வித்தியாதரர் ஈசன்மால் அயன் இவர்தனித்தனி வீற்றிருப்ப, வாசவன் முதற்றேவரும் அங்கங்கே யிருப்ப, ஐந்தருசுரபிசிந்தாமணி நிறைந்திருப்பத், தும்புருநாரதர் கீதம்பாட, தேவரம்பையர் நடனமாட, அஷ்டவசுக்கள் மங்கலமுகுர்த்தமுரைப்ப, ஆகுதித்திரவிய மியாவையும் பரப்பி நான்முகன் மணச்சடங்கியற்ற, அளவற்ற தேவரியக்கர் கின்னரர் கொண்டாட, முனிபன்னியர் குழாஞ்சிறப்ப, நாள்களுங் கோள்களுஞ் சுபங்களாய்ப்பொருந்த, உருவின்மிக்க வல்லியை மணக்கோலஞ்செய்து திருவும் வாணியும் அளவளாவிக்கொண்டு அயன் செய்யும் வேள்வி முன்மெய்த்தவர்காணக் கொடுபோய் விட்டனர். இருவரையும் பொற்பீடத்திருத்தி மங்கலச்சடங்கியற்றிக், குகன்கையில் வல்லிகையைச்சேர்த்து மறையினால் வாழ்த்தித் தாரைவார்த்தளித்தனன். ஓமாக்கினியை வலம்வந்து தந்தை தாய் பதந்தொழ, ஆசையாலிருகையாற் றழீஇக்கொண்டு அப்பனேவா! அம்மையேவா! வென்றுச்சிமோந்து எடு

த்துச் சிந்தைகூர்ந்து அளவளாவியுண்மகிழ்ந்து அதிசயிப்ப; திகாந்தமெங்கு மங்கலவாழ்த்தொலிதிகழ; சுகந்தவாசனை யண்டாண்டமெல்லாந்துவள; முனிவர் துதிப்ப மணவறைக்குள் உவந்து மெல்லணைமீது வீற்றிருந்தார். பிரமமும் அதற்கபினமாம்பரையும் வீற்றிருந்தது போலாம். இக்காட்சி கண்டியாவரும் மகிழ்ந்தார். பாடுவார்பாடலினொலியும் மாதவப்பன்னியர்மணவியற் பாட்டொலியும் குறத்தியர் குரவை யொலியுமாக வம்மலையைச்சூழ்ந்தன. சந்திராதித்தர் வாயுமற்றுள்ள செந்துகளிவை தப்பழம்பகை தீர்ந்துமுறைகொண்டாடின. அம்மலையிற் சண்முகன் மணஞ்செய்தகாரணத்தாற் பெருமணமலையென்று உலகம் பேசின. அம்மலையின் பெருமையை யாவரறிகுவார்! அதிற்சென்று ஷண்முகனை நித்தியமுஞ்சேவிப்போர் சூழ்ந்ததுயர்நீந்துந் தாம் விரும்பியதடைவார். விந்தகிரிக்கிடையிலுள்ள மலையெலாங்கடந்து வல்லியை மணந்தகாட்சியளித்த விந்தவேள்விமலைக் கெந்தமலை நிகர்! கந்தன் கணேசன் வல்லி இம்மூவருங்கூடின தலமுக்கூடலாம். அதில் வராநின்ற வருவியாம் தீர்த்தத்திலாடினோர்க்குத் துன்பந்தள்ளாடிப்போம். அதற்கு மேல் புரம் பாதலத்துக்கேகும்படியாயுள்ள ஒருகூபமுண்டு, குமரன் கையிற்றரித்திராநின்ற கொடியைச்சாணுங் காட்சியாற் சன்னுடிச்சோலை யென்றொருசோலையுண்டு, சோலைகளனந்தம் வேடர் சாலைகளனந்தம் மேகமாலைகளனந்தம் சமுத்திரம்போனின்றார்க்கும் வேழங்களனந்தம் பக்கமெங்கணுஞ்சாத்தா பூதவேதாளம் இவரதிடமும், அதன்மேற்குக் குருபரன்கோயிலு, மதன்கிழக்கிலீசராலயமுமுளது; ஆகையாலம்மலைசென்று அண்ணலையருச்சனைபுரிதி, உன் மனவைரந் தீர்த்து உறுதிசெய்வன் வேலையும்வாகையையுந்தரித்தவன் என்று அயனுரைப்பக்; குதிரைபிரமனை நோக்கி யான்மிருகம் வேலனை யெவ்வாறருச்சனை புரிவனென; நாதனு முந்நூற்றவர்க்காசானான சனந்தனை நினைக்கவந்தனன். அவனைநோக்கி இவ்வாசிக்குத் தேசிகனாகி வேலனை யருச்சனைசெய்யும் விதியனைத்துந் தெளிவுறச்செப்பென்று செப்பினான். பரியை நீ வேள்விமலையிற்போய்ச்சேர்ந்தன்றனை யருச்சித்து அவனருள்கூர்ந்த பின்னிங்கெய்தென்று அருளிப்போயினான். பின்னர் கலியாண மலையிற் சனந்தன் சொன்னபடி யருச்சிக்கவப்பரிக்குக் கார்த்திகேயனருளினான். அந்த ஞானவனத்திற் புரவியும் பிரமனுங்கூடிய காரணத்தால் வாசிபுரமென்றும் பிரமாபுரமென்றும் பெயராம். திரேதாயுகத்தில் அகத்தியன் கமலை இவர் வேலனைப்பூசித்தனர்; துவாபரத்திற் சோமன் மகவினை விரும்பிக்கோதய தீர்த்தத்தின் மூழ்கி யருச்சித்தான்; கலியுகத்திற் குபேரன் பூசித்தங்கமர்ந்தான். தேவர் முனிவர் அந்தணர் அரையர் வணிகர் இவர்மாதர் இவர்கள் அபிடேக நிவேதனத்துடனும் பொன்மணி அணி ஆடைமுதலிய தானத்துடனும் அருச்சனைபுரிய முருகனருளால் ஞானவைபவமாதியவளம் யாவு நல்குவன். முருகனுக்கு மங்களம் அவன் 'வீற்றிருக்கும் வேள்விமலைக்கு

மங்களம் அதினிடை வசிப்பவரெவர்க்கு மங்களம் அவர் முயலுங்காரியமு மங்களம் இப்படி மங்களமே பெறுதலான் மங்கள புரமென்றும் பேர் பெற்றது. என்று சூதரருந்தவர்க்கறைந்தார்.

முற்றிற்று.

## ௰௬-வது கங்கையுற்பத்திச் சருக்கம்.

இசைத்த சூதனை நோக்கிமா தவரினி தினிதென்
றசைத்த சென்னியா ரின்னமுங் கேண்மினென் றறைவான்
பசைத்த சிந்தைநான் முகன்முத லுகத்தவன் பதியின்
மிசைத்த முங்கெரி வேள்வியொன் றியற்றினன் விருப்பான். (௧)

வரத்தின் மிக்கதன் னகர்த்தடந் தாமரை மலரா
யிரத்தி லொவ்வொரு செவ்வித மெடுத்தெடுத் தெரியிற்
றிரத்தி லாகுதி செய்யவோ ராயிரஞ் சிறுவ
ருரத்தி லெய்தின ரெய்தலும் வாணியோ டுரைப்பான். (௨)

இந்த மைந்தரை நின்முலைப் பாலளித் தெழிலே
தந்த மைந்துற வளர்க்குதி யெனவவ டானே
யந்த மைந்தரை யவ்வணம் வளர்ப்பவன் னவர்சீர்
வந்த மைந்தராய்க் கலைவளர் மதியென வளர்வார். (௩)

கலைய னுண்முலைப் பாலமு தருந்திலெக் கலையுந்
தொலைவி லாதுற லரிதரோ பெரிதினஞ் சுதரா
நிலையி னூர்சௌ ளம்முத லயன்செய லிரம்பி
மலையி னூர்நிதி வணிகரா யணிபெற வளர்நாள். (௪)

கண்டு வேதனும் வாணியு மகிழ்ந்தவர் கலப்ப
மண்டு சீரள கைக்கிறை மகந்தர வந்தே
யண்டு மாயிர மாதரை மணஞ்செய வமைத்துட்
கொண்டு மைந்தர்மா தர்கண லம்பெற வருள்கூர்ந்தார். (௫)

நலம்பெ றும்பெரு மைந்தர்பூத் தந்தைபா னண்ணி
யிலம்பெ றுந்தமி யேங்களுல் வகைப்பொரு ளென்னும்
பலம்பெ றும்பரி சருளென வாயிரம் பகுதிக்
குலம்பெ றுந்தனி வணிகரா யத்தலங் குறுகி. (௬)

நீதி சேர்சுசீந் திரத்தலத் தெய்தியே நீவி
ராதி தாளிலர்ச் சனைசெய்திர் செய்திரே லருட்செஞ்
சோதி யீய்குவன் யாவையு மென்றயன் சொலப்பார்
மீதி லுற்றவ ரார்ச்சனை செய்தனர் விழைவால். (எ)

வேறு.

ஐந்து மூர்த்தமா யிலிங்கமூ லந்தொடுத் தந்தமூற் றமர்ந் தோன்வந், தைந்து மாமுகத் தோடுமின் றறைவனும் மனத்துள வறிந்தோம்யா, முந்துவாணிகஞ்செய்தராசம்பொனுன் முகனருள் குவன்மாலு, முந்து மாதுலா முதவுவன் கலைமகண் முழுமணி தருவாளாம். (அ)

நீறு கண்டிகை யஞ்செழுத் தருள்வன்யா னீவிர்கொள் ளுதிர் கோட, லூறு பல்பொருள் விற்றலி லெட்டிலொன் றாதிய மாய்க் கொண்டு, மீறும் வாழ்வுற வாழ்குதிர் மூவரை வேறென நினையா மற், றேறு மன்பொடும் போற்றுதி ரீற்றினிற் றேறும்வீ டடைவீ ரால். (கூ)

தொன்று தொட்டுநுங் குலங்களா யிரங்களுந் தொகைவகை விரியாக, வின்று தொட்டுவேய்ங் குழுவென வோங்குமென் றியம் பிநீ டியமாலம், பொன்று தொட்டுமுப் புரம்பொடித் தவன்மறை ந் துறைந்தன னவரவ்வா, றன்று தொட்டவண் வதிந்தனர் கமலையு மவரிடத் தமர்ந்தாளால். (ய)

தனதன் மாமரு கர்க்குவாழ் வானதத் தலமத னுலேயத்
தனதன் மாநக ரென்னுநா மமுமது தரித்தது தவத்தீர்கா
ளனதன் மான்மிய மெளிதலத் திரேதமா மவ்வுகந் தனில்வேத
னனதன் மச்சுவா யம்புவா மநுவும்வந் தருச்சனை புரிந்தானல். ()

வேறு.

துவாபர யுகத்தோர் கற்பந் தோன்றவேழ் கடலுஞ் சூழ்ந்தே
யவாவருந் துருவ மண்ட லத்தள வளவ வார்த்தே
இவாவரும் போது பாரிற் செனங்கள்யா வரும்வே ரீஇமா
தவாவர வேத வென்ற தாணுமா நகரைச் சார்ந்தார். (கஉ)

அருட்கட லாய தாணு வருள்கொடங் கமர்ந்தா ரங்க
ணிருட்கட லாதி யாள வேழ்கடல் வரல்பார்த் தையன்
மருட்கட லகற்றுந் தன்கை வன்னியை விடுப்ப துன்னிப்
பொருட்கட லூடு போயப் புனலறப் பொசிக்கும் போது. (கங)

அடரெரி யடுவ தென்னன் றலைகட லேழு மாதிச்
சுடரவன் றனைவி னுவச் சுசீந்திர நாதன் கையிற்
படரெரி யாகுநீரப் பதிப்புகுந் திறைஞ்சி லிந்த
விடரெரி நீங்கு மென்ன வெழுந்தவ னிமைப்பி னெய்தா. (கச)

எய்தியேழ் மறையோ ராயவ் வேழ்கடல் களுந்தம் பேரான்
மைய்திகழ் வாவி தந்தவ் வாவியுண் மூழ்கி யூழிச்
செய்திக ளகல வெய்தாய்ச் செய்ரன தவமவ் வாவிக்
கைநிகழ் தானம் யாதென் றறைதிரே லறைகு வாமே. (கரு)

உன்னுறு புனித வாவிக் கீழ்புறத் துவரி தாணு
முன்னுறு வன்னி மூலே முதுகன்ன லாழி யீசன்
மன்னுறு சபைக்குந் தெற்கு மதுக்கட லதற்கு மேற்காங்
தன்னுறு நெய்யின் வேலைத் ததித்தட மதன்மேல் பாலாம். (கசா)

ஆங்கதன் வடபாற் பாலா மத்திய தனக்கு வாயுப்
பாங்கரிற் புனற்சிந் தாமிப் படிபரந் தானைச் சூழ்ந்து
தாங்கமழ் வாவி மூழ்கிற் சத்தவா ருதிக்குண் மூழ்குந்
தீங்கறு பலன்வந் தெய்துந் திண்ணமென் றெண்ணு வீரால். ()

விமலமாந் தாணு வுக்கு மேற்கோர்மா முனிதன் பாலாற்
கமலமாந் தீம்பா னல்கு மமுதமாங் கடலை யண்ணல்
கமலமாங் கண்ணு னோக்கிக் கருணைகூர்ந் தெழுவ ராகி
மூமலமாங் கறவே னோற்பார் முன்புவந் துவந்து சொல்வான். ()

தவம்புரி கடல்க ளாமந் தணர்களே கேண்மி னம்பா
னவம்புரி விச்சுவ கன்ம னண்ணுவ னண்ணிக் கீழ்பாற்
சிவம்புரி யுவரி வேலை வேலையின் றிசையிற் றெண்ணீ
ரவம்புரி யாது சென்னிக் காட்டுவ னுட்டும் போது. (கசஅ)

அன்னகன் னீரை யுங்கட் கருள்வன்மா சகல வென்றுன்
முன்னவ னப்போ தீசன் முன்னர்விச் சுவகன் மன்றுன்
மன்னவ னவனை நோக்கி மதிவலாய் நீபோய்த் தென்பாற்
றுன்னுவே லையிலோர் தீர்த்தந் தோற்றும்வா றுற்று வாயால், ()

நாந்தின மாடுந் தெண்ணீர் நன்னிலத் தூடே யோடிப்
போந்தின நீர வேலை புகவதிற் புனித ராடித்
தாந்தின கரன்போற் சுத்தந் தான்பெறப் புரிதி யென்றே
காந்தின வெளியான் விச்சுவ கன்மனுக் கியம்பி னானே. (உக)

அவ்வண்ணஞ் செய்கின் றேனென் றடிதொழு தமல னான
செவ்வண்ண லிங்கத் தாட்டுந் தீம்புனன் முக்கூ றாகி
யுய்வண்ண முப்பார் செல்ல வுன்னின னுன்னுந் தன்மை
யெவ்வண்ண மிவ்வா றேழு விறைவர்போன் றெழுந்த மாதோ

ஒன்றுமே லுலகிற் சென்று மொன்றுகீ ழுலகிற் புல்லு
மொன்றுதெற் குவரிக் கேகு மும்பரு முரசர் தாமு
மொன்றுநீ ரெய்து மார்க்கத் துற்றுமுப் பொருளுந் தாமா
மொன்றுகண் டெய்ந்தோ மிங்கென் றுறைவரவ் விறைவ ரெல்லாம்

தேங்குதெற் குவரிக் கேகுந் தீர்த்தமுந் தானுப் பேர்பெற்
றோங்குமங் கதனிற் றோய்ந்தோ ருன்னின துறுவார் முன்ன
ராங்குநின் றிறைஞ்சும் வேலை யந்தணர் தமைத்தார்க் கொன்றை
தாங்குசெஞ் சடையோன் பார்த்துஞ் சஞ்சலந் தவிப்போங் கேண்
மின். (உச)
உங்களுக் காகத் தென்பா லுவரியின் கரைக்கோர் தீர்த்த
மங்கள வினிற்செய் வித்தோ மாதிரைக் கவிவா ரத்தின்
மங்கள முறையா மாடி மணிமுடிப் புனலாஞ் செய்து
நுங்களன் புறவன் னீரி னெடியினிற் படிகு வீரே. (உ௫)

படிந்தநீ ரெழுந்த மார்க்கம் பார்த்ததின் வழியின் வெய்தி
முடிந்தபி னமுத லிங்க மூலத்தி லெனைக்கண் டின்ன
றடிந்துமெஞ் ஞானச் சோதிச் சபையையுந் தரிசிப் பீரேற்
கடிந்ததீ நீங்கு முன்போற் கடல்களுங் களிப்போ டோங்கும் ()

வேறு.

இந்த வண்ணமீ ரெய்துதி ரெனத்தொழு திறைஞ்சி
யந்த வண்ணமாங் கெய்தியப் புனல்படிந் தந்நீர்
வந்த வண்ணமன் னகருறீஇத் தாணுவை மன்றச்
சந்த வண்ணலை வணங்கியே வலம்புரிச் சங்காய். (உஎ)

வந்து ஞானவா வியிற்புகுந் தாதியை வழிபட்
டுந்து சேகரன் கருணைபெற் றுழியா மெழுவர்
சிந்து வாமவ ரிடத்தகன் றனர்களச் செயலா
லந்த மாநகர் சங்கசேத் திரமென லாகும். (உஅ)

ஆய லிங்கத்துக் கைந்துகூப் பீடுதூர முந்தான்
சேய தன்மகேத் திரமதி னுன்கவாந் திசைக்கண்
யே கைமுழ மாயிரஞ் சதாசிவ சொரூப
மேய மேலவ ரடியிடா ரத்தல மிசையே. (உகூ)

தீதில் மைக்கடம் றுணுவின் றீர்த்தத்தின் றீரத்
தாதி சத்தியாங் கன்னிகை தவம்புரிந் தமர்ந்தா
ளோதி லற்புத மச்செயல் கேண்மினென் றொளிசேர்
சோதி யைத்தியா னித்துரை செய்குவன் சூதன். (௩௰)

முற்றிற்று. ஆகத்திருவிருத்தம் ௫௨௰.

## ௰௬-வது கங்கை யுற்பத்திச் சருக்கம்.

எம்மை நோக்கி இனிதினி தென்றசைத்த சென்னியை யுடையமாதவ ரே! கேண்மினென்று சூதர் சொல்கின்றார். முதலுகத்தில் நான்முகன்ற ன் பதியில் விருப்பால் ஒரு வேள்வியியற்றினன்; அதிற்றுமரை மலராயிர த்திலெவ்வோரிதழாக வாகுதிசெய்ய, ஆயிரஞ்சிறுவர் அவனுரத்திற்றோன் றவும் வாணியைப்பார்த்து இந்த மைந்தரை நின்முலைப்பால் கொடுத்து அழ காகவளர்க்குதியென; அவ்வாறவள் வளர்க்கக்கலைவளர் மதியெனவளர்ந்து, கலைமகண்முலைப்பாலருந்தினமையிற் சகலகலைகளுந் தரித்து, ஜாதக நாம கர்ணவேதன சிகா யஞ்ஞோபவீத முதலியகருமஞ்செய்து தீர்ந்து மலைபடு பொருள்வணிகராயணிபெற வள்ரும்போது, வேதனும் வாணியும் பார்த்து மகிழ்ந்து, இவர்கூடியிருத்தற்குச் சிறப்புப்பொருந்திய அழகைக்கிறையான குபேரனை யாயிரமாதரை மகட்கொடையாக மணஞ்செயவமைக்கச்சம மதித்துகல்க, மைந்தர் மாதர் நலம் பெறவருள் கூர்ந்தான், அந்நலம் பெ

ற்றமைந்தர் பிரமனிடஞ்சென்று யாங்கள் நால்வகைப்பொருளின் பலன்
பெறும் விதம் அருளென; நீவிர் ஆயிரம்ப குதிக்குலம் பெறும் வணிகராய்
ச் சுசீந்திரமடைந்து சசிதரன் பாதத்திலருச்சிப்பீரேலி யாவையும் அரு
ள்வானென்றுகூற; உலகத்தில் வந்து அவ்வாறுசெய்யி னருச்சனை புரிந்தனர்.
பஞ்சமூர்த்தமாய் விளங்குமிலிங்கத்தினடிதொடுத்தந்தம் வரையமர்ந்தோ
ன் ஐமுகத்தோடுந்தோன்றி நும்மனத்துளதறிந்தேம்; வாணிகஞ்செய்யுந்
திராசும் பொன்னும் நான்முகன் அருள்வான்; உயர்ச்சி பொருந்திய து
லாம் மாதவன் அருள்வான்; கலைமகண் முழுமணியருள்வாள்: நீறுகண்டி
கை ஐந்தெழுத்து இவற்றையாம் அருள்வேம்; நீவிர்கொள்ளும் பொருளி
லெட்டிலொன்றி லாபங்கொண்டுவாழ்வீர், மூவரையும் வேறென்று நினை
யாமலன்பொடுபோற்றுவீர், வீடடைவீர்; பரம்பரையாகவுங்கள் குலங்களா
யிரமுந்தொகைவகை விரியாக மூங்கிற்கூட்டம்போற் பெருகி வளருமெ
ன்றருளி முப்புரம்பொடித்தவன் மறைந்தனன். அன்று தொட்டவண்வதி
ந்தனர்; கமலையும வரிடம் வதிந்தாள். தனதன்மருகர் அத்தலத்தில் வாழ்
தலாற்றனதன் மாநகரமென்று பெயராயிற்று. திரேதாயுகத்திற் பிரம
தேவன் மகன் சுவாயம்பு மநுவந்தருச்சனை புரிந்தான். துவாபரயுகத்தோ
ர் கற்பந்தோன்ற வெழுகடலுஞ் சூழ்ந்து துருவமண்டலத்தளவளாவியார்
க்க, உலகத்துள்ள சீவர்களியாவரும் பயந்து தாணுமாநகரைக்கிட்டி அக்க
டவுளினருளைக் கொண்டடங்குவதிந்திருந்தார்; அங்ஙனமிருக்கையில் அத்த
திவரனோக்கித் தாணுதன்கை வன்னியைவிடுப்ப, அது கடலினைப்புனறைப்
பொசிக்கையில் அவ்வெப்பத்திற்காற்றாது இஃதென்னையென்று சூரியனைக்
கேட்க, அவன் சுசீந்திரத்தண்ணல் கரத்தெரி; நீவிரப்பதி புகுந்தப்பதியை
யருச்சிக்கிற்றீருமென்றியம்ப; உடனே யெழுகடலும் ஏழுமறையவராய்ப்
போய்த் தம்பேராலேழுதடாகந் தோன்றுவித்து அதின் மூழ்கிமுன்செய்
வினையகலத்தவமியற்றினர். அவ்வாவியினிடமாவது ஞானதீர்த்தத்தின் கி
ழக்கினுவர்க்கடல் தென்கிழக்கிற் கருப்பஞ்சாற்றுக்கடல் தெற்கின் மதுக்
கடல் அதன் மேற்கினெய்க்கடல் அதன் மேற்கிற் றயிர்க்கடல் அதன் வட
க்கிற் பாற்கடல் வாயுமூலையினல்லதண்ணீர்க்கடலாம். இப்படிச்சூழ்ந்துள்
ள சத்ததீர்த்தத்தின் மூழ்கிற் சத்த சாகரத்தின் மூழ்கின பலன் வந்தெய்து
ம்: இது நிச்சயம். தாணுவுக்கு மேற்குள்ள பாற்கடலை யண்ணல் கண்ணு
னோக்கிக் கருணைகூர்ந்து அவ்வவ்விடத்திற்றவஞ் செய்யுமெழுவர் முன்றோ
ன்றி, யந்தணரேகேண்மின்! நம்மிடம் விச்சுவகன்மன்வந்து சீழ்பாலுள்ள
தெளிந்த நீரை நமது சிரசிலபிடேகஞ்செய்யும்போது அத்தீர்த்தத்தை நு
ங்கட்கருளுவேம் என்றார். அப்போது ஈசன் முன்விச்சுவகன்மன்வர, அவ
னைநோக்கி மதிவலாய்! நீ தென் சமுத்திரத்திலோர்தீர்த்தந் தோற்றுவிப்
பாய், யாந்தினமுமாடியதீர்த்தஞ் சமுத்திரம்போய்ச்சேரவும், அதிற் புனித
ராடித்தினகரன் போற் சுத்தமுறவும் இயற்று நீயென்றருள்; அவனும் அவ்
வண்ணஞ்செய்கிறேனென்றடிதொழுது அபிடேகதீர்த்த மூன்று கூறுய்ச்

செல்லவுன்னினன். ஒன்று மூவிறைவரானதுபோல், ஒன்று மேலுலகத்து மற்றொன்று கீழுலகத்தும் வேறொன்று தென்சமுத்திரத்துமாகச்சென்றது. தேவர்களு நாகர்களு மொன்றுசேர்ந்து தீர்த்தஞ் செல்வழிச்சென்று, முப்பொருளுந் தாமாமொருபொருளைத் தரிசித்துய்ந்தோமென்றங்குறைந்தார். தென்கடலுக்குச் செல்லுந்தீர்த்தமுந்தாணுபெயரைப் பெற்றுவிளங்கிற்று. அதின் மூழ்குவோர் கருதியதடைவார். முன்றவஞ்செய்யந்தணரைத்தாணுநோக்கி நுஞ்சஞ்சலந்தவிர்ப்பேம்; உங்கட்காகத் தென்சமுத்திரக்கரையில் ஒரு தீர்த்தமியற்றினோம்; ஆதிரையினுஞ் சுக்கிரவாரத்தினுமியாமமைந்தீர்த்தந் தென்கடற்செய்தும்; அதிலிக்கணத்தே மூழ்கி அதன் மூலமும் அமிர்தலிங்கத்தின் மூலமுமெஞ்ஞானச்சடையுந் தரிசிப்பீராகிற் றகித்தவக்கினி நீங்கும். இப்பிரகாரநடமினென்றருள; இறையைத்தொழுது அப்பிரகாரமதின் மூழ்கித்தாணுவைவணங்கி வலம்புரிச்சங்காய் வந்து ஞானவாவியிற்புகுந்து ஆதியை வழிபட்டு அதன் கருணைபெற்று எழுசிந்துந்தத்த மதிடஞ்சென்றன. இக்காரணத்தால் அந்நகரத்துக்குச் சங்கக்ஷேத்திரமென்றுபெயராம். அப்பேர்ப்பட்ட இலிங்கத்துக்கைந்து கூப்பிடுதூரந்தான் தன் மக்ஷேத்திரம்; அதனுன்குதிசையினுங் கைமுழமொன்றுககாயிரஞ் சதாசிவலிங்கமாம். சந்துக்களவ்விடத்திற் கால்வையார்கள். குற்றமற்ற தென்சமுத்திரத்திற் சங்கமஞ்செய்கின்ற தாணு தீர்த்தத்தில் ஆதிசத்தியாங் கன்னிகை தவம்புரிந்தமர்ந்தாள். அவ்வற்புதத்தைக் கேண்மினென்று சோதியைத்தியானித்துச் சூதர்சொல்கின்றார்.

முற்றிற்று.

## ௰௭-வது கன்னிமா குமரிச் சருக்கம்.

ஓதும் வெள்ளியங் கிரியின்முன் னொன்றுமுத லுகத்திற்
போது வானவர்க் குமையொடு முவந்துமெய்ப் போத
மீது கேண்மினென் றிசைத்தன னந்தநா ளிவைய
மாது கன்னிகை யாயருச் சித்தனள் வரனை. (௧)

புட்ப காசையென் றொருதிரு நாமமும் புனையாத்
தட்ப மாநய னனந்த வெள்ளமஞ் சனமாத்
திட்ட நாசிச்சு வாசமும் வாசமாச் சிறந்த
நட்ப னூர்க்குநன் னகையொளி மலருமா நண்ணு. (௨)

மெய்யி னூற்றவுண் மகிழ்ச்சியுந் தூமத்தின் விதமா
மையி னூற்றவாள் விழியொளி தீபத்தின் மயமாத்
துய்ய நற்சுவை நாவமு தத்தினிற் சுவையாச்
செய்ய நற்செவி மூலத்தி னோதைவாத் தியமா. (௩)

பூசை யிந்தவா றீசனோந் தானனப் போதி
லாசை யோடென தன்னேமுன் றுகம்புரிந் தனளா
லோசை யின்னுரு வானவ னெதிர்ந்தன னுரைப்பான்
காசை நீசெயும் பூசையிங் கார்செயக் கடவார். (ச)

உனக்கு வேண்டுவ தென்னென வுனேவிடா துறலே
யெனக்கு வேண்டுவ தென்றன னென்றலு மிறையுன்
றனக்கு வேண்டுவ தளிக்குவ னிள்ளநீ த்னித்தென்
மனக்கு வேண்டிய பூசையிவ் வாறுசெய் வாயே. (ரு)

வேறு.

ஆயிரஞ் சதுர யுகமொரு பகலா மயற்கவர் பதினமரங் கிறக்கின், மாயவற் கொருநா ழிகையதா மந்த மாயர்பன் னிருவர்போங் காலே, யோய்நரு கிமிட மாமெமக் கப்போ துருத்திர னெனும் பெயருறுவே, னேயமா தவஞ்செய் யவ்வள வுனேயா னெய்துவன் றவஞ்செயற் கிடமே. (சா)

கேடுறுத் தெற்கு ஞானகா ணனத்திற் கீழ்திசை கடற்கரை யதிற்சென், றீடுறு வாணன் றனேவதைத் தொருகை யிடையிடைச் சேர்த்திமற் றொருகை, வாடுறு மாலே தாங்கவவ் விடத்தில் வைகுதி மாதரோ டெழுவர், நாடுறு நின்னேச் சூழ்தர நீயு நற்றவ மியற்றுதி நானும். (எ)

பூரண சபையுட் பிரமசா ரியுமாய்ப் பொருந்துவன் றிருந்திழா யெனநின், றூரண முதல்வன் சொலத்தொழு துடனங் ககன்றுதென் கடற்கரைக் கணுகிக், காரணன் கன்னி யமர்ந்தன ளதனுற் கன்னிகா கேத்திர மெனவேழ், தாரணி புகழு மித்தலந் தனிற் றீர்த் தமும்பதி னொருவகை யுளவால். (அ)

திணிகொள்சக் கரஞ்சா வித்திரி காயத் திரிகலே வாணிகன் னிகைமா, கணபதி தானும் பிதிர்பிதிர் பிரமங் கமழ்சிலே யெனப் பதி னென்றாய், மணமுறு தீர்த்தங் களிற்படிந் தவர்க்கு வல்வினை யெய்துபா தகங்க, ளணேவுறு தெறுதுமன் றூந்தலே முறையுள் ளவர்களும் பரகதி யடைவார். (கூ)

தன்னிகர் படைத்த வேழுமா தாக்கள் சகலமு முயிர்த்தமா தாவாங், கன்னிகை தனக்கே வற்றெழில் புரியக் கதிர்மணிப் பீடமீ தன்னை, துன்னிய வடிவ மொருபகற் கொண்டு தொழுதுபின் றுதித்துட னினைத்து, மன்னிய மனிதர் மனிதரோ வன்று வா னவ ரானவ ரவரே. (௰)

முற்றிற்று. ஆகத்திருவிருத்தம் ருஅ௰.

## ௰எ-வது கன்னிமாகுமரிச் சருக்கம்

திரேதாயுகத்தில் வெள்ளியங்கிரிபருவதத்தில் எம்மண்ணலுமையோடு தேவர்க்கட்குச் சிற்கனஞானத்தைக் கேண்மினென்றுபதேசித்தான்; அக்காலத்திலிமயமாது கன்னிகையுருக்கொண்டு புட்பகாசையென்னு நாமத்தோடு தன்னுயகனை, ஆனந்த பாஷ்பமேமஞ்சனமாகவும் சுவாசமே வாசமாகவும் நகையேமலராகவும் உண்மகிழ்ச்சியே தூபமாகவும் மைவிழியொளியே தீபமாகவும் இரசனையேயறுசுவைப்பதார்த்தமாகவும் சுரோத்திரமே வாத்தியமாகவும் கொண்டு ஐமுகத்தாமரையில் ஆசையோடு மூன்றுகம்பூசைபுரிந்தாள். ஓசையுருவானவன்முன்றோன்றி நீ செய்யும் பூசை யிங்கார் செயவல்லார்! உனக்கு வேண்டுவதென்னையென்றருள; இடைவிடாதுன்னோடே பின்னமாயிருத்தலேவேண்டுவதென்றாள். அவளை யிறைவன் இன்ன நீ யேகாந்தமாயென் மனதுக்குவேண்டிய பூசையிவ்வாறுசெய்யில் உனக்கு வேண்டுவதளிப்பனென்றருள; ஆயிரஞ் சதுரயுகமயற்கொருபகலம், அயனிற்பதின்மர் துஞ்சி னரிக்கொருகடிகையாம், அவரிற்பன்னிருவரொழியிலெமக்கொருநிமிடமாம், அப்போதுருத்திரனென்னும் பெயாபெறுவேன் அதுவரைமாதவஞ்செய் யானுனையெய்துவன்; தவஞ்செய்தற்கிடந்தெற்கேஞானகானனத்தின் கீழ்த்திசைக்கடற்கறையாம், அதிற்சென்றிருகைகூப்பி வாடாத மணமாலை தாங்கச்சத்தமாதர் சூழ்ந்திருப்பத்தவமியற்றுதி; யானும் பூரணசபைக்குட் பிரமசாரியாயிருப்பேன. என்று முதல்வன் மொழியவணங்கியங்கமர்ந்தனள். அதனாற் கன்னிகாக்ஷேத்திர மென்று பேர்பெற்றது. அதில் சக்கரம் சாவித்திரி காயத்திரி சுலை வாணி கன்னிகை கணபதி தாணு பிதிர்பிதிர் பிரமம் சிலை என்று பதினொருவகைத்தீர்த்தமுளது. அதிற்படிந்தார்க்கு வல்வினையும் பாதகங்களு நீங்கும்; மூவேழ்தலைமுறைவரையும் பரகதியடையும். சத்தமாதாக்கள் சகலமும் பெற்றமாதாவாங்கன்னிகைக்கு ஏவற்றெழில்புரியப், பிரகாசம் பொருந்திய நவரத்தின சிம்மாசன மீது அன்னையொளிருங் காக்ஷியை யொருபகல் கண்டு தரிசித்துப்பின்றுதித்து உடனே நினைத்து நிலைபெற்ற மனிதர் மனிதரோ! அல்ல; வானவர்தான்.

முற்றிற்று.

## ௰அ-வது அகத்தியன் பூசைச்சருக்கம்.

சென்னி யைந்துடைச் செம்மலை யுன்னிய
கன்னி தன்மையைக் கட்டுரைத் தாமினித்
தன்னி யைந்த தமிழ்முனி தானுமுன்
றுன்னி யர்ச்சனை செய்தது சொல்லுவாம். (க)

தெக்க ணத்திசை செல்லென வன்றவன்
முக்க ணத்தன் மொழியப் பொதியினி
லக்க ணத்தில கத்தியன் போந்துல
கெக்க ணத்தரும் வாழ்த்தவி ருந்தனன். (உ)

அங்கி ருந்தவ னாதிசு சீந்திர
மிங்கி ருந்தநெ னநினைத் தேகியே
கொங்கி ருந்தபொற் கொன்றையி னான்வலப்
பங்கி ருந்து பனிமலர் தூவினான். (ங)

ஆறு திங்கள ருச்சனை செய்துபின்
னேறு தங்குமி றைவன்வந் தெய்தினான்
கூறு கும்பமு னிகரங் கூப்பியே
யூறு சிந்தையோ டொன்றுவி னாவினான். (ச)

இத்த லந்தனி லென்பெய ராலொரு
சித்த லிங்கபி ரதிட்டை செப்வனென்
கைத்த லங்கொ டமைத்திது காண்பிர
மத்த லஞ்சம்ம தத்தலங் கேளெனு. (ரு)

கிளக்கு மித்தலத் திற்குக் கிழக்கொளி
விளக்குங் கன்னிகை தானத்தின் மேற்குல
களக்கு மொன்றைய மைத்திடென் றுருயிர்
வளர்க்குந் தாணும றைந்துறைந் தானரோ. (சு)

முன்ன வன்சொன்மு றையகத் தீசுர
மென்ன வன்னவி டத்தொரு லிங்கத்தைத்
தன்ன தாகவுந் தாபிதஞ் செய்துபின்
பன்னி ரண்டுபெ ரிதிக டம்மையும். (எ)

ஆறி ரந்தண ராகவங் காக்கியன்
பூறு தன்பெய ரோடையொன் றாக்கமைத்
திறில் பூசைபி யற்றின னென்றன்னேன்
கூறி னனக் குலமுனி வோர்க்கெலாம். முற்றிற்று. (அ)

ஆகத்திருவிருத்தம். ருங௮.

## ௰அ-வது அகத்தியன் பூசித்த சருக்கம்.

பஞ்சமுகமுள்ளகடவுளை நினைந்து தவஞ்செய்த கன்னி சரிதத்தையுரைத்தாம், இனியகத்திய முனியருச்சனை செய்ததைச்சொல்வாம். முக்கணன் றெக்கணஞ் செல்லென்ற மொழியையுட்கொண்டு, அக்கணத்திலகத்தியன் பொதியையினை வந்து சுசீந்திரமீங்கிருக்கின்ற தெனக்கருதி, பொறகொன்றையன வலப்பாலிருந்து பன்மலரானருச்சித்தான். ஆறுமாதமருச்சனை செய்தபின் னேறுதங்குமிறைவன்றோன்ற; கும்பமுனிகரங்கூப்பி இத்தலத்திலென் பெயரானேரிலிங்கப்பிரதிஷ்டை செய்யவேண்டுமென; அதற்கத்தன்கைத்தலமமைத்து இதன் கிழக்கும் கன்னிகுமரிக்கு மேற்கு மானமத்தியவிடத்திலமைத்தி யென்றருளித்தானுமறைந்தனன். அவ்வாஞ்ஞையின்படி அகத்தீசுரமென்றொரு தலமுண்டாக்கி, அதிற் சிவலிங்கபிரதிஷ்டைசெய்து, பன்னிரண்டு சூரியரையும் ஈராறந்தணராக்கித், தன் பெயரானொருதீர்த்தமுமமைத்துப், பூசைசெய்தனனென்று முனிகணங்களுக்குச் சூதர் விளம்பினர்.

முற்றிற்று.

## ௰கூ-வது மருத்துமலைச் சருக்கம்.

சாற்று கன்னிதன் றுனத்துக் குமிடற்
மாற்று ஞானவ னத்திற்கு நாப்பணே
தோற்று சித்தவ ரைச்செயல் சொல்லெனத்
தேற்று மன்பர்க்குச் செப்புவன் சூதனே. (க)

வேறு- நாடியற் கைலையை நண்ணி யொன்பது
கோடிசித் தர்கண்மறைக் குழுகற் கண்டுகொண்
டாடியற் புதவெம தல்ல நீரென்
நீடியற் கையைத்தனி நிகழ்த்து வீரென்றுன். (உ)

தியதா னவர்களைத் திசையு மாயின
ராயதா லோரிடத் தகற லுக்கிரி
தேயதா னவர்விழிக் கெய்தி டாவ்கை
மேயதோர் செயறர வேண்டு மென்றனர். (ங)

கானமார் தென்கடற் கரையிற் றாணுவின்
றானமா மதன்கிழக் காகத் தன்னிகர்
மானமாம் பூரண வரையொன் றுண்டதி
லானமா மூஷிக ளனைத்து முண்டரோ. (௪)

விண்டிடு மக்கிரி மேவி யம்மருந்
துண்டிடுஞ் சித்தியெய் துறுமுற் றோருமைக்
கண்டிட வரிதுமக் கவரைக் காணலா
மண்டிடு மங்கணென் றண்ண லோதினன். (௫)

ஆங்கக னற்சிலம் படைந்து சித்தர்க
டாங்கண பேதியாந் தடமும் பூரண
வோங்குபுட் கரணியு முடன்கண் டேங்கலாந்
தேங்கவுட் டடங்களுந் தெரிந்துண் டானரோ. (௬)

உண்டுசித் தியையடைந் துற்ற தன்மையால்
விண்டுசித் தக்கிரி யெனவு மேவுமாற்
பண்டுநற் றசரதன பாலன் சேனையை
மண்டுபோ ரரக்கர்கோன் மடித்த வாற்றினல். (௭)

அன்றுமா ருதியகன் றவுட தக்கிரி
யொன்றுகொண் டுறவவ னுற்ற சித்தர்க
ணின்றுநீர் வருணனை வேண்ட நீடிரு
ளின்றுபோ தெழுமழை சொரிவித் தானரோ. (௮)

சொரிந்தகார் நனைப்பவே தோற்று மாருதி
தெரிந்தமெய் யுதரிடச் செங்கை வெற்பினின்
றிரிந்தநல் லவுடத மெங்கும் வீழ்தலாற்
புரிந்தசீ ரவுடதப் பொருப்பு மானதால். (௯)

தொக்கிருங் கலியுகந் தனிலோர் சூத்திரன்
வக்கிர னென்பவன் மருவுஞ் சித்திதா
னக்கிரி வந்தடைந் தனனங் காதலான்
மிக்கினர் வக்கிர வெற்பென் றோதுவார். (௰)

சிகரநீ டவுடதச் சிலம்பின் மேன்மையைப்
பகரவே யரிதுமுன் பரசி ராமன்றூன்
றகரவார் குழலுமை தழுவுந் தாணுவைப்
புகரற வர்ச்சனை புரிந்த தோதுவாம். (கக)

முற்றிற்று. ஆகத்திருவிருத்தம் ருசசு.

## மசு-வது மருத்துமலைச் சருக்கம்.

கன்னிமாகுமரிக் கிடப்பாலாகியும் ஞானவனத்துக்கு மத்தியாகியுமுள்ள சித்தபருவத மகிமையைச்செப்புவீரெனச்சூதர் சொல்வார். நவகோடிசித்தர் கைலையையடைந்து மறைமுதலைத்தொழுது அற்புதனே! தீயதானவரெந்திசையும் பரவியிடறுறுத்து கின்றனர்; அவர் நயனத்துக்கெட்டாத செயலளிப்பாயென்று விண்ணப்பிக்க; அத்தன் மேற்காட்டியசித்தவரையையுணர்த்தி அதின் மூலிகளைத்துமூண்டு அங்கடைந்து மருந்துண்டு உம்மை யொருவருநோக்கக்கூடாமலு நீவிரெவரையும் பார்க்கக்கூடவுமுள்ள சித்திபெற்று வசிப்பீரென்றருளினர். உடனே யக்கிரியடைந்து; பேதிக்கின்ற தடமும் புட்கரணியும் உலகனைத்துந் தேங்கு மௌடதங்களுந் தெரிந்துண்டு சித்திபெற்றனர். அதனாற் சித்தகிரியென்று பேர்பெற்றன முன்னொருகாலிராமன் சேனையை இராவணன் மடித்ததனுன் மாருதியௌடதகிரியைக்கொண்டுவர, அங்கிருந்த சித்தர் வருணனைவேண்டச், சத்தமேகங்களுஞ்சொரிந்தன; மடிந்த சேனையெழும்படியாக வெற்பினின்றுமமழையானௌடதம் வீழ்தலான்மருத்து மலையென்றுபெயராம். இக்கலியுகத்தில் வக்கிரன் என்னுமொரு சூத்திரன் சித்திக்காக வங்கடைந்தனன்; அதனால் வக்கிரகிரியென்றுமாம். உயர்ந்த விம்மலையின் மகிமையை யியம்பவரியதாம். இனிப்பரசிராமன் றூணுவையருச்சித்த கதையோதுவாம்.

முற்றிற்று.

## உ0-வது பரசிராமன் பூசைச் சருக்கம்.

பெருமை மாமுனி யியமதக் கனியொரு பிண்ட
முரிமை யாயமைத் திரேணுகைக் களித்தவ ளுதரத்
தருமை யாயரி தோன்றியவ் வரியிமா சலஞ்சேர்ந்
திருமை மாதவஞ் செய்துபின் கயிலையி லெய்தி. (க)

அண்ண லைத்துதி செய்யவென் னையவுன் னகத்து
ளெண்ண லைப்பக ரெனப்பகர் வானெனக் கெதிரா
நண்ண லர்க்கொலை செய்கவென் றனைவெல்க நாளென்
றுண்ண லத்தினை யுரைக்கவவ் வுரைக்கர னுரைப்பான். (உ)

னது செய்கைமற் றெவையுமென் செய்கைநா னீயுன்
றனதி யற்கையென் னியற்கையென் போன்மழுத் தாங்கி
யுனது ளப்பரி செப்பரி சப்பரி சுஞற்றென்
றனரா கற்றுவா ரெவரென வரமளித் தகன்றான். (ந)

கரத்தி லேபடை தரித்தவெந் தரையெலாங் கடிந்து
வரத்தி லேயுயர்ந் தொருவரு மெதிரிலா மையினு
லுரத்தி லேமிகுத் தவன்கையின் மழுவையோங் கொலியம்
பரத்தி லேவிடுத் தகற்றியப் பாரெல்லாம் பாரா. (ச)

வளம் யேந்திர கிரிக்குமேற் கனைத்துமா மறையோர்
கொளவு மீய்ந்துபின் னம்மயேர் திரவரைக் குறுகா
வுளம தோய்ந்தழி மிகுந்துவேந் தரையெலா முயிருண்
டளவி னீண்டபா தகஞ்செய்தே னென்றுள மயர்ந்தான். (ரு)

இந்தக் காதரந் தீர்வதெப் பரிசென வெண்ணி
முந்தக் காசிபன் றனையடைந் தித்துயர் மொழிய
வந்தக் காதரந் தாணுவின் மலர்ப்பதத் தலரே
சிந்தக் காததூ ரஞ்செலு மெனவனேன் செப்ப. (சு)

பரசி ராமனுட னடைந்தனன் சுசீந்திரப் பதிவாழ்
பரசி வனடி மலரினிற் பணிமலர் பரப்பிப்
பரசி வனகற் றினன்வினை யனைத்தும்பின் பணிந்த
பரசி ராமனம்மயேந் திரத்தகன் றனனெனப் பகர்ந்தான். (எ)

முற்றிற்று. ஆகத்திருவிருத்தம் ருருசு.

## உ0-வது பரசிராமன் பூசித்த சருக்கம்.

பெருமைபொருந்திய சமதக்கினி முனிவர் உரிமையோடிரேணுகைக் கொருபிண்டமளிக்க, அவளு தரத்திலருமையா யரிதோன்றி இமாசலஞ் சேர்ந்து மாதவஞ்செய்து பின்கையிலையை யடைந்து சிவபெருமானைத்துதி செய்ய, அவன் என்னைய! உன் கருத்தைச் சொல்லென்றருள; எனக்கெதிர் வருஞ் சத்துருக்களைக் கொலைசெய்யவும், என்னையானேயன்றி மற்றையரா ற்றொலையாதிருக்கவுமே யென் கருத்தென்றான். அரன் நினது செய்கை யெவையுமெனது செய்கை, நானே நீ உன்னியற்கை என்னியற்கை, என் போன் மழுத்தாங்கி யுன்கருத்தெவ்வண்ண மவ்வண்ணமியற்றுதி, எனது

மழுவையகற்று வாரியரவர், என்று வரமளித்தகன்றான். பரசிராமன் கையிலாயுதந்தரித்த வேந்தரையெல்லாங்கொன்று, தன்னைத்தவிர வுயர்ந்தோரெவரு மெதிரில்லாமையாற்றன் கைமழுவையம்பரத்தில் விடுத்தகற்றி, உலகமெலலாம் பார்த்து வளம்பொருந்தி யமகேந்திரகிரிக்குமேற்கேசென்று, அந்தணர்க்கனைத்து மளித்துப், பின் மயேந்திரகிரியில் வந்து சஞ்சலமற்று அன்புமிகுந்து வேந்தரையெல்லாமுயிருண்ட நீண்ட பாதகஞ்செய்தேனெயென்றுள்ள மயர்ந்து, இத்தீவினைத் தொடர்ச்சி தீர்வதெப்படி யென்றெண்ணிக், காசிபனையடைந்து இஃதொழிய வியற்றுவதென்னையென; தாணுவின் மலர்ப்பதத்தருச்சிக்கத்தீருமென; உடனே சுசீந்திரத்தடைந்து தாணுவையருச்சித்து வினைகழித்து மயேந்திர கிரிவிட்டகன்றனன். என்று சூதர் பகர்ந்தார்.

முற்றிற்று.

## உயக-வது மூவேந்தர் பூசித்தசருக்கம்.

நன்மை யொன்றிய பரசுரா மன்செய னவின்று
புன்மை யின்றிய சேரனு மியர்செய்த பூசைத்
தன்மை யன்றுகூ தனுமனை மகிழ்ந்துமா தவத்தின்
வன்மை யொன்றிய முனிவரர்க் கினிதென வகுப்பான். (க)

மேவ ரும்பனை நிம்பமார் வேய்ந்ததோள் வேந்தர்
மூவ ருஞ்சுசீந் திரத்தடைந் தாதியா மூவ
ராவ ருமபர மனைச்செழி யனும்வலத் தரியைத்
தேவ ரும்புகழ் வளவனு மருச்சனை செய்தார். (உ)

திருந்து கன்னிகா கேத்திரக் கன்னியைச் சேரன்
பொருந்து பூசனை புரிந்தனன் புரிந்தவப் பொழுதே
முருந்து நன்னகைக் கன்னிகை யன்னவன் முன்வந்
தருந்து மாரமு தனையசொல் லாலுரைத் தருள்வாள். (ங)

என்ன வேண்டுவ தெனத்தரி சித்தன னினியான்
பன்ன வேண்டுவ திலையனு தினமுநின் பதத்தைத்
துன்ன வேண்டுவ தெனதுகா டெங்கும்வாழ் தோங்கி
மன்ன வேண்டுமா தருமங்க ளொடும்வள மல்கி. (ச)

திங்கண் மும்மழை பொழிதர வருளனு தினமு
மங்க ளம்பொலிந் தெழில்பெற வருளரு மறையோர்
தங்கள் சொன்முறை தழைந்திட வருளொரு தமியேற்
கங்க ளந்திடாச் சீவன்முத் தியும்பெற வருளே. (ரு)

வேறு.

என்ற வேந்தனுக் கருள்வள்ளா ணனைத்தடிந் திங்கிருந் தன ளிப்பா, லன்ற தானகொல் லாபுரிக் கேகி முகாசுரன் றனைவெல் வேன், வெல்ற நீணக ருறைவனின் னாட்டினின் மேவிய விடங் ந்தோறு, மொன்ற வேபக வதியென மன்னுவ னுயர்வளஞ் சிறந் தோங்க. (சு)

ஆயி டைக்குரு வாயுகேத் திரமதற் கானதென் பாலாகப்
பாய கடற்கரை யன்னதி லெட்டெனும் பயிரவி யாய்ச்சேர்வ
னேய வப்பதி தெக்கண காஞ்சியங் கிருக்குமெம் மிறையோனை
நீய கத்துற வினைத்துவந் தெ.றஞ்சுதி நினைத்தயா வையுமெய்தும்.

என்று கன்னிகை யகன்றனள் வில்லவ னியற்சுசீந் திரத்துற்று (ன்
னொன்று தென்னவன் பூதநாத னைப்பணிந் துவந்தருச் சித்தான்பி
றுன்று தாணுவி னகரடைந் தனனியற் சோழன்மா தவன்றுளி
னன்ற தாமலர் தூவினன் பின்னரு நாடிமூ வருங்கூடி. (அ)

மூன்று ருபமா மூலலிங் கத்தினின் மூன்றுதா னமுமுன்னு
மூன்று வேந்தராஞ் சேரனு தியர்பொறி மூன்றுமொன் றெனலாக
மூன்று காலமும் பூசனை செயவொரு மூன்றுலோ சனன்றோன்றி
மூன்று மொன்றுமாம் பெருவர மளித்தனன் மூன்றுலோ கமும்போற்ற. (கூ)

சேரன் சோழன்பாண் டியனெனு மூவருந் திருவருள் பெற் றேயுள், கூறன் பாலவண் மன்னினர் பின்னிசை கூறுநா ரதனுஞ் சொற், சாரன் சீரிசை பாடின னடினன் றுணுவன் னவற்பேணு நீரன் கூறுவா னொருமொழி கேட்டரு ளீயெனப் பரிவோடும். ()

வேறு.

பொன்னக ரிகந்திவண் போந்த விந்திர
னன்னக ரடையும்வா றருளு வாயெனப்

பொன்னகர் மன்னநீ போதி யென்னவோ
ரன்னக ரின்னக ரடிய னேற்கெனு. (கக)

இந்திர வானகர்க் கேகி நாடோறும்
வந்திர விவணெனே வழுத்து வாயெனச்
சந்திர சூடனைத் தாழ்ந்து சம்மதித்
துந்திருந் தீர்த்தமொன் றுதவென் றோதினன். (கஉ)

ஓதுறல் கேட்டர னுரைப்ப மார்கழி
மீதுறு மிருகசீ ரிடத்தின் மேவுமை
மாதுற விமானமே வருது மாதிரைத்
தீதறு நாளிற் றீர்த்த மீய்குதும். (கங)

ஈய்ந்திடு தீர்த்தமிங் கிருந்தவ் வேலையிற்
றோய்ந்திட வருமதி றோய்ந்து கன்னிகை
யாய்ந்திடு மலர்ப்பதம் வணங்கிப் போதியென்
றுய்ந்திடு மருமறைக் காதி யோதினன். (கச)

நன்றென ஞானகா னனத்தை வாவியைக்
குன்றன லிங்கமாங் கோவைக் கொன்றையை
மன்றெனுஞ் சபையைநேர் வணங்கி வானவர்
நின்றனர் கலைகளங் கமைத்து நீங்குவார். (கரு)

நீங்கின ரவ்வயி னீங்கித் தென்கடற்
பாங்கினிற் கன்னியைப் பரவித் தீர்த்தங்க
ளாங்கினி தாடிநம் மாதி தீர்த்தத்தி
னோங்கின கரையில்வந் துடன்கு ழீயினர். (கசு)

அளவள வினர்சில ரதலத் தேகின
ருளமகிழ் வொடுசில ரும்பரெய் தினர்
தளதளப் புலவுநீவெண் டந்தி யிந்திரன்
வளவயப் பரிமிசை வானம் புக்கினன். (கள)

புக்கபோ துருவசி யாதிப் பூவையர்
தொக்கனர் வணங்கினர் தொலைந்த வாருயி

ரிக்கண்வந் தடைந்ததென் றிந்தி ராணியு
மக்கண வனைப்பணிந் தளவ ளாவினள். (கஅ)

இன்புற வவணிருந் திரவி னொடொன்று
மன்புறு சுசீந்திரத் தடைந்தெந்தா னுக்கவத்
துன்பற வருச்சனை புரிந்து சொற்கதி
முன்புற வேகுவன் முனிவர் கேண்மினோ. (கசு

அன்னவா றுரைந்தன னமரர் கோனுமக்
கின்னமோர் கதையுரைத் திடுவன் யானென
முன்னமா தவரது மொழிகென் றன்பொடு
சொன்னபோ தருமறைச் சூதன் சொல்லுவான். (உ0)

முற்றிற்று. ஆகத்திருவிருத்தம் ருஎசுஎ.

## உக-வது மூவேந்தர் பூசித்த சருக்கம்

நன்மை பொருந்திய பரசிராமன் சரிதமுரைத்துச் சேரனுதியர் பூசித்த தன்மையை மாதவம் பொருந்திய முனிவரர்க்குரைப்பார். பனை நிம்பம் ஆத்தி இம்மாலைகளைத் தோழிலணிந்த வேந்தர் மூவருஞ் சுசீந்திரமடைந்து ஆதியா மூவருட் பரனைச்செழியனும் அரியைச் சோழனும் கன்னியைச் சேரனுமாகப் பூசித்தனர். கன்னிகை யவன்முன்றோன்றி வேண்டுவதென்னையென; அறுதினமுன் பதத்தையுன்னவும் நாடெங்கும் வாழ்வோங்கி மன்னவும் தன் மங்கள் வளங்கடுன்னவும் திங்கண்மும் மாரிபெய்யவும் மங்களநிறைந்தெழில் செய்யவும் மறையோர் சொன்மூன்றதழையவும், தமியேன் சிவன் முத்திபெறவுமேயன்றி மற்றொன்றிலையென்றான். அவ்வேந்தனைப் பார்த்து வாணனைக்கொன்றிங்கிருந்தனன்; இப்பாற் கொல்லாபுரிக்கேகி மூகாசூரனைவென்று அந்நாட்டினுறைவேன்; இடந்தோறும் பகவதியென்ற பெயரோடு மன்னுவன்: அவ்விடை குருக்கேத்திரம் வாயுகேத்திர மிவற்றின்றென்பாலுள்ள கடற்கரையில் அட்டபைரவி யாய்த்துன்னுவன்; அப்பதி தெக்கணஞ்காஞ்சியாம்; அங்கிருக்கு மெம்மிறையையுள்ளத்தி நினைத்திறைஞ்சில் நினைத்த யாவையுமடைவாய் என்றருளிக் கன்னிகையகன்றனள். வில்லவன் சுசீந்திரத்துற்றான், சென்னிமாதவன்முனிலருச்சித்தான், தென்னவன் பூதநாதனைப்பணிந்தருச்சித்தான், மன்னர் மூவருங்கூடி மூவடிவா மூலலிங்கத்தின் மூன்றிடத்தையு நினைத்து மூவேந்தராஞ்சேரனுதியர் முக்கரணமொன்றி முக்காலம் பூசைசெய்ய முக்கண்ணன்றோன்றி மூவுலகம் போற்றச் சிவேசுரசகத்தென்ற மூன்று மொன்றாய் விளங்கும் வரமளித்தான். சேர சோழ பாண்டியராகிய மூவருந் திருவருள்பெற்று மனமகிழ்ந்து அன்பானிலைபெற்றிருந்தனர். இப்பால் நாரதரிசை பாடினர் ஆடினர்;

நாணு அவரை நோக்கி இந்திரன் பொன்னுலகம் விட்டிம் மண்ணுலகடைந்தனன்; அவனைத்தன்னுலகத்திற் கேகும்படி யுன்னுவாயென்றருள நாரதர் "நீயுன்னகரத்திற்கேகுதி" யென்றிந்திரனைக்கூற; அதற்கவன் அர்நகரே யிர்நகரென்று மறுத்துக்கூற; வாசவ! வானகர்க்கேகி நாடோறுமிரவில் வந்து என்னைவழுத்து வாயென்றருள; ச்சம்மதித்து இந்திரன் சந்திரசூடனைப்பணிந்து தீர்த்தமொன்றருள்வா யென்றுவேண்ட; அரன்மார்கழித்திங்களில் வருமிருக சீரிடத்திலுமையொடும் விமானத்திலிவண்வருதும்; ஆதிரைநாளிற்றீர்த்தமீகுதும்; அங்ஙனமீயப்பட்ட தீர்த்தந்தென்வேலையிற்றோயவரும் அதிலாடிக்கன்னிகை பதமலரை வணங்கிபோதியென்று ஆதியருளினோதினன். நன்றென்று ஞானகானனத்தை வாவியை மூலலிங்கத்தைக் கொன்றையைச் சபையை யெதிர்நின்று வணங்கி வானவர்நின்றனர். தங்கலைகளை யங்கமைத்து நீங்கித் தென்கடற்பக்கத்திற் கன்னியைத்தரிசித்து, தீர்த்தங்களாடி "தன்கரையில் வந்து கூடினர்; அளவளாவினர்; சிலர் அதலத்துக்கேகினர்; சிலரும்பரிற்சென்றனர்; இந்திரன் பரிமேலேறி வானம்புக்கினன், போங்கால் ஊர்வசிமுதலிய தேவஸ்திரிகள் உடன் சென்று வணங்கினர்; போனவுயிர் திரும்பி வந்ததுபோல இந்திராணி கணவனைப்பணிந் தளவளாவினள். இன்பமுறநாடோறு மிந்திரன் இரவில் வந்து எம்மையனைத் துன்பமறப்பூசித்துக் கதியடையச்செல்வன். இப்பிரகாரமிந்திரனிருந்தனன். இன்னமுமங்ஙோர்கதை யுரைக்குவனென்ன; முனிவர்களன்போடு மொழிகென்றனர். அப்போதருமறைச் சூதர் சொல்வார்.

முற்றற்று.

## உஉ-வது பிரமோற்பத்திச் சருக்கம்.

ஞான கானனந் தனக்குநேர் தெற்குநன் னலஞ்சேர்
தான மாதிசேத் திரம்விராட் கேத்திரஞ் சகுனை
மான தானபட் சிபுர மப்புர மதன்பால்
வான மாநதி சூழ்பரம் வாவியு மருவும். (க)

அந்தப் பன்மதீர்த் தம்மெனுங் கடற்கரைக் கருகே
முந்தப் பன்மறை முழக்குட னருட்கரு முற்றிச்
சந்தப் பூமிகள் முடிதொடுத் தடிவரை தழுவ
வந்திப் பாருயிர்ப் பயிர்தழைத் தெழப்பொழி மழைபோல். (உ)

அங்கண் வீற்றிரு தனனுல கினைப்படைத் தளிக்குஞ்
செங்கண் மான்மது சூதன னவன்செயுஞ் செயலை
யங்க ணன்சொலப் பெரிதெனி னுஞ்சிறி துரைக்கேன்
பைங்கண் மாதவத் தீர்களே கேண்மெனப் பகர்வான். (ங)

உகமு டிந்தகற் பாந்தத்திற் பிரபஞ்ச மொடுங்குஞ்
சகம தாதிபூ தங்கள்சத் தங்கலை விந்துப்
பகரு நாதமப் பிரணவம் பரமமா மொழியோ
டகலு மாயையுங் கிரமத்தி லொன்றிலொன் றடங்கும். (ச)

அடக்கு மாதிசே டனுமரி சேடனு மாகித்
துடக்கு நின்மல னிற்குண மாய்த்தனித் தோன்றி
நடக்கு மோர்செய லற்றிருந் தவனுமந் நாளிற்
கடக்கு மப்பிர வஞ்சமுண் டாக்கவே கருதி. (ரு)

வேறு- பேதமின் மாயை தனனைப் பிரணவ மாககி விந்து
நாதம்வந் துறச்செய் தேபின் னரலையைப் படைத்துத் தானப்
போதன்மா யையின்மே லிச்சைப் புருடனு மாகி வேலை
மீதுமா யமதாய் வந்து மேவுமா லிலையின் றன்பால். (சா)

மானவற் புதமென் றுன்கு காலஞ்சின் மயனு ணந்த
ஞானவித் திரைசெய் தேபின் ஞாலமா தியைத்திட் டிக்க
வூனமி றன்னைத் தானே யுன்னினு னுன்ன வுள்ளத்
தானபங் கசத்தி லேவந் தவதரித் தனன்பிர மாவாய். (எ)

பிரமனு மனைகெற் பத்துப் பிள்ளைபோற் பிரமந் தன்னைப்
பரமெனத் தியாநஞ் செய்தப் பரிசுற முகிழ மர்ந்துப்
புரமன மலர்வி ராட்டம் புருடசூ ரியன்லந் தேயா
யிரமிதழ் விரிக்க வேதோற் றினன்சுயம் பென்னும் வேதன். (அ)

தோற்றின வேதன் முன்னே தோன்றுமோ ரொளியைக் காண்டற்
காற்றலொன் றிலனுய்க் கண்ணை யடைத்துமா யனைச்சிந் தித்துப்
போற்றவம் மாயன் காந்தி தன்னைத்தன் புதல்வன் கண்ணி
லேற்றவவ் விழிபு ரூரத் திணைநடு வெய்தச் செய்தான். (கூ)

அன்னவன் முன்னங் காண்டற் கரியபே ரொளியைக் காண்க
முன்னவ னருளாலோக முழுதுமே படைக்க வந்த
பின்னவன் றுனே யாதிப் பிரமமென் றகந்தை யுள்ளத்
துன்னவ துணர்ந்து கோடி ருத்திர கணங்க டம்மில். (ய)

வேறு- நாதவடி வத்தனொரு ருத்திரனை நந்த
மாதவனி னைந்தவுடன் வந்தவனை நோக்கிப்
போதமய னுக்கருளெ னப்புருவ நாப்பண்
வேதன்மரு ளத்தலைவெ டித்தெழமு ழுக்கா. (கக)

நடுங்கினன யன்பதறி நாபிமலர் நாளத்
தொடுங்கினனொ டுங்கியுழ லுற்றனனு முன்றே
படுந்துயர றிந்தரிப ரிந்தருள ருத்திர
னங்கனறி ரண்டுவெளி யானதென லானான். (கஉ)

வேதனையு ரோதனம்வி ளைத்தபரி சாலன்
னாதனுமு ருத்திரனெனு நாமமது பெற்றே
காதலுறு ருத்திரக ணத்துடன டைந்தான்
சீதரன யற்குமுப தேசமது செய்வான். (க௩)

மறைக்கிழவன் யோகநிலை மன்னிய தியானத்
துறைக்கநெடு மாலுமெதி ருற்றரிய தான
முறைப்பிரண வப்பொருளின் முற்றுரைசெ யத்தேர்ந்
திறைப்பொழுதி னங்கமறை யாவையும்வ குத்தான். (க௪)

வகுத்தவுடன் வேதமுத லியானெனும தங்கொண்
டுகுத்தமதி வேதியனு ளத்துளசெ ருக்கை
மிகுத்தமணி வண்ணனுள மேற்கொள்வ தேகாத்
தகத்துருவ தாயசுர ராய்வெளிய தானார். (க௫)

இருவர்மது கயிடவரெ னும்பெயர்த ரித்தே
மருவருமவி திக்கிடர்வ ருத்தியவ னாலே
தருமறையோ டங்கம்வர் தங்கையி லெடுத்தே
பொருகடலி டத்தவர்பு குந்தனர்வி ரைந்தே. (க௬)

அந்தவகை கண்டயனு மந்தனென லாகிச்
சிந்தனைதி ரிந்ததுதெ ளிந்துதிரு மாலே
வந்தருள்செய் யென்றலறு மைந்தன்முன் னெதிர்ந்தே
யெந்தமைய றிந்திலையி தென்னபரி சென்றே. (க௭)

அடிககடியு ணக்கிதென வாணவம டாவப்
படிப்படியி னிப்படைய டைப்பெனமு கிற்கா
ரிடிப்பெனவு ரைப்பவர வெள்ளவுளி ரங்கித்
துடிப்பொடுதி திக்குமய னுக்கருள்சு ரந்தே. (கஅ)

அஞ்சன்மறை யாவுமறை யாதருள்வ னென்றே
செஞ்சொல்பக ரப்பிரம தேவனுண்ம கிழ்ந்தான்
மஞ்சலெனு மேனிநெடு மால்கடலி னூடே
துஞ்சலறு மீன்வடிவெ டுத்தகதை சொல்வேன். (கக)

வேறு- சூரியன் புதல்வன் வைவஸ்வச் சுதமநு விளமை நீங்கிப்
பேரிய லடைந்த பின்பு பிள்ளைக்கு மகுடஞ் சூடிச்
சீரிய லயனை நெஞ்சிற் றியானித்துப் பத்தி லட்சஞ்
சாரிய வருட நன்மா தவஞ்செயப் பிரம தேவன். (உ0)

வந்துனக் கேது வேண்டும் வகைபக ரெனப்பா ராதி
யைந்துதொட் டுலக மெல்லா மழியுமாப் பிரளை யத்தி
னந்துமற் றுயிரை நானே நந்திடா தளிக்குந் தன்மை
தந்திரட் சியெனா வேயீந் தனன்மறைந் தனன்வே தாவே. (உக)

பேருறு மநுவும் பின்னர்ப் பிதிர்தின மெய்த முன்னர்ச்
சாருறு தடத்திற் றோய்ந்து தற்பணஞ் செய்யக்கைக் கொண்ட
நீருற வொருமீ னன்றோ ளேருறக் குதிக்க நோக்கிப்
பாருறுந் தடத்தில் விட்டுப் பார்த்தனன் பார்த்த போதில். (உஉ)

வேறு- அதிசெ யித்திருங் கமண்டலத் துடனெடுத் தடக்கமிக்
கொருநாளின், மதிசெ யப்பெருத் தெண்ணிரண் டங்குலம் வளர
மற்றதுதேர்ந்தே, பதிசெ யப்பெருந் தாழியுள் விடவொரு பகலி
ன்மும் முழநீண்டு, துதிசெ யப்பெருங் கிணற்றகத் திடவிடஞ்
சுருங்கின தெனச்சொல்ல. (உங)

சொல்லு முற்றடா கத்திட யோசனை தூரநீ டரப்பின்பு
சொல்லுங் கங்கையில் விடவது வும்மிடஞ் சிறிதெனக் கடல்வாரத்
தொல்லும் வாறிட விரண்டிலக் கம்மெனும் யோசனை யளவாகப்
புல்லும் வாறுநீண் டதுபெருத் திட்டதற் புதத்திலற் புதமாக. ()

ஈரும் கொம்பிடைத் திமிங்கில கலத்தின தினமதன் றிதுவேதோ
பாரும் வானமும் பார்த்ததி செயித்திதுற் பாதமோ வெனச்சொல்
வாரு மல்லன் மாயவ னிதுவென மதுவறிந் தனனறிந்தன்பு [ல
சேரு முள்ளுரு கப்பணிந் தெழுந்துதோத் திரஞ்செயப் பரஞ்
சோதி. (உ௫)

ஆன மச்சரூ பனுமநு வேதவத் தாசனு தலினுன்மெய்
ஞான சட்சுனக் குள்ளதா லறிந்தனே நந்தமை யினிகேளுன்
மூன மைச்சுன தாண்டனே கஞ்செலச் சராசர முதலாய
கான மற்றுள பொருள்களு மிறந்தெழு கடலுமோர் கடலாகி. ()

எங்கு மேகமாய்ச் செலமய மாய்ப்பரந் தெழும்பிர ளையகாலத்
தங்கு பல்லுயி ரனைத்துநீ புரப்பதற் காகவோர் நாவாயைத்
தங்கு வார்கட லிடைதரு வோமதிற் சகத்துயிர் களையேற்று
பொங்கு சண்டமா ருதந்திசை தொறுங்கொடு புகுமது புகுதாமல்.

எனது கொம்பினிற் கட்டசை யாதுபி னேகிரே தத்தாதி (லா
யுனது வெண்குடைக் குள்ளடங் கும்மனைத் துயிர்களு முயிரெல்
மனது ளுன்னுயி ரெனப்புரந் திடுதிமன் வந்தரன் றானுகிக்
கனது ரந்தரன் புரந்தரன் றுதிக்கவெக் காலமு நீவாழ்தி. (உ௮)

என்று ரைத்தகன் றடன்மது கயிடவ ரிருவரோ டமராடிக், கொன்று மற்றவ ரெடுத்தவே தத்தினைக் கொணர்ந்துவே தனுக்கீந்து, நன்று சொற்றமா யனைத்துதித் தயன்செக நாதநீ யெளியேற்குத், துன்று சிட்டிசெய் யும்முறை முறையுறச் சொல்கெனச் சொல்கின்றான். (உ௯)

வேறு.

அகரமுத லதிற்பின்ன மாம்படைப்பு காரமங்க மாம்வே தஞ்சொன், மகரமத னிடத்தியா வையுமடங்கு மதுவேது மாயை மூன்றாய்ப், பகர்குணமா யெனத்தெளியம் மாயையினுற் பூதமைந்தும் படைமா யைக்கு, முகமதெழுத் தைந்துபிர ணவமதங்க நாதம்விந்து முழுமெய் யாமே. (௩௰)

ஆயவளைப் பாரெனச்சொற் றேழுவியா திருதியையு மளித்தன் பின்ன, ரேயவளைக் கண்டனன்வே தனும்வேத ரூபவா னெ

மூத்தோ ரைந்து மாயனுனைத் துன்னவன்னேன் றிருமேனி ரோ
மநுனி மகுடம் போல, மேயுபுறத் தண்டரண்ட கோடிகளைக் க
ண்டயன்றான் வேறுஉக்கொண் டானே. (௬௧)

வேறு.

ஆதி யானவ னாதியு மானவ னனந்த
நீதி யானவ நிற்குண னானவ னிறைந்த
சோதி யானவ பருதியு மானவ கருதி
சாதி யானவ முகுந்தநின் சரணமே சரணம். (௬௨)

அச்சுதா னந்த நந்தன முகுந்தவே தாந்த
வச்சிதா னந்த கோரசக் கரந்திரித் துலக
மெச்சுதா னந்த மாதியில் லாதுமேல் விளங்குஞ்
சச்சிதா னந்த ரூபநின் சரணமே சரணம். (௬௩)

அன்னை யாரிவர் தந்தையா ரெனப்படைத் தளிக்கு
முன்னை யாரெனப் புகல்வனுன் னுந்தியி லுதித்த
வென்னை யாரென வறிந்தவ னறிகிலே னெனினுன்
றன்னை யாரறி பவர்களின் சரணமே சரணம். (௬௪)

அண்ட ரண்டத்தி னுள்ளுமப் புறமுநீ யாக
விண்ட வண்டமுன் மெய்யுரோ மந்தொறும் விளங்கக்
கண்ட காட்சியே யற்புத மற்புதங் கனகோ
தண்ட பாணியா யிறைவனின் சரணமே சரணம். (௬௫)

உன்னைப் பெற்றனே யுன்னையே யுன்னுளத் துன்னி
என்னைப் பெற்றனே யென்றனை யென்றனே யானே
பின்னைப் பெற்றவ னென்பெற்ற பேறுமுன் பெருமை
தன்னைப் பெற்றனே யாகுநின் சரணமே சரணம். (௬௬)

காட்சி யின்னொளி கண்டகண் ணொளியுடன் கலக்கச்
சூட்சி யின்னொளி தோற்றியா னவவிரு ரேக்க
வாட்சி யின்னொளி நீயென வறிந்தன னினிமேற்
றூட்சி யில்லைநான் படைப்பனின் சரணமே சரணம். (௬௭)

பொங்கு மாமலர் வாசமாய் மணியொளி போலா
யெங்கு மாயுரு வருவமா யெள்ளுமெண் ணெயும்போ
லங்கு மாயுறைந் திங்குமாய் நிறைந்தடங் கலுமாய்த்
தங்கு மாயவ னென்றனை யின்றறிந் தனனியான். (கஅ)

என்ன வேதெளிந் தேத்திஞன் முகனுநின் றிறைஞ்ச
வன்ன வேதனை நோக்கிநீ யெனையறிந் தனையான்
முன்ன மேபடைத் திடும்படி படையென மொழிந்து
தன்ன தாமுரு விகந்துமுன் னுருக்கொடு தனித்தான். (கக)

வேறு.

தனித்தவன்றாண் மலர்வேதந் தலைமேற்கொண் டெனவிதித
ன் றலைமேற் கொள்ள, குனித்தவன்சொல் வானினியத் தொழின்
மேற்கொள் ளேனுனைமேற் கொண்டே னுன்பாற், செனித்தவனு
னுன்றனைவந் தனைசெய்வ தொழிலெனச்சிந் தித்தேன் கும்ப, முனி
த்தவன்போற் றும்முகுந்த மற்றோர்தொழிற் செய்தியென்ன மொ
ழிய லென்றான். (சய)

என்றுரைத்த வயனைச்சத் தியலோகத் தினுக்கிறையா யிருத்
தி யென்ன, நன்றுரைத்துச் சம்புத்தீ பத்தினிற்றென் கடற்கரை
க்குன் னளினப் பூமேற், றனைறுதிருப் பேர்படைத்த வாவியின்
கூ லத்தில்வந்து தோற்று வோநீ, யன்றமைப்பூ சனைபுரிந்தா
னந்தமய மடைகுதியென் றருளி னனே. (சக)

முன்னரய னெற்றியிற்செந் தழலுருவாய் வந்தருத்திரன் மு
தலோர் தோன்ற, நன்னர்நெடு மான்மொழிவன் கற்பாந்தத் தழி
வுசெய்யு நாதர் நீவி, ரன்னமயி டாசுரனைத் தொலைத்தவள்வாழ்
வைத்தகோட்டத் தின்மேற் காய்த், துன்னுதிருப் பன்றிக்கோட்
டின்குட்பாற் சங்குசக்கர சொருப னகி. (சஉ)

நக்கிரா லயத்துறைவே னதிகேசவ னெனுநன் னமம் பூண்டு
சக்கிரா யுதநதிதீ ரத்திற்கண் வளர்வனெனச் சம்ப தேசத் (னப்
துக்கிரா னனத்துருத்தி ரர்பதினொ ருபேரும் மிருப் பதுசிதமென்
பக்கிராசனைப்பரித்தூர்பவனகன்றான்ருத்திரருமப்பரிகும்முரால். ()

அப்பரிசத் தலந்தோறு முருத்திரர்பதி னொருவருமங் கமர்ந்
தா ராதி, மெய்ப்பரிசா யுலகனைத்து நெடுங்காலஞ் சிட்டிசெய்தா
ன் வேதன் பேத, வைப்பரிதா முலகமெலா மொருமொழியி லவ
னுதலில் வந்தோன் காய்ந்தா, னிப்பரிசா யினதுபின்னும் படைத்
தனனவ் வயனுலகம் யாவுந் தானே. (சச)

ஈதுமுன்னர் நிகழ்ந்ததுமா முனிவிர்கா ள்பின்னருண்மை யீது
மென்றப், போதுநெடு மால்புகன்ற போதகனைத் தயன்புவியிற்
போந்தமாயன், மீதுமனம் வைத்ததும்பூ சித்ததும்பட் சீபுரவி
லாசம் யாது, மூதுணர்விற் கேண்மினெனச் சூதமுனி முனிவரர்க்
கு மொழிய லானன். (சரு)

முற்றிற்று. ஆக திருவிருத்தம். கூ௱உ௰க

## உஉ-வது பிரமோற்பத்திச் சருக்கம்.

ஞானகானனத்துக்குத் தெற்காக மதிக்ஷேத்திரம் விராட்க்ஷேத்திரம் ப
க்ஷிபுரம் என்னுந்தலங்களுண்டு; பக்ஷிபுரத்திற் பத்மதீர்த்தமுண்டு, அத்தீர்
த்தமாங் கடற்கரைக் கருகே வேதகோஷத்துடன் அருட்கருமுந்தி, அழகு
பொருந்திய பூமிதேவியின் முடிதொடுத்தடிவரை பொருந்திய அடியாராகி
ய பயிர் தழைத்தெழ மழை வருஷித்தல்போல, உலகைப்படைத்தளிக்குஞ்
செங்கண்மால் வீற்றிருந்தனன். அவன் செயலைச் சொல்ல மிகப்பெரிதா
யினுஞ் சிறிது செப்புகிறேன்; நைமிசாரண்ய வாசிகளே! கேண்மினென்று
சூதர் சொல்வார். யுகமுடிந்த கற்பாந்தத்திற் பிரபஞ்சம் பஞ்சபூதம் நாத
ம கலை விந்து பிரணவம் மாயை இவையனைத்தும் கிரமமாயொன்றிலொன்
றடங்கும். முடிவிலனைத்துந் தன்னிடத்தொடுங்கி மிஞ்சியபரன், சேடித்
த அரியாகி நிர்மல நிற்குணமாய்த் தனித்து யாதொரு செயலுமற்றிருந்த
து. அக்காலத்திற் பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கவுன்னி மாயையைப்பிரண
வமாக்கி விந்து நாதத்தைத்தோன்றுவித்துப் பின் கடலைப்படைத்து மா
யையின் மேலிச்சாபுருடனாகிச், சமுத்திரமீது மாயமாய் ஆலிலைமேன் முப்
பத்திரண்டற்புத காலமானந்த நித்திரைசெய்து, பின்னுலகஞ் சிருட்டிக்கத்
தன்னைத்தானே யுன்னினன்; அவ்வுள்ளத்தில் அன்னை கருப்பத்துப் பிள்ளை
போற், பிரமத்தைப் பரமெனத்தியானஞ்செய்து அப்பிரமமாகவேவிளங்க,
அரும்புபோற் சங்கோசமாயிருந்த மனம் விகசிக்க, விராட்டாகிய புருஷ
சூரியன்றோன்றி யாயிரமிதழை விரிக்க, சுயம்பாகிய வேதன்றோன்றினன்.
அவ்வேதன்றனக் கெதிரேதோன்று மோரொளியைக் காணக்கூசினவனாய்
க்கண்ணைமூடி மாயனைத்தியானிக்க, அமமாயன் காந்தியைத் தன்புதல்வன்
கண்ணிலேற்றி அவ்விழியை நாசி நுனிபுருவமத்தியி னெய்தச்செய்தான்.

அப்பிரமன் முன்னங்காண்டற் கரியபே ரொளியைப்பார்க்கு மாறு அரியருள; உலகமெல்லாம் படைக்கவந்தபின் அவன் யானேபிரமமென்றகம் விருத்தியடைய; அஃதறிந்து கோடியுருத்திர கணங்களிலொரு உருத்திரனை மாதவ னினைத்தவுடன்வர; வந்தருத்திரனைநோக்கிப் போதம் அயனுக்கருளென; புருவமத்தியில் வேதன்மருளத் தலைவெடித்த தெனமுழக்க; வயணடுங்கிப் பதறிநாபிமலர்த்தா மரையினொடுங்கி யுழன்றுபடுந்துயரை அரியறிந்து பரிந்தருள; உருத்திரன் அக்கினிதிரண்டு வெளியானதுபோலானான். வேதனைரோதனம் விளைத்தபரிசால் அந்நாத னுருத்திரனென்றுபெயர்பெற்று உருத்திரகணத்துட னடைந்தான். சிதரன் அயனுக்குபதேசஞ்செய்ய, மறைக்கிழவன யோகநிலைநன்று தியாநத்துறைக்க, மால்பிரசன்னமாய் அரிதான பிரணவப்பொருளை முற்றுமுறை செய்யத்தேர்ந்து, கணப்பொழுதின் மறைமுதலியயாவையும் வகுத்தான். உடனே வேதமுதல்வன் யானேயென்று அயன்மதர்த்துச் சிதறியமதியானது உள்ளத்துட்செருக்கைப்பெருக்க; மணிவண்ணனும் அகங்கார மற்கொள வவ்வகங்காரரூபமாய் மதுவென்றுங் கைடவனென்று பெயரோடு இரண்டசுரர்வெளியாகிப் பிரமனை யிடறில்வருத்தி யவன்றந்த வேதமுதலியதைத் தங்கையிலெடுத்துக்கொண்டு விரைவிற் சமுத்திரத்துட் புகுந்தொளித்தார். அயனுமந்தனுய்ச்சிந்தைநைந்துபின் றெளிந்துதிருமாலே! வந்தருள்செய்வா யென்றலற; அம்மைந்தன்முன்வந்து எம்மையறிந்திலை! இப்பரிசெனே! அடிக்கடி யுனக்கிதென்னவாணவம்! இனிப்பூமியிலென்னபடைப்பு! என்று இடிமுழக்கம்போல வதட்டிச்சொல்ல; உள்ளே யேங்கித்துடித்துந் துதிக்குமயனுக்கு அருள்சுரந்து பயப்படாதே மறையாவுமறையாம லருளுவன் என்றுபகர, பிரமனு மகிழ்ந்தான். இனிமேகவண்ணனாகிய நெடுமால்கடலின் மச்சாவதாரமெடுத்த கதைசொல்வேன். சூரியன் புதல்வனாகிய வைவச்சுதமநு விளமைநீங்கி முதுமை யடைந்தபின் பிள்ளைக்குமகுடஞ்சூட்டி யயனைநெஞ்சிற்றியானித்துப் பத்திலக்ஷவருடந் தவஞ்செய்யப், பிரமன்வந்து வேண்டுவதென்னையென; மன்னுநீ யைந்துதொட்டு உலகமெல்லாமழியும் பெரிய பிரளயத்திற் றுஞ்சுமுயிர்களைத்துஞ் சாவாமனோனைகாக்குந் தன்மைதந் திரட்சிப்பாயென; ஈந்துமறைந்தனன். மநுவும்பிற்பாடு ஒருபிதிர்தினம் வருமுன்றடாகத்தின் மூழ்கித் தற்பணஞ்செய்யக் கைகொண்டநீரில் ஒரு மீனகப்பட்டுக்குதிக்க; அதைத் தடத்தில்விட்டுப்பார்த்தனன்: அதிசயித்துப் பெரிய கமண்டலத்து, ஒருநாள் வைத்திருக்க முப்பத்திரெண்டங்குலம் வளர்ந்தது. அஃதுணர்ந்து பெருந்தாழியுள்விட, ஒருபகலின் முழமுள நீண்டது. பின் பெருங்கிணற்றுள்விட அக்கூபஞ்சிறிதெனும்படி வளர்ந்தது. அப்பாற்றடாகத்திலிட, யோசனைதூர நீண்டது. பின் கங்கையில்விட, அதுவுஞ் சிறிதெனவாயிற்று. கடலில்விட, இரண்டிலக்க யோசனைதூரம் வளர்ந்தது: அவ்வளர்ச்சி அற்புதத்தி லற்புதமாயிருந்தது. கொம்பினிடை திமிங்கலங்களையன்றியுங் கப்பற்கூட்டங்களையும் பிழக்கும். பூலோகமுந் தேவலோக

மும்பார்த்து, ஈதேதோவென் றதிசயித்து இக்கொடுமை யென்னையென்று
சொல்ல; வலியுடைய விதுமாயவனென்று மறுவறிந்து அன்புபொருந்தியுள்
ளுருகப்; பணிந்தெழுந்து தோத்திரஞ்செய்யப், பரஞ்சோதியான மச்சரூப
னு மறுவேதவத் தாசனுதலினுன் மெஞ்ஞானக் கண்ணுனக்குள்ளதானம்
மையறிந்தனை, இனிக்கேள் நான்றுனமைச்சு உனதாண் டநேகஞ்செல்லச்
சராசரமுதலிய காடுகளுமற்றுள்ள பொருள்களும் இறந்து, ஏழ்கடலுமொ
ருகடலாய் எங்கும் ஏகமாய்ச் சலமாய்ப் பரந்தெழும்பிரளயகாலத்தில் பல்
லுயிரனைத்தையு நீ டப்பதற்கொரு நாவாயைக்கடலிடை தருவம்; அதிற்
சகத்துயிர்களை யேற்றுதி, சண்டமாருதமதனைத்திசை தொறுங்கொண்டு
புகுதாமல் என்கொம்பிற்கட்டுதி, அஃதசையாது. பின்கிரேதாயுக வாரம்
பத்திலனைத் துயிர்களுமுன் வெண்குடைக்கும்; அவ்வுயிரை யுன்னுயிரென
க்காத்திடுதி, மன்வந்தரன்றுனுகிக்கன துரந்தரன் புரந்தரன்றுதிக்கவெக்கா
லமும் வாழ்தி, என்றுரைந்தகன்று வலிபொருந்திய மதுகைடவிருவரோ
ட மராடிக்கொன்று அவரெடுத்த வேதத்தைக்கொணர்ந்து பிரமனுக்கீந்து
ஆசீர்வதிக்க, அம்மாயனைத்துதித்து எளியேற்குச்சிருஷ்டி செய்யுமுறையை
யருள்வாயென; அகரமேசிருஷ்டியாம் உகரமேதிதியாம் மகரமேசங்காரமா
ம் இவைமாயையின் முக்குணமாம் மாயையினுற் பூதமைந்தும்படை, மா
யைக்கு முகமைந்தெழுத்து பிரணவம் அவயவம் நாதவிந்து சரீரம் அப்படி
ப்பட்டவனைப் பாரென்றுசொல்லி எழுகின்ற நாதத்தையும் அளித்தான்.
பின்னரப்படிப்பட்டவனை யயன்கண்டான். வேதரூபமான வெழுத்தோ
ரைந்தையுமாயனுளந்துன்ன, அவன்றிருமேனியின் ரோமநுனிக்கண் கிரீட
ம்போலப் பல்லாயிரகோடி யண்டங்கடொங்குவதைக்கண்டு பயந்தான்.
பயந்து ஆதியானவ அநாதியானவ அநந்த நீதியானவ நிறைந்தசோதியான
வ சாதியானவ பருதியானவ சுருதியானவ முகுந்த நின்சரணமே சரணம்;
அச்சுதானந்த நந்த வேதாந்த உச்சிதானந்த கோர சக்கரந்தரித்து உலகமெ
ய்ச்சவந்தமாதியில்லாது விளங்குஞ் சச்சிதானந்தரூப நின்சரணமே சரண
ம்; அன்னையரிவர் தந்தையரிவர் எனப்படைத்தளிக்கு முன்னையாரெனப்புக
ல்வன்! உன்னுந்தியிலுதித்தவென்னை யாரெனவறிந்தவனையறிகிலேன்! எ
ன்னிலுன்னையாரறிபவர்! இங்ஙனம் விளங்கு நின்சரணமே சரணம்; அண்
டபிண்டங்களினுள்ளும் புறம்பு நீயே! நீயாக விண்ட அண்டங்களுன்மெ
ய்ரோமந்தோறுந் தொங்கக்கண்ட காக்ஷியற்புதமற்புதம்! கோதண்டபாணி
யாமிறைவநின் சரணமே சரணம்; உன்னைப்பெற்றனை உன்னுளத்துன்னி
யென்னைப்பெற்றனை என்னையனே என்னைப்பின்னைப்பெற்றவனே! யான்
பெற்ற பேறு முன்பெருமையைப் பெற்றனன் அன்னையாகிய நின் சரண
மே சரணம்; காக்ஷியொளி கண்டகண்ணொளியுட் கலக்கச், சூக்ஷியொளி
ஆணவவிருளைத்துறக்க, ஆக்ஷியினொளியால் யான் நீயென்றறிந்தனன், இ
னித்தாழ்ச்சியில்லை யான் படைப்பன் நின் சரணமே சரணம்; மலரில் வாச
[illegible] மணியிலொளியாய் என்றுமென்னையுட்போல வுருவருவமாய் அங்கு

மாயிங்குமாயெங்குமா யடங்கலுமாய் நிறைந்து விளங்குமாயவனென்று உன்னை யின்றறிந்தனன் என்று தோத்திரித்தான். அந்நான்முகனை நோக்கி நீ யென்னையறிந்தனை யான் முன்படைத்தபடி படையெனமொழிந்து தன்னுருவிட்டு முன்னுருக்கொண்டுதெனித்தான். அவன்றூண்மலரை வேதந் தலைமிசைகொண்டதுபோல் விதி தலைமேற்கொண்டு, இனி அத்தொழிலை மேற்கொள்ளேன்; உன்னைமேற் கொண்டேன்; உன்னை வந்தனைசெய்வதே தொழிலெனச்சிந்தித்தேன், கும்ப முனிபோற்று முகுந்த! மற்றொருதொழிற் செய்தியென்று மொழியற்க; என்றுரைத்தான் அவ்வயனைச் சத்தியலோகத்தினுக் கிறையாயிருத்தியென்று இனியன மொழிந்து, "சம்புத்தீவின்றென்கரைக்குட் டாமரைத்தடாகத்திற் றாமரைப்பூவில் வந்து தோன்றுவேம்; அக்காலமைப் பூசைசெய்தானந்தமடைதி,, யென்றருளினன். முன்னர் அயனெற்றியிற் செந்தழலுருவாய் வந்தருத்திரனை நெடுமால் பார்த்து, கற்பாந்தத்திலழிக்கு நீவிர் மகிடாசுரனைத் தொலைத்தவள் கோட்டத்தின் மேற்காய்த் திருப்பன்றிக் கோட்டின் குடபாலாய்ச் சங்குசக்கரரூபனாய் ஆதிகேசவனென்னு நாமம் பூண்டு நக்கிராலயத்துறைவேன்; சக்கராயுததீர்த்தத்திற்கண் வளர்வேன்; என்சமீபதேசத்திலிருப்பது உசிதமென்றுரைத்து மாலகன்றான். உருத்திரரும் அப்பரிசிருந்தார். உலகனைத்து நெடுங்காலம் பிரமாசிருஷ்டித்தான்; உருத்திரன் அழித்தான்; மீண்டு மாக்கினன்: இஃது முன்னடந்தது. முனிவீர்காள்! பின்னருண்மை யீகுதுமென்று அக்காலையி னெடுமால் புகன்ற ஞானத்தை, அயனினைத்து மாயன் மீதன்புவைத்ததும் பூசித்ததும் பக்ஷிபுரவிலாசமும் இவையாவும் மூதுணர்விற்கேண்மினெனச்சூதமுனிவர் முனிவரர்க்கு ஓதலாயினர்.

முற்றிற்று.

## உ௩-வது புன்னாகவனச் சருக்கம்.

மாலின தருளா லுலகெலாம் படைத்த மலரயன் மேருவின்
வடபால், மாலினை ரவிபூ சித்ததா னமதா மானத கானமாய்
கடைந்து, மாலினை நினைக்க வந்தன னவனை வணங்கின னனை
யருச் சித்துண், மாலினை யகற்ற முன்னர்நீ சொன்ன வனம்பதி
யாதுகூ றென்றான். (க)

என்றிசைத் தயனு நிற்பநா மூவ ரிருக்குஞா னடவி யதற்
குத், தென்றிசைக் கண்ணுங் காட்டுவன் கருடன் செல்கென மை
ப்புயல் செப்பா, முன்றிசைக் கணியாம் பொதியின வனத்து முற்
றினன் மற்றரி சொற்ப, தன்றிசைக் கலுழ னீதெனச் சொல்வே
தத்தனு மத்தலத் தடைந்தான். (உ)

அடைவுறு மாறு தத்தினைப் பிறழா தமைவுற வமைத்தெண்ணு யிரம்யாண், டிடைவுறு தயனு மரியையே சிந்தித் திருந்தனனிருப்பமா யவனுங், கடைவுறு தாதி யுகமதா தலினாற் றன்னிறம் பொன்னிற முமைத்த, வுடைவுறு வுடையும் பொன்னிர மார்பத் தோங்குபொன் னிறத்தொடாங் குதித்தான். (௩)

உதித்தமா லயனே யேதுவேண் டுமெதென் றுரைப்பவுன் றனைத்தினம் பூசை, விதித்தவா றியற்ற வருளென வியம்ப வியன்புவி மடந்தயோ டையதாய்க், குதித்தநீர் ஈமாய்த் திருவுமம் புயமாய்க் குலவுவோ மித்தலத் தெனைநீ, துதித்தவா றருச்சிப் பதனையிச் சித்தச் சுத்தகா னனத்துறை குவனால். (௪)

என்னவே யுரைத்தா யவனுமங் கிருப்ப வினையந்தவே தனும் புவி மானு, மன்னவா வியின்மா லானநீ ரிற்றோய்ந் தலர்மின்னு மலர்கொடர்ச் சித்தான், பின்னமே திவர்க்கு யாவையுந் தாமாம் பெருமையே யாவரு மறிய, முன்னமே விரித்த தென்னலாஞ்சதுமா முகன்முன்வந் துதித்தனன் முகுந்தன். (௫)

களித்தனன் கமலக் கண்ண னக்கமலக் கண்ணனைக் கண்டனன் கண்ணீர், துளித்தனன் சிரத்தால் வணங்கினன் கரத்தாற் றொழுதன னுவினாற் றுதித்தான், குளித்தன னின்பக் கடலினின் பூசை கொண்டன னுன்னிடத் தென்னை, யளித்தன னெங்கும் மேயினன் விட்டுணு வாயின னின்னமு மயனே. (௬)

வேறு

தலையாம்வே தவியாத னுக்குச்சே டள்வடிவங் காட்ட வேண்டித்
தலையாம்புன் னுகதரு வாவெனு தலினுலித் தலத்தி னுமம்
நிலையாம்புன் னுகவன மாமிதுவு மூவருக்கு நிலைய மாகி
யலையானா னரணிய மதுவுநம்மைப் போல்வோறென் றறிதி நீயே

எனமாய னியம்பநின்று னிணைப்படிந்த தீர்த்தமெனக் கீய்குவாய்பூங், கனமாய நின்னுருக்கண் டவர்க்குமிட்ட காமியநீ கற்பிப் பாயென், றனமாய லூர்திசொல்ல வப்பரிசே புரிதுமென வன்னோ னந்தத், தினமாய முனிவரும்பர் சூழ்வரத்தென் கடற்கரைமேற் சென்றா னன்றே. (௭)

நெருக்கமல முனிவரும்பர் சூழ்வேத னுக்குமுகி னிறத்தொ ன் பாதத், திருக்கமலத் தீர்த்தமளித் தன்னதிலா டினர்முனிவர் சிலருண் டார்சீர், பெருக்கமல நீக்கிமுத்தி கொடுக்கும் விட்டுணு கங்கையெனப் பெயரிட் டாரம், மருக்கமலங் குண்டிகையு னிர ப்பினர்வா னமிர்தலிது மதுரிப் பென்றார். (கூ)

அன்னதன்பின் வேதனுஞ்சத் தியலோகத் தடைந்தனன்மா லவனும் பூமே, லன்னதமாம் வேதவனத் துறைந்தனனென் றறைந்தவெலா முட்கொண் டார்முன். சொன்னதன்மை புன் னாகத் தியல்புரைத்தி யெனச்சூதன் சொல்வான் வேதந், தன்ன தென வகுத்தவியா தனும்வேத வனத்தில்வந்து தவஞ்செய் தா னே. (ய)

மாதவஞ்செய் பவன்முனந்த மாதவனும் வந்துனது மனதே தென்னும், போதவனுஞ் சேடவுருக் காட்டெனுமென் போதமெ னப்புகல விந்த, வேதவனந் தனிற்காண்க வேதவனந் தன்வடிவா ய் விளங்கும் வேனென், றீதவனந் தனன்முனுரைத் தகன்றனனி ன் றனனிவனவ் வெல்லை நோக்கி. (கக)

புன்னாகம் புன்னாக வடிவாய்ப்பா தலத்தினின்றும் புறப்பட் டன்னோன், முன்னாக புன்னாகம் புளகெழவந் தெழலுமந்த முனி வன் பூசி, மின்னாக மின்னாக மற்புரமற் புதமெனவே வியம்பச் செய்போன், மன்னாக மன்னாக மறைவாழ்த்த மன்னினதவ் வனத் தின் மாதோ. (கஉ)

வேறு.

வேதவி யாதனை னந்தனு ருக்கொடு மென்புன்னைத்
தாதவிழ் தாருவே முத்தொழு தன்புத ளேந்தேபொற்
பாதவி னேதைவெ னுதவி பேதப ரந்தாமா
மாதவ னேயென வேதுதி செய்தனன் மாறுமல். (கங)

அங்குப னுடவி யாயிர மாடக மாமெய்யோ
டெங்கும்வி யாபக மாகிய சோதி யெனுஞ்சேட
தங்குமு ரூபம கன்றுபு னாகத ருத்தாமாய்ப்
பொங்மெஞ் ஞானமு மானமு மீது புகழ்ந்தார்க்கே. (கச)

என் றுபு கன்றம ணங்தவ னங்தனெ ழிற்புன்னை
துன் றும லர்த்தரு வ:யின னன்னது சூழ்ந்தார்க்கே
நன்றிசெய் தெண்ணின யாவையு மீகுவ னென்றே
யன் றுமு குந்தன்வி யாதனே டோதின னைம்பாக. (கரு)

மன்னிய புன்னைமு குந்தனை யேவலம் வந்தோர்செம்
பொன்னிய னுடிபு ரந்தவ ரென்று புகன்றேபி
ன்னிய லன்னகா மாலைய ருச்சனை யேசெய்தோர்
மின்னிய நன்னிலை சூதனி யம்பினன் மேலோர்க்கே. (கசா)

வேறு.

நார தன்பரா சரன்வசிட் டன்சவு னகனே
டேரு ருக்குமாங் கதனம்ப ரீடனு யிரங்கை
வீரன் வீட்டுமன் புண்டரீ கன்பிரக லாத
னுர மாலையர்ச் சித்துமுன் முத்தரா யினரால். (கஎ)

ஆகத்திய னக்க பதிகலா வதியெனு மவரிச்
செகந்தி யைந்தபுன் னையின்கண்மா லினையரு ச்சித்துச்
சுகந்தின் மிஞ்சுபே றடைந்தன ராதலிற் சுரரான்
மகத்து வம்பெறு புவனமா மிம்மறை வனமே. (கஅ)

இத்த லத்திலே காதசி யுபவசித் தெம்மானைத்
துத்தி யத்தியல் பாங்துவா தசியிற் புன்னைக
மெய்த்த ருத்தனை வலம்வரிற் பாவவெவ் வினைபோ
மத்த லத்தினுக் குவமைவை குண்டமே யாகும். (ககூ)

முற்றிற்று. ஆகத்திருவிருத்தம் கூசய.

## உங-வது புன்னைவனச் சருக்கம்.

மாலினருளாலுலகனைத்தும் படைத்த விதாதா மேருவின்வடபால் அரியை யிரவிபூசித்த தலமாகிய மானதகானத்தடைந்து, மாயனைச்சிந்திக்கப் பிரசன்னமாயினன். அவனை வணங்கி, "உன்னைப்பூசித்து மாலினையகற்ற முன்ன நீ கூறியவளம் பதியாது,, அருளென்று நிற்ப; யாமூவரிருக்கு ஞானகானனதின் றென்றிசைக்கண் காட்டுதும்; கருட! செல்லெனச்சொல்லுமுன் அத்திசைக்குச் சமீபமாக அசுவத்த வனத்தைச்சென்றனன். அரிசொன்ன தலமீதென்று கலுழன்சொல்ல, வேதனுமத்தலத்தடைந்து என்

ஞாயிரம் வருடம் வாசியையடக்கியிடைவிடாதரியைச் சிந்தித்திருந்தனன். அப்படியிருக்கையின் மாயன் ஆதியுகமாதலின்ஞற்றன்னிறம் பொன்னிறமாயு ம்பொற்பீதாம்பரந்தரித்து மார்பத்திலக்ஷ்மியோடு பிரசன்னமாய் அயனே! வேண்டுவதியாதென்றுரைப்ப; உன்னைத்தினம்விதிவழுவாது பூசனைசெய்ய வருளெனவியம்ப; புவிமடந்தை ஓடையாய்ச்சலைநாமாய் இலக்ஷ்மிதாமரை மலராய் விளங்குவோம்; இத்தலத்தென்னை நீதுதித்த வாறருச்சிக்க விச்சித்த அசுவத்தகானனத்துறைவன் என்றருளியங்கிருப்ப; வேதனும்பூமிதேவியாம் வாவியின் மாலா நீரின் மூழ்கி அலர்மின்ஞ மலர்கொண்டருச்சித்தான். இவர்க்கு பின்னமேது! இவர்க்கியாவையுந் தாமாம்பெருமையே! முன்னமே விதித்த விதி முன்முகூர்த்தன் வந்துதித்தனன். கமலக்கண்ணனைத்தரிசித்த னன் களித்தனன் கண்ணீர் துளித்தனன் இன்பக்கடலிற் குளித்தனன் பிர த்தான் வணங்கினன் கரத்தாற்றொழுதனன் நாவினுற்றுதித்தனன் பூசை யைக்கொண்டனன் உன்னிடத்தென்னையளித்தனன் எங்கும் வியாபித்தனா ன் விஷ்ட்ணு வாயினள் என்று துதித்தவயனை நோக்கி அயனே! என் சலை யாம் வேதவியாதனுக்குச்சேடன் வடிவு காட்டவேண்டி புன்னகதருவாவே ன், ஆதலாலித்தலத்திஞமம்புன்னக வனமாம். இதுவுமூவருமிருக்கு ஞா ஞரணியமாம், நம்மைவித்துவான்களென்றறிதி, என்று மாயனருள; நின் பாததீர்த்தமளிப்பாய் நின்சொரூபத்தைத் தரிசித்தவர்க்கிட்டகாமிய மீவாய் என்றன்னவூர்திவேண்ட; அப்படியே புரிதுமென்றரி அருள்; அயன்றேவர் முனிவர்சூழந் தென்கடற்கரையிற் சென்றான். அவ்வேதனுக்குச் சீதரன் பாததீர்த்தமளித்தனன்; அதிலனைவருமாடினர் ஆடிமல நீக்கி முத்தியளிக் கும் விஷ்ட்ணு தீர்த்தமென்று பெயரிட்டனர். குண்டிகையினிரப்பினர்; வானமுநதிஞு மதுரிப்பென்றனர். அதன்பின் வேதனுஞ் சத்தியலோகத் தடைந்தனன். மாலும் தலத்திலுயர்ந்த வேதவனத்தடைந்தனன். இனி ப்புன்னக வனத்தியல்பைக் கேண்மினென்று சூதரோதுவார். வியாதன் வேதவனத்தில் வந்து தவஞ்செய்ய; அவன் முன்மாதவன் வந்து நின்கருத் தென்னையென; அயன் சேடனுருவைக் காட்டென்றுசெப்ப; என்வடிவமா கிய வி்வேதவனத்திற் காண்க வென்று அந்தனற்கறைந்தகன்றனன். அப்போதவ்வெல்லையைப் பார்த்திவனின்றனன். புன்னைமரமானது சிறிய வடிவாய்ப் பாதலத்தினின்று புறப்பட்டு அவ்வியாதன் மெய்புளகெழ முன் ரேன்றி வந்தெழலும், பூமிதேவியின் சரீரமின்னலாய்ப் பிரகாசிக்க, அம் முனியற்புத மற்புதமென்றுவியக்க, பெருமைபொருந்திய செம்பொன் னிலைபெற, மறைவாழ்த்த, அவ்வனத்தினிலைபெற்றது. வேதவியாதன் மாயனுருக்கொண்டு தாதலராநின்ற புன்னை விருக்ஷமாக வெழுந்து நின்ற மாதவனைத்தொழுது, அன்புதழைந்து, பொற்பாத! விநோத! எங்நாத! வி பேத! பரந்தாமப கேசவனே! என்று துதித்தனன். அவ்விடத்தில் ஆயிர ம்பணமகுடத்தோடும் பொன்னுகிய மேனியோடும் எங்கும் வியாபகமாகிய சோதியென்னுஞ்சேஷ! நீயெடுத்திரா நின்றவிவ்வுரு நீங்கிப், புன்னைவிரு

க்ஷமே யாய் உன்னைத்துதித்தார்க்கு மெஞ்ஞானமும் அன்பும் அளிப்பா யென்று புகன்றபின், அந்த நாராயணன் பூக்கணிறைந்த புன்னைமரமாயி னன். இதனை சேவித்தார்க்கு நன்மைசெய்து எண்ணியயாவும் அளிப்பே னென்று வியாதனோடோதினன். நிலைபெற்ற புன்னகவனமுகுந்தனைப் பி ரதக்கணஞ்செய்தவரும் அருச்சனைசெய்தவருந் தேவலோகத்தினிலைபெற்றி ருப்பர். நாரதன் பராசுரன் அம்பரிஷன் சாத்தவீரியன் வீட்டுமன் புண்ட ரீகன் பிரகலாதன் இவர்கள் மாலைப்பூசித்து முத்தராயினர். அகத்தியன் அசுபதி கலாவதி இவர்கள் புன்னகவனத்தின் மாலையருச்சித்துப் பேற வடைந்தனர். இவ்வேதவனந் தேவரான்மகசதுவப் பெற்றது. இதில் ஏகா தசியுபவசித்து எம்மானைத்துதித்துத் துவாதசியிற் புன்னகவனத்தத்தனைப் பிரதக்கணஞ்செய்யிற் பாவவெவ்வினைபோம். அத்தலத்துக்கு வைகுண்ட மே சமானமென்று முனிவரர்க்குச் சூதர்சொன்னார்.

முற்றிற்று.

## உச-வது மதுசூதனனை அகத்தியன் பூசித்த சருக்கம்.

சூதனன் றிவ்வா றியம்பமா தவர்தொழு துமது
சூதனன் றியனை யன்பொடு வழிபடுந் தொன்மைப்
போதனன் றுறையெனச் சொல்வான் கடமுனி புகழ்ந்துப்
போத னன்றெழுந் தாணுவைப் பூசனை புரிந்தான். (க)

புரிந்து தங்குறும் போதுதும் புருப்புலர் போது
தெரிந்து மாமது சூதனன் முன்னுறித் தேமல்
சொரிந்த தாமெனத் தேவகாந் தாரியைத் தொடுத்தே
பரிந்து பாடவின் னுடரவ் விசைவழிப் படர்ந்தார் (உ)

படர்ந்து விண்டுவை வழிபடு நறுமலர் பலங்கொண்
டடர்ந்து தேவராங் குற்றுழி யாங்ககத் தியனுங்
கடந்து புன்னையின் வனத்ததி சயமெலாங் கண்டு
துடர்ந்து சோமவா ரந்திக மூவாவினுட் சுகந்தான். (௩)

என்று பங்கய வாவியின் மூழ்கிநீற் றினைவேய்ந்
தன்று கண்டிகை புனைந்துவிண் டுவையா னுக
முன்றன் மாதரை யெனுமிரு வரைவரை மகளுந்
துன்று கங்கையு மாகவே நினைந்தலர் சொரிந்தான். (ச)

மிருது வாயுயிர்க் காரமு தூட்டுகோ விந்தா
பருதி யாதிதே வரைப்புரந் தருந்துகோ பாலா
கருது மன்பர்த மிதையபங் கயமலர்க் கண்ணு
சுருதி தான்புக ழச்சுதா வருளெனத் துதித்தான். (௫)

அற்றை ராத்திரி முற்றும்மிவ் வாறருச் சித்த
மற்றை மாதவன் முன்னமா தவனுமே வந்தே
யிற்றை நாள்வரைக் கிவ்வண்ணம் பூசைகொண் டிலன்யான்
கற்றை வார்சடை யானையே யானெனக் கண்டாய். (௬)

அரியு மாகியங் கரனுமா யிருப்பதொன் றதுதான்
பிரியு மாறிலைத் தெரியுமா றுனக்கலாற் பெரிதா
லரியு மானநான் றிரிகுடா சலத்துனக் கரனாய்ப்
பிரியு மாறுருக் காட்டினன் கண்டனை பிறிதே. (௭)

வேட மானது தான்பல வெடுக்கினு மீண்டவ்
வேட தாரிதா னொருவனு னவனென வேறே
வீட தாஞ்சிவ சாயுச்சியங் கயிலையி லீய்து
மீட தாகுமிப் பதிசிவன் பதியுண ரென்றான். (௮)

என்னு மான்மொழிக் கியைந்துவந் திறைஞ்சின னிருந்தா
னென்னு மாதவன் றனைமுனி வரர்தொழு தினிநீ
பன்னு மாயனைக் கருடனர்ச் சித்ததோர் பானமை
துனனு நான்மறைச் சூதனே சொல்லெனச் சொல்வான். (௯)

முற்றிற்று. ஆகத்திருவிருத்தம் ௬௪௬.

## ௨௪-வது மதுசூதனனை அகத்தியன் பூசித்த சருக்கம்.

சூதரிந்தப் பிரகாரஞ்சொல்ல மாதவர் தொழுது மதுசூதனனை யன்போடு வழிபடுமியல்பை யுரையென்று கேட்கச்சொல்லுவார். கடமுனிதானுவை முன்னர் பூசனை புரிந்து இருக்குங்கால் விடியற்காலையில், தும்புரு மதுசூதனன் முன்போய்த் தேன்மழை பொழிந்ததுபோலத் தேவகாந்தர ராகமெடுத்துப்பாட; தேவர்கள் அவ்விசைக்கு நெருங்கி வந்துநறு மலர் பல கொண்டு விண்டுவை வழிபட்டு அங்கிருக்கையில், அகத்தியன வந்து புன்னை வனத்ததிசயமெல்லாம் பார்த்துச் சோமவாரங்கூடியவமாவாசியில் பங்கய

வாவியின் மூழ்கி நீறுகண்டிகை புனைந்து, விண்டுவையரனாகவும் இலக்குமி பூமிதேவி இவரைப் பார்வதி கங்கையாகவும் தியானித்து அருச்சித்து, உயிர்களுக்காரமுதூட்டுங் கோவிந்தா பருதிமுதலிய தேவரைக் காத்தழிக்குங் கோபாலா கருது மன்பரதிதய பங்கயமலர்க் கண்ணா சுருதிதொழு மச்சுதா அருளென்றுதுதித்து, அன்றிரவுமுழுது மர்ச்சித்தான். மாதவன் மாதவன் முன்வந்து இற்றைநாள்வரை இவ்வண்ணமியான் பூசைகொண்டிலன்; கற்றைவார் சடையானென்றே என்னைக்கண்டனை; அரியாயும்மரனாயு மிருப்பது ஒன்றேதான் இரண்டில்லை. இது தெரிதல் உனக்கல்லான் மற்றையர்க்குப் பெரிதாம். அரியான நான் உனக்குத் திரிகூடாச[illegible]த்தில் அரனாகக்காக்ஷிகொடுத்தனன்; அது தரிசித்தனை. வேடம்பல்வெடுக்கினும் வேடதாரி ஏகனா அநேகனா? மோக்ஷவீடாகிய சிவசாயுச்சியம் கையிலையிலேகுதும். இத்தலம் அக்கையிலைக்குச் சட[illegible]னமென்றுணருவா யென்றருளக் கடமுனி துதித்திருந்தனன். என்றுசொல்ல, முனிவரை முனிவர்தொழுதுமாயனைக்கருடனபூசித்த தன்மையை யோதெனா; சூதர்சொல்வார்.

முற்றிற்று.

## உரு-வது மதுசூதனனைக் கருடன் பூசித்த சருக்கம்.

கத்துரு வினதை யென்னுங் கன்னிய ரிருவர் மூத்தாள்
பித்துரு வாமை யெல்லாம் பெற்றனள் கருட னோடு
மித்துரு வருணன் றன்னை வினதையும் பயந்தாள் தம்மிற்
சத்துரு வாகி த்தாயத் தார்களாய்க் கறுவு வாரால். (க)

கடுவர வினத்துக் கஞ்சிக் கலுழனு மருணன் றானு
நடுவரு வினதைத் தாய்பா னண்ணி னண்ணலருக் கெங்கா
தடுவர வோருபாய மறைதியென் றறைய வன்னார்
கெடுவர்கா சிபன்பாற் சென்றுற் கிருபைசெய் திடுவ னென்றாள்.

தாய்மொழி தலைமேற் கொண்டு தங்குகா சிபன்பா லன்பாற்
போய்மொழி பகர்வ ருன்பாம் புகலடைந் தனம்யாம் வெய்ய
தீய்மொழி மருவார் செய்யுந் திறமொழித் தருளு வாயென்
றேய்மொழி முன்சொன் னார்பி னென்சொன்னா ரிதுசொன் னரால்.

ஞாதியா மவர்க்குப் பின்னர் நமக்குமே பகையில் லாத
னீதியா யருள்தி யென்று நின்றன னருண நீதி
யேதியான் பகையை வேறற் கியல்புதங் தருளு வாயென்
[illegible]றிமைக் கலுழனுஞ் சொல்வான். ()

ஆலமே யரவுக் கீய்வோ னுதவ னவன்பாற் போயுன்
சீலமே யுரைத்தி யேனுன் சிந்தனை முற்று மீரேழ்
ஞாலமே புகழு மென்று நன்கரு ணனுக்கன் றோதிக்
காலமே வெல்லுங் கோரக் கருடனுக் கியம்ப லானன். (௫)

கனமயேஎ் திரவெற் பிற்குக் கருதுதெற் காக ஞான
வனமதன் றென்பால் வேத வனமதில் வனசஞ் சேர்காஞ்
சனமது சூத னன்பொற் சரணமே சரண மென்று
தினமருச் சனைசெய் தாலுன் சிந்தனை முடியு மென்றான். (௬)

வேறு. மீறு சந்தன வனமடைந் தரிபத மீதி
லாறு திங்களர்ச் சித்தபின் வெளியில்வந் தண்ணல்
கூறு நின்கருத் தென்னென வென்பகைக் குலத்தை
நீறு செய்யநின் னூர்திய தாகவே நினைத்தென். (௭)

என்ற பக்கிரா சன்றனைப் பார்த்தவ னெட்டாய்
நின்ற நாகமு மவற்றின தினமுநின் னிழல்போ
யொன்ற வேவலி குறைகவென் னூர்தியாயுறைக
மன்ற நீயுனை நினைப்பவர்க் குறும்விட மாய்க. (௮)

உன்னு டைப்பெய ரின்னகர்க் குறுகவென் றுவந்தே
பொன்னு டைப்பிரா னருளின னிந்தமா புரியின்
றன்னு டைப்பெயர் சந்தன வனமெனுந் தன்மை
யென்னு டைத்திரு முனிவிர்காள் கேண்மினென் றிசைத்தான். ()

அயன்வி தித்தவப் பொருளெலாஞ் சுமப்பதற் கரிதென்
றியனி லத்திரு வர்ச்சனை செயவரி யெதிர்ந்தே
பயன்வி ளைத்தகூர் மமும்புயங் கமுமெனப் பரிப்பன்
வியனி னைத்துநீ யஞ்சலென் றுரைத்தக விருப்பால். (௰)

பூவி ளைடரி பொருந்தின னக்குணம் பொலிந்தே
மேவி யப்பதி சந்தன வனப்பெயர் விளைந்த
தாவி யன்னமா முனிவிர்கா ளின்னமொன் றறைவ
னீவிர் கேண்மினென் றுரைத்தனன் கலாபதி நீர்மை. (௧௧)

முற்றிற்று. ஆகத்திருவருத்தம் ௬௬௰.

## உடு-வது மதுசூதனனைக் கருடன் பூசித்த சருக்கம்.

கத்துரு வினதை என்றிரண்டு பெண்களின் மூத்தாள் ஆமையரவெல்லாம் பெற்றனள். வினதை அருணன் கருடனைப்பெற்றனள். இவ்விருதாரத்துமக்களுஞ் சத்துருவாய்ப் பகைஞரானார்கள். கொடிய சர்ப்பங்களுக்குக்கலுழனும் அருணனுமஞ்சி வினதைத் தாயிடஞ்சென்று சத்துருக்களின் பகைமைகெடவோர் உபாயஞ்சொல்வாயென்றறைய; காசிபன்பாற் சென்றால் அவன்கிருபையால் அனைவர் கெடுவரென்றாள். தாய்வார்த்தை தலைமேற் கோளீஇ காசிபன்பாலன்பிற்போய்க் கொடுமை மொழிகின்ற சத்துருக்கள் செய்யுந் தீமையொழித்தருள உன்பாலியாம் புகலடைந்தனம், ஞாதியாமவர்க்கும் எமக்கும் பகையில்லாத நீதியாய்! அருள்செய்வாயென்று மொழிந்து அருணனின்றனன். கருடன் யான் பகையைவெல்லுதற்கு ஏதேனும் ஒரு பாயந்தருள்வாயென்று மொழிந்தனன். விடத்தையரவுக்கீவோன் ஆதவன் ஆதலால் அவன் பாற்போய் நின்குறைகளை முறையிடுவாயாயின் உன் கருத்து முற்றப்பெறும் ஈரேழுலகமும் புகழும் என்று அருணனுக்கறைந்தான். மயேந்திரகிரிக்குத் தெற்காயுள்ள ஞானவனத்தின் றென்பால் வேதவனத்திலுறையு மதுசூதனன் சரணமே சரணமென்று தினமருச்சனைசெய்யில் உன் கருத்து முற்றப்பெறுமென்று கருடனுக்குக் கழன்றான். சந்தனவனமடைந்து முகுந்தனடியிலாறுமாதம் அருச்சித்தபின் பிரசன்னமாய் நின்கருத்தென்னையென; என் பகைக்குலத்தை நீற்ற நின்னூர்தியாக நினைத்தனனென; பட்சிராசனைப்பார்த்து அட்டநாகமும் அவற்றினதினமும் நின்னிழல் படவலிகுறைக, என்னூர்தியாயுறைக நின்னைத்தியாநிப்பவர்க்கு விடமாறுக என்றுவிண்டு அருளினன். அதுமுதலிந்நகரத்துக்குச் சந்தனவனமெனுந் தன்மை முனிவிர்காள்கேண்மின். அயன் படைத்த பொருளெலாஞ் சுமத்தற்காற்றிலளாய்ப் பூமிதேவியருச்சிக்க, அரிகாட்சிகொடுத்து ஆமை அட்டநாகமா யான்வடிவெடுத்துச்சுமப்பன் நீ யஞ்சேலென்றகவிருப்பாலருளிப் பூவினோடுபொருந்தினன். அக்குணநிறைந்துபொருந்தியதனாலப்பதி சந்தனவன மெனப்பெயர்விளைந்தது. ஆவிபோன்ற முனிவீர்காள் கலாவதிச் சரிதங்கேண்மினென்று சூதருரைத்தனர்.

முற்றிற்று.

## உசா-வது கலாவதிசரிதைச் சருக்கம்.

எதிரி லாவசிட் டன்குலத் தெய்தினோ னிரவி
கதிரி லாகுதி யியற்றுமா தவன்றரு காளை
முதிரி லாமதித் தாணுவே பொருளென முயன்றோ
னதிரி லாமறை யங்கமா கமமுணர்ந் தறிந்தோன். (க)

பெரிய தன்மைய னெச்சனெ னும்பெயர்ப் பிரம
சரியன் றனுவைப் பணிந்துபின் றனுதீ ரத்தி
லுரிய னாகவே படிந்துவக் கிரகிரிக் கோர்சா
ரரிய நண்பக லாதவன் கதிருறைத் தழல. (உ)

ஆக முற்றும்வே ருள்ளவோர் கள்ளிநீ ழலைச்சார்ந்
தாக விச்சுவ ரூபமாங் கீதையை யுரைத்திட்
டேக வத்துவை யு துதிசெய்து தாகமு மிளைப்பும்
போக மற்றவன் றனதிடத் தின்புடன் போனன். (௩)

போன பின்னொரு மண்டலத் தண்டரும் புன்மை
யான கள்ளியுள் ளுலர்ந்திறந் தம்முனி யறைந்த
ஞான கீதையைக் கேட்டலால் வைகுண்ட நண்ணிப்
பான நன்னிற மாலையுங் கண்டடி பணிந்தே. (௪)

தன்பி றப்பையு முணர்ந்துபின் சுசீந்திர தானத்
தின்பி றப்பரும் பானுசே கரனெனு மிறையோற்
கன்பி றப்பிலாத் தேவிபா லுதித்துமங் கையராம்
புன்பி றப்பிலா ரமுதொடும் பிறந்தபின் போன்றாள். (௫)

கீத மாகிய கலையெலா முணர்ந்தவிங் கிதத்தாற்
போத மானக லாவதி யெனப்பெயர் புனைந்தாள்
மாத மாமதி வளர்ந்தெனக் கலையொடும் வளர்ந்த
நீத மான்கு ணமனைத் தையுந்தெரிந் தனனிருபன். (௬)

வேறு.

சுயம்வரஞ் செயவே வேண்டுந் தொழிற்பொருள் யாவுந் துன்ன
நயம்வர வமைத்துப் பின்னூர் நானிலத் திறைவர் தம்மிற்
செயம்வர வனப்பு வாய்ந்த தீரரை வருவித் தேயோ
வியம்வரும் வதுவை மண்ட பத்தினின் மேவச் செய்தான். (எ)

அண்ணிய சுசீந்தி ரத்திற் கயற்கயேந் திரபு ரத்திற்
பண்ணிய வதுவை மண்ட பத்திலெந் தலரம் பேந்துந்
திண்ணிய னெனவன் னோர்கள் சிறந்திருந் தனரப் போதிற்
புண்ணிய வடிவ னெச்சன் போந்தனன் வதுவை காண்பான். ()

அந்தணர் சூழ வத்திரி யாச்சிர மத்தி லெச்சன்
வந்தன னூழா லங்கண் வதிந்தனன் கவுரி பாதச்
செந்தணங் கமலத் தேசாத் தியமலர் மாலை யேந்திக்
கொந்தள வியதார் மன்னர் குழீஇயமண் டபத்தைச் சார்ந்தாள்.()

எண்ணிலா மடந்தை மாரோ டெய்திய தையன் மூரல்
வெண்ணிலா வெறிப்ப நோக்கும் வேந்தரை வெறுத்தே யெச்சற்
குண்ணிலா வுவகை மீ ணண் டென்றொடை வனைந்தாள் விண்
மண்ணிலார் விதியை வெல வல்லவர் சொல்லுங் காலே. [ணின்

இருந்திடு மன்னர் வெட்கி யெச்சனோ டமரா டற்குத்
திருந்திடுங் காலை மாலை சிந்தனை செய்யச் செய்யாள்
பொருந்திடு மிக்காம் பக்தி புரத்துமாய வனன் றருள்
வருந்திட விவற்கு வெற்றி வந்திடக் கருணை கூர்ந்தான். (கக)

கண்ணனை தருளி னாலே கருதல ரிரியக் கணட
வண்ணன்மா தவனுஞ் சந்த னுடவி யடைந்து மேக
வண்ணனை மத்தை வாழ்த்தி வதிந்தனன் வனிதை யோடு
முண்ணலம் பருகி யங்க ணுறையுநா டன்னி லோர்நாள். (கஉ)

எச்சன்றன் கீதை காதி லியற்கலா வதியு மேற்றுப்
பைச்சென்ற விறத்துமாயன் பதத்தல ராலர்ச் சித்தாள்
மெச்சென்றங் கிருந்த வேத வியாதன தெவ லாலே
யச்சென்ற மாய னக்கி ராலைய மதனைச் சேர்ந்தான். (கங)

முற்றிற்று. ஆகத்திருவிருத்தம் சுஎங.

## உசு-வது கலாவதிசரிதைச் சருக்கம்.

சமானமில்லாத வசிஷ்டகுலத்தில் வந்தவனும், சூரியகிரகணத்திலாகுதி யியற்றுமுனிவன் பெற்றகுமாரனும், இளம்பிறைதரித்த தானுவே பொருளென முயன்றவனும், வேதம் அங்கம் ஆகமம் அறிந்துணர்ந்தவனும், எச்சனென்னும் பெயர்பெற்றவனும், பெருமையுடையவனுமான வொருவனிருந்தான். அவன்றானுதீர்த்தத்தின் மூழ்கித் தானுவைப்பணிந்து வக்கிர பருவதத்தோர் சார்பில் அரிதாகிய வுச்சியம்போதில் ஆதவனக்கினியாயெரிக்கச், சரீரமுற்றும் வேர்வைதுளிக்க ஒரு கள்ளியினிழலைச்சார்ந்து, விசுவ

ரூபமாங்கீதையைப் பாராயணம் பண்ணி ஏகவஸ்துவைத் துதிசெய்து தாகமும் போகமும் இளைப்பும் அற்றுத், தனதிடத்திற்குப்போனான். போனபின் னொருமண்டலத்திற் கள்ளியுள்ளுலர்ந்திறந்து, அம்முனி யறைந்த ஞான கீதையைக் கேட்டதாற் சார்தற்கரிய வைகுண்டத்தையடைந்து, மாலைத்தரிசித்தடிபணிந்து, தன் பிறப்பையுணர்ந்து, சுசீந்திரத்திற் பாநுசேகரனென்னும்அரையன்பால் அன்பிற் றப்பிலாத்தேவியிடத்துதித்து, மங்கையராம்புன் பிறப்பிலாரமுதோடும் பிறந்தமின்னை யொத்தாள். கீதமெல்லாமுணர்ந்த சந்தோஷத்தாற் போதமான கலாவதியென்று பெயர்புனைந்தான். பிறைகலையோடும் வளர்ந்ததுபோல வளர்ந்தனள். அரையன் அவள் குணமனமுணர்ந்து சுயம்வரஞ்செய்யவேண்டுந் தொழில்களுக்கான பொருள்களியாவுஞ்சேகரித்துப், பின்னர் நானிலத்துள்ள விறைவரிற் சுயம்வரப்பருவம் வாய்ந்தவீரரை வருவித்து, சித்திரமமைந்த கலியாண மண்டபத்திருப்பச்செய்தான். சுசீந்திரத்துக்கடுத்த கயேந்திரபுரத்தியெற்றிய வதுவை மண்டபத்தில் ஐம்மலர்க்கணையேந்து மன்மதனென்ன வன்னோர் சிறந்திருந்தனர். அப்போது புண்ணியவடிவனான எச்சன் அந்தணர் சூழும் அத்திரியாச்சிரமத்திற் கலியாணம் பார்க்கலூழ்வலியாற் சென்றிருந்தனன். கவுரிபாதத்திற் சாத்திய மலர்மாலையேந்திப், பூக்கொத்தளாவிய மாலைதரித்த மன்னர்கூடிய மண்டபத்தில் எண்ணிலா மடந்தையரோடெய்திய விம்மாதின் மூரல் வெண்ணிலா வெறிப்ப, நோக்கும் வேந்தரை வெறுத்து, எச்சற்கு உண்ணிலா வுவகைமீக்கொள மணமாலைதரித்தாள். விண்மண்ணுள்ளாரில் விதியைவெல்ல வல்லவரியாவர்! அங்கிருந்த மன்னர் வெட்கி யெச்சனோடமர்செய்ய; விவன் மாலைச்சிந்திக்க; பக்ஷிபுரத்து மாயவன் இவர்க்குவெற்றிவந்திடக் கருணைகூர்ந்தான். கன்னன தருளினாலே சத்துருக்களிதய தாமரை மலரிரியக்கண்ட வண்ணலாகிய வெச்சனுஞ் சந்தனுடவியடைந்து மேகவன்ன னுமத்தைவாழ்த்தி வனிதையோடு மூண்ணலம்பருகி யங்குறையுநாளிலோர்நாள், எச்சன் கீதைசொல்லக்கலாவதி கேட்டு மாயனைப்பாதத்திலருச்சித்தாள். அங்கிருந்த வேதவியாதனது ஏவலான் மாயன் நக்கிராலையத்தைச் சேர்ந்தான் என்று சூதர் மாதவர்க்குச் சொன்னார்.

முற்றிற்று.

## உஎ-வது நக்கிராலையச் சருக்கம்.

என்ற சூதனை நோக்கியவ் வேந்திழை
நன்ற தானக்கி ராலைய நாடியே
சென்ற செய்கை முனிவர செப்பென
வன்றன் னோருக் கறைகுவ னன்பினால். (க)

பானு சேசரன் பைங்கொடி யாட்கொரு
சூனு வின்றெனத் துன்புற வேயெச்சன்
றூனுந் தன்னுயிர்த் தையலும் வேதனை
யானும் வேதவி யாதன்முன் வந்தனர். (உ)

வந்து மூவரு மாதவ னைத் மூ
திந்து வானுத லிங்கிவ னு---ரு
டந்து நீயொரு சந்ததி யெய்திட
மூந்து பாய.மொழிகெனக் கூறுவான். (௩)

விடங்க மாமித்த லத்துக்கு மேற்கதா
மிடங்க ராலைய மாமதி லேணமாய்
மடங்க லாயின மாயன் சுயம்புவா
யடங்க லாயின னன்னவன் முன்னமே. (௪)

பன்னும் வேதப் பருவத நாரத
ரென்னு மாதவ ரேத்தவ வர்க்குமுன்
மன்னு மாயனம் மாயன் றனைமனத்
துன்னு சிந்தித்த தொக்கவந் தெய்துமே. (௫)

மாலின் றன்மையாம் மாநகர் மேன்மைமுந்
நூலின் றுடதர் னோன்மைகள் யாவுநின்
பாலின் றோதுவன் கேளெனும் பண்ணவன்
காலின் றனம் பணிந்து கலாவதி. (௬)

வேறு.

நிற்பதா லுரைப்ப தானு னிடுமுன் னுளிற் சாடும்
வெற்பதாம் படியோர் வேழம் விருப்பதாய் விண்டு விண்ட
பொற்பதாம் புயத்தி லேயம் புயத்தினு லருச்சித் தல்லா
லற்பதாங் கவளங் கொள்ளா தன்பதா ரிடத்தென் றுண்டோ. (எ)

தினமுமிவ் வாறு பூசை செய்யவோர் பன்னீ ராண்டு
கனமுமில் லாது பொய்த்த காலமுங் கமலந் தேடி
மனமுவந் தருச்சித் தேத்தி மருவுநா ளொருநா ளெந்தப்
புனமுமா வனமுந் தேர்ந்தம் புயமிலா தயர்ந்த தன்றே. (அ)

ஒருதடங் தனிலோர் பூக்கண் டோடியங் குடனே சாடித்
தருதடங் கமலங் கொணடு சார்பொழு தோர்வன் மீனுட்
கருதடங் காத சீற்றக் கனலொடு கவ்வ வவ்விப்
பொருதடர்ந் திடுவ னென்னப் புனலிடைப் பொருத போரே. ()

நீரிற்கொண் டுறுங்க ராவை நெடுந்தடங் கோட்டாற் குத்திப்
பாரிற்கொண் டுறுங்கை மாவிப் படிபல பகல்வி டாமற்
போரிற்கொண் டடலந் தேம்பிப் புந்திநொந் தலேக்கண் டுஞ்சு
மூரிக்கொண் டலேயே யாதி மூலமென் றழைத்த காலம். (ய)

இவ்விடத் தாதி மூல மென்றழைத் திட்ட வோதை
யவ்விடத் துறங்கு மால்கேட் டாழிசங் கங்கை தாங்கி
வெவ்விடத் தராவி ரோதி மேற்கொடு வேழ நின்ற
வுவ்விடத் தெய்தி நேமி யுய்த்தன னிடங்கர் மாய. (கக)

கண்டமூ தண்ட மெங்கும் கலந்தவா சரணம் பத்தி [றென்
கொண்டதொன் டரைவந் தாளுங் கொண்டலே சரண மென்
றண்டர்பூ மாரி பெய்தா ரகிலங்க ளனைத்துங் காப்போன்
விண்டதோர் யானே காத்த விகற்பமும் வியப்ப தாமே. (கஉ)

அரியையந் தத்திற் காண்கை யாற்றிகி ரியினுன் மாய்ந்த
வுரிமையா லுடன்வை குண்டத் துற்றதங் குறவே யுண்மை
தெரியவந் தமையான் மாயன் றிருவடி தொழுது னன்பர்க்
கெரியவெந் துயர்செய் தேனென் றிரங்கிநொந் திடங்கர் கூறும். ()

உனேயருச் சிப்ப தேபே றுனதடிப் போதிற் போது
தனேயருச் சிப்ப வேயோர் தலம்புக லெனமெஞ் ஞானத்
தினேயருச் சிப்போர்க் கீயுஞ் சிவன்சுசீந் திரத்தின் மேற்கா
யெனேயருச் சித்தே கீத யாழ்முனி யிருப்ப தாமால். (கச)

நாரத க்ஷேத்ர மென்னு நாமமந் நகர்க்கு நண்ணும்
பேரதன் றூன மாகீ பெயர்தியத் தலத்தி லென்னச்
சீரது பெற்றே னென்று சென்றுமுன் னுருக்கொண் டன்று
சாரதர் போற்று மாயன் றனேயருச் சித்த தன்றே. (கரு)

அன்றுதொட் டதற்கு நக்கி ராலைய மென்னு நாமந்
தொன்றுதொட் டுற்ற தென்னச் சொற்றனன் சொற்றான் பின்னுங்
கன்றுதொட் டலர்ந்த கைக்க லாவதி கேட்ப நல்யா
ழொன்றுதொட் டிசைக்கு நார தன்கதை யுரைக்க லுற்றான். ()

வேறு.

பறுவத நாரத ரென்னும் பண்ணவ
ரறுபத மருவுதா ரம்ப ரீடனுங்
குறுவதா நன்னக ருற்றன் னோன்மகப்
பெறுவதற் கியன்மகம் பேணி னனரோ. (கஎ)

இந்தநல் வேழ்விய தியற்ற வோர்மகன்
வந்தன னவனொடும் மன்ன னன்னவர்
தந்தனி மலரடி தாழ வாழ்கவென்
றந்தண ரெழுந்தன ரவண்விட் டேகவே. (கஅ)

அவ்வகை யறிந்தன னரச னந்தணீ
ரிவ்வகை நினைக்கில்யா னேகுவேன் வனத்
துய்வகை யிவணமர் துறைகு வீரென
மெய்வகை முனிவர்தம் வேட்கை கூறுவார். (கசு)

கருத்தினின் புதல்வியைக் காதல் கூர்ந்துளேம்
வருத்தினந் தருதியம் மாதை யென்றனர்
பொருத்தினு மிவண்மனம் பொருந்து மோவிவர்க்
கொருத்தியை யிருவர்வேட் டிடுத லொக்குமோ. (உ0)

ஏதினி யியம்புவ திவர்க்கிச் செய்தியிப்
போதினி லவட்கென புகல்வ தென்னுமித்
தீதினை நினைந்திறை தேம்பும் வேலையம்
மாதினி துணர்ந்தொரு வாய்மை கூறுவாள். (உக)

அம்முறை முனிவரர்க் கைய வன்னவ
ளெம்முறை சூட்டவடி ளிருவர்க் கோர்தொடை
மெய்முறை யேவரைச் சேர்வள் வேதத்திற்
செய்முறை யெனிற்செய்தி ரென்று செப்பென்றாள். (உஉ)

செப்புறு மிம்மொழி செம்மல் கூறவுள்
வெப்புறு மிருவரு மிருப்ப வேந்தனு
மொப்புறு சுயவர முனூற்ற வன்னரி
லப்பறு வதனும்மை குண்டடத் தாயினுன். (உ௩)

ஆயவின் டுவைத்தொழு தம்ப ரீடன்பான்
மேயதஞ் செயலெலாம் விளம்பி நாரதற்
கேயமற் கடமுக மெய்தச் செய்யென
மாயனற் றுகென வணங்கிப் போந்தனன். (உ௪)

போந்தவ னிருப்பநா ரதனும் பூமகள்
காந்தனை யடைந்திவை கழறிக் கோகினங்
தாந்தனி றுகம்பறு வதனுக் காக்கென
வேந்தனு மன்னதா கெனவிங் செய்தினன் (உ௫)

மற்றவள் விழிக்கிவர் வதன மந்திகோ
குற்றமா முகமதாய்த் தோன்ற வாங்கிவர்
பெற்றபே றெனச்சொலப் பெரிய ரேனுஞ்செய்
குற்றமே விடாதது கொண்டு கூட்டுமே. (உ௬)

வேறு.

இருவருங் கவலை கூர்ந்தவ னிருப்ப விருரிலத் தாசிளங் குமர, ரரும்வருந் துறல்பார்த் துறையும்வா னவர்போ லங்குற வதுவைமண் டபத்திற், றிருவர முனிவ ரிருவரி லொருவாச் சிந்தைசெய் யென்றனன் றந்தை, மருவருங் குழன்மா தழலிலங் குதித்தான் மாயனம் மாயனை மணந்தாள். (உஎ)

காதன்மா முனிவ ரிருவரு மெமக்காங் கன்னியை வன்னியி லுதித்துத், தாதுலாந் துளவோ யெமையிகழ்ந் தனைவஞ் சனைமணஞ் செய்தனை யினிநீ, சூதுலாங் கொங்கைத் திருவினை யொருவித் துன்பமே பெறுகெனச் சொன்னு, ராதலான் மாலு முனிவிர்நீ விருமில் லறம்புகா தொழிதிரென் றறைந்தான். (உஅ)

வேறு.

தவிர்க்கரு முமது சாபந் தனைத்தச ரதன்சே யாயுற்
பவிக்குநாட் பதினு லாண்டிற் பாற்றுவ னென்றுன் பார்மேற்

கவிக்கும்வெண் கவிகை யம்ப ரீடன்மிக் காஞன் யார்க்குங்
குவிக்குமங் கரத்த ராய்க்கோக் குமரரும் பணிந்து நின்ருர். ()

அந்தவே லையிலம் மாலை யருந்தவர் பணிந்து நீமுன்
றந்தவா னனமுன் போலாந் தன்மையோ தென்னத் தென்பா
லெந்தவே லையில்வ டாதோங் கியல்வன்மீ ஞலை யத்தின்
வந்தசோ கின்பாற் சென்று மாதவம் புரிதிர் மாதோ. (௯௰)

வருவன்யா னும்பால் வந்தென் வால்வளைப் புனலான் முன்போற்
றருவனும் முகத்தை யென்னச் சம்மதித் தவரங் கேகிப்
பெருவன்மீ ஞலை யத்திற் றவஞ்செயப் பெருமான் போயாங்
கிருவர்தம் முகமு நன்கா யியற்றினன் சங்க நீரால். (௯௧)

ஆதலாற் சங்க தீர்த்த மாமெனுந் தடமொன் றுண்டாற்
றீதெலா மகற்று மங்கண் செங்கண்மா லாழிச் சங்கென்
ருேதலாம் வடிவி னேடாங் குறைவனவ் விறைவன் றன்னைக்
காதலா லருச்சிப் பாயேற் காதலர் பெறுவை நீயே. (௯௨)

கல்விசேர் சொல்வி யாதன் கலாவதிக் கிவ்வா ருேதிச்
செல்விபூ மாதத் தானத் தினிற்றவஞ் செய்து கஞ்ச
நல்விலோ சனன்றன் மார்ப நண்ணினள் நண்ணு மந்தச்
சொல்விசே டத்தாற் செய்யா ணகரென்ப ரெனவுஞ் சொன்ஞன்·

அருந்தவன் சொலக்கேட் டந்த வாலையங் தனிற்போய் மாலைப்
பொருந்தவன் பினிலர்ச் சித்துப் புத்திர ரவள்பெற் ருளென்
றிருந்தவன் சூதன் வேதர்க் கியம்பின னியம்பி யுள்ளந்
திருந்தவன் றவர்க்குப் பின்னு மோர்கதை செப்பு வாஞல். (௯௪)

முற்றிற்று. ஆகத்திருவிருத்தம் ௭௦௭.

## ௨௭-வது நக்கிராலையச் சருக்கம்.

என்றுசொன்னசூதரை முனிவரர் பார்த்து அவ்வேந்திழை நக்கிராலைய நாடிச்சென்ற சரிதத்தைச்சொல்வீரென; அன்பிற் சொல்லலாயினர். பாஞசேகரன், மனைவிக்கு ஒரு மகவில்லையே யென்றுதுன்புற, எச்சன் தானும் தன்மனைபுமாகப் பிரமனையொத்த வேதவியாதர் முன் வந்து தொழுது,

அர்த்தசந்திர நெற்றியுடைய விவட்கும் இவனுக்குங்கிருபைகூர்ந்து, ஒரு சந்ததியுண்டாக வருள்வீரென; இருடி அவரைநோக்கி இத்தலத்துக்கு மேற்காய் முதலையைக்கொன்றவ ராலயமுளது, அதிற்பன்றியாய் நரசிங்கமாயாயினமாயன் சுயம்புவாய் வீற்றிருக்கின்றனன்: அவனெதிரில் வேதபருவதமுளது, அதில் நாரதரென்னு மாதவரேத்தமாயன் காக்ஷிபளித்தனன்; அவனைச்சிந்தியுங்கள் சிந்தித்தவனைத் துங்கைக்கூடும்; திருமால் திருநகர் முனிவரர் இவர்மகிமை யாவுமுனக்குச்சொல்வேனென்கேளென; கலாவதி முனிவரடியிற் பணிந்து நிற்ப, உரைக்கலாயினர். முன்னொருகாலத்தில் இயங்கும் பருவதமென்னும்படி ஓரியானை விருப்பமாய் விண்டுவினிரண்டு பதாம்புயத்தில் அம்புயத்தாலர்ச்சித்தலன்றி, யற்பமுங்கவளங்கொள்ளாது; இவ்வன்பியாவரிடமுளது! நீர்நிறைதலில்லாது பொய்த்தகாலத்துந் தாமரைமலர் தேடிப், பன்னீராண்டுதினமுமனமு வந்தருச்சித்தேத்தி வருநாளிலொருநாள், எந்தப்புனமும் வனமுந்தேடி மலர்காணுமலயர்ந்து, ஒருதடாகத்திலொரு பூவைக்கண்டு ஓடிச்சாடித்தடத்திறங்கிப் பூவைக்கொண்டுகரைசேர்பொழுது, ஒருமுதலை யடங்காத கோபாக்கினியோடு கவ்வி வவ்விப்பொருது அடர்ந்திடுவனென்று சலத்திடையிழுந்துச் சண்டைசெய்தது. நீரிலிழுத்துச்செல்லுங்கராவை நெடியகோட்டாற்குத்திக்கரைக்கிழுக்கு மியானையானது, இப்படிப்பலபகல்போர் கொண்டு உடலந்தேம்பிப் புந்திநொந்து, கடலிற்றுஞ் சும்பெருமைமிகுந்த மேகவண்ணனையே, ஆதிமூலமென்றழைத்தது. இவ்விடத்தழைத்த அவ்வோசையை, அவ்விடத்துறங்குமால் கேட்டுச் சங்கு சக்கரங்கையிற்றாங்கிக் கருடன்மேல் வேகமாய்ச் செல்லவூர்ந்துகொண்டு வேழநின்ற வவ்விடத்தடைந்து முதலைமாயச்சக்கரம் விட்டனன். பூமியந்தரமெங்கும் வியாபித்தவனே சரணம்; பத்திகொண்ட தொண்டரை வந்தாளுங் கொண்டலே சரணம்; என்று அண்டர் பூமாரிபெய்தார். உலகனைத்துங்காப்போன் யானையைக்காத்தது வியப்பாம். முடிவின் முதலை அரியைத் தரிசித்ததாலும், சக்கரத்தான் மாய்ந்ததாலும் வைகுண்டத்தையடைந்தது. அங்கடையவே யதனுண்மை தெரியவர் தமையான் மாயன்றிருவடிதொழுது நின்னன்பர்க்கு வெந்துயர்செய்தே னென்றிரங்கி நொந்து, உனை யருச்சிப்பதே பேறு! உனதடிப் போதிற்போதா னருச்சிக்க வோர்தலத்தை யருள்வாயென; பூசிப்போர்க்கு மெஞ்ஞானத்தை யருளுஞ் சுசீந்திரத்தின் மேற்காய் எனையருச்சித்து நாரதமுனி யிருப்பதால்! நாரதக்ஷேத்திரமென்று அத்தலம் பேர்பெறும் அங்கடைதி யென்றருள; சீர்பெற்றேனென்று முன்னுருக்கொண்டு புலவர் போற்றுமாயனை யருச்சித்தது. அன்றுதொட்டு அதற்கு நக்கிராலயமென்று பேர்பெற்றதென்று சொற்றனர். கை வளையணிந்த கையையுடையகலாவதிகேட்ப நாரதனது கதையை யுரைக்கலுற்றார். பருவதன் நாரதனென்னு மிருமுனிவரர் வண்டுகண்மொய்க்கு மாலையணிந்த அம்பரிடன் பட்டணத்துக்குப்போய்! அவன் மகப்பேறு வேண்டி மகமி யற்றவோர் புத்திரனுதித்தனன். அவனோடவ்வரையன் இம்

முனிவ ரிருவரையுந் தனித்தனி பதத்திற்றொழ; வாழ்கவென் றாசிகூறியந் தணரெழுந்து அவ்விடம் விட்டுச்செல்ல; அன்னதை மன்னனறிந்து, அந் தணிர்! இவ்வகை நினைக்கில் யான் வளர்த்துக்கேகுவன் நீவிரிங்கிருந்தீரெ ன; முனிவரர் இறையை நோக்கி நும்புதல்விமேற் காதலாயுள்ள மெலிந்த னம், அம்மாதைத்தருதிரென்று தம்விருப்பமுரைப்ப; அதற்கரையன், "யா ன் மகளைப்பொருத்தினும்,, அவன்மணம் பொருந்துமோ? இருவர் ஒருத் திபை வேட்டல் ஒவ்வுமோ? இவர்க்கு மறுசெய்தி என்னியம்புவல்? என்றி க்கொடுமையை நினைந்து வேந்தன் றேம்புங்கால்; அம்மா துணர்ந்து பிதா வை நோக்கி ஐய! முனிவரிருவருக்கு ஒருதொடை யெம்முறை சூட்டுவள்? எவரைச்சேர்வள்? இத்தன்மைத்தான மணம்வேதத்திற் செய்ம் முறையெ ன்னே? என்றும், அவரை 'கேண்மினென்றாள். அன்னாள் கூறும் வாய்மை யை முனிவர் முன் மன்னன் கூற, காமாக்கினியுற்ற விருவரும் ஒன்று மு ரையாதிருப்ப; மன்னனது கண்ணுநீஇச் சுயம் வரமுருற்ற; அன்னரிற் பரு வதன் வைகுண்டத்தெய்தி விண்டுவைத் தொழுது அம்பரிடனிட நடந்த தை விண்ணப்பித்து நாரதற்கு மற்கடமுகம் புக்கச்செய்யெனை; மாயன் அ ற்றுகென; வணங்கிப்போயங்கிருப்ப; இலக்குமி தன் மணாளனையடைந் து இவற்றையுரைத்துப் பருவதனுக்குக் கர்த்தடமுகமாக்கென; அவ்வேந்த னு மன்னதாகென; விங்கடைந்தனன். அவள் விழிக்கு இவ்விருவர் வதன மும் குரங்கு கழுதை முகமாயத்தோன்றின. அவ்விடத்திவர் பெற்றபே றை என்னென்றறைவன்! பெரியரேனும் குற்றம்புரியிற் பற்றித்தொடரும்! இங்ஙனமிருவரும் கவலைகூர்ந்தவணிருப்ப, பெரியதேசத்தி ராசகுமாரரும் அமுதங்கிடைத்தல் பார்த்துறையுந் தேவர்கள்போல, அவ்விடத்திருப்ப, வதுவை மண்டபத்தின் மேலான முனிவரிருவரில் விடாச்சிந்தை செய்யெ ன்று தந்தையுரைத்தனன். அப்போது அவ்வோமாணிக்கினியினின்றும் வி ண்டு உதித்தனன். அவனை அரிய வாசனைபொருந்திய கூந்தலாபாரத்தை யுடையாள் விவாகஞ்செய்தாள். ஆசை பொருந்திய விருமுனிவருங்கண்டு "எமக்காங்கன்னியை,, வன்னியினின்றுதித்த அருந்துளவோய! எம்மையி கழ்ந்து வஞ்சனை மணஞ்செய்தனை; ஆதலால் இனிச்சூதுலாங் கொங்கை யையுடைய இலக்குமியை நீங்கித்துன்பமேயடைகவென்று சபித்தார். மா லுமுனிவிர்காள் நீ விரும் இல்லறம் புகாதொழிதிர் என்று எதிர்சபித்தான். அரியும் தீர்த்தற்கரிய வுமது சாபத்தைத் தசரதன் சேயாய்ப்பிறக்குங் காலத் திற் பதினாலு வருட மூலகத்திலநுபவிப்பேனென்றான். புலவர்க்கு மிக்கா ளுனைவெண்கொற்ற குடையையுடைய அம்பரிடனும் அவன் மைந்தரும் யா ர்க்குமேனுேக்கிய கையராய்க் கும்பிட்டுப்பணிந்து நின்றார். அக்காலத்தின் முகுந்தனை யருந்தவர்பணிந்து நீ தந்தமுக முன்போலாந்தன்மையாது? அரு ள்வாயென; தெற்கேயுள்ள விந்தச்சமுத்திரத்தின் வடக்கே செளிப்பு விருத் தியாகின்ற வன்மீனாலயத்தில் வந்து அசோக மரத்தின் கண்டவஞ்செய்வீ ர்; யானும் பால் வந்து வெள்ளிய சங்கதீர்த்தத்தா னும்முகத்தை முன்போற்

றுருவன் எனச்; சம்மதித்து அங்கேபோய் வன்மீனாலயத்திற் றவஞ்செய்ய; விண்டு அவ்விருவர் முகத்தையு நன்காகச்சங்க தீர்த்தத்திலியற்றினன். ஆதலாற் சங்கதீர்த்தமென்றொரு தடாகமுண்டு: அதின் மூழ்கிற்றீதெலாமகற் றும். அவ்விடத்தில் விஷ்ணுவின் சங்கென்றேதலாம். அவன்றற் சொரூபத்தோடடங்குறைவன். அவ்விறையை யாசையோடர்ச்சிப்பா யேற்புத்திரரைப்பெறுவையென்று கல்வியமைந்த சொல்லையுடைய வியாதர்கலாவதிக் கோதி, இலக்குமி யத்தலத்திற் றவஞ்செய்து மால்மார்பகண்ணினள். அந்த விசேடத்தாற் செய்யா ணகரமென்றுஞ்சொல்வர். முனிவர் சொல்லக் கேட்டு அந்த வாலயத்திற் சென்று மாலையருச்சித்து புத்திரசந்தானம் பெற்றாள். என்று சூதர் சொன்னார்.

முற்றிற்று.

## உ அ-வது சனகாதியருக் குபதேசித்த சருக்கம்.

சனக னாதித் தபோ தனர்க் கங்கதப்
பனகன் யோகத்தின் பண்பளித் தாளுந்தக்
கனக மான கதைசொலக்கேண்மினென்
றனகன் சூத னறைகுவ னன்பினும். (க)

வேறு.

ஆதி காலத்தி லிமகிரிச் சிகரமீ தருமறை முடிவாய்ச்செஞ்
சோதி காலுநுண் டளிர்க் கல்லா னீழலாஞ் சூழலிற் சனகாதி
நீதி மாதவர் முன்குரு வடிவமாய் நின்மல னின்றானென்
றேதில் வேதியர் வணங்கியோ கத்தின தியல்புணர்த்துதியென்றார்.

என்று கூறலு மயேந்திர கிரிக்கய லெமக்கிருப் பிடமாகத்,
துன்று ஞானகா னனமதிற் செல்லுதிர் சொல்லுமோ ரரசங்க, மொன்று மங்கிழ றன்னில்யோ கத்தினை யுமக்குணர்த் துவன்யானெ ன், றன்று முக்கண னுரைக்கவக் கணத்தவ ரக்கணே கினரேகி.

ஆதி தாணுவை யர்ச்சனை புரிந்தன ரப்பொழு தொருகோடிச்
சோதி யாதவ ருதித்தன சோலையுஞ் சோமமண் டலம்போலுங்
காதில் வெள்வளைக் குண்டல மும்முக காந்தியுந் திருமேனி
மீது பூதியுத் தூளன தவளமும் விளங்குமாத் திரைக்கோலும். ()

மார்பில் யோகவேட் டியுமகி மாலையு மலர்க்கையுங் கைமூல
த், தோர்வின் மிக்கசோ ளிகையுநற் கோவண வுடையும்வெம் புலி
த்தோலின், நீர்வில் வட்டுடை யும்பணிக் கச்சுநீள் செஞ்சடி லமு
மாக, வார்வி லிங்கமூ லத்தெழுந் தனன்பர மானந்த சிவயோகி.

கருணை யங்கட லூடெழு ஞானபாற் கரனவ னுனீ
ர-ருண பங்கய மாயினர் முனிவரவ் வானர சடிக்கேபோய்
அருண நன்கம லாசனத் திருந்துகால் வாங்குகுண் டலியோகத்
திருண லிஃதெழச் செய்துயோ கத்தசை வின்றிவீற் றிருந்தானல்.

இரேச காதிசெய் திருந்தயோ கத்தின தியல்புகண் டிவர்யோகத்
தாசை யெய்தின ரதுவறிந் தாசன மறுபத்து நான்காறு
மாச மாதிகள் கன்மசோ தனையறு வகைபிரா ணுயாமத்
தேசி னன்மையாங் கன்மயோ கம்மருள் செய்தனன் சிவயோகி. ()

ஞான நாட்டத்தி லுணர்ந்தன ரிவரது நாயக னறிந்தேபின்
ருன நிற்குண மாகிய சூடிலைய தாம்பிர மத்தண்ட (த்
மூன பிண்டமப் பிண்டமண் டத்திடை யொடுங்கியல் பொடுஞான
தான போகமு மீதறிந் திடுதிரென் றருள்செய வறிந்தாரால். (அ)

பின்க ளிந்ததம் முருவின்மண் டலம்பல பெறுதல்கண் டனரந்த
நன்க றிந்திரு வினையறுத் தனர்சிவ ஞானமும் பெற்றாராற் [சுத்
தேன்க ளிந்ததென் கடற்கரைக் கன்னியைச் சேர்வுறச் சிவன்யோ
இன்க ளிந்தசிந் தையோடிருந் தனனிவை யேதுவா தலினுலே. ()

யோக கானனம் ஞானகா னனமென வுரைப்பரத் தலத்தெய்தி
மாக நீடர சின்னிழ லுற்றுயர் வாயுகும் பகஞ்செய்தே
யேக நிட்டையி லிருப்பவண் டங்களி யாவையு மறிவாற்கண்
டாக கண்டபூ ரணத்துறு நிட்கள னவனென வறிவீரால். (ய)

அகத்தி னிற்சுசி யருள்சுசீந் திரதல மதிசெயத் தலந்திரே
தா, யுகத்தி னிற்சுசி யடைந்தகி லிகைமுனிக் குவப்புறு மூவப்
பாலே, சகத்தி னிற்கவு தமனதாச் சிரமமத் தலமுமா மென
ச்சூதன், முகத்தி னற்றவர் கேட்டகி லிகைபெறுமுறை மைகூ
றெனக்கூறும். (கக)

முற்றிற்று. ஆகத்திருவிருத்தம் எகஅ.

## உ௮-வது சனகாதியருக் குபதேசித்த சருக்கம்.

சனகாதிமுனிவர்க்குப் பனகாபரணன் யோகத்தின் பண்பளித்து ஆனந்த வெளியான கதையைச்சொல்லக் கேண்மினென்று சூதர்சொல்வார். ஆதிகாலத்திலிமாசலத்துச் சிமீது சோதியைக் கக்காநின்ற கல்லால நீழலிற் சனகாதிமுனிவரர் முன், அருமறை முடிவாகிய நின்மலன் குருவடிவமாய் நின்முன். வேதியர்வணங்கி யோகத்தியல்பையருளுவீரென்றார். மயேந்திரகிரியின் பக்கத்திலெமக்கிருப்பிடமாக விளங்கும் ஞானகானனத்திற்செல்வீர்; அங்கரசினிழலினுமக் கியோசத்தை யுணர்த்துவலென்று முக்கணனுரைக்க, அக்கணக்கெத்கணமேகித் தானுவை பருச்சித்தனர். ஒருகோடி சோதியாதவருதித்ததுபோன்ற சோலையும், சோமமண்டலம் போன்ற வெள்வளைக்குண்டலமும், முககாந்தியும், திருமேனி மீதுவிபூதி யுத்தூளனதவளமும். விளங்குமாத்திரைக்கோலும்; மார்பில் யோகவேட்டியும்; சிவமாலைதரித்த மலர்க்கையும், மற்றொருகையிற் சோளிகையும், கோவணவுடையும், புலித்தோலுடையும், பணிக்கச்சும் நீண்டசெஞ்சடிலமுமாக விலிங்கமூலத்திருந்து பரமானந்த சிவயோகி கருணையங்கடலூடே ஞானபாற்கரனாக வெழுந்தனன். முனிவரருணபங்கயமாயினர். அரசடியிற்போய்ச் சித்திராசனத்திருந்து வாசியாலிரேசியாநின்ற குண்டலியோகத்தின் மயக்கங்கெடுத்து யோகத்தசைவின்றி வீற்றிருந்தனன். இரேசகபூரககும்பகயோகத்தியல் கண்டு இவராசையாயினர். அஃதுணர்ந்து அறுபத்துநான்காசனமும் சமதமாதியறுவகைச் சமாதியும் கன்மசோதனையும் அறுவகைப்பிராணாயாமமும் கன்மயோகமும் சிவயோகியருளிச்செய்தனன். ஞானநாட்டத்திலுணர்ந்தனர். இவரது பக்குவத்தையுணர்ந்து; நிற்குணமான பிரணவமாகிய பிரமத்தில் அண்டத்தியல்பு பிண்டத்தியல்பு பிண்டமண்டத்தொடுங்கு மியல்பு ஞானத்தான் வருபோகத்தியல்பு இவற்றை யுணர்வீரென; அறிந்தனர். தம்முடம்புண் முய்மண்டலமும் அதனலத்தையுங்கண்டனர்; இருவினையறுத்துச் சிவஞானமும் பெற்றனர். தென்கடற்கரையிலுள்ள கன்னியைச்சேரச் சிவன்யோகத்திருந்தனன்; இக்காரணத்தால் ஞானகானனத்துக்கு யோககானனமென்றும் உரைப்பார். அத்தலத்திலொருமாதம் அரசினீழலிலிருந்து வாசியைக் கும்பித்து யோகநிஷ்டையிலிருப்ப அண்டங்களியாவையுமறிவாற் கண்டு பூரணத்துறு நிஷ்களன் அவனென்றறிவீரென்றருளி மறைந்தனன். உள்ளத்திற் சுசியருளாநின்ற சுசீந்திரத்தலம் திரேதாயுகத்திற் சுசியடைந்த ஆகிலிகை முனிக்கு வடப்புறத்து முவப்பாலே; கௌவுதமராச்சிரமமென்றுமாம்; என்று சூதர் அகிலிகை பேறுபெறு முறைமையை நற்றவர்க்குக் கூறலுற்றார்.

முற்றிற்று.

## உகூ-வது அகலிகைமங்கைச் சருக்கம்.

தீய வின்பமு மணுவள வதுசெயுந் திறத்தா
லாய துன்பமு மலையள வாமென வறியா
தேய விந்திரன் செயுஞ்செய லாலகி லிகைதான்
மேய பாறைய தாயினள் கோதமன் வெறுப்பால். (க)

பற்பல் காலமே செலத்தச ரதன்சுதன் பதத்தா
ளற்ப மேபட முன் னுரு வா ்வ ளருளாற்
றற்ப மாதவன் முன்புபோய் நிற்பெ றனைநீ
சொற்ப மாய்நினைத் தனைகொல்போ யபாவெனச் சொன்னான். ()

சொல்ல மாழ்கிரா மன்முனம் போய்முனி சொற்ற
வல்லல் கூறினின் றிரங்கவா னவர்கள்கண் டழுங்கி
மல்லன் மாதவன் முன்சென்று நின்றிரு மனைவி
கல்ல தாமுரு நீங்கின டாங்கினள் கற்பு. (ங)

உனது சிந்தையி லையுறே லுனையல்லா லுவடன்
மனது செல்லுமோ மற்றோர்பா லூழ்வினை வசத்தா
லினது சாபம தெய்தின ளகன்றன ணியுன்
றனது நல்லருள் புரிந்துகாத் தருளெனச் சாற்ற. (ச)

எய்த வந்தவித் தைம்புல னடக்கினோன் பியற்றிச்
செய்த வந்தடுத் தென்னையுங் கெடுத்தநிந் திரனும்
கைத வன்றனை யழித்தன னவனுளங் கவற்று
மைத வழுந்தகண் ணவள்பொருட் டாமப வாதம். (ரு)

பாலுந் தேனுமா ரமுதமுங் கலந்ததீம் பாகென்
றாலுந் தன்சுவை திரிந்திடிற் சுவாவுக்கு மாகா
மேலுங் கீழுநன் கறிந்தநீ ரென்சொனீர் விடமே
போலு மோர்பொரு ளென்னென்று லேத்துமப் பொருளோ. ()

கல்லென் றாலென்ன பெண்ணென்று லெனவவர் காத்த
லல்லென் றாலென்ன பகலென்று லென்னநீ ரறிந்து
மில்லென் றாக்கும்வா றியம்பிடின் வசையெனு மிசைத்தீர்
சொல்லென் றாற்கொடி தெனநினைத் தீரிலைச் சுரர்காள். (எ)

பலத்தை யேகெடுத் தறிவையே தரித்துளப் படுமா
குலத்தை யேகெடுத் திடுமப வாதத்தைக் குறியா
தலத்தை யேதரும் பொன்னைமண் டன்னைமின் னனையார்
நலத்தை யேபெறு வாருறு வார்கொடு நரகம். (அ)

நேய மாதவ னிப்பரி சுரைத்தலு நெடுமா
லாய ராகவன் காற்றுக ளால்வினை யகற்றுந்
தாய ஞானீப் பதுமுறை யன்றெனத் தவத்தோன்
மேய சிந்தைதேர்ந் தும்பரோ டோருரை விளம்பும். (கூ)

மாட்சி தேர்ந்தியாஞ் சொலமறுத் தனனென வேண்டா
மாட்சி தீர்ந்துல கம்புகல் வசையையார் மறுப்பார்
நாட்சி சேர்ந்தழ விடைகுளித் தெழிலவ டன்னோ
டாட்சி யில்லறம் புரிதுமென் றறைந்தன னறிஞன். (ய)

தவனை யும்பர்தாம் புகழ்ந்திது மறைநெறி தானென்
றவனை யுஞ்சுசி யாக்கிய தாணுவன் னவன்போ
லிவனை யுஞ்சுசி யாக்குவ னெனமதித் திமையோர்
சிவனை நேர்பவ சுசீந்திரத் தெழுகெனச் சென்றார். (கக)

தேவ ரந்தண னகலிகை யிவர்சுசீந் திரத்தின்
மூவ ருமொரு வன்னெனுந் தாணுவின் முன்போய்த்
தாவ ருந்தழல் வளர்த்திமை யோரொடுஞ் சபையோர்
யாவ ரும்புகழ்ந் தெழக்கொழுந் தழற்படிந் தெழுந்தாள். (கஉ)

ஏழுமம் மாதினைக் கனலிற் றவன்கரத் தீய
விழும மாகிய தாணுவுந் தோற்றினன் வெளியாய்க்
குழும வானவர் பாவினர் முனிவரீர் குணமே
கெழும மாதொடு வாழ்கவென் றுசிகள் கிளத்த. (கங)

அகம லர்ந்தனன் முனிவரன் வணங்கின னவளு
முகம லர்ந்தனள் விடைகொடாச் சிரமத்தின் முறைபோய்ச்
சுகம லர்ந்துவாழ்ந் தனரத னாற்சுசீந் திரத்தை
யுகம லர்ந்தகோ தமனதாச் சிரமமென் றுரைப்பார். (கச)

நல்வ ளந்தருஞ் சுசீந்திர மிந்திர னகாரஞ்
செல்வ மாக்கின வழகியந் நகரில்வாழ் சிவனும்
வில்வ வேணியுன் றனையருச் சித்துறு மேன்மை
சொல்வ னந்தணீர் கேண்மினென் றுரைத்தனன் சூதன். (௧௫)

முற்றிற்று. ஆகத்திருவிருத்தம் ௭௩௩.

## ௨௯-வது அகலிகை மகிமைச் சருக்கம்.

அணுவள வின்பத்துக்காகச் செய்யுந்தீதால் மலையளவுதுன்பம் வருமென்பதறியாது, இந்திரன் செய்யுஞ் செயலால் அகலிகை கோதமன்சாபத்தாற் பாறையாயினள். பற்பலகாலஞ் சென்றபின் இராமன் பாதத்தூள் அற்பப் படமுன்னுருவாய் மாதவன் முன்போய் நிற்ப; நீ என்னைச்சொற்பமாய் நினைத்தனையல்லவா! போபோவென்றனன். கேட்டுமயங்கி இராமன் முன்போய் முனிசொன்ன துன்பத்தைக் கூறி நின்றிரங்க; தேவர்கள் கண்டு வருத்தமுற்று மாதவன் முன் சென்று நின்மனைவி கல்லுரு நீங்கி நல்லுருவாயினள்; கற்பைக்குறித்து ஐயுறேல், உன்னையல்லால் இவண்மனமற்றையர் பாற்செல்லுமோ? ஊழ்வயத்தால் உன் சாபத்திருந்த கன்றனள்; நல்லருள் புரிந்து காத்தருளென்றுவேண்ட; முனிவன் பொருந்தாநின்ற அவந்தவிர்த்து, ஐம்புலமடக்கி விரதமியற்றிச் செபதவஞ்செய்திருக்கு மென்னைக் கெடுத்தவளும், இந்திரனுங்கைதவனுள்ளத்தைக் கவர்ந்தவளுமான மைதவழ் கண்ணிபொருட்டு அபவாதமாயினன். பாலுந் தேனு மமுதமுங் கலந்த தீம்பாகெனினுந் தன்சுவைமாறில் நாயுந்தீண்டா! உயர்வு தாழ்வுகளை நன்கறிந்த நீவிர் என்சொன்னீர்! விடம்போன்றபொருள் ஏத்தும் பொருளோ? கல்லென்றாலென்! பெண்ணென்றாலென்! காத்தலல்லென்றாலென்! பகலென்றாலென்! இவ்வபவாதநீரதிந்தும்இதையில்லென்றாக்கும்விதம் இயம்பின் வசையென்னும் இசைதீரும். வசைச்சொல்கொடிதென நினைத்தீரில்லை. அபவாதம் பலத்தைக்கெடுத்து அறிவைமாற்றித் துன்பப்படுமாகுலத்தைக் கொடுக்கும். அதை நினையாது சஞ்சலத்தைத் தரும் பொன் மண் பெண் இவற்றினலத்தைப் பேறுபுவரே தொலைநகுறுவர். என்று மாதவனிப்பிரகாரஞ்சொல்ல; நெடுமாலாகிய விராகவன் காற்றுகளால் வினையகற்றுந்தாயனையாளை நீப்பதுமுறையன்றென; முனிவன் ஆலோசித்து அமரரோடொன்றுசொல்வான். தேவர்களே! இருடி மனந்திரும்புதற் கேற்றனவாலோசித்து, "யாஞ்சொல்லியும்,, கேட்டிலன் எனவேண்டாம், மாடசிமையுள்ள வுலகம்புகலும் வசையைமறுப்பவரியாவர்! செந்தழலிடை குளித்துவருவாளெனின்; அவளோடில்லறம் புரிகுதுமென்றுகூறத், தவசியைத்தேவர் புகழ்ந்து இதுவேதநெறித்தாளென்று இந்திரனைச் சுசியாக்கிய தாணு அவளைப்போல விவளையுஞ் சுசியாக்குவனென மதித்துச் சுசிந்திரத்துக்கு வம்மி

னெனச்சொன்னார். உடனே தேவர்கள் முனிவன் அகிலிகை இவர்கள் சுசீந்திரத்திற்றூனு முனைபோய்த்தழல்வளர்த்து உம்பர் இம்பர் யாவரும் புகழத்தழல் படிந்தெழுந்தனள். எழுந்தவளை அக்கினி முனிகரத்தீயச், தாணு பிரசன்னமாயினன். வானவர் பாவினர் இவர்கள், முனிவ! குணமே நிறைந்த விம்மாதொடு வாழ்கவென்றாசிகள் கூற, முனியகமகிழ்ந்து வணங்கினன். அவளுமுகமலர்ந்தாள். விடைபெற்றுக்கொண்டு ஆச்சிரமத்திற்போய்ச்சுகமாக வாழ்ந்திருந்தனர். அதனாற் சுசீந்திரத்தைக் கோதமனாச்சிரமமென்றுங்கூறுவார். நல்வளந்தராநின்ற சுசீந்திரம் இந்திரபுரியாம். ஐசுவரியமுடைய ஆக்கினைவற்கி அத்தலத்தில் வந்து தாணுவையருச்சித்த கதை சொல்வேன் அந்தணீர்கேண்மினென்று சூதமுனிவர் சொல்கின்றார்.

முற்றிற்று.

## ங௰-வது ஆக்கினைவற்கி சருக்கம்.

பொதியவரையெனுஞ்சுரபிமடுவின்பாலாய்ப்போந்துபூமக
ளுறையுட்புகுந்துசீதத், ததியெனமானவையார்கள்கலக்கச்சேர்ந்து
தனையினவநீதமுமாய்ச்சார்ந்துமேன்மைப், பதியினுள்ளோருவந்
துகொள்ளக்குறைபடாது பாவமெனும்வெம்பகற்றிப்படிந்துளோ
ர்க்குக், கதியுதவுசெய்யாறென்றெபேராய்த்தென் கடலெனுங்கொ
ள்கலத்துறுமோர்கடவுள்யாறு. (க)

இவ்வாறுஞானவனத்திற்குமேற்கா யியலாற்றிற்பாதியோச
னைக்குளேகு, மவ்வாறதிருமருங்குந்தவஞ்செய்வோரா றறிமுனிவ
ரவர்தமிலோரந்தணனுளன், செவ்வாறுதரித்தசுசீந்திரத்தெம்மானை
த் தேனூறுமலர்தூவிச்சித்தவெற்பில், வௌவாறுபகையிரியக்கரி
யதோரா மலகநறுங்கனிபெற்றான்மகிழ்வுற்றானே. (உ)

அத்தமதிலாமலகக்கனியுளணடமண்டத்துளுயிர்களுங்கண்
டன்புகூர்ந்தா, னுத்தமனத்தாமலகனென்னும்பேர்பெற் றோங்கி
னனன்னவன்வயின்வந்துதித்தான்றெய்வப், புத்தமுதின்சுவையெ
னவாக்கினைவற்கிப்பேர் புனைந்தனன்மேலாம்பொருளேபொருளெ
ன்றேதன், சித்தமதிலெண்ணுவனுண்டைந்துசெல்லத் தேர்ந்துப
வீதந்தாதைசெயப்பெற்றானே. (ங)

மேலுறுமெய்ப்பிரணவத்துட்பொருளைத்தேர்ந்து வெளியி
லொளியாயொன்றாய்வேறாயெங்கும், பாலுறுநெய்போலவியாபக

டாய்நின்ற பரப்பிரமந்தானவனைப்பார்த்தான்பார்க்கி, லானுறும் வித்தனையனைருண்முனிபால்வேத மருங்கலையாவையுமுணர்ந்தானு யுளோரெட், டேனுறும்போதவதூதவேடமேகொண் டெதிர்ந்த னன்றானுவுமவன்முன்னீன்றதாய்போல். (௪)

கண்டனனுக்கிளவற்கியுடனேயுள்ளங் கசிந்தனன்றாயினைக் கலந்தகன்றினறன்மை, கொணடனன்றானுவின்பதத்தாமரைமேல் வனாடாய்க் குழைந்தனனுனந்தமெனுங்கோதிறேற, லுண்டனன் பனமுறையதிபாக்கியனையென்றென்-றுவந்தனன்மேனியனுறைப் பவொன்றாய்வேறற், றண்டநங்கோனிளமுனிபாலொன்றைநல்க வவதூதன்சுசீந்திரத்தையண்மினனே. (௫)

வேறு.

தவப்பாலன் பூரணனு னந்தகிரி யெனுமவதூ தன்பின் னே க, சுவப்பாலா வினைத்தொடர்கன் றெனத்தொடரத் தந்தைதமர் நற்றாய் சேய்மேல், லுவப்பாலங் கெழுந்தோடித் தடுக்கவுநில் லா தோட லுற்று ஹுற்றேர்க், சுவப்பாலா யினனணைமேற் கடந்தமுந் நீ ரச்சென்னீர்மீண் டணையுங் கொல்லோ. (௬)

தந்தையுந்தா யுந்தமரும் பின்றொடரச் சிவயோக சாலி யா னென், சிந்தையுந்தா னுவிளருனு மொன்றாய்நா னுடவிமிற் சென்று நீயே, யெந்தையுந்தா யும்மெனவாங் கெய்தினனம் மதலை யையீங் கிவன்கொண் டேற்றான், முந்தையன்போ லிருக்குமந்த ணீரவனுக் கிதுமுறையோ முறையோ வென்றார். (௭)

முறையோவென் றலறியவர் பின்னேக முன்னேகு முதல்வ னோடம், மறையோனு மமிர்தலிங்க மூலத்தி லடைந்தனனவ் வா றென் சொல்வே, னிறையோனு மிரவிநடு விண்ணுறிலன் னவ னிழலோ ரிடத்திற் போமோ, குறையோவில் லாதவனே டுறையு மவ்வா றன்னியமாய்க் கூடி னனே. (அ)

பின்னுற்றா ரங்கரிற் பெரியரோடு சினகரத்துட் பெயர்ந்து நாடி, முன்னுற்றார் தமைக்காணார் திகைத்தன்பின் றானுவரன் முன்னே நின்றார், கொன்னுற்றார் மழுமானுங் கறைமிடறும் பி

றைமுடியுங் குலவித் தோன்றத், துன்னுற்றார் பரவவந்தா மல
கன்முன்சோ மனும்விடைமேற் றோன்றி னனே. (கூ)

தோற்றுபரன் காட்சிகண்டத் தாமலகன் சுதன்மனமூழ்ந்த துன்
பந் தன்னை, மாற்றுபர மானந்த மயமாய்த்தன் மனைவியோடுண்
மகிழ்கின் றான்வெள், ளேற்றில்வந்த தாணுவர னப்பொழுதி லங்
குநின்று ரெவருங் கண்டு, போற்றல்செய்ய வமிர்தலிங்கத் துட்
புகுந்த வதிசயத்தை புகலொண் ணாதே. (ம)

வேறு.

ஆதலிற் றென் யிலாய மென்னமுன்
னோதலத் தலத்தினுக் குவமை யாகுமிப்
பூதலத் திற்சிவ புரம தேயெனச்
சூதரத் தவத்தினர் துதிப்பச் சொல்கின்றார். (கக)

காணுமாப் பிரளைய காலந் தன்னிலு
மேணழி யாதுவாழ்ந் திருக்கு மத்தலம்
பூணுமுப் பொருளுமோர் பொருள தாகிய.
தாணுவாஞ் சுசீந்திரத் தலம தாகுமே (கஉ)

கடவுளா டியபுனல் காண்ப தங்கரி
துடனதேழ் கடலிடைத் தோன்று மொன்றதோ
திடமுலா மதிசயம் பலவுஞ் சேர்வதத்
தடமுலாஞ் சுசீந்திரத் தலம தாகுமே. (கங)

தேவரும் வணங்குமிந் திரற்குச் சாபந்தீர்த்
தியாவரு மதிசயித் தேத்து மத்தல
மூவரு மொருவனு மூர்த்தி யாகிய
தாவருஞ் சுசீந்திரத் தலம தாகுமே. (கச)

அரன்முதன் மூவரோ ரமிர்த லிங்கத்திற்
றிரமுறச் சேர்ந்தருள் செய்யு மத்தலம்
வரமுறு மாதவர் வணங்க வாழ்ந்துசுந்
தரமுறு சுசீந்திரத் தலம தாகுமே, (கரு)

வேறு

ஞானகா னனத்தில வைகி ஞானதீர்த் தத்தின் மூழ்கி
ஞானமா மரசை வாழ்த்தி ஞானலிங் கத்தைப் போற்றித்
தானமாந் தெற்கு மன்றந் தனைத்-ி சிகரின் முத்தித்
தானமே யருண்மெஞ் ஞானத் த ந்சுசீந் திரம தாமே. (௧௬)

தருத்தரு ஞான கானத் தலத்தில்வைத் திச ளன்ப
ரொருத்தருக கன்ன மோர்நா ளொருபொழு தளித்தால் வேத
விருத்தர்க ளுறுபோக்குவேறொ ) தலத்தி லேலவைத்
தருத்துமப் பலத்தை நல்கு மதிசயத் தலம தாமே. (௧௭)

வேறு

எந்தை தாணுவா மரசினீ ழலினி திருந்தே
சிந்தை யாரவஞ் செழுத்தினைப் பத்துருச் செபிக்கின்
முந்தை யாயிர முருச்செபித் திடும்பல மூற்றத்
தந்தை யானனன் பதந்தருஞ் சுசீந்திரத் தலமே. (௧௮)

வேறு.

சித்தரே புகழ்ச்சுசீந் திரத்து மான்மியம்
பத்தரே படிப்பவர் கேட்கும் பண்பினோர்
முத்தரே யாவரும் மூவ ரும்மவர்க்
கத்தரே யாவரென் றறிந்து கொண்மினே. (௧௯)

வேறு

என்ன வோதினர் சூதரங் கவர்தமக் கியல்யாற்
றுன்னு மாதவர் வரிசைசெய் தாசியாற் றுதித்தா
ரன்ன சூதர்சொல் லாற்சுசீந் திரத்திய லதனைக்
கன்னல் போலினி துரைத்தனன் முத்தமிழ்க் கவிஞன். (௨௰)

சுசீந்திரபுராண முற்றிற்று.

ஆகச்சருக்கம் ௩௰-க்கு திருவிருத்தம் ௭௫௩.

ஸ்ரீதாணுமாலயன்றுணை.

பொதியாசலமென்னும் பசுவினதுமடுவின் பாலாய்ப்போய்ப் பூமகளிடத்
துட்புகுந்து குளிர்ந்ததயிரொன்று மானனையார் கலக்கக்கூடி யுலகில்வெண்
ணெயாய்த், தேவர்க்குங்களித்துண்ணக் குறைபடாது பாபமென்னு மலை
களைநீக்கி, மூழ்குவோர்க்குக் கதியளிக்கு நெய்யாறென்னும் பெயராய்த் தெ
ய்வத்தன்மைபொருந்திய நதியானது தென்கடலென்னும் பாண்டத்துட்
பொருந்தும். இந்நதி ஞானவனத்திற்குமேற்காய் அரையோசனை தூரத்
திற்செல்லும். இநதிருகரையினும் தவஞ்செய்யுமுனிவர்களில் ஒருமுனி
கங்கைதரித்த சுசீந்திரத்தண்ணலை மலர்தூவிச் சித்தமலையிலாறுபகைகெட
சாக்ஷியாம்ஆமலகக்கனிபெற்றுமகிழ்ந்தான். அந்தத்தினுள்ள அக்கனியில்பல
வண்டங்களையும் சிவகோடிகளையும் கண்டு அன்புகூர்ந்தான். அக்காரணத்
தால் அத்தாமலகனென்று பெயர்பெற்றனன். அவனிடத்தில் தேவாமிழ்
தின் சுவைபோல ஆக்கினவர்க்கப்பெயராளன் வந்துதித்து, உலகத்துள்ள
பொருளெல்லாவற்றினுக்கு மேலானபொருளே பொருளொன்றுநிச்சயமனத்
தனாய், ஐந்துபிராயஞ்செல்கையில், தாதையால் யஞ்ஞோபவீதமுதலிய சட
ங்கு செய்யப்பெற்றுப் பிரணவத்துட்பொருளைத் தேர்ந்து, வெளியிலொளி
யாய் ஒன்றாய்ப்பலவாய்ப் பாலினெய்போல எங்கும் வியாபகமாய் நின்றபரப்
பிரமத்தைத் தானவனாய் நோக்கினான். அந்நோக்கத்தில் ஆலம்விதை போ
ன்றவன் அருண்முனிவனிடத்தில் வேதமுதலிய கலைஞானமியாவையு முண
ர்ந்து பதினாறாவயதில் அவதூதவடிவமாயினன். தாணுஅவன்முன் பிர
சன்னமாக, தாயைப்போற்றரிசித்து உள்ளங்கசிந்து கன்றின்றன்மைகொ
ண்டனன். தாணுவின்றிருவடித் தாமரைமலர்மேல் வண்டாய்க்குழைந்து
ஆனந்தமென்னுங் குற்றமற்றதேனையுண்டனன். அதிபாக்கியனே! என்று
பன்முறை யனன்மேனியன் உவந்துரைத்து, ஏகமாய் அத்துவிதமாய் விள
ங்குநங்கோன் அவ்விளமுனிபால் ஒன்றையளிக்க அவதூதன் சுசீந்திரத்த
டைந்தான். தவப்பாலனும்பூரணானந்தகிரி யென்னும் அவதூதனுமானவிவ
ன் அவன்பின் ஆவினைத்தொடர்கன்றென அத்தலத்துக்கேக, தாய்தந்தை
தமர் சேய்மேலுவப்பாலெழுந்தோடித் தடுக்கவுநில்லா தோடிஉற்றார்க்கு
அவப்பாலாயினன். அணைகடந்த புன்னீர்மீண்டச் சென்னீரணையுமா! தந்
தைதாய்தமர்பின்றொடரச் சிவயோக சாலியானவிவன்சிந்தையும் தாணுவி
னருளும் ஏகமாய் ஞானடவியிற் சென்றுநீயே எந்தையுந்தாயு மெனவாங்
கெய்தினன். எங்கேமுந்தையன்போலிருக்குமந்தணீர் என்மதலையை யிவ
ன்கொண்டேற்றான் இதுமுறையோ! முறையோ! வென்றார். என்றலறிஅவர்
பின்னேக, மறையோனுமுதல்வன் பின்னேகி அமிர்தலிங்கமூலத்தி லடை
ந்தனன். அவ்வாறென்சொல்வேன்! இரவிநடுவிண்ணுறிற் றன்னிழல் தன்
னிடத் தடங்குவதல்லது வேறோரிடத்திற்போமோ! அதுபோலக்குறையில்
லாத விவன் இறையோடு அனன்னியமாய் ஐக்கியமாயினான். பின்னுற்றார்
அந்நகரிற் பெரியரோடு கோவிலினுட்போய் முன்னுற்றானைக் காணாமற்றிகை
த்து அன்பினாற் றாணுமுன்னின்றார். மான்மழுபிறைமுடி கறைக்கண்ட

மிவைவிளங்க அன்டினோர்துதிக்க அத்தாமலகன்முன் இடபாருடராய்க் காட்சிகொடுத்தார். தரிசித்துச்சுதன்மறைந்த துன்பத்தைமாற்றும் பரமானந்தமயமாய்த் தன்மனைவியோடுன் மகிழ்கின்றான். வெள்ளேற்றில்வந்த தாணு அங்குநின்ற ரவருந்தரிசித்துப்போற்ற அமிர்தலிங்கத்துண்மறைந்தார்: இவ்வதிசயம் புகலவொண்ணாது; ஆதலாற் றென்கையிலாயமென்று முன்னோதினது அத்தலத்துக்குண்மையேயாம்; இப்பூதலத்திற் சிவபுரம் அஃதேயென்று சூதர் அத்தலத்தினர் துதிப்பச்சொல்கின்றார். பிரளயகாலத்தினுந் தன்னிலை யுடைமையழியாது வாழ்ந்திருக்குமத்தலம் முப்பொருளும் ஒருபொருளாகிய தாணுவின் சுசீந்திரத்தலமாம். கடவுளாடியதீர்த்தங் காண்பரிதாயும், எழுகடலும் அதினிடை தோன்றுவதாயுமுள்ள அதிசயம்ஒன்றோ! பலஅதிசயப்சே வதும் தீர்த்தங்களுள்ளதும் அச்சுசீந்திரத் தலமாம். தேவர்வணங்கும் இந்திரற்குச்சாபந்தீர்த்து யாவரும் அதிசயித்தேத்துந்தலம் சுசீந்திரத்தலமாம். அரன்முதல்மூவரும் அமிர்தலிங்கத்திற்றிரமுறச்சேர்ந்து அருள்செய்வது, மேன்மையான மாதவர்வணங்கவாழ்ந்து சுந்தரமுறுவதும் அச்சுசீந்திரத்தலமாம். ஞானகானனத்திற்சேர்ந்து ஞானதீர்த்தத்திலாடி ஞானமாம்அரசைவாழ்த்தி ஞானலிங்கத்தைப்போற்றி சபையைத்தரிசிக்கின் முத்தியையளிக்கு மெஞ்ஞானத்தலம் சுசீந்திரத்தலமாம். ஞானகானத்தில்வைத்து ஈசனன்பரொருத்தருக்கு ஒருநாளொருபொழுதன்னமளிக்கில் மற்றொருதலத்தில் வேதவிருத்தர்களாறுபேருக்களித்த பலன்றரும். எந்தையாகியதாணுவாமரசினீழலிலிருந்து பஞ்சாக்ஷரத்தைப்பத்துருச்செபித்தால் ஆயிரம் உருச்செபிக்கும் பலன்றந்து ஐயானன்பதத்தையுந்தரும், சித்தரார்ப்புகழாநின்ற சுசீந்திரந்தலமான ம்பம்படிக்கும் பத்தர்கேட்கும்விரதியர் இவர் முத்தரேயாவர்; மூவரும் அவர்க்கத்தரேயாவர் என்றறிந்துகொள்ளக்கடவீர்கள்: என்று சூதர் நைமிசாரண்ணியமுனிவர்களுக்குச் சொன்னார்: நெருங்கியமாதவர்களும் வரிசைசெய்து ஆசியாற்றுதித்தார். அப்பேர்ப்பட்ட சூதமுனிவாக்கியத்தாற் சுசீந்திரத்தலபுராணத்தைக் கரும்பினிரதம்போன் முத்தமிழ்க்கவிஞனினி துரைத்தான்.

இச்சருக்கத்தில் வடநூலார் யாஞ்ஞவற்கர்சருக்கமென்று பெயரிட்டிருக்கலாமென்று நம்புகிறேன்; ஏட்டுப்பிரிதிகடோறும் ஆக்கினவற்கி சருமென்றிருத்தலால் அவ்வாறச்சியற்றினன்.

முற்றிற்று.

# பிழைதிருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| உ | உச | கொள்வேன் | கொள்வோன் |
| ச | உஉ | இனிதுயான் | இனிதியான் |
| எ | அ | சங்கரன்மாதவன் | சங்கரமாதவன் |
| அ | உச | இயல்னக்கிராலயம் | இயனக்கிராலயம் |
| கூ | உகூ | அரிந்த | அறிந்த |
| ய | ௩ | ஊரமுதம் | ஊறமுதம் |
| கஎ | உஅ | அகன்றனநன் | அகன்றனனன் |
| கஅ | கஎ | அருர்தவர்க்கண்டதி | அருந்தவற்கண்டதி |
| ,, | உஅ | பெய்தப்பொழுது | பெய்தபொழுது |
| ககூ | உய | துறுந்து | துறந்து |
| உய | கரு | முதலிபேத | முதலியபேத |
| உ௩ | உக | கற்பலால்மிக்க | கற்பலான்மிக்க |
| உசு | கக | வயறு | வயிறு |
| உஎ | ச | உறைப்பான் | உரைப்பான் |
| உகூ | சு | மூவர் | மூவா |
| ௩க | க | உத்திரம் | உத்தரம் |
| ௩௩ | உய | அன்னுன் | அன்னுள் |
| ௩அ | எ | அன்னவன் | அன்னவண் |
| ,, | உச | கூறுவாள் | கூறுவான் |
| ௩கூ | கரு | பொத்தகம் | புத்தகம் |
| ,, | உக | தணண | தண்ணளி |
| ,, | உசு | ஆக்கபெற்று | அக்கப்பெற்று |
| சய | உரு | முன்று | மூன்று |
| சச | உ | கடிதுவர | கடிதுவா |
| சஎ | கஉ | முனிவனிடத்தில் | முனி கண் இதயம் கையில் |
| சஅ | உஎ | அனசூயையின் | அம்முனிவனின் |
| சகூ | உகூ | வாரறைதி | வாறறைதி |
| ரு௩ | கஎ | வாசனுமாய | வாசனுமாய் |
| ருஅ | க | புசித்த | பூசித்த |
| ருகூ | உஅ | அவணமேன்மை | அவண்மேன்மை |
| சுஉ | உஉ | தெனகைலை | தென்கைலை |
| சுகூ | உசு | அகலிகை | அகிலிகை |
| எய | கரு | அகலிகை | அகிலிகை |
| எஎ | ௩ச | அருச்சிக்கும்சம | அருச்சிக்குஞ்சம |
| எஅ | சு | ஞானவன் | ஞானவன |
| ,, | உஅ | தமிட்குரு | தமிழ்க்குறு |

# பிழைதிருத்தம்.

| | | | |
|---|---|---|---|
| | ௪ | கருணைகூற | கருணைகூர |
| | ௨௩ | தோன்று | தேன்று |
| | ௨௩ | போற் | போய்க் |
| | ௧௫ | சேர்பவ ரதம | சோபவாதம |
| | ௨௧ | மறைத்தனன் | மறைந்தனன் |
| ) | ௩௰ | தேனு | தேனுவே |
| ௪ | ௪ | இருவேர்க்கு | இருவோர்க்கு |
| , | ௧௪ | வனமீன் | வன்மீன் |
| ,, | ௨௬ | கிருட்டிணன் | கிட்டிணன் |
| 0 | ௧௧ | தெழுவாருதி | தேவாருதி |
| ௧ | ௨ | யென்னய | யென்னைய |
| ௪ | ௨௭ | குளித்தார் | குளித்தான் |
| ௫ | ௨௰ | கொணர்வேமென் | கொணர்வேமென |
| ,, | ௩௩ | அவள்கட்டு | அவளகட்டு |
| ௱0௭ | ௧௪ | நீதிள் | நீதின் |
| ௧௧௨ | ௧௯ | லிங்கபிர | லிங்கப்பிர |
| ௧௧௪ | ௧௮ | அவனுற்ற | அவணுற்ற |
| ௧௧௮ | ௧௨ | பாய | பாய் |
| ௧௧௯ | ௧௩ | யாய்ந்திடு | வாய்ந்திடு |
| ௧௨௨ | ௧௯ | விராட்டம் | விராட்டாம் |
| ௧௨௪ | ௨௭ | சொல்லும் | செல்லும் |
| ௧௨௫ | ௨௯ | அளித்தன் | அளித்தான் |
| ௧௨௬ | ௨ | மேயுபுற | மேயபுற |
| ௧௨௮ | ௩௧ | வேதன்ஞோன்றிஞன் | வேதன்றோன்றிஞன் |
| ௧௨௯ | ௰ | நன்று | நின்று |
| ,, | ௧௮ | திருமாலை | திருமாலே |
| ,, | ௨௮ | உயிர்களைத்தும் | உயிர்களனைத்தும் |
| ௧௩௰ | ௩ | உள்ளுருக | உள்ளுருகி |
| ,, | ௧௧ | குடைக்கும் | குடைக்குள்ளடங்கும் |
| ௧௩௨ | ௮ | மடந்தயோ | மடந்தையோ |
| ,, | ௨௫ | போல்வோறென் | புலவோரென் |
| ௧௩௩ | ௫ | வானமிர்தலிது | வானமிர்திலிது |
| ,, | ௧௪ | விளங்கும்வேன் | விளங்குவேன் |
| ,, | ௧௮ | வியம்ப | வியப்ப |
| ,, | ௨௩ | வேழத்தொழு | வெழத்தொழு |
| ,, | ௨௬ | பஞடவி | பணுடவி |
| ௧௩௪ | ௭ | அன்னகா | அந்நகர் |
| ௧௩௬ | ௯ | பேறவடைந்தனர் | பேறடைந்தனர் |

## பிழைதிருத்தம்.

| | | | |
|---|---|---|---|
| கருசு | கசு | சூதனன்றியனை | சூதனன்றனை |
| ,, | ககூ | தும்புருப்புலர் | தும்புருபுலர் |
| ,, | உ௰ | முன்னுறி | முன்னுறீஇ |
| ,, | உஉ | வின்றைடர் | வின்றைடர் |
| ,, | உரு | பலங்கொள்ள் | பலகொண் |
| ,, | உஅ | யானுக | யரனுக |
| கருஅ | ரு௰ | னீதியாயருள்தி | நீதியாயருடி |
| சஎஉ | ௰ | மாலைசிந்தனை | மாலைச்சிந்தனை |
| கசஎ | கஉ | வேந்தனும் | வேந்தலும் |
| ,, | கஅ | தாசிளம் | தரசிளம் |
| கசஅ | கஅ | சொன்னுள் | சொன்னுன் |

---

இப்புத்தகம் தேவையுள்ளவர்கள் நாகர்கோவில் போஸ்டைச் சேர்ந்த சுசீந்திரத்துக்குக்கடுத்த காக்குமூர் ம-ள-ள-ஸ்ரீ வைரவநாதபிள்ளையிடத்திலும், புற்றேரி ம-ள-ள-ஸ்ரீ சே. குமாரசுவாமிப் பிள்ளை யிடத்திலும் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| அதின் விலை | ... | ... | ரூ. | 1 8 |
| தாபால் சார்ஜ் | ... | ... | அணா | 1 |

௰ புத்தகம் ஓரே மொத்தமாய் வாங்குகிறவர்களுக்கு ஒரு புத்தகம் இனும் கொடுக்கப்படும்.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

தேமழலைமென்சொற்சிறுவனொருவனுக்கு
நாமம்புனைந்தனனாராயணனெனவே.

ஏமுற - இன்பம் உண்டாக, உதிப்ப - பிறக்க. (கங)

வேராவிதிர்விதிராமெய்தளராவுள்ளாவி
சோராவிறந்துதொலையுமமையத்தின்
ஓராமறையோனொருகாற்றன்காதலனை
நாராயணாவெனவேநாவாலழைத்தனனால்.

வேரா - வேர்த்து, விதிர்விதிரா - நடுநடுங்கி, மெய்தளரா - உடல்தளர்ந்து, ஆவி சோரா - உயிர்சோர்ந்து, அமயத்தில் - சமயத்தில், ஓரா - அறிந்து. (கச)

வேறு.

அழைத்தவனிறக்குமுன்னதிரும்வானெனத்
தெழித்தனர்யமபடர்சென்றுதீப்பட
விழித்தனர்வைதனர்வெய்யவாளுறை
கழித்தனர்வீசினர்காலபாசமே.

தெழித்தனர் - அதட்டினார்கள், யமபடர் - யமகிங்கரர். (கரு)

மறுத்தலைமணக்கலாமதியமாமென
எறிக்கும்வெண்சங்கினரேந்துநேமியர்
நறைத்துழாய்ப்பரஞ்சுடரான்பர்நண்ணினர்
அறுத்தனர்பாசநல்லறமுணர்த்தினர்.

மறு - களங்கம், தலைமணக்கலா - சேராத, மதியம் - சந்திரன், எறிக்கும் - ஒளி வீசுகின்ற. (கசு)

பத்திசெய்தாயினும்பகைசெய்தாயினும்
வித்தகனொருவன்பேர்விளம்பற்காயினும்
ஒத்துநாராயணாவெனவுரைப்பரேல்
கொத்துவெம்பாதகங்குலைந்துசாம்புமால்

வித்தகன் - ஞானவுருவன், கொத்து - கூட்டமாகிய. (கஎ)

மெய்வினைநீக்குநாலெழுத்துவெங்கொலை
மைவினைப்பாதகமாற்றியங்கிநெய்
பெய்வினைமுதலியபிராயச்சித்தமாம்
செய்வினைக்குறையையுந்தீர்க்குமென்பவே.

அங்கி - நெருப்பு. (கஅ)

முத்தியிற்பொருந்துநாலெழுத்துமுன்னுவோர்ப்
புத்தியினழுக்கினைப்போக்கிப்பொய்யறச்
சுத்தமாம்படிமிகத்துலக்குஞ்சொல்லிய
சித்தமாம்வினைக்குமோர்சிவனாகுமே.

முன்னுவோர் - நினைப்பவர் (கக)

தும்மினுமிருமினுந்துயரமிக்குளம்
விம்மினும்வீழினும்வினைசெய்போதினும்
அம்மவிந்நாலெழுத்தறைவரேலவர்
செம்மலர்மால்கழல்சேர்தறிண்ணமே.

செம்மலர் - செந்தாமரைமலர்போன்ற. (உ0)

ஆதலானிந்தநாலெழுத்தசாமிளன்
ஓதினொருமகவுரைக்குமேதுவாத்
தீதெலாமொழிந்தனன்செப்பினீதுநம்
நாதனேயுரைசெயுநடமிதேயென்றார்.

உரைக்குமேதுவா - அழைத்தல்காரணமாக. (உக)

ஆற்றலந்திகிரியானன்பர்வல்லையின்
ஏற்றனர்பாசநீத்தியம்பல்கேட்டலும்
காற்றெனநமன்றமர்கலங்கியோடினர்
கூற்றொடுவிளைதிறங்கூறினாரரோ.

ஆற்றலந்திகிரியான் - திருமால்; வல்லையின் . விரைவாக. (உஉ)

மற்றதுகேட்டலுமறலிநோக்கிநீர்
பற்றுதற்குரியனோபகவனுமமொன்
றிற்றிடுமமைதியினியம்பினனவன்
உற்றவெந்தீவினையொருங்குபோயதால்.

மறலி - யமன், இற்றிடும்அமைதியின் - இறக்குங்காலத்தில் (உங)

திருமறுமார்பனைச்சிந்தைசெய்யுபு
பரவுறுதொண்டரெம்பகவராகுவார்
அரவணையான்கழலடையப்பெற்றிலார்க்
குரியதெம்மாணையென்றுணர்ந்துகொள்ளிரால்.

சிந்தைசெய்யுபு - சிந்தித்து, பகவர் - சுவாமிகள். (உச)

பணியணைதுயில்வுறுபரமவிந்திரை
கணவசெந்தாமரைக்கண்ணவாகமா
மணிநிறவண்ணவென்பவர்மருங்குநீர்
அணுகன்மினென்றனனறத்தின்வேந்தனே.

பணியணை - சர்ப்பசயனம், இந்திரை - இலக்குமி, ஆகம் - திருமேனி, அறத்தின்வேந்தன் - யமன். (உரு)

## எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆழியானன்பராங்குணத்தேகவசாமிளனகங்குழைந்தன்றே
தாழிருங்கூந்தன்மனைவியைமறந்துதாதைசொல்கடந்தனனாகி